உ
923.5483
C.L

PUBLIC LIBRARY,
JAFFNA.

உ

சிவமயம்.

# ஸ்ரீ அருணாசல மான்மியம்

இஃது

யாழ்ப்பாணம்

ஸ்ரீ இராமநாதவித்தியாலயத் தமிழ்ப்பண்டிதராகிய

வித்துவான்

85442

சாவகச்சேரி

ஸ்ரீமாந் ச. பொன்னம்பலபிள்ளை

அவர்கள் இயற்றியது.

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

கொழும்பு

"சிலேவ் ஐலேண்ட்" யந்திரசாலை

அச்சிற் பதித்தது.

1934 ஆ. ஆனி மீ

1931 C.C.
1931 C.C.
85442 C.C.



கௌரவ ஸ்ரீ சேர்: பொன். அருணாசலம்

# முகவுரை.

நீர்வளம் நிலவளங்களாற் சிறப்புற்றும் இமையாது நோக்குங் கண்களுக்கு மதியற்புதமான காட்சிகளைப்பெற்றும் இலங்கா நிற்கும் இந்த இலங்காபுரியிலே,

புத்திரப் பேற்றிற் கென்றுபோலும் மேனாட் பெருந்தவஞ் செய்திருந்த ஸ்ரீமாந் பொன்னம்பல முதலியாருக்கு பெறுதற்கரிய வரப்பிரசாதத்தால் மூன்றுமலைச்சிகரங்கள் போலவும் மூன்று ரத்தினங்கள் போலவும் அவதரித்துத் தமது நாட்டிற்கு இன்றியமையாதவராய் செயற்கரிய காரியங்களைச்செய்துவந்த ஸ்ரீமாந் பொன். குமாரசுவாமி முதலியார், கௌரவ. சேர் பொன். இராமநாதன், கௌரவ. சேர். பொன். அருணாசலம் என்னும் இந்த மூவரில் கௌரவ. சேர். பொன். இராமநாதன் அவர்களின் சரித்திரத்தை செந்தமிழ்ச் செய்யுணடையிலே யியற்றுதல்வேண்டுமென்று சில அறிஞர்கள் கேட்டபடி 1930-ம் வருடத்திலே அவர் தஞ் சரிதமாகிய "ஸ்ரீ ராமநாத மான்மியம்" என்னும் அந்நூலை அவ்வாறே இயற்றி வெளியிட்டனன். அங்ஙனமே கௌரவ. சேர். பொன். அருணாசலம் என்னும் பெரியாரின் சரித்திரத்தையும் இயற்றுதல் வேண்டுமென்று ஆங்காங்குள்ள நேயர்களும் அறிஞர்களுமாகிய சிலர் கேட்டமையாலும் தமது சென்மதேயத்துக்கு இன்றியமையாத செயற்கருஞ் செயல்களைச் செய்துவந்த பெரியாரின் சரித்திரதை யெழுதுவது கற்றோருக்கு ஒரு கடமையாக இருந்தமையாலும் அவர் தம் சரிதமாகிய "ஸ்ரீ அருணாசல மான்மியம்" என்னும் இந்நூலையும் அவ்வாறே இயற்றி தற்காலம் வெளியீடு செய்தனன்.

இந்நூலுக்கு ஆங்காங்கிருந்து விஷயங்களை யனுப்பி யின்றியமையாத உபகாரிகளாயிருந்த நேயர்களின் நன்றி பாராட்டத் தக்கதேயாம்.

"குற்றங் களைந்து குணம்பாராட்டல்
கற்றவர் கடனெனக் கழறிடுமுலகே."

இங்ஙனம்,
ச. பொன்னம்பலம்

## நூலாசிரியர் குரவ வணக்கம்.

கட்டளைக் கலித்துறை.

நவ்விய போதன் வயித்திய லிங்க நவில்குரவன்
அவ்விய மற்றரு நூறரும் வேற்பிள்ளை யாசிரியன்
செவ்விய பொன்னம் பலப்பிள்ளை வித்வ சிரோமணியித்
திவ்விய மூவரு மோவாது நாளுமென் சிந்தையரே.

உ
சிவமயம்.

# சிறப்புப்பாயிரம்.

யாழ்ப்பாணம் புலோலி,
ஆரியதிராவிட மகாபண்டிதர்
பிரமஸ்ரீ ம. முத்துக்குமாரசுவாமிக் குருக்களவர்கள்
இயற்றியது.

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

ஆசிரிய விருத்தம்.

திருவளரு மீழமெனப் பேர்பெற் றோங்குந்
தேசமெனு மங்கையொளி வதன நேரா
மருவணிசேர் கொளும்புநகர் வாழ்ந்த செல்வன்
மன்னுபொன்னம் பலமுதலி யார்தாஞ் செய்த
தருமநெறி யான்மூன்று கண்போல் வந்த
தருமக்கண் மூவருளு மிளையோ னாக
வருமருணா சலத்துரைதன் மகிமை தன்னை
வாயாற்சொல் லுவதெவர்க்கு மரிது மாதோ, (க)

மாதாவி னுதரத்தின் வருநாட் டொட்டு
மதிபோல வளர்ந்துபல கலைக டம்மின்
மேதாவி யெனவெவரு மினிது பேண
மிக்கசுய பாஷைநனி தேர்ந்து மன்ன
ராதார வங்கிலபா ஷையுநன் காய்ந்தே
யனேகமாம் பரீக்ஷைகளிற் சித்தி பெற்றோன்
றீதான செய்கையவை கனவி லுந்தான்
சிந்தியா வுண்மைநெறி மிக்கு ளானே, (உ)

மிக்கவெழி லருந்ததிநேர் மனைவி யோடு
        விழையிரதி மதனனென வுவந்து வாழ்ந்தே
தக்கபுகழ் மக்கடமை யினிது நல்கிச்
        சகலசுக மெய்துறவே வைத்த சீமான்
உக்கமுயர்த் தருள்பரம ரமருங் கோயி
        லுத்தமர்தஞ் சாமியுறு நிலைய மீதிற்
றெருக்கவா லயமூன்று நிலவச் செய்து
        தூயதன முபகரித்த தொண்ட ரேறே, (௩)

ஏறுகுடி யரசுரிமை யினிதி னோங்க
        வெண்ணியே பலவாறு முயன்ற தோன்றல்
வீறுசர்வ கலாசாலை சுயவூர் தன்னில்
        விளங்கவே யடியெடுத்தா னினிச்சின் னாளிற்
பேறுறவே நிறைவேறிற் பிறங்கு கீர்த்தி
        பெரிதிவற்கே முதலாகு மென்கை திண்ணந்
தேறுமிப்போ துள்ளகலா சாலைக் கேற்ற
        திரள்பொருளை யுபகரித்த செல்வன் றானே, (௪)

செல்வனிவன் றனதுரிமைச் சில்லை நாட்டுந்
        தினத்தினிலே தேசாதி பதிதா னேரே
சொல்வலியா லுரைத்துளவா றிசைப்பி னின்னோன்
        றாயவர சியல்ஞானந் தகழு றாமே
கல்வியொடு கேள்வியினு லினிதி னாய்ந்து
        கண்டவரு ளொருவனுயர் வேந்தர் தாமும்
பல்வகையால் விரும்புநெறி யரச சேவை
        பல்லாண்டு நடத்தியுள தீர னாமே, (௫)

தீரனிவ னவ்வரச சேவை தன்னிற்
        றீர்ந்திளைப்பா றியபின்னர்த் தேசத் தொண்டை
யீரமுட னடாத்தியவன் பலசங் கங்க
        ளெவ்வெவரு முவந்தேற்கத் திருத்த மாக
வாரமுற நடாத்தியுளான் வல்ல வாறே
        வழங்குமா சியற்றிருத்தம் வாய்க்கு மூண்மை
நேரமுயன் றவன்வேண்டுங் கல்வி தானே
        நிகழ்வுறவும் வேண்டுவது தக்கதாமே, (௬)



தக்கவா றனுபவங்கள் வாய்ந்த பின்னே
        சார்குடிகட் கரசியலை யீதுமென்கை
துக்கமே யரசியலை யேற்ற பின்னே
        சோர்விலா வனுபவங்கள் வருவ துண்மை
யிக்கவனத் திங்கிவன்றான் கேட்குங் கேள்விக்
        கிசையாம லென்செயலா மிறந்தி லானேன்
மிக்ககருத் தினையெளிதின் முடிக்க வெண்ணி
        வேண்டுமுயற் சிகள்யாவும் புரிவான் மன்னோ, (௭)

மன்னுதே சாதிபதி யின்ன கூறி
        வருந்தினனேற் பிறர்செயலை வகுப்ப தென்னோ
பன்னுமிங்கி லாந்தென்னுந் தேச மேவிப்
        பாராளு மன்னர்பிரான் முதலா யுள்ள
துன்னுபெருந் தகையோராற் பரிசு பட்டந்
        தோன்றுபல வரிசைபெறு மகிமை யாளன்
உன்னுபிரித் தானியதே சத்திற் சேரு
        மொளிவிளக் காகவிளங் குற்ற சீலன். (௮)

வேறு.

சீலமே தருமந் தானஞ் செயம்புக ழாதிமேவி
ஞாலமேல் விளங்கி யுள்ள நல்லரு ணாசலப்பேர்க்
கோலமா ரிறைவன் மேன்மை கூறுமான் மியனுனோக்கி
னேலவே விரிவதாக வெவருநன் குணர லாமே, (௯)

ஆமென் றெவருந் தெளிந்துணர வருண சலப்பேர் பிரபுவுயர்
சேமம் பெறுமான் மியமிதனைச் சீர்கொள் பொன்னம்பலமென்னு
நாமன் சிறந்த பண்டிதன்றா னவிற லுற்றான் சேவுயர்த்த
கோம னருளாற் குவலயங்கள் குலவி வாழி வாழியவே. (௧௦)

சுன்னாகம் பிராசீனபாடசாலைத் தமிழ்த்தலைமையாசிரியரும்
வித்துவானுமாகிய
புன்னாலைக் கட்டுவன்
## பிரமஸ்ரீ சி. கணேசையர் அவர்கள்
இயற்றியது.

கடலிடைக் கிடக்கு நீராற் கனகிரி வேங்கடத்தின்
மிடலொடு மேவு மாண்பால் விளங்கிய திருவின்சீரால்
நடலையில் லாதே யின்ப நணுகினர்க் களிக்கும்பொற்பால்
தொடலையந் துழாயோன் போலத் தோன்றுமா லீழநாடே, (௧)

வேறு.

அன்ன நாட்டி லளப்பில் வளத்தொடும்
மன்னு மின்பை மகிழ்வெ டளித்தலாற்
சென்னி யாற்றுச் சிவனார் திருப்பத
மென்னத் தோன்று மினிய கொளும்பரோ. (௨)

வேறு.

அன்னதலை நகரினிடைப் பெருஞ்செல்வ வாழ்வினொடு மரசர்போல, மன்னியபொன் னம்பலமா முதலிசெயுந் தவப்பயனாய் வந்துதித்த, முன்னவர்கண் மூவரவர் முத்தேவர் தமைநிகர்ப்போர் மூவருள்ளும், பின்னவனாய் வந்துதித்தோ னென்றிடினு மறிவினின்முன் பேசநின்றோன், (௩)

ஆங்கிலமா மொழிகொளும்பு முதற்பாட சாலையின் றங்குற்றுள்ள, பாங்குபெறு மகாராணி கழகமதிற் கற்றுயரும் பான்மைகண்ட, ஓங்கியசெங் கோலரசர் விருப்பினொடு மிங்கிலந்தி லுவப்போ டேகி, தாங்கியநல் லூக்கமுடன் சருவகலா சாலைதனிற் றனக்கொப்பின்றி, (௪)

மன்னுபல கலைகளெலாம் மிகநுணுகு மதியினொடு வயங்கக்கற்றே, யன்னகழ கத்தினிடைப் பீயேயெம் மேப்பட்ட மதுவும்பெற்றோன், இன்னபெய ருடனிலங்கை வந்தரசர் மதிப்பினொடுமிருந்திராச்யந், துன்னுமொரு விவகாரச் சேவையுத்தி யோகத்திற்றுலங்குற் றானே, (௫)



துலங்குறுநாள் ராசாங்க பதிவுகாரிய முதன்மைத் துரையேயாகி, நலங்கொளுமச் செயல்புரிநா ளச்செயலிற் றிருத்தங்க ணாடிச்செய்தோ, னிலங்கியவவ் வுத்யோகம் விடுத்தோய்வு பெறுநாளி லிலங்கைச்சட்ட, வலங்கொணிறை வேற்றுசபை தனிலிருக்கக் கவுணர்சொல மன்னியுற்றோன், (௬)

தன்றேச நலங்கருதிச் சட்டநிரூ பணசபையிற் றானும்மன்னிக், குன்றாமல் வளம்பெருக மக்களுக்குப் பலநயங்கள் குறித்துச்செய்தோன், அன்றேகொண் டனபோக வவற்றுளொழிந் தனவின்று மரசர்கொள்ள, நன்றாக வாய்ந்துபல திருத்தங்க ளரசியலினாட்டிவைத்தோர், (௭)

அரசுரிமை குடிகளெலாம் பெறுமாறு பலசங் மாக்கிவைத்தோன், விரசுபல கலைக்கழகந் தோன்றுதற்குக் காரணனாய் விளங்கிநின்றோ, னாரியமொழி வளர்ப்பதுவே யொருதேசக் கேற்றமெனயுணரக்கூறிப், பாசுறுதே சாதிபதி முதலினர்தம் மொடும்வாது பகருங்கோமான், (௮)

வித்தைபொருட் டுதவுபெர்ருள் போதாதென் றரசினர்க்கு விளக்கிநின்றோ, னுத்தமனாம் ஜோர்ச்சுமன்ன னுதவியசேர்ப் பட்டத்தா லுயர்வும்பெற்றோன், வித்தகனா மிவனெமது ராச்சியத்திற் கிழக்கிலுறும் விளக்காமென்று, சித்தமகிழ் வுடனெங்கள் தேசாதி பதிவிரும்பிச் செப்பப்பெற்றோன், (௯)

சிதம்பரமே முதலாய தலங்களெலா மன்பினொடுஞ் சென்றேயீசன், பதம்பரவி யிதம்பெறுவோன் செந்தூரிற் கந்தனடி பணிந்தின்புற்றோன், நிதங்கதிரை மலைமுருகன் கழனினையு நியமமுளான் நெடியகோயில், முதஞ்செயும் பல்சமாதிகளு மமைத்துநிதப் பூசைநிதி முறையின்வைத்தோன், (௧௦)

தெருடரும தெய்வமெனக்கொளும்புநகர் வதிந்தநமசிவாயப் பேர்கொள், பொருண்மிகநன் மாமுதலி யன்பினுடன் றந்தருளும் புதல்விமாரு, ளருணிறைந்த சிந்தையினா ளிருணிறைந்த கூந்தலினாளழகின்மிக்காள், மருளொழிந்த வரிவுடையாள் சொர்னமெனும் பெயராளை மணஞ்செய்திட்டோன், (௧௧)

அம்மையவ ளொடும்வாழ்ந்து பெரும்புதல்வர்த முன்முன்
ஞே னவனிநீங்கச், செம்மைபெறு மலற்கிளையோ ஞங்கிலமு நனி
பயின்று சீர்த்திமேவி, மெய்ம்மையொடு தன்றேசந் தனக்குநலம்
புரிந்திடவே வேண்டிமுன்பே, தம்மையே போற்கவுன்சில் விரும்
புமகா தேவனிடஞ் சாருமன்பன், (கஉ)

நன்னிதியம் பலபடைத்தோன் பொன்கிழார் மாளிகையி ன
யந்துவாழ்வோன், மன்னுறு பாவலர்தமக்கு மிகுநிதிய முவந்தளி
க்கும் பண்புபூண்டோன், பன்னியநன் னீதிபொறை தயைமுத
லாங் குணங்களெலா மருவியுற்றோன், துன்னுறத்தன் புகழெங்கு
ம் நிறுவுமரு ணசலப்பேர்த் துரையாமன்றே, (கங)

அன்னவன்றன் சரிதமெலாஞ் சீரினொடும் பாவினிடை யமைத்தே
மேவுங், கன்னலொடு தேன்பாலுங் கலந்தசுவை யெனப்புலவோ
ர் களிக்குமாறு, என்னயமுஞ் சாரவரு ணசலமான் மியமெனப்
பே ரினிதுசூட்டி, இந்நிலமே னிலவியிடச் செய்தனன்யா ரவனெ
ன்னிலியம்பக்கேண்மோ, (கச)

செந்தமிழின் சுவைதிகழும் யாழ்ப்பாண நாட்டினிடைச் சி
றப்புவாய்ந்த, நந்தலிலா வளந்திகழுஞ் சாவகச்சேரிப்பதியி னனு
குவேளாண், முந்துகுலத் துதித்திடுசங் கரப்பிள்ளை செய்தவத்தின்
முதிர்ச்சியாலே, வந்துதித்த பெரும்புலவ னிலக்கண லக்கியங்க
ளுக்கோர் வரம்பாய் நின்றோன், (கரு)

தாதலத்தோர் புகழ்ந்திடமுன் வராககிரிக் கோவையொன்று
சாற்றியிட்டோன், பாவுபுக ழுறும்ராம நாதன்மகிழ் தருபுலவன்
பகான்ஞன்மேல், விராவுமவன் சரிதமெலாந் தொகுத்தொருமான்
மியற்றி விளங்கச்செய்தோன், அராவிறையும் புகழ்தருபொன்
னம்பலவப் பெயர்மருவு மறிஞன்றனே. (கசா)

1931C.C



PUBLIC LIBRARY.
JAFFNA

இலங்கைச் சருவகலாசாலைக் கல்லூரி
இயற்றமிழ்ப் போதகாசிரியர்
கலைமாணி பிரான்சிஸ் கிங்ஸ்பெரி தேசிகர்
சொல்லியது.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

நீராருங் கடலுடுத்த ஈழமெனும் நங்கைநிதம்
நிறைவுற் றோங்க
ஏராரும் யாழ்ப்பாணத் தமிழரெல்லாம் உவகையினால்
இறுமாப் பெய்த
நேராரும் இலனெனவே கல்வியொடு செல்வமிக
நிரம்பப் பெற்றோன்
பேராருந் * துரகபதி பொன்னருண சலமென்னும்
பெயரி னனே, (க)

இங்கிலந்தின் மக்களன்றி இலங்கையர்கள் இவ்வேலை
செய்ய கில்லார்
இங்கிலந்தின் மக்களுக்கே இவ்வேலை உரியவென
எண்ணு நாளில்
இங்கிலந்தின் மக்களைப்போல் இலங்கையரும் வேலைசெய்ய
வல்லார் என்றே
இங்கிலந்து நிபுணரெலாம் தனைப்புகழத் தொழில்கள்பல
இயற்றும் சிங்கம், (உ)

தான்கற்ற சருவகலா சாலையைப்போல் ஒருசாலை
ஈழ நாட்டிற்
தானிருந்தால் நாமகளும் கடைக்கணிப்பள் தப்பாமல்
நமது தேசக்
கானகம்வாழ் வேடருமே கல்விநலம் நனிசிறந்து
வாழ்வார் அச்சோ
ஆனதனாற் சருவகலா சாலையொன்றை அமைத்திடவே
விரதம் பூண்டோன், (ங)

* துரகபதி—Knight.

அதனிமித்தம் அமைந்தவொரு கல்லூரி நனிசிறந்து
மேன்மேல் வாழ
நிதந்தெரிந்து செய்வவெலாம் நிகழ்த்தியபின் தனதுமகன்
பற்ப நாபன்
விதம்விதமாம் புத்தகத்தை விரும்பியென்று மாணவர்தாம்
கற்கச் சாசு
வதம்பெறுநற் கல்லூரிப் புத்தகசா லைக்களித்தான்
வள்ள லாவான், (ச)

இத்துணையும் செய்தவன்றான் இனியதமிழ் மொழிதனையு
மறந்தி டாமற்
புத்தமுது தமிழென்றே புந்திதனில் எண்ணியதைப்
போற்றி நாளும்
கற்றவர்கள் கல்லூரிக் கல்வியெலா முடித்தபின்னும்
கரைதான் இல்லா
நற்றமிழா ராய்வதற்குத் தூண்டிவிட நிதியொன்று
நல்கி னானல், (ரு)

இவன்கதையை மான்மியமாய் இயற்றமிழில்
எடுத்துரைத்தான் யாவன் என்னில்
சிவனடியே சிந்திக்கும் ஆறுமுக நாவலன்றன்
மருக னாகும்
அவனியெலாம் புகழ்பொன்னம் பலவாசான்
மாணாக்கன் சங்க ரன்சேய்
உவகைதரு நூல்பலசெய் உயர்கவிபொன்
னம்பலவன் ஒருவன் மாதோ. (சா)

உ
சிவமயம்.

# ஸ்ரீ அருணாசல மான்மியம்

## விஷய அட்டவணை.


| பக்கம் | விஷயம். | செய்யுள் |
|---|---|---|
| க | காப்பு ... ... ... | உ |
| க | மங்கல வாழ்த்து ... ... | க |
| க | அவையடக்கம் ... ... | ங |
| உ | தற்சிறப்புப்பாயிரம் ... ... | ரு |
| ங | மலைச்சிறப்பு ... ... ... | க0 |
| ச | ஆற்றுச்சிறப்பு ... ... | கரு |
| சா | நாட்டுச்சிறப்பு ... ... ... | கஞ |
| ஞ | நகரச்சிறப்பு ... ... ... | ங0 |
| கச | குலமுறைத்தோற்றம் ... ... | ஙரு |
| கஞ | ஸ்ரீமாந் பொன்னம்பலமுதலியார் வரலாறும் அவர்தம்மாட்சியும் ... | உங |
| உஉ | ஸ்ரீ அருணாசலோற்பவம் ... ... | ஙங |
| உள | கல்வி பயிறல் ... ... ... | கஞ |
| ங0 | கேம்பிரிச் சர்வகலாசாலையில் கற்றுதேறுதலும் பட்டம்பெறுதலும் ... | சள |
| ஙள | சகோதர மாண்பு ... ... | கரு |
| ச0 | மணம்புரிதல் ... ... ... | எஅ |
| ருக | சலாப வழக்குத் தீர்ப்பு ... ... | ஞ |
| ருங | நீதிபதித்துவம் நடாத்தல் ... ... | உள |
| ருள | இந்தியக் காட்சி ... ... | உங |
| சாக | திரிகோணாசலமென வழங்கும் தக்ஷண கயிலாயம் சைவர்க்கெனல ... | கள |
| சாங | மனைமாட்சி ... ... ... | உக |
| சாசா | மக்கட்பேறு ... ... ... | ஙச |
| எக | சாதனச் சென்றலாய் வருதல் ... | கஅ |
| எச | கதிர்காமப்பூசை நடைபெறச்செய்தல் ... | உங |
| எஅ | மக்கள் மணக்காட்சி ... ... | சச |
| அச | திருக்கேதிச்சுரப்பதி சைவர்க்கு ஆகுதல் ... | உச |
| அஅ | சட்டநிரூபணசபை மந்திரி ஆகுதல் ... | க0 |

| பக்கம் | விஷயம். | செய்யுள் |
| --- | --- | --- |
| ௮௯ | சக்கரவர்த்தியின் சன்மானம் பெறுதலும், கேம்பிரிச்சில் மகாதேவாவைக் கற்கவைத்தலும் ... | ௫௨ |
| ௯௭ | சுகாதாரம் செய்தல் ... ... | ௧௮ |
| ௧௦௦ | விதாலயதாபனம் ... ... | ௧௨ |
| ௧௦௨ | பரமகுருசாமி சமாதித் தாபனம் ... | ௫ |
| ௧௦௨ | யோகசாதனை ... ... | ௧௩ |
| ௧௦௫ | இராசாங்க அந்தரங்க மந்திரித்துவம் பெறுதல் ... | ௩௪ |
| ௧௧௦ | இங்கிலாந்தில் நயிற்பட்டம் பெறுதல் ... | ௨௯ |
| ௧௧௪ | துறைமுகத்து வரவுகோடல் ... | ௯ |
| ௧௧௫ | ஞேயற் கல்லூரியில் கொண்டாடுதல் ... | ௨௨ |
| ௧௧௯ | யாழ்ப்பாண வருகையும் கொண்டாட்டமும் | ௪௪ |
| ௧௨௫ | இராணுவ வதிகாரத்தில் சிரைமீட்டல் ... | ௨௯ |
| ௧௨௯ | சர்வகலாசாலைத் தாபனம் ... ... | ௬௦ |
| ௧௩௮ | அநாதைகள் ஆதார சங்கதாபனம் ... | ௨௮ |
| ௧௪௨ | பதுமநாபன் இங்கிலந்திற் கதியடைதல் ... | ௩௮ |
| ௧௪௮ | இலங்கைச் சரித்திரமும், நூல்களின் வியாக்கியான மொழி பெயர்ப்பும் .. | ௧௧ |
| ௧௫௦ | ஆனைக்குட்டிச்சாமி மடாலயதாபனம் ... | ௧௦ |
| ௧௫௨ | அரசினர் ஆசிய சங்க அக்கிராசனம் வகித்தல் | ௨௬ |
| ௧௫௬ | தோட்டக்கூலிகளைப் பாதுகாத்தல் ... | ௨௧ |
| ௧௫௯ | யாழ்ப்பாணம் சைவப்பிரகாச வித்தியாசாலை உபந்நியாசம் ... | ௩௫ |
| ௧௬௬ | இலங்கைக்குடிப் பெருஞ்சபை உபந்நியாசப் ... | ௪௮ |
| ௧௭௩ | மைந்தர் நலன் ... ... | ௧௨ |
| ௧௭௫ | யாத்திரையிற் சிவகெதிப் பேறுபெறுதல் ... | ௭௭ |
| ௧௮௬ | பத்தினியாரறங்காத்தல் ... ... | ௧௧ |
| ௧௮௮ | கொங்கிறஸ் சபையில் படந்தாபித்தல் ... | ௮ |
| ௧௮௯ | சிலை நாட்டுதல் ... ... | ௩௨ |
| ௧௯௪ | பிரித்தானிய மந்திரி பொன்கிழார்க்கு வருதல் .. | ௧௯ |


உ

கடவுள் துணை.

# ஸ்ரீ அருணாசல மான்மியம்

## காப்பு.

ஆரணப் பொருளினை யாவிக்காவியை
வாரண முகவனை வழுத்து மன்பர்க்குப்
பூரண நாற்பொருள் புரியும் வள்ளலைக்
காரணக் கடவுளைக் கசிந்து போற்றுவாம், (௧)

## வேறு.

புத்தி போதம் பொருளனு போகங்கள்
சுத்தி யானநற் சொற்பொருடந்துமேன்
முத்தி போகமு முன்வந்து நல்குவான்
சித்தி யானைதன் சேவடி யேத்துவாம், (௨)

## மங்கலவாழ்த்து.

வேத வந்தணர் வேள்விக ளோங்குக
மாத மும்முறை மாரி வழங்குக
நீத மன்னர் நெறிமுறை செல்லுக
தீத கன்று செகமென்றும் வாழ்கவே, (௩)

## அவையடக்கம்.

உலக மூன்று மொருகுடை நீழலி
லிலக வைத்த விறைவனென் றஞ்சுமோ
வலகிலாத வவனியோர் பாகத் தைக்
குலவ வாளுங் குறுநில மன்னனே, (௪)

சீல நூல்விதி தேர்ந்த வாடு நற்
கோல மாகிய கூத்தை யவாவுடன்
கால முற்றவுங் கண்டு களிப்பவர்
பால ராட்டையும் பார்ப்பரி கழ்ந்திடார், (௫)

கற்ற கல்வி யொர் கையின் மண் கற்கலா
துற்ற கல்வி யுலகள வென்ப ரேற்
பெற்ற கல்வி பெரிதெனப் பேசுத
லெற்றதாகு மெறும்பு மெண் சாணன்றே. (௬)

## தற்சிறப்புப்பாயிரம்.

ஓத நெடுங் கடலுடுத்தவுலகிலுயர்மனுக்களெனவுதித்துமேலு
மேதமகன்மனைதனயரிருநிதிய மதிகாரமிறைமைவன்மை
வேத நெறியமைசமயபக்தி யறிவருளீகைவிளங்கும்விண்மே
லாதவனேர்பெறும்புகழென்றிவையனைத்துமருந்தவத்தாலடைவிற்
பெற்றோர், (௭)

தரேந்திரனென்றிருநிலத்தோரேத்துகிற்போரிவரறிமின்றவறுநேரிற்
சுரேந்திரனுமிவன்றனைத்தான்முதுகிருத்தித் தினந்தினமுஞ் சுமந்தங்குற்ற
கரேந்திரனும் வந்தமர்ந்து தவமியற்றித் தம்பவங்கள்கழிக்கும்மண்ணி
னரேந்திரனென்றிலங்கையில்வீற்றிருந்தசெம்மலிவன்பெருமை நவிலப்
போமோ, . (௮)

இத்தனையும் பெறுமிவற்றா னியற்றுதவம் பெரிதுமுளோ னிலங்கைச்சீர்க்கு
வித்தனைய ஞானபொன்னம் பலமுதலி யெமக்குதவ விரும்பிப்பெற்ற
முத்தனைய தனயரொரு மூவருளு மிளையவன்றன் முன்னோர் தம்பே
ரத்தனையு நிறுத்தவந்தோன்போருணாசல நிலத்திலமையவைத்தோன், (௯)

கலைநாட்டித்தன்னாட்டினரசியலைத்தானாட்டிக் காயந்தன்னைச்
சிலைநாட்டிப் பேர்நாட்டினிந்நாட்டுமாத்திரமே திகழுமென்ன
நிலைநாட்டிற் காவியந்தானென்னாட்டு மெவருளத்தும்நிலவச்செய்யு
மலைநாட்டின்வடநாட்டிற்றனிநாட்டிநும்பெயரும்வழங்குவிக்கும், (௰)

பீடுபுக ழுடன்பிறந்த பெரியனிவன்பேசவரும்பெருமைமுற்றும்
நாடு முறை நெறியாக வாய்ந்தெடுத்தேநன்னிலத்தோர்நாடும்வண்ணங்
கூடுமிசைதரும்விருத்தப் பாநடையிற் செவிக்கமுதாய்க் கூறுகென்னத்
தேடுகலைதோறிஞர்பணித்திடவென்சிற்றறிவாற்செப்புகின்றேன், (௧௧)



## மலைச்சிறப்பு.

மாணிலங்கைக்குத் தென்பால் மகேந்திரக்கடற்சார்நிற்குந்
தாணிலங்கீண்டுசென்றுந்தரணிமண்டலமேற்போந்துங்
காணிலங்கண்கட்கின்னுங் கருத்துக்குமளக்கொணாமற்
சேணிலங்கடந்துசெல்லுஞ்சிவனொளிபாதவெற்பு, (௧௨)

ஓருயர் கோட்டினாலுமுடுபதிதவழ்தலாலு
நீருயர்கதுப்பினாலு நிதம் பலர்பணிதலாலுங்
காருயர்பூதவேடக்கணங்கள்சூழ்வுறுதலாலுஞ்
சீருயர்முதல்வனெக்குஞ் சிவனொளிபாதச்சையம், (௧௩)

நீருள நீறுமுள்ள நிலவுள விதழியுள்ள
வாருள புற்களுள்ள வரவுள களனுமுள்ள
காருள வுயர்ச்சியுள்ள கண்கள் மூன்றுள்ள விந்தச்
சீருள சிவனைநேருஞ் சிவனொளி பாதப்பொற்றை, (௧௪)

புறத்தவ வேடம்பூண்டு பொன்மகடன்னை வெள்வி
மறத்துடனசோகக்காவில் வைத்திடு மிலங்கை வேந்தை
யறத்துடனயோத்தி வேந்தனட்டுத்தன் வெற்றி நாட்டுந்
திறத்துயர் தம்பந்தானே சிவனொளி பாதக்குன்றம், (௧௫)

முந்தொரு காலந்தன்னின் முதிர்கழல் வீரவாகு
வந்தனன்றாது சூர்தன் மகேந்திர நகரைக் காண்பான்
சிந்துவின் றீரத்திந்தச் சிலம்பினதுச்சி யேறி
நிந்தமா முருவொன் றெய்தி நின்றனனென்பர் நல்லோர், (௧௬)

சாக்கியர் சைனர் சைவர் தருக்கமோடமைந்து சாலா
வீக்கிய துருக்கரின்னும் விவிலியரிவர் கடாந்தா
மாக்கிய வெவ்வேறாக வடுத்திடும் பெயர்களெங்கும்
போக்கியபொருப்புப்போலப் பொருப்பொன்று புகலப்போமோ, (௧௭)

காயமார் பிதுருதால கலைநவ னகுலகந்த
மாயமா மலைகளென்னினற்புத மெதுவுமுண்டோ
வேயமா வடிவத்தாலு மெய்துமோ சிறப்பிலங்கைத்
தேயமாமிதன் கணீதே தெய்விகவரை கண்கூடே, (௧௮)

எண்ணெழும் முதலியார் பெற்றிடு மருணாசலத்தின்
மண்ணெழுங் கீர்த்தி பொங்கி வானமேற் சேறல்போல
விண்ணெழுங் கிரியிற்காள மேகங்களிடித்து மின்னிக்
கண்ணெழு மொளியுமெஞ்சக் காலுவதாரை யீட்டம், (௧௯)

வேய்தனக்கிடமாம் விண்டின் விசும்புதோயுச்சிநின்றுஞ்
சேய்தனக்கிரங்கி விஞ்சிச் செய்யகால்வழியே பாயுந்
தாய்தனப்பாலின்வீழுந் தண்ணிய வருவியீட்ட
மாய்தனத்தீழ நாட்டுக் கமுதமொத்தழகு செய்யும், (௨௰)

இந்தவேதண்டமீன்ற விரண்டுபெண் மகார்கள் கண்டீர்
வந்த நீர் கழனிகங்கை மகாவலி கங்கையாமாற்
பிந்தவே வகுத்தயாறு பிதுருவில் வெளிகொண்டேகு
நிந்தமாமடுக்கனின்று நிலத்தின் கீழாகச் சென்றே. (௨௧)

---

## ஆற்றுச்சிறப்பு

காட்சிமிக்குயர் கல்விற் பிறந்திடா
வாட்சிகொண்டு நன்காண்டு வந்தீழத்து
நீட்சிபெற்ற நிலங்களளந்து போய்
மாட்சி செய்வது மாவலி கங்கையே, (௨௨)

காரினங்கள் கலைந்து வெளிறலான்
மாரி வற்றினும் வற்றுதலில்லதா
யேரி ஞோங்கிய வீழ மேன்மக்கட்கு
வாரி நல்கு மகாவலி கங்கையே, (௨௩)

கண்ணளித்தலிற் கண்ணனை யொப்பது
விண்ணளித்தலின் வேதியனொப்பது
மண்ணளித்தலின் மன்னவனொப்பது
வுண்ணநீர மகாவலி கங்கையே, (௨௪)



மாவலிக்கு மதமலை நேர்வரு
மாவலிக்கு வடு நுளைந்தான்றுதா
மாவலிக்கு மவர்குறை தீர்த்திடு
மாவலிக்கு வலயமணை குறும், (௨௫)

### வேறு.

கோடுபோயிறங்கியிம்பர்க் குவடுகளிருபாலுக்கு
மூடு போயோடுமோதையு வகையோடச் சஞ்செய்யக்
காடு போங் காடு போகுங் கற்களை யுருளத்தள்ளி
மாடு போங் சங்கைக் கிந்தமாவலிப் பெயரேசாலும், (௨௬)

கோத்திர வடாச்சிமேய குறிஞ்சியிற் கடங்களெங்குங்
காத்திரவு பலமேறிக் கல்லென விரைத்து வீழா
வேய்த்திரடேக்கு மின்னும் விடவிக ளொடித்திட்டீழ
நேத்திரமிதுகொலென்ன நிலவியேப ரவிப்பாயும், (௨௭)

சுரங்களைக் குறிஞ்சியாக்குஞ் சுலவலைக் காத்தாலீர்த்து
மரங்களை யாவைக் காட்டி மருதத்தை முல்லையாக்கும்
வரங்களை முரசமோரா னெய்தலை மருதமாக்குந்
தாங்களை மயங்கக் கங்கை தாலிலக் கணமதன்றே, (௨௮)

பேரொரு முதலேயாகப்பேதமைச் சமயமாக்க
ளோரொரு கடவுணும மோதுமா போலவிந்த
வாரொரு வடிவேயான மகாவலி கங்கைதானே
பாரொரு கிளைகளாகிப் பற்பல நாமமெய்தும் (௨௯)

காடுகடழைக்கச் செய்யுங் கழனிகள் விளையச்செய்யு
நாடுகள் சிறக்கச்செய்யு நாடிடா வளங்கள் செய்யும்
வீடுகள் விளங்கச்செய்யும் விரும்பிய வுணவு செய்யும்
பூடுகள் வளரச்செய்யும் பொன்னைநேர் கங்கை யீதோ, (௩௰)

திதியருளி லங்கைவாழுஞ் சிங்களர் தமிழர் தம்மேன்
மதியருணாசலந்தன் மனத்துள கருணை மட்டாய்
மதியருளீழ தேய மேவிய வெவர்க்கு மிந்த
நதியருளிருக்கு மேற் பின்னாட்டுக்குங் குறைகளுண்டோ, (௩௧)

மைதவழ் கயிலைபேர்த்த வன்கணன்றனைப் பயந்தாள்
கைதவமிலாத நெஞ்சக்கை கசிக சிவாற்பூசை
செய்தவச் சிவலிங்கங் கடினந் தினமிடுமாறீது
மொய்தவப்பவங்கள் போக்கு முன்னுசித்திகளு நல்கும், (௩௨)

பாறுதந்துலவும் வைகைப்பாண்டி மண்டலத்தை யோம்புஞ்
சோறு தந்துலவும் பொன்னி சோழ மண்டலத்தைத் தாங்கும்
மாறுதந்துலவு நீத்த மகாவலியெனப் பேர்பெற்ற
ஏறுதந்துலவுங் கங்கை யீழ மண்டலத்தைப் போற்றும், (௩௩)

தென்றிசைப் பிறந்து கீழ்பாற்றிசை தவழ்ந்தெழுந்த கங்கைக்
குன்றிசை வடபாலாகக் குலாவியே நடந்துகோணைத்
துன்றிசைக் கயிலைவைகுந்தோன்று மீச்சலம்பத்தைக்கண்
சென்றிசைந்திடுவதென்னினீது கண்ணளவிற்குண்டால், (௩௪)

மலையிடை யுதித்தகங்கை வன்சுரங் கடந்துகாரா
முலையிடையமுதமாந்தி முல்லையை யொருவி மள்ளர்
கலையிடையிறுக்கி நின்று கமஞ்செயு மருதங்கண்டு
மலையிடை புளினமேவு மலையிடை மயங்குமன்றே, (௩௫)

கோட்டணியதுவோ மேலுங்குவடு நின்றிழியும் யாற்றின்
மாட்டணி கூறிவந்த மாபெனப் புலவர் சொன்ன
பாட்டணியிலையே லென்னபயனது கருதிப்பன்னா
ளூட்டணி குறையாதீழ நாட்டணி நவிலுகிற்பேன், (௩௬)

## நாட்டுச்சிறப்பு.

திருநாடுகாணுயர்ந்த செல்வியினாமர்ந்ததொண்டை
யொருநாடுமேற்சேரத்தோர்நாடு பாண்டியென்னு
வருநாடுகாவிரிசூழ்வயன்மருதச்சோழமென்றே
மருநாடுமற்றிவற்றிற்றிகழீழவளநாடு, (௩௭)



வாரியித னுற்புறமும் வடபாலுங் கீழ்பாலுஞ்
சீரினுயர் சிதமிழூர்கள் சிற்றூர்க டென்றிசையோ
தேரினனி யகன்றிருக்குஞ் சிங்களவூர் பரந்திருக்கும்
பாரினிது வேயெவர்க்கும் பாக்கியம்போன் றுயர்நாடு, (௩௮)

தென்பாலின் மலைநாடு தென்னையுள தோப்புமுள
வன்பாலின் மரந்தழைத் தேய் வளர் தோட்ட மருவியுள
நன்பாலாம் வடபாற்க ணன்மருதங் குளங்களுள
பொன்பாலா மிருபாலும் பொங்கருள காடுமுள, (௩௯)

தென்னாட்டுக் கீழ்நாட்டுச் செப்பியமா வலியுமலாற்
கன்னாட்டு மேனாட்டுக் களனிகங்கை மேலுமுண்டு
கொன்னாட்டு மிருநதியின் குலக்கிளைக ளேவடக்கி
னெந்நாட்டும் வந்துலவா வேர்வழங்கக் குளநிரப்பும், (௪௦)

ஆறிடுவர் வெள்ளமள வணையிடுவர் மேழிபிடித்
தேறிடுவர் கயலினங்க ளெழுந்துகளக் கால்பெயர்ப்பர்
சேறிடுவர் நாறிடுவர் செறுக்களெங்கு மோதையெழ
மாறிடுவர் தொழில்களிலே மள்ளரிந்த நாடுதொறும், (௪௧)

இளம்பயிர்கள் வளர்ந்தெழுந்தே யீன்ற கதிர்முற்றவரிந்
துளம்பயிலுமவர் போர்களுயர்த் தியதன் மேலொருநாள்
களம் பொலியத் துவைத்துயர் பொங் கழிதூற்றி யளவுகண்டு
வளம்பெருகப் பண்டிதொறுமனைகடொறுஞ்சேர்த்துவரால். (௪௨)

நெல்விளைவு மணிவகை போனிலவு நவதானியத்தி
னல்விளைவு முழுநருள நனிகளிக்க நாடாத
பல்விளைவுந் தந்துவரும் பரிந்து கைம்மாறற்ற கொடைச்
செல்விளைவு கூர்ந்துதவி செயுமீழத் திருநாடே. (௪௩)

## வேறு.

எள்ளுடன் றுவரை யேனலிறுங் குழுந்தவரை மொச்சை
கொள்ளுடன் பயறு சாமை கோதுமை சேனை நின்றுங்
கள்ளுடன் கலந்த மள்ளர் காளைமேற் பொதிசுமத்தி
யள்ளுடன் கால்களாழக் கடிது வந்தகத்திற் சேர்ப்பர், (௪௪)

குலையுடைக் கமுகவேலி குடிமனைக் கொல்லையார
விலையுடைக் கதலிகன்ன லெலுமிச்சை நாரந் தோடை
நிலையுடைப் பலவு சூத நீடுமாசினிகளாழ்ந்த
வலையுடைக் கடல் சூழீழ மடங்கலும் பொலிந்து காட்டும், (சரு)

வெயிலுறத் தடங்கண் மூழ்கு மேதியும் பசுவும் புற்க
ளயிலுற வுலாவிக் காட்டி லழுதிளங் கன்றை யுள்ளிப்
பயிலுறக் குரலான் மெல்லப் பாவையராவணிக்கத்
துயிலுற வந்து வந்தே தொழுவங்களணைவமாலை, (சசு)

வாலையிற் கன்னிமாரை வருத்திடார் வருந்திவிட்டு
வேலையிற் பயின்ற மூத்தோர் மெல்லவந்தணைத் துயாத்த
மூலையிற் கன்றைவிட்டே முலைவழியொழுகும் பாலைக்
காலையின் மாலைதோறுங் கறப்பர் கொள்கலம் வாய்வார, (சஎ)

வண்டயில் குழல்கள் சோர வாடியே நுசுப்பு நோவக்
கண்டயிலன்ன கண்கள் காதுகள் கிழித்துப் போகக்
கொண்டயின் மனைகடோறுங் கோதையர் மத்தெடுத்து
வெண்டயிர் கடைவர் மேலும் வெண்ணெயும் திரட்டிக்கொள்வர், (சஅ)

சொல்லற மிரண்டிற் சாலுந் துறவற மரியதென்றும்
பல்லறமான யாவும் பண்ணுதற் குரிமையான
நல்லறமாவதென்றும் நாடியே யீழ நாட்டோ
ரில்லற மியற்றுகிற் பாரிருமையும் பெறுதற்கென்றே, (சகூ)

தொன்மனை யறங்கட் கான்றோர் சொல்லுமுக் குணங்களான
தன்மனையொழுக் கந்தன் மந்தனயரொன்றி வற்றினோடு
மன்மனைவாழ்வு பெற்றே வாழருணாசலந்தன்
பொன்மனைபுரியுந்தன்மைப் பொலிவுளதீழ நாடே, (ருO)

பொருந்த நன்முகமுங் காட்டிப் புரையிலின் மொழியும் பேசித்
திருந்தகமலர்ந்தேயட்ட தேவரூணேருமுண்டி
யருந்தவைத்தூட்டி யின்னு மவாவர்க் கடுத்தவாற்றி
விருந்தினர் களிக்கப்போற்றி விடுவர்பின்வழியுமின்னோர், (ருக)



பாட்டுயர்நாயன்மார்தம்பத்தியின் பாடல்பெற்ற
கோட்டுயர் வனஞ்சார்கேதிச்சுரத்துடன்கயிலையான
கோட்டுயர் கோணைதானுங்குமரவேள் கதிரைதானு
மீட்டுயரீழ நாட்டினிலங்கருட்டலங்கள் கண்டீர், (ருஉ)

மாயைநேராக்கன் வைத்தவன் சிறைப்பட்டுத்தேம்பித்
தீயைநேர் சீதையன்னாட்டிரிசடைதேற்றவைகுங்
காயை நேரசோகக்காவைக்கான்முனைக் குணவுநல்குந்
தாயை நேரீழநாடுதான் கொண்டுதயங்குங்கண்டீர், (ருங)

தோற்றுபிங்கலையே யின்னுஞ்சுழுமுனையிடையிம்மூன்றிற்
சாற்றிய வண்டமான சரீரத்திற் சுழுனைதில்லை
பேற்றுயரிமயந்தானே பிங்கலையிடையாநாடி
யேற்றியவிலங்கையென்றே யியம்பின நூல்கள் கண்டீர், (ருச)

வேழமாநாடு சிப்பிவிளையுமுத்துலவுநாடு
வீழமாமணிகொணாடு வெண்சங்கநாடுமொன்றே
சோழமாநாடு வேண்டச்சொன்னனி கொடுக்கு நாடே
லீழமாநாடுபோல்வதெந்தநாடது நீர் சொல்லும். (ருரு)

## நகரச்சிறப்பு

பூவிருந்த பொறிமகளென்றென்றுந்
தாவிருந்தருடந்த விலங்கைக்குத்
தூவிருந்ததுணைப்படை தன்னுடன்
கோவிருந்தகொளும்பு தலைநகர், (ருசு)

தேடுகிற்பவர் செய்தொழின்மட்டதாய்
நீடுசெல்வநிரம்புங் கொளும்புக்கு
நாடு பொங்கர் நாலைநதியெனக்
கூடுநான்குங்குலாவு மாணங்கள், (ருஎ)

சொற்றசிங்களர் தொல்லைத்தமிழர்க
ளுற்றகாலத்திலோங்கலுங்காடுங்காண்
மற்றவாங்கிலர்வந்தபின்ருனிது
பெற்றசீரிற் பெருநகரானதே, (௫௮)

சொன்ன நந்தந்துரையருணசலப்
பன்னுஞ்சீரினன் பாட்டனையாகிய
முன்னமுற்றமுதலிதன்காலத்தி
லின்னுமிந்நகரோர்மிகப் பெற்றதே, (௫௯)

பட்டணம்மிகப்பண்கள் செய்திட்டதுஞ்
சட்டமாக்கித்தகவரசன்னுடன்
கட்டவீழங்களிக்கச் செய்திட்டது
மிட்டமானவிவன்வழித்தோன்றல்கள், (௬௦)

கணிகளாயக் கரையுமுண்டாங்கொலோ
மணிகளென்னவகை வகையாகச்செய்
பணிகளாற்றிகழ்பட்டணத்தோர் சில
வணிகளோதவவாவுமென்சிந்தையே, (௬௧)

வேறு

ஆற்றவேகாட்சிசெய்யுமாண்மனையமைச்சர்கூடி
மாற்றரும் நெறிகளாக்க மந்திர மிருக்குமன்றந்
தொற்றிடலிலாத ஞாயதுரந்தார் நீதிமன்னர்
சாற்றியவாதமாய்ந்தே தண்டங்கள் விதிக்குந்தானம், (௬௨)

போரிடைவெரிக்கொடாதேபொருநர்கள் புறந்தந்தோட
நீரிடையிலக்கேயாகநிரைநிரைபடைகளுட்டிச்
சீரிடைமலிந்தவிந்தத் திருநகர்க்காவலாக
வாரிடையிறுக்கும்வீரர் வலியுடன்வதியுந்தானம், (௬௩)

வகுத்தபல்தேயம்புக்கே மரக்கலம் வாங்கிவாங்கித்
தொகுத்தபல்பொருள்கள்கொட்டுந் துறைமுகத்தானந்தீ நீர்
மிகுத்தவெங்காங்கையீர்க்க வேகமேல்வரவிற்போக்கில்
வெகுத்தவெம்புகைத்தேர் தங்குமிகுசனங்குழுமுதானம், (௬௪)



தாரணிச்செயலங்கங்கே தந்திகள் கடிதிற்கேட்டுப்
போரணியறிந்துநாடிப் பேசினர் கொடுக்குந்தானம்
வாரணிதேயமுற்றோர் வரைந்தன கடிதம்பாரா
வூரணியவர்தம்பாலினெல்லை தந்துதவுந் தானம், (௬௫)

தொன்மதியளக்குஞ் சூழ்ச்சித்துணைவர் மாளிகைகளோர்சார்
பொன்மதியமைச்சின்மேலோர்பொருந்துமாளிகைகளோர்சார்
தன்மதிச்செனறன்மார்கள் சார்தருமனைகளோர்சார்
மன்மதிநியாயமன்னர்வதியுமாளிகைகளோர்சார், (௬௬)

விருந்தருளில்லறத்தோர் மேவுறுமனையுமோர்பாற்
றருந்தருவனையமாக்கள் சார்தருமனையுமோர்பாற்
றிருந்திருநிதிக்கோனொத்ததிருவினாலோங்கும்வாழ்வு
பொருந்தருணசலத்தின்பொன்கிளார்மனையுமோர்பால், (௬௭)

தொகுத்தனபணங்கொண்மாடஞ்சொல்லுத்தானியங்கொண்மாட
மிகுத்தன துகில்கொண்மாடமேலையூர்ப் பொருள்கொண்மாடம்
பகுத்தனநிதிகொண்மாடம்படுநவமணிகொண்மாடம்
வகுத்தனவணிகொண்மாடமண்டபமானமாடம், (௬௮)

சித்திரகூடந்தெற்றி சித்தசன் கணைகணேர்ந்த
வத்திரவிழியாராடுமரங்கமன்றகமேலென்றுங்
குத்திரமிலாதசான்றோர்கூடிச்சொல்வழங்குமன்ற
மித்திரொருங்குசேராவிருந்துகொண்டாடுமன்றம். (௬௯)

சங்கங்கேதவழுத்தள்ளுஞ்சலதிசாலைகள்கோட்ட
மெங்கெங்கேயெங்கேயென்னினெங்கணுஞ்சிகாவைப்புண்
டங்கங்கேபளிங்குமாடமாமியமடுக்குமன்றங்
கொங்கங்கேகுலவுங்கஞ்சக்கோமகள்விலாசமுண்டால், (௭௦)

ஒழுங்கியதிணைகளெந்தினுளபொருள்வாங்கிவாங்கி
விழுங்கினவுமிழ்வவாக விளங்குமங்காடிநோக்கின்
புழுங்கிய பசியான் மாயன் புவனியையுண்டுவைக்க
வழுங்கியவுயிருமற்றுமடங்கியவுதாமொக்கும், (௭௧)

பாரிடைத்தானியங்கள் பறவைமீன்விலங்குசெந்து
வாரிடைத்தசையூன்வேடர்வலியசிங்களராக்கர்
பேரிடைத்தமிழர்சோதிபிறழ்மணியினையகாட்சிச்
சீரிடைப்பட்டவெல்லாந்திகழுநூதனங்கொள்சாலை, (எஉ)

சித்திரத்தேவர்கோவிற்றிருமடந்தினமுமோதும்
பத்திரமறையோர்கோவில்பதியுளவனைத்தைத் தங்குஞ்
சத்திரமானவெல்லாந் தனமருளிலங்கைமாதின்
வத்திரநகரிற்கண்போல் வயின்வயின்வயங்குமம்மா, (எ௩)

ஆர்க்கங்கணவதியென்றேயடுத்துவந்தபாயமான
பேர்க்கங்கணுதவியாகிப்பேணலார்க்குறுகண்செய்வான்
போர்க்கங்கமானமள்ளர்பொழுதளவாக நிற்கு
மார்க்கங்களிரண்டுபாலுமாலையாய்மனைகண்மன்னும், (எச)

உன்னுமோர்கடவுளாக வுலகினிலளவைநூலை
மன்னுருவாகப்பற்பன்மார்க்கங்களமைந்தவாபோற்
பன்னுமோர்கொளும்பேயான பட்டணமொன்றைநாடித்
துன்னுபன்மார்க்கமெங்குந்தொடர்வனமயங்கத்தாமே, (எரு)

சொற்படுவீதிதோறுஞ் சூரியனுதிக்கத்தொட்டே
யெற்படுயாமங்காறுமிம்மியுமொழியாவாகப்
பற்பலவகைத்தாம்பண்டிபணிகண்மேலுலவுமாந்த
ரற்பகல்வரவும்போக்குமாகுவாவதியுண்டோ, (எ௬)

உலகமுற்றொடுங்குமந்த வூழியினொருவன்முன்ன
மலகிவாவுயிர்கள்பேதமகன்றுடன்மயங்கலொப்ப
விலகலாவீதிதோறும்விதித்திடுசமயஞ்சாதிக்
கலகமேயிலாமலெங்குங்கலந்துசென்றிடுவரிங்கே, (எஎ)

சீரினிற்பெரியர்ராச சேவையிற்பெரியரீயுங்
காரினிற்பெரியர்கற்றகல்வியிற்பெரியருள்ள
நீரினிற்பெரியர்பேசும் நேர்மையிற்பெரியர்கீர்த்திப்
பேரினிற்பெரியாராயிற்பெரியரேபெரியரம்மா, (எஅ)



ஆறுதலாக நோய்களளந்து பண்டிதர்கணெஞ்ச
மாறுதலிலாமற்கண்டே மருந்துதவனேகசாலை
தேறுதலாக நூல்கடோவுமதினுஞ்சால
வேறுதலடைவான்கற்கவெண்ணிலகழகசாலை, (எ௯)

பன்னியவிடங்களாலும்பணிபடுமணிகளாலுந்
துன்னியவீதியாலுந் தொடர்சனநெருக்கினாலும்
பின்னியமனைகளாலும் பிறிதுளதிருவினாலு
மன்னியகொளும்பைநேருமாநகரொவ்வணுமில்லை, (அ0)

பன்னகரங்கடம்முட்பண்புளகொளும்பென்றோது
மிந்நகரீழநாட்டினிருந்திடாதிருக்குமென்னின்
மன்னகரென்றேயாரும் வழங்கியவானநாட்டிற்
பொன்னகாதுவுமிந்தப் புவனியிலிருந்திடாதோ, (அக)

பாவிருந்தாணிமீதிற் பலநகர்படைத்துக்காட்டிப்
பூவிருந்தவன்பின்செய்தபுரமிதோகொளும்புதானோ
மாவிருந்தாசுகொண்ட மாட்சியாலழகாற்காணக்
கோவிருந்தாகமன்னுங்கோனகர்கூறப்போமோ, (அஉ)

இந்நகரிருந்துமேனுளிந்திரச்செல்வத்தோடு
மன்னியவாழ்வுவாழ்ந்தோன்வானவர்விருந்தாயுள்ளோன்
றென்னிலங்கையர்க்குத்தானோர்தெய்வநேர்ந்தமர்ந்தசெம்ம
லன்னவன்றன்னைத்தான் பொன்னம்பலமுதலியென்பர், (அ௩)

பொருந்தவத்தொழில்களேதும் புலனிலுங்கருதலில்லான்
வருந்தவக்கீர்த்தியாளன் மனுவுடற்குரிமையாகும்
பெருந்தவப்பேறென்றெண்ணிப் பிறவிகடோறுஞ்செய்த
வருந்தவப்பேற்றினாலுமாயிழைதவத்தினாலும், (அச)

அருளருணாசலப்பேரரித்திறற்குருவைச்செம்ம
லிருளருளீழநாட்டிற்கேற்ற நன்முறைகணாட்டி
மருளருளாசைநோய்மாண்பெறத்திருத்திவாழ்ந்த
பொருளருளாண்மைகல்விப்பொற்புகளாய்ந்துசொல்வேன், (அரு)

## குலமுறைத்தோற்றம்

இலங்கைக்குவடக்கிருக்குமிலங்குகடம்படியிருக்கும்
வலங்கைக்குமழுவிருக்கும் வள்ளலருளோடிருக்கும்
பலங்கைக்குமவரிருக்கும் பாண்டியுடனிணைந்திருக்கும்
நலங்கைக்குமிடமிருக்குநாமிருக்கும் யாழ்ப்பாணம், (அசா)

இந்நாடுதனிநாடுதானுழுநரோர்நாடு
நன்னாடுசிவநாடு நலநாடுந்தமிழ்நாடு
பன்னாடுமவாநாடுபண்ணாடும்வளநாடு
பொன்னாடுநாவலரும் புலவர்களுமுளநாடு, (அஎ)

நாடிதற்கு நாற்புறமுநாலையலைநத்தைநத்தூர்
நீடிதற்குணன்மருதநெய்தலுளபற்பலவூர்
மாடிதற்குவருநான்குமண்டலத்தோர்மன்னியவூ
ரீடிதற்குரோமோ மெவ்வூருமெவ்வூரும், (அஅ)

ஆரூரென்றுரைத்திடற்கென்னணிமாடமாளிகையாற்
சீரூரென்றிடவாசர் சேவையினர்க்கடியதனு
லோரூரென்றோதுதற்குமோங்குதனஞ்சான்றிடலாற்
பேரூரென்றிருக்குமிவ்வூர்பேர்மானியம்பதியே, (அகூ)

தேடுதிறற்பாராசசேகரன்றன்காலமதி
லீடுபெறும்யாழ்ப்பாணத்திப்பதிக்கண்வந்திருந்தான்
பாடுதிருப்பதிகமுடைப்பாண்டிவளநாட்டுநின்று
மாடுவருஞ்சனங்களுடன்வரும்மாணுமுதலியென்பான், (கூ0)

மூந்தமுறையெடுத்துரைத்த முதுமையினராளவுமலா
தந்தமரபுண்மைமுற்றுமாய்ந்தாய்ந்து நாடியிவண்
மந்தவளிநாட்டிவன்பால் வாழையடிவாழையென்ன
வந்தவரினோர்சிலர்மேல்வரம்பாகக் கட்டுரைப்பேன், (கூக)



பறங்கிவரவேற்றவரும் பதுங்கியஞ்சிநின்றவரு
மிறங்கியெதிர்பணிந்தவருமிந்நாட்டிற்பற்பலர்காண்
மறங்கிளரவெதிரூன்றிவந்துதம்மூரணுகாமற்
றிறங்கிளரநின்றவரைச்செறுத்தவருமிவன்குலத்தோர், (கூஉ)

ஒல்லாத நெறியுடையவொல்லாந்தரந்நாளி
லல்லாதபலதொழிலுமாற்றவுமாரெதிர்ந்தவர்காண்
பொல்லாதபேர்களென்றும் போற்றினரோதம்மூருட்
செல்லாதபடியவரைச் செயிர்த்தவருமிவன்குலத்தோர், (கூங)

திரிந்தபகையாயினர்க்குந் தீயவர்க்குஞ்சேயிழையைப்
பிரிந்தவெறுப்பாயினர்க்கும் பேதையர்க்கும்பிறர்வாழ்வி
லெரிந்தமனவஞ்சகர்க்குமேழையர்க்குமெல்லவர்க்கும்
பரிந்தருளிவந்தபொன்னம்பலவேளுமிவன்குலத்தோன், (கூச)

சொற்றவிவன்மகன்மகனாய்த்தோற்றுமகன்சுற்றமுள
குற்றமுளபொறுத்தாளுங் குணமுடையோன்குறைகூறி
யுற்றவரையோம்புகிற்போனுழுதுவருந்தந்தொழின்மே
லற்றமிலனானதில்லையம்பலமுமிவன்குலத்தோன் (கூரு)

இந்தவனுவுருவோடுமிக்குரிசிலருந்தவத்தால்
வந்தவனுமூக்கமுடன்வளம்பெருக்கியுற்றவனு
மந்தவனுபோகநுகர்ந்தமர்ந்துவருமறங்களெல்லாந்
தந்தவனுமாமருணாசலவேளுமிவன்குலத்தோன், (கூசா)

காராளகுலம்போற்றிக் காவலன்கான்முளையிவன்காண்
போராளானவொருமூவர்களைப் பெற்றெடுத்தே
யோராளவரும்வளத்தாலெழில்கொடுக்குமிலங்கைநகர்ப்
பாராளவைத்தபொன்னம்பலவேளுமிவன்குலத்தோன், (கூஎ)

ஓதுவழியத்தனையுமுத்தமனின்வழியதுபோ
லீதுவழியெனமுதியோரிசைத்தவழிதிறம்பாதே
யேதுவழியாமெனமூன்றேறுகளைச்சுமந்திளைத்த
மாதுவழியதுவுமிவண்வகுத்திடுதன்முறைமையதே, (கூஅ)

இக்குலத்திலோர்குரிசிலெடுத்துரைக்குமாறிருந்த
வெக்குலத்திலுள்ளவருமேத்துகுணசீலமுளோ
னுக்குலத்திலுள்ளவருளொழுக்கமுயர்வென்றபடி
யக்குலத்திலொழுக்கமுளோனாறுமுகமிவன்பெயரே, (௯௯)

மன்னுமறுமுகவேளின்மகன்குமாரசாமியென்பா
னன்னதமிழோடுமின்னுமாங்கிலமுங்கற்றவனு
மின்னதனியாழ்ப்பாணமிருந்துமொருநன்னுளின்
முன்னுகொளும்புற்றவனுமுதலிலிந்தமன்னவனே, (௧௦௦)

ஓதரியநூலுணர்வானுத்தமனுமிவனிலங்கைத்
தீதரிய சட்டவகை திருத்தமுற நனிதிருத்திக்
கோதரியவாசுமுறைகோத்திடற்குமந்திரியா
யாதரியதெனதடியிலமர்ந்தவனுமிக்குரிசில், (௧௦௧)

பீடுபெறவிவன்முதனுட்பெற்றதவப்பேறனையான்
சோடுபெறலின்றியமுத்துக்குமாரசாமியிவ
னீடுபெறவறந்தனழக்கவேற்றமிகத்தென்னிலங்கை
நாடுபெறவின்றுமிவணற்பெயரை நாட்டிவைத்தேன், (௧௦௨)

சேட்டமகனனவிவன்றென்னிலங்கையாண்முறைகள்
கோட்டமிலாவகைநிறுவிக்குடி களுக்குநலமருளி
நாட்டமுள சட்டசபை நாயகமாமமைச்சாக
வீட்டமுடனிருந்திடுநாளிங்கிலந்து சென்றிருந்தே, (௧௦௩)

நாடுநகரொன்றுகொலோ நன்மனைவிமகனோடு
மாடுளவுமிழந்துமவண் வாய்மையொன்றுமாத்திரமே
தேடுபொருளாருமெனுத்தெளிந்தவரிச்சந்திரனோர்
நீடுகதையாவையுமே நெறியாகவரைந்தெடுத்தே, (௧௦௪)

ஏராணிநோனவெழிலுடைச்செங்கோலோச்சிப்
பாராணிபெறப்புரந்தே பார்த்திபர்க்குமீடுதரு
மாணியுடனளவிவயங்குமணியாசனமே
லோராணிபோலமர்ந்தேயுவப்புறவான்படித்ததன்மேல், (௧௦௫)



பன்னியுபசாரநயிற்பட்டமுந்தான் கொடுத்ததற்பின்
முன்னுதமிழாதியர்க்குண்முதன்மைபெறமுதலெடுத்த
சின்னமுடனங்கிருந்துஞ் செவ்வியினர் வழியனுப்பத்
தென்னிலங்கைசிறப்படைவான்செய்துவந்தானிக்குரிசில், (௧௦௬)

உக்குலத்தையொழியவின்னுமுறுகுலமொன்றதற்கிணையா
யெக்குலத்தையியம்புவதோயாழ்ப்பாணத்திதுகுலந்தா
னக்குலத்தையவரினத்தையாய்ந்தாய்ந்திங்கறைந்ததுபோ
லிக்குலத்தையினியுரைப்பேன்யாரறியார்நாடறியும் (௧௦௭)

இந்திருந்தமவுலியருளேறுவடதேயநின்றும்
வந்திருந்தவேளாளமாமரபிலுள்ளவர்கள்
பந்திருந்தசனங்களுடன்பதிந்திருந்தபலவூருண்
முந்திருந்தவோரூராய்மொழிந்திடுமோர்முகமாலை, (௧௦௮)

செவ்வூரியூர்பழனத்திருநாடென்றெடுத்துரைத்த
விவ்வூரின்முனைநாட்டொட்டிருந்துவருந்தொண்டையெனும்
வெவ்வூரினபிமான வேளாளகுலதிலக
னவ்வூரினுயர்முதலியவனிலங்கைநாதனென்போன், (௧௦௯)

கதித்தவிந்தமுதலிமகன்கதிர்காமனிவனிடத்தி
லுதித்தமகன்காண்மூத்தவுடையானென்றிருந்தவிவன்
மதித்தசெகராசசிங்கமாமுதலியிளமகளைப்
பதித்தனறம்வழுவாமறப்பண்புபெற மணம்புரிந்தே, (௧௧௦)

அற்றமறத்தருந்தனயனரியசிவகுருநாதன்
சொற்றவிவன்மேனுளிற்றொடர்ந்தகுலத்தோனுரைக்க
மற்றமனுத்துங்கனெனுமுதலியிவன்மகனுகப்
பெற்றபொன்னம்பலமிவனும்பெருந்தகுதிபெறுஞ்சீலன், (௧௧௧)

வேறு.

பன்னுமாண்புடைய பொன்னம்பலப்பெறுஞ்சுதனேயாக
முன்னுறுந் தியாகராசமுதலியென்றிருந்த வேந்த
லுன்னுநற்குணங்கள்வாய்ப்பவுதவியமக்கடம்முட்
பின்னுறுமிரண்டாம் மூன்றும் பெண்களை வதுவை செய்தான்,
(௧௧௨)



தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

சீர்பெறுமுதலியிந்தச்சிவகுருநாதவள்ள
லார்பெறும்மூத்ததம்பியரியவன் சின்னத்தம்பி
நேர்பெறுமூத்தவையனிலவுபொன்னம்பலம்பி
னேர்பெறுநமசிவாயமென்னுமைம்மகாரைப்பெற்றான், (௧௧௩)

முதமுளநமசிவாயமுதலிதன்மரபுக்கேய்ந்த
மதமுளவீரநாராயணனெனுமுதலிமைந்த
னிதமுளகலைதேராசானிவன்முருகேசவேந்தல்
விதமுளவிவன்றன்செம்மலரியபுத்திரனும்மேலோன், (௧௧௪)

பெற்றபேரிளமைவாய்ந்தபேதையைமுதன்மணந்தே
யற்றமிலருமைப்பெண்ணொன்றளித்தனனதன்பின்னாகக்
குற்றமற்றுயர்காராளகுலசிங்கமுதலிமைந்தர்
பற்றுயர்சின்னத்தம்பிப்பண்பினற்குணங்கள்சான்றோன், (௧௧௫)

சொன்னவிங்கிவற்குவந்தசுதன்பத்தவுடையானென்போன்
முன்னுகாராளசிங்கமுதலிமற்றிவற்குமைந்த
னின்னவன்புதல்வன்கந்தவேளென்போனிவன்றன்செம்மல்
தொன்னலனிலகுநாதமுதலியென்றியம்புந்தோன்றல், (௧௧௬)

ஏர்பெறுமினையதோன்றலீன்றருளிரண்டாம்பெண்ணை
நேர்பெறவதுவையாற்றிநேரிழைதானுந்தானும்
பேர்பெறுமனையறத்திற் பெருந்தவமுளதோவென்னாச்
சீர்பெறக்கருமமோம்பிச்சித்திரமகாரைத்தந்தார், (௧௧௭)

வரத்தினற்பேற்றினாலேவருஞ்செகராசசிங்க
மிரத்தினசபாபதிப்பேரேந்தலேதியாகராசா
புரத்தவிர்மணிநேரன்னபூரணியிவட்குப்பின்னர்
தரத்தகவந்ததங்கம்மாளின்மேற்சாற்றுகிற்பேன், (௧௧௮)

பாட்டியனூல்களீதுபத்தினிக்கெனவேசொல்லி
நாட்டியவொழுக்காற்சொர்ணம்நாமமுஞ்சொர்னமாகு
மீட்டியறங்கையானவிவள்கமலாட்சியென்பர்
பீட்டியலெழுவர்தாமும் பிள்ளைகண்முதலியார்க்கே, (௧௧௯)



தரைமகத்துவம்பெற்றுள்ளதனிக்குலமுறைகள்சொன்னே
னிரைமகராலயஞ்சூழிலங்கையையேந்திக்காத்த
நிரைமகமிலாதபோகிநேரருணாசலப்பேர்த்
துரைமகன்சரிதமின்னேசொல்லுவனினிதுகேண்மின். (௧௨௦)

## ஸ்ரீமாந் பொன்னம்பல முதலியார் வரலாறும் அவர் தம் மாட்சியும்.

சலமுளவிலங்கையாளத்தம்பெயர்நிறுத்தமிக்க
பெலமுளமக்கட்பேற்றைப் பெற்றவனிவனேயென்னின்
நலமுளவீழநாட்டுநரேந்திரவாழ்வுபெற்ற
பலமுளமுதலிபொன்னம்பலந்தவமளக்கற்பாற்றோ, (௧௨௧)

வியந்தவனுரைத்தசீர்த்திவிளங்கருணாசலந்தான்
பயந்தனற்றனயன்பொன்னம்பலமெனுமுதலியென்பான்
நயந்தநல்லிளைஞனாகநலத்துடனமர்ந்தநாளில்
வயந்தாவிருந்தவீன்றோர்வானுலகடைவதானார், (௧௨௨)

உருகவுள்வாடித்தன்னாருற்றிடுங்கொளுகொம்பில்லா
மருகனையிரங்கியன்பார்மாதுலன்குமாரசாமி
வருகெனக்கொழும்பிற்றன்னோர்மனையிடையகலாதென்று
மருகணைத்தாங்கிலத்தையருந்தமிழொடுங்கற்பித்தான், (௧௨௩)

கற்றபின்கலங்கள்கொண்டுகடற்றுறைமுகத்துக்காட்டுந்
துற்றபல்பண்டங்கட்குத்தூக்கியவரிகள்வாங்க
வுற்றபேருத்தியோகத்துறைந்தரசினர்களீயப்
பெற்றனன்மதிப்புமிந்தப்பெருந்தகைமதியனன்றோ, (௧௨௪)

ஆற்றியவுத்தியோகவாண்மைகண்டதினுஞ்சாலத்
தோற்றுமேன்மாகாணத்தின்றுரைக்கிரண்டாவதாக
வேற்றியவுத்தியோகமேற்றவனாகிமன்னன்
போற்றியநகருளோரைப்போற்றின்வருவதானான், (௧௨௫)

நாட்டுளகருமநாடி நகருளகருமநாடிப்
பாட்டுளகருமநாடிப் பண்புடன்வருமந்நாளின்
மாட்டுளமக்கண்மாக்கண்மருவிவந்தடிக்கீழ்நின்றே
கூட்டுளகுறைகள்கூறுக்குழீக்குழீச்செல்லுவாரால், (௧௨௬)

மன்னவர்மதிப்பாலோங்கிமருகனார்வருதல்காணா
வன்னமாமுதலியானமாதுலன்குமாரசாமி
சொன்னமாவணையதன்னோர்தோகைசெல்லாச்சியென்னு
நன்னலமகளைநன்னாணன்மணமியற்றிவைத்தான், (௧௨௭)

புத்தியைப்பொருளைவேண்டிற்புத்திரப்பேற்றைவேண்டிற்
சித்திகள்பெறுவான்வேண்டிற்சிறப்புகள்வேண்டினென்னை
சத்தியமாகநல்குஞ்சத்தியாம்வாலைதன்னை
நித்தியபூசைசெய்வானீண்மனையொருசார்வைத்தே, (௧௨௮)

தொட்டதெண்கடற்சாராகத்தூயவாலயமொன்றாக்கா
முட்டதற்கிலாதவாற்றான்முடிவகனிதியுஞ்சோரா
வட்டமண்ணுலகமுற்றும்வயங்கியதனதுநாம
மிட்டனன்வழங்கநன்னாளிலிங்கதாபனமுஞ்செய்தான், (௧௨௯)

மருமடலவிழ்க்குஞ்செய்யமலர்கொளுய்யானமொன்றுந்
தருமடமகற்றுமாதிச்சைவவாசாரியர்க்காங்
குருமடமொன்றுமின்னுங்குலவுவேடத்தார்தங்கத்
திருமடமொன்றுமென்றுந்திகழவேயமைத்துவைத்தான், (௧௩௦)

வந்தியாநீறுபூசிமனத்துப் பஞ்சாங்கரத்தைச்
சிந்தியாவரும்பேர் ஞானிதினமும்பண்டாரமாரைப்
பந்தியாவிருத்தியன்னம் படைத்தனனுண்ணுவித்துப்
பிந்தியாமுதமுண்ணும்பெருந்தருமத்தினறாதா, (௧௩௧)

மன்னுயாழ்ப்பாணத்தோர்கள்மடிவரேற்றகனமின்றித்
தன்னமாய்ப்புதைப்பரென்றேதானதற்கிரங்கியையன்
முன்னுருவமையுமென்றேமுந்தைநாட்கொட்டாஞ்சேனை
யென்னுமோரிடத்திலந்நாளீமமொன்றாக்கிவைத்தான், (௧௩௨)



நித்தியகடன்கடம்மானேருறும்பவங்கட்காகச்
சுத்தியதெய்தச்செய்யுந்தொல்பிணக்கிரியைசெய்வான்
புத்தியதாகநாடிப்புகன்றபட்டாரிமாரைச்
சித்தியதாகத்தந்தான்றிருமறைக்காடுநின்றும், (௧௩௩)

சூழுறுசுற்றத்தாரைத்தூணெனச்சுமக்கவல்லான்
றாழுறுசனங்கடம்மைத்தாயெனத்தாங்கவல்லான்
வீழுறுநண்பர்தம்மைவிருந்தெனப்பேணவல்லான்
வாழுறுமிணையசீமான்மலையெனுங்குணத்தனம்மா, (௧௩௪)

மன்னினால்வலமாய்வந்தால்வாயினாற்றுநிகணித்தம்
பன்னினாலருளுண்டென்றேபரவும்ராமேச்சுரற்குப்
பொன்னினாற்றம்பமொன்றைப்பொற்புறவமைத்துநல்கி
யுன்னினான்புவனமாளுமுயர்மகாரளித்தியென்றே, (௧௩௫)

பலமுடைத்தானதாயபாரதவருடத்துள்ள
தலமுடைத்தானதாயதானங்கடோறுந்தோறும்
வலமுடைத்தாகவேகிவனிதையுந்தானுமாக
நலமுடைத்தரிசனங்கணயந்தனன்செய்துமீள்வான், (௧௩௬)

பண்ணுலவுற்றபொன்னம்பலமெனுமுதலியார்தம்
மெண்ணுலவறங்களுக்குமெல்லையொன்றுண்டுகொல்லோ
விண்ணுலகளவுமெட்டிவிளங்கியபுகழினோடு
மண்ணுலகோம்பிவந்தமக்கள்சான்றாவான்றே, (௧௩௭)

சிறந்தசெல்லாச்சியோடுஞ்சிந்தையொன்றாகியையன்
புறந்தாலின்றியென்றும்போற்றினனாற்றிவந்த
வறந்தனதுருவாமென்றேயறிஞர்களெடுத்துக்கூறப்
பிறந்தனரிருவர்மைந்தர்பிறந்ததுபுகழுமன்றே, (௧௩௮)

முன்னவன்குமாரசாமிமூதுலகறியத்தோன்றும்
பின்னவன்ராமநாதன்பேசுமிவ்விருவாலும்
பன்னலஞ்சேரும்பொன்னம்பலமெனுமுதலியந்நா
ளின்னதென்றறியானாகியின்பசாகரத்துளாழ்ந்தான், (௧௩௯)

சித்திரமென்சொற்கூட்டுஞ்சிறுவர்களிரண்டுபேகு
மொத்தனருலாவியோடியுவப்பவாட்டயர்தல்காணு
பத்திரமாகப்பேணிப்பனிமொழிகேட்டுப்பஞ்ச
வத்திரனருளாற்போற்றவயதுவந்தடுத்ததாக, (௧௪௦)

ஆதரவாகத்தாதையரியகண்மணிகளுக்குத்
தோதகமிலாதசிந்தைதூயவாசிரியர்க்கொண்டே
நாதனினமர்கவென்னுநாமகள்பூசையாற்று
வேதமிலன்பாலேடுமெழுதினன்றொடக்கிவைத்தான், (௧௪௧)

பந்தமற்றிலாய்மைந்தர்பகலுடனிரவுமொன்றாய்ச்
சிந்தனையதுவேயாகச்சிறந்தகல்லூரிதோறு
மிந்தநன்னிலத்தோர்கூறவிம்மியின்றுணையுந்துஞ்சார்
செந்தமிழாங்கிலங்கள்செவ்விதிற்கற்றுவந்தார், (௧௪௨)

இகநனிமதிக்கச்செல்வவீழநாடேத்தெடுக்கத்
தகவரசதிகமேன்மைதரக்குலத்தவர்கள்போற்ற
மகவிருமணிகளின்பம்வழங்கிடமுதலியார்தன்
னகமிகமகிழ்வுபூப்பவரும்பெருவாழ்வினுற்றான் (௧௪௩)

## ஸ்ரீ அருணாசலோற்பவம்.

அரும்பொருணிதியெனவவனிக்காமெனப்
பெரும்பொருளதுவெனப்பேசல்பேதைமை
தரும்பெருளிருமையுந்தனிவழிக்குடன்
வரும்பொருணேரிலாமக்களாம்பொருள் (௧௪௪)

கூறதுமிருவகைகொச்சைமக்களான்
மாறதுவருமிவர்வந்துமென்பய
னாறதுமிலாதெடுத்துலகம்போற்றுமேற்
பேறதுமறிவுடைமக்கட்பேறதே, (௧௪௫)



செவ்வுலகதனிலித்திருந்தும்மக்களா
லிவ்வுலகத்துமோவினிதினின்றவர்க்
கவ்வுலகத்த்னுமாகுமின்பமே
லெவ்வுலகத்தவரிவரையொப்பவர், (௧௪௬)

சொற்றிடுமிலக்கணந்துலங்கும்மக்களைப்
பெறறிடுமுதலிதான்பின்னுமோர்மக
னுற்றிடுமைந்தரினுயாநல்குவான்
முற்றிடுமருந்தவமுயன்றுமன்னினான், (௧௪௭)

அன்னமீந்திடுதனல்லாடைநல்குதல்
சொன்னமுமளித்திடறொழில்கடந்திடல்
பன்னகாபரணனைப்பரவிப்போற்றிட
லுன்னரும்விரதங்களுவந்துகாத்திடல், (௧௪௮)

ஈதலாலின்னமுமியற்றவென்றுநா
லோதலாமறங்களுமொழிதலின்றியே
காதலாலாற்றிமேற்கசிந்துயாத்திரை
போதலாமொன்றுதன்புந்தியுன்னினான், (௧௪௯)

பாரியமக்களுந்தாயும்பால்வர
நேரியவயலவர்நேர்ந்துசென்றிடத்
தேரியவருண்மயச்சிவத்தலங்களாற்
சீரியதாம்வடதேயம்நண்ணினான், (௧௫௦)

சித்தியதுடனிவண்சேத்திரங்களைப்
பத்தியதுடன்பணிபத்தர்தங்கட்குப்
புத்தியதுடன்பொருள்போகந்துய்த்துமேன்
முத்தியதுடன்வரும்மொழிவதென்கொலோ, (௧௫௧)

பொருளிருந்தென்றவம்பொருந்தலில்லவர்
மருளிருந்தவனியின்மாயையாகிய
விருளிருந்திம்மையினிறப்பதொன்றலா
லருளிருந்தவிர்தலமடையக்கிட்டுமோ, (௧௫௨)

PUBLIC LIBRARY, JAFFNA

மத்தினிலுடைததிமானுந்தன்னுள
முத்தினிலொளிரவிம்முதலிபாற்படும்
பத்தினிதன்னோடும்பாலர்தம்மோடுஞ்
சத்தினிபாதனுய்த்தலங்கள்போற்றுவான், (௧௫௩)

வேறு.

ஆலவாய்மருதூர்தில்லையருணைவீரட்டங்காஞ்சி
பாலவாயமுதபிள்ளைபதியருள்காளிவேளூர்
சீலவாய்மறைக்கான்கோவறிருமுதுகுன்றுநாகை
யேலவாயிறைவனென்றமிருந்தருடலங்களோடும், (௧௫௪)

வாலுடைச்சங்கமூரும்வாரிதிச்செந்தூர்வெற்பின்
பாலுடைப்பழனிமன்றற்பரங்குன்றங்குவளைபூக்குஞ்
சேலுடைச்சுனைமுன்னுள்ளசெருந்தனியாதியாய
வேலுடைக்காத்துக்கந்தவேளமர்தலங்கடம்மை. (௧௫௫)

நீற்றினன்கூப்புங்கையன்னீடுகண்ணீரனாகித்
தோற்றினனின்றுமுன்புதொழுதனன்றுதிகள்கூறி
யேற்றினன்றனையுமென்றமிளையவன்றனையும்வேண்டிப்
போற்றினனறிவுசாலும்புத்திரவரமும்பெற்றான், (௧௫௬)

அவ்வியமிலாதவையனங்கங்கேதருமநல்கிச்
செவ்வியவரமுன்பெற்றதேவனைநினைவிற்கொண்டே
கவ்வியதாயைநாடுங்கன்றுபோற்கடிந்துவந்தான்
திவ்வியதலமேயானதிருவிராமேச்சுரத்தில், (௧௫௭)

சீதைவாலுகத்தாற்செய்ததிருமலியிலிங்கமூர்த்தித்
தாதைவாலாம்பிடகத்தாய்தாமிருவோர்கள்பாதப்
போதைவாரான்பாற்போற்றிப்பொழுதளவாகநின்றே
யேதைவாயிரங்குவாயோவேதையுமறியேன்றேவே, (௧௫௮)

உத்தமகுணங்கள்வேண்டுமுயிர்கள்மேற்கருணைவேண்டு
மித்தலம்புகழ்தல்வேண்டுமிறையவர்க்குதவவேண்டு
மத்தனதருளும்வேண்டுமருங்கலைகடக்கவேண்டும்
வித்தகம்வேண்டும்மைந்தன்வேண்டினனருள்கவென்றே, (௧௫௯)



நின்றுநின்றேத்தியேத்திநின்மலனருளும்பெற்றே
யென்றுநின்றிலங்குகோவிலெல்லையின்வேலையேறி
யன்றுநின்றெழுந்துமக்களருமனைக்கிழத்தியோடு
மன்றுநின்றீழமாளுமாநகர்கொளும்புவந்தான், (௧௬௦)

கோதெனப்பட்டவிந்தக்கூட்டினுற்பெறுதற்கொத்த
தீதெனப்பட்டதெல்லாமியற்றியேவருவதல்லாற்
றீதெனப்பட்டதொன்றுஞ்செய்கலன்முதலியில்ல
மாதெனப்பட்டாளோடுமனையறங்காக்குநாளில், (௧௬௧)

தாயருந்தவமுமற்றைத்தந்தைசெய்தவமுந்தங்க
டூயருங்குலத்தோர்செய்ததொல்பெருந்தவமுந்தன்பா
லேயருந்தவமுமின்னுமிலங்கைசெய்தவமுமொன்றா
யாயருந்தவங்களைந்துமருந்தவவித்தேயாக, (௧௬௨)

ஈதலினுயர்ந்தபொன்னம்பலம்பணிந்திரந்துநின்றோ
னாதலினவனுக்கந்நாளரனருள்வரத்தின்சீரா
லோதலினுயர்ந்தோர்சொற்றவொழுக்கமேதவமென்றுற்ற
காதலியுதரத்தாங்கோர்கருப்பம்வந்துற்றதம்மா, (௧௬௩)

பார்செயுமாகமங்கள்பகர்விதிக்கிரியையாவும்
நேர்செயுமதியந்தோறுநிகழ்த்தியேவாலுந்தாதை
யேர்செயுமீழநாட்டிற்கிதமுளநெறிகளாக்கிச்
சீர்செயுங்கருவினுக்குத்திங்கள்பன்னிரண்டுசென்ற, (௧௬௪)

செய்யசெங்கோனேர்செல்லச்செந்தமிழ்சிறந்துமல்க
வையகமகள்களிக்கவளர்சிவசமயம்மன்ன
வெய்யவக்கலிகணீங்கவிலங்கைமானினிதுவாழ
வுய்யநல்லறங்களோங்கவும்பர்களாசிகூற, (௧௬௫)

ஆயபோறிஞாவோரவனியையருளநிற்போர்
மேயசீரறத்தாறுற்றோர்விதாணமானவிந்தக்
தூயவர்தோற்றும்போதிற்றோற்றுதல்வழக்கமன்றோ
வேயநாளாகுமிந்நாளிலங்குநற்சகுனந்தோன்ற, (௧௬௬)

பன்னுறுங்கலியுகத்திற்பண்டைநூலளவைதன்னாற்
றுன்னுநாலாயிரத்துத்தொளாயிரத்தைம்பானாலின்
மன்னுறுபிரமாதீசவருடமாவணிமாதத்தின்
முன்னுறுமுப்பானொன்றின்மொழிந்தசீர்ப்புதவாரத்தில், (௧௬௭)

மிளிருமீனோணம்ராசிவிருச்சிகமதிற்பொன்மேலுங்
குளிருமேழிராகுமந்தன்கூடவொன்பதிற்சேய்பத்தி
னொளிருறுபுதனீராறிலோங்கியவெள்ளியிந்த
நளிருறுமொன்பான்கோளும்நன்னிலையானமூர்த்தம், (௧௬௮)

விண்ணுடன்கீழுமின்னும்விரிதிரைக்கடலுட்பட்ட
மண்ணுடன்போகநல்கிமதித்தருள்கழிகண்ணோட்டக்
கண்ணுடன்கலியிற்காவற்கடவுளேயுதித்தானென்னப்
பண்ணுடன்புவியில்வந்தேபாலகனவதரித்தான், (௧௬௯)

உதித்தனனாகத்தாதையுத்தரதிசைக்கட்சென்றே
நதித்தடநீரின்மூழ்கிநல்லவாதியோர்க்குத்
திதித்தனந்தானத்தோடுதியாகமும்வழங்கிப்பின்னர்
பதித்தனமனையுட்போகிப்பாலனைத்தரிசித்தானால், (௧௭௦)

நடுத்தருமுதலியார்க்குநாடருங்களிமீதூரக்
கடுத்தருகழனமர்ந்தகதிதருதலத்தின்பேருந்
தொடுத்தருமகற்குத்தங்கடொல்குலப்பெயருமாக
வடுத்தருணாசலப்பேராகுமென்றிட்டார்நல்லோர், (௧௭௧)

தாதைதன்மார்பும்பெற்றதாயரின்மடியும்போற்றும்
பேதையர்கரமுமாகப்பேணியேவளர்க்குங்காலை
யூதையுமுடம்பும்போலவுற்றசோதரரோடாடும்
வாதையதிலாமகற்குவயதுமோரைந்தேயாக, (௧௭௨)

குழலினையாழையின்றகுரவர்கள்வெறுக்கப்பேசும்
மழலைமென்மொழியினார்க்குவயதுவந்தடுத்ததென்றே
யெழலையீங்கிருத்தியென்னாவிருத்தியாசிரியர்க்கூவி
யழலையுமாற்றியாற்றியட்சரந்தொடக்குவித்தான், (௧௭௩)



அத்தமுமடுக்கும்வாய்ந்தேயவிர்மனைமகற்குநாளும்
வித்தகர்வந்துவந்தேமென்மெலச்சொல்லச்சொல்லச்
சித்தமொத்தாங்கிலத்தைச்செந்தமிழதனைமைந்தன்
நித்தமும்பன்னிப்பன்னிநெடுங்கணக்கரிதிற்கற்றான், (௧௭௪)

பன்னுசீரீழநாட்டைப்பண்பெறத்திருத்தவென்றுந்
தன்னுயிர்போலவெண்ணித்தயைபுரிந்துதவியாகா
மன்னுயிர்காக்கவென்றும்வருமருணாசலத்துக்
குன்னுநூற்கலைகள்யாவுமுணர்த்தவும்வேண்டுங்கொல்லோ (௧௭௫)

அலைகடலுலகிலாக்கமரும்புகழ்மறுமைப்பேறு
நிலைபெறத்தருவதென்றேநினைந்தனனிளமைதன்னிற்
றலைநிகர்நடுவுநீதித்துரையருணாசலந்தான்
கலைகளையாக்கமென்றேகருதினன்கற்றுவந்தான். (௧௭௬)

## கல்வி பயிறல்.

### வேறு

மன்னு தென்கலை யோடுவடகலை
யென்னுமிந்த விருகலை யெங்கட்குப்
பின்னுமெய்தும் பெருந்துணையாகவு
முன்னுகிற்றில னாழ்வழி போமுளம், (௧௭௭)

சொற்ற செல்வத் துரையருணாசலங்
கொற்றவன் செய்ய கொல்வழிநின்றுதா
னுற்றதேயத் துயிர்களை யோம்பவோ
பற்றதாயமன் பாடையைக் கற்கவே, (௧௭௮)

கோலமுள்ள கொளும்பு நகருள
வாலவோது மாசகல் லூரியிற்
பாலனான பருவத்தி லேறினான்
சீலமுள்ள சிறுவர் குழாத்தினுள், (௧௭௯)

சோர்வதின்றித் தொழிலது வாகவே
யார்வமோடிவ னந்தக் கல்லூரியி
னேர்வராரென நேர்தன் வகுப்பினுட்
சேர்வதான சிறுவரின் முந்துவான், (௧௭௦)

பண்ணமைந்த பலப்பல சாதியின்
வண்ணமைந்தர் வகுப்புமொன்றுங் கொலோ
வெண்ணநின்ற வினைய கல்லூரிக்க
ணண்ணன் மாரினு மாற்றவுமேறினான், (௧௭௧)

ஆர்க்கதேனு மரிதெனக் கற்றவர்
பார்க்கலுற்ற மேற்பாடங்கள் யாவையும்
வேர்க்கநின்று வெறுக்குங் கொலீங்கிவன்
தீர்க்கமாகவே தீட்டினன் வீசுவான், (௧௭௨)

இந்தவாறிவ னெங்கெந்தப் பாடத்தும்
வந்தமற்றைய மாணவர் தம்முளு
முந்தநிற்பது முன்ன முகக்குறி
தந்தகாட்சித் தகுதியு நோக்கியே, (௧௭௩)

எந்த நாட்டுளு மேர்வள மிக்குள
விந்த நாட்டிற் கிவனா செய்துவான்
சொந்தமானதன் றொல்குலத் தோருளு
முந்த நிற்கு முதல்வனென் றெண்ணியே, (௧௭௪)

தரைதன் பேர்வைத்துச் சாகுங்கல் லூரிக்கு
நிரைதன் காலங்க ணோர்தலை யாயவன்
கரைதன் னின்றிக் கணக்கறக் கற்றபோக்
துரைதன்பால்வைத்துச்சொல்லுவன் றேன்றற்கே, (௧௭௫)

வேறு.

தண்ணிய குணங்களாலே தகுமருணாசலம்நீ
மண்ணிய மணியை யொப்பாய் மதியுளாயறிவுமுள்ளாய்
கண்ணியமாகவிந்தக் கழகத்துப் பெறுதற் கொத்த
திண்ணிய சித்தியெல்லாந் தீர்க்கமா யடையப்பெற்றாய், (௧௭௬)



கூறுவேன் கேட்டியைய குலவுகல் லூரியீது
தேறுவே னென்றுகற்கிற் சித்திகள் வழங்குமின்னும்
வேறுவே றன்னைப்போலும் வித்தக ரென்பாற்கற்றோர்
மாறுவே றுரைப்பதென்னோ மன்னவராக வந்தார், (௧௭௭)

ஏற்றுசேர் மோர்க்கனின்னோ னேற்றமா மமைச்சனானன்
தோற்றுசேர் டைசுவென்போன் றுலங்குகோட் டாசனானன்
தேற்றுமுன் மாதுலன்றான் சேர்முத்துக் குமாரசாமி
வேற்றுமேனிலையினாரை விளம்புவ னின்னுங் கேட்டி, (௧௭௮)

போக்குள குமாரசாமி பொற்புள சபைக்குத்தக்க
வாக்குள ராமநாதன் மதித்தநின் சோதரங்கள்
தூக்குள ஞாயவாத துரந்தான் டொன்னு சென்போன்
தாக்குள லோறன்சின்ன தக்கவரிங்குக் கற்றார், (௧௮௯)

சொன்னவ ரொழியமேலாய்த் தோற்றுமுத்தி யோகந்தோறு
மின்னமு மனேகருண்டா லிவர்தமு ளுனக்குநோரா
யுன்னநா னொருவர்யாரோ வுவர்களொவ் வொன்றின்வல்ல
ரென்னமே லுரைப்பனீயோ வெவற்றினும் வல்லனையா, (௧௯௦)

அரியநின் றுணைவர்தோன்று மகவையான் மூத்தாரேனும்
பெரியநின் னிலைமைநோக்கிற் போறிவதினீமூத்தா
யுரியநின் றந்தைக்குன்னை யுதவிய பயனுமீவாய்
தெரியயா னின்னுமொன்று செப்புவ னிதுவுங்கேட்டி, (௧௯௧)

தோற்றமா யிருப்பதல்லாற் றான்றுதம் மூருக்கேய்ந்த
தேற்றமா முதவியேதுஞ் செய்வர்கொல் லீதுநிற்கச்
சாற்றமா றேதுகண்டாய் தகுமருணாசலம்நீ
யேற்றவா றுதவிப்பின்னு னிலங்கையைப் பாதுகாப்பாய், (௧௯௨)

என்றுதானுரைத்துமேலு மிங்கிலந் தேகநிற்பா
யொன்றுதா னுலகிலையா வோங்குகேம் பிரிச்சிலுண்டால்
நன்றுதா னுதவுஞ்சர்வ நளிர்கலாசாலையங்குச்
சென்றுதானுயர்ச்சிபெற்றே வருகெனச் சிறப்புஞ்செய்தான்,
(௧௯௩)

பொன்மனத் தாசான்போக்குப் புகன்றமங் கலங்கள்கேளாத்
தன்மனத் துவகைபொங்கத் தகுமனு மதியும்பெற்றான்
மன்மனத் தாசன்செங்கோன் மன்னுமிங்கிலந்துசெல்வான்
நன்மனத்துடனே யந்த நாட்களிற் பயணமானான், (௧௯௪)

பேற்றாசுதவியாகப் பெறுமருணாசலம்பின்
னூற்றமொ டெழுந்துதாதை யுடனளவளவிக் கொள்ளா
வாற்ற விங்கிலந்துசென்ற வாண்டது மறியச்செப்பி
னேற்றவாயிரத்தியெண் ணூறின்னமுமெழுபத்தொன்றே (௧௯௫)

## கேம்பிரிச் சர்வகலாசாலையில் கற்றுத்தேறுதலும் பட்டம் பெறுதலும்.

நாம்பிரித் தெடுத்திவ ணவிறற் கெட்டொணா
தாம்பிரித் தானியர் தமக்கு முன்னகர்
தேம்பிரித் தரசரைத் திகிரிவேந்தமர்
கேம்பிரிச் சென்பதிங் கிலந்தி லுள்ளது, (௧௯௬)

ஒளிருறு திகிரியோன் றுருட்டுமன்னவர்
மிளிருறு மேற்கலை விரியக் கற்பது
குளிருறு மிவ்விடைக் குலவுகிற்பது
நளிருறு மொருகலா சாலைநண்ணுமால், (௧௯௭)

மண்ணுலகத்தினின் மகுடமொப்பது
கண்ணுலவுற்றநற் காட்சிபெற்றது
பண்ணுலவாதவிப் பாடசாலையி
லெண்ணுல வுற்றநம் மேந்த லெய்தினான், (௧௯௮)

தவாவரு கலைகடேர் தலைமை மாணவ
ருவாவரு மதியென வொளிரு மவ்விடைத்
திவாவரு பகலெனத் திகழ்ந்து கற்பதி
லவாவரு ணாசல வண்ண லெய்தினான், (௧௯௯)



ஆங்கில மாகிய வாச பாடையி
லோங்கிய வறிவின ருபாத்தி யாயர்க
டாங்கிய குணனரு ணாசலந்தனைத்
தேங்கிய வன்பினர் தெரிந்து மன்னினர், (௨௦௦)

அந்தமி றவத்தரு ணாசலத்துடன்
மந்திர ராகவு மன்னராகவும்
வந்தவரான மாணாக்க மாண்பினர்
புந்திய தொத்தனர் புகழ்ந்து துன்னினர், (௨௦௧)

கற்பதற் கென்றுதான் கருதிவந்தவன்
பொற்பகலாததன் புலன்க ளொன்றியே
பற்பல நாள்களிற் பயிலுங் கல்வியை
நற்பக லொன்றினி னயந்து கற்கின்றான், (௨௦௨)

பாங்குற வருஞ்சக பாடிமார்களை
நீங்குதலின்றியே நிதமுங் கைக்கொளாத்
தேங்குற வருங்கலை தெரித்துங் காட்டுவ
னோங்குற வருமிவ னேதலற்புதம், (௨௦௩)

எண்ணிய கலைகளை யெழிதிற் கற்றிடுந்
திண்ணிய கல்வியின் றிறமைக் காமென
நண்ணிய நெறிப்படி நயந்து நல்கிய
கண்ணியமா முபகாரம் பெற்றனன், (௨௦௪)

எண்ணென வெழுத்தென விரண்டுங் கற்றிரு
கண்ணெனத் தன்முகங் கவின வைத்தவன்
பண்ணென வோதிலாப் பாமரர்க்கிரு
புண்ணென வோதுவர் புலவருண்மையே, (௨௦௫)

காட்சிசெய் பாடையிற் கணித நூல்களின்
மாட்சிபெற் றிடுவனேன் மதிக்கலாகலாச்
சாட்சியென் றிருந்திடுஞ் சாத்திரங்களி
னாட்சிபெற் றிருப்பது மறையவேண்டுமோ, (௨௦௬)

சாற்றியதனிக்கலாசாலைக்கேய்ந்தவன்
தேற்றியதலைமையாசிரியன்பீலென்போன்
போற்றியவருமிவற்புகழ்ந்துவைத்தன
னேற்றியகலைஞர்பால்யார்கொலின்புறூர், (௨௦௭)

**வேறு.**

ஆக்கமிகப்பெறுமிலங்கைக்கமைந்தமுறையமைத்திடுவா
னேக்கமுடன்வருமருணாசலக்குரிசினுவலுவதென்
னூக்கமுடன்மேன்மேலுமுயர்தருவானுன்னிமுதற்
றூக்கமுளபீயேயாம்பட்டமொன்றுதானெடுத்தான், (௨௦௮)

முன்னுமுபகாரமிவண்முதமாகவாங்கியபோற்
பின்னுமாசுதவுதவிபெற்றுளமேற்களிதூங்கப்
பன்னுவதென்மேலுமிவன்படிப்படியேயாய்ந்தாய்ந்து
மன்னுசகபாடிகளும்மருட்சியுறக்கற்றனனால், (௨௦௯)

பன்னாளினரிதாகப்பயிலவ்ரும்பாடமெலாஞ்
சின்னாளிளெழிதாகச்சித்திபெறக்கற்றதன்மேன்
முன்னாளின்விட்டகுறைமுந்திநின்றுகூட்டுதலாற்
பின்னாளிளெம்மேயாம்பட்டமுந்தான்பெற்றுவந்தான், (௨௧௦)

கற்றவனென்றுலகேத்திக்காட்டுமருணாசலவேண்
மற்றவரின்முந்திமுந்திவந்துவந்துசித்திகளை
யுற்றவனென்றுன்னுவதென்னொருங்கிரண்டுபட்டமிவண்
பெற்றவனென்றோதுவதென்பேறிஞர்க்கிவையரிதோ, (௨௧௧)

சாலுமெனக்கருதுமதோசர்வகலாசாலையிதின்
மேலுயரும்பட்டமின்னும்மென்மேலும்பெற்றிடுவான்
காலுமனங்களையாமற்காலையினும்மாலையினு
மேலுமளவாய்ந்துகற்றானேற்றமுளமன்னனிவன், (௨௧௨)

தொட்டகுறையிருந்ததனாற்றொடர்ந்திதன்மேலுலகினுககாஞ்
சட்டவகைபிரித்துரைக்குஞ்சாத்திரங்கடம்மினும்போய்க்
கட்டமொருசிறிதுமின்றிக்காட்டுபிரமாணமுற்று
மிட்டமுடனாய்ந்தேயெழிதாகக்கற்றனனால், (௨௧௩)



மன்றிலுரையாடிவரும்வாதிகளுட்சட்டமுறை
யொன்றியுரைவழங்கிநிற்குமுயர்ஞாயதுரந்தரனாந்
துன்றியுரைபெறுஞ்சீர்த்தித்துரையானபட்டமின்னு
மின்றியமையாதிலங்கைக்கிலங்கவிவன்பெற்றனனே, (௨.௧௪)

கிளர்ந்தபட்டமொருமூன்றுங்கேம்பிறிச்சிற்பெற்றதன்மே
லளந்தவினைகூட்டிநின்றவனுபோகவண்ணலிவன்
வளர்ந்தவறிவானவதுமடைதிறந்தநீர்போல
வுளந்தனினின்றுயர்ந்துபொங்கியூக்கமிகத்தந்திடலும், (௨௧௫)

ஆட்சியுடனாகமமேயனுமாளவளவையொடு
சாட்சியெளவருமினையசாதனங்களாராய்ந்தே
மாட்சிபெறவகுத்துரைக்கும்மனுநூல்சொல்சட்டமெலாங்
காட்சியுடனாய்ந்துகற்றுவல்லனாகியபின், (௨௧௬)

ஆங்கெடுத்தசித்திகளாமத்தனைக்குமீடாக
வீங்கெடுத்தான்சிவில்சேவிசென்றேத்தும்பட்டமொன்று
பாங்கெடுத்தநட்டோர்கள்பரிந்தெடுத்துக்கொண்டாட
வோங்கெடுத்தபட்டமிதாலுயர்ச்சியுடனுவகைபெற்றான், (௨௧௭)

ஓங்குமுத்தியோகமதற்குரியவுயர்சிவில்சேவி
சாங்கிளருமற்றுளருமயர்ந்துமனங்கைசோர
வேங்கியுளமசைதருமோவெதிரூன்றியாய்ந்துகற்றே
தேங்குமந்தச்சேவிசிலுஞ்சித்திபெற்றானிக்குரிசில், (௨௧௮)

ஒருபிறப்பின் வினைநுகர்ந்தே யொழிந்தவினை சஞ்சிதமாய்
வருபிறப்பிற் பிரார்த்தமெனமாறிநின்றே யூட்டுவிக்குந்
தருபிறப்பினல்வினைகடந்த சித்தியாமிவையே
யிருபிறப்பினாலுநல்லனினியிலங்கைக்குதவநல்லன், (௨௧௯)

தங்கிலத்திலனற்சிறந்துதனித்தனிவெவ்வேறாகப்
பங்கிலத்திலமர்ந்தமரும் பாங்குடையசனமிகுத்த
விங்கிலந்திலெழிதாகவெய்தினனோர்நான்குபட்ட
மங்கிலத்திலேந்தாண்டுளரியவருணாசலவேள், (௨௨௦)

5

ஏரெடுத்தார்மும்முறையுமெய்தவருமுபகாரச்
சீரெடுத்தார்நான்குபட்டஞ்சேர்ந்துவருநாலாண்டுட்
பேரெடுத்தாரவர்தமக்குட்பேசுமருணாசலம்போ
லாரெடுத்தாரித்தனையுமகவையிருபானொடொன்றில், (௨௨௧)

எண்ணவருமிவர்சீர்களினியெடுத்துக்காட்டுகிற்பேன்
நண்ணவருமறிஞர்களைநாடியிவண்கூறிடுங்காற்
றிண்ணமெனக்கொள்ளுமிந்தத்தேயமதுவானாலு
மண்ணலவர்தங்களிலுமாருணாசலமறிஞன், (௨௨௨)

வந்தபெருங்கருமமுற்றும்வாய்ந்ததற்பின்னையனிவண்
தந்தைதனைத்தாயாரைச்சகோதரரைஞாதியரை
நந்தலிலாவிலங்கைதனைநாடியவாவுற்றிடலாற்
சிந்தைதனிலினியூர்க்குச்செல்வனெனச்சிந்தைசெய்தான். (௨௨௩)

வேறு.

இன்னவாறிங்கிலங்கிலிருந்தருணாசலப்பேர்
மன்னவன்மதியின்வல்லமந்திரிமார்களோடும்
பன்னலமமைந்தவென்றிப்பார்த்திபரோடுமின்னுந்
துன்னவந்தடுத்தநீதித்துரைமக்களோடுமொன்றி, (௨௨௪)

எண்ணியவிருந்துகோடலேற்றசன்மானம்பேசல்
நண்ணியவீதிபோதனகரினைநயந்துநோக்க
றண்ணியகுணங்கள்வாய்ந்ததகுதிசேர்மாந்தரோடுங்
கண்ணியமாகவென்றுங்கலந்தளவளவிக்கொள்ளல், (௨௨௫)

தேறியநட்பினாலேசேர்விடந்தோறுஞ்சேற
லேறியகளிப்பினாலேயெழில்வளநாடுபார்த்தல்
கூறியவவரழைக்கக்கூடிக்கொண்டாடலாதி
வீறியவினைத்தேயானவினோதனாயிருக்குமந்நாள், (௨௨௬)

தாவியமுடியைவேந்தன்றலையில்வைத்ததிகமேன்மை
மேவியகுரவனாட்சிவிசப்பிவன்முன்பேயோர்நா
ளேவியவுளத்தனாகியெதிரிலாநிற்குஞ்சைவத்
தேவியல்சமயந்தன்னைத்தெரிகிலனிந்தைசெய்தான், (௨௨௭)



நிந்தையைக்கேட்டவையனெறியிலான்சழக்கேயான
விந்தையையெண்ணியெண்ணிவெகுளியுங்களிப்புந்தோன்ற
வுந்தையைவினையைத்தேற்றாயுன்னையுந்தேற்றாயுன்றன்
சிந்தையையறிவாராயிற்சிரிப்பர்களறிஞர்கண்டாய், (௨௨௮)

சிலையினின்வணக்கமென்றாய்சிறிதிவண்செப்பக்கேண்மோ
முலையினிற்பால்சுரக்குமுந்துமாவதுவேபோல
நிலையினினிற்குமெங்கணின்மலனாவிகட்குச்
சிலையினின்வழித்தேயாகத்திருவருள்சுரந்துநல்கும், (௨௨௯)

நின்றிடவொன்றுசொல்வனீயுந்தான்மண்ணிற்செய்தே
துன்றிடப்பீடம்வைத்தசுருவத்தைத்தொழுதுகொள்வா
யொன்றிடவுனதுபாடுமுணர்ந்திலைசைவந்தன்னை
வென்றிடவேண்டுமென்றேவீணுரைபிதற்றுகின்றாய், (௨௩௦)

தீபந்தானாதியெல்லாந்தேவுக்கேனென்றுசொன்னாய்
கோபந்தானேனாக்குத்திரியையேன்கொளுத்துகின்றாய்
தூபந்தானிட்டுவைப்பாய்சுடுமடைதானும்வைப்பாய்
பாபந்தானீதிசைக்கிற்பகருவனுணர்ந்துகோடி, (௨௩௧)

பூதங்களைந்தினாலேபொருந்தியவுடலுமின்னும்
பேதங்களிலாதவாவிபெரும்பொருளானமூன்று
மேதங்களடையாவண்ணமோர்த்தனைகோடியென்னாப்
பாதங்களாரவைத்துப்பணிவதாமதன்கருத்தே, (௨௩௨)

சீருளகதியைக்காட்டுஞ்சித்தாந்தசைவமொன்றச்
சாருளகடவுளர்க்கதரிசிபோலல்லனிந்தப்
பேருளனுபன்னியாசம்பேசுங்கால்வேதமல்ல
நேருளரெவருமில்லானிகழ்த்துநூல்வேதமென்ப, (௨௩௩)

பிறந்திடலிறத்தலில்லான்பிரிகிலனென்றுமுள்ளன்
மறந்திடலில்லானாதிமன்னுயிர்க்கிரங்கிநிற்பன்
றுறந்திடலுறத்தலில்லன்றொல்லைநூல்கூறுமின்ன
சிறந்திடலாங்குணங்கள்செப்பிடுமளவிற்றாமோ, (௨௩௪)

ஆணவமாயைகள்மமாமிவைமூன்றநாதி
தாணுவைப்பற்றிடாதுதாமிரக்களிம்பேபோலப்
பேணவேபசுவைப்பற்றும்பின்சிவஞானந்தோன்றி
லேணிலாவறுத்தவித்தினெதிர்ந்திடாதவிந்துநிற்கும், (௨௩௫)

நேர்பெறநிட்டைகூடநீங்குமும்மலமுநீங்கச்
சார்பெறலாகுங்காலைத்தத்துவஞானந்தோன்றும்
பார்பெறத்தோன்றநின்றபற்றறுமற்றபோதே
சீர்பெறவொளிருஞ்சீவன்சிவந்தனைச்சேருமம்மா, (௨௩௬)

தெரித்துநீயறியமாட்டாய்சித்தாந்தசைவத்துண்மை
விரித்துநான்புகலுதற்குமேலினியிடமுமில்லை
தரித்துநீயுன்னையுன்றன்சமயத்தையாய்ந்துமித்தை
யிரித்துநன்குணர்தியென்றேயிவனகத்திருளைநீத்தான், (௨௩௭)

இன்னனவாகவின்னுமிங்கிலந்தமருநாளி
லந்நகரத்துத்தன்பாலடுத்தவர்செயல்கள்யாவும்
பின்னரும்வேண்டிற்றென்றேபேறறிவதனின்வாய்ந்த
மன்னவன்வரைந்துவைத்தான்வரைந்தவாண்டெழுபான்மூன்றே, (௨௩௮)

கலமினிவருங்கொலென்னக்காத்திருந்தொருநாளாகச்
சலமினிதாகச்செல்லுந்தனிமரக்கலத்திலூர்ந்தே
நலமினியெங்கேயென்னநளிர்வளத்திலங்கையென்னுந்
தலமினிதாகவந்தேதன்மனையமர்ந்தானையன், (௨௩௯)

ஆரியந்தமிழினோடுமோங்கிலங்கிறீக்குலற்றீன்
சீரியவிந்துத்தானிசிங்களம்பிறைஞ்சுசெர்ம
னேரியலிவையுமல்லானிற்றலியானபத்துப்
பேரியல்பாடைகற்றபேரறிவுடையனின்னோன், (௨௪௦)

செப்பியபாடைதம்முட்செந்தமிழறிவினாலு
மப்புவிமலிந்துவந்தவாங்கிலவறிவினாலுந்
திப்பியகிரந்தத்தோடுசிங்களக்கலையினாலு
மொப்பவரில்லையென்னவோங்குவிற்பத்தியுள்ளோன். (௨௪௧)



பொருளிலக்கணமேயாகப்பொருந்துகல்லாடங்கோவை
மருளறுமனையஞானவாசிட்டவியாக்கியானந்
தெருளிலதாயிலங்கைச்சரித்திரந்தெளிவேயாக
யருளினனவற்றைமேலேயறைவதுமுறைவைப்பாமே. (௨௪௨)

## சகோதர மாண்பு.

பின்பிறந்த தவமிருந்தவிக்குரிசில் பிறப்பதற்குப் பெரிதுஞ் சின்னாண், முன்பிறந்த தவமிருந்த விரண்டருமைச் சோதரங்கண் முதன்மைபெற்றோர், பொன்பிறந்த விலங்கைநகர் பொற்பேற நெறிமுறைகள் பொருந்தத்தந்தோ, ரென்பிறந்த தென்னுமற் பிறந்த பயனத்தனையு மெய்தியுற்றோர், (௨௪௩)

இன்னவரின் முதற்குமார சாமியிவற் கிளங்குரிசில் ராமநாதன், சொன்னவிவர் தமதருமைத் தம்பியரைத் தோளிருத்திச் சுமந்திறக்கி, வன்னவிளையாட்டுவந்து வருநாளிலிருவரையும் வயதுகண்டே, சென்னைநக ரேகவைத்தா னரியகலைகற்பதற்குத் திருத்தமென்றே, (௨௪௪)

சென்றவர்களிருவோருஞ் சேர்ந்துகலைதீவிரமாய்ச் சிறப்பிற் கற்றே, யொன்றவவணுயர்ந்துயர்ந்தே யோதரியநூல்களைத் தாமோதிவந்து, துன்றவெதிர் தரும்ஞாய துரந்தராந் தொழில்களிலே துலக்கமெய்தி, நின்றவணி நளிர்கொளும்பி னீடுபுகழ்நனியோங்கி நிலவவுற்றார், (௨௪௫)

சென்னையெனுந் திருநகரி லொருவரென விருவருமாய்ச் சேர்ந்துமன்னிக், கன்னலதுந்தவிராமலுயர்கலைகளாராய்ந்து கற்றுநிற்கப், பின்னவனென் றிலங்கருணா சலக்குரிசி லரசுதவி பெரிதும் பெற்றே, யின்னவரி னுயர்ந்தவதி தீவிரமாய்க் கேம்பிறிச்சி லிருந்துகற்றான், (௨௪௬)

அருகினரை யாகவைத்தே யரும்பயிற்சி மிகப்பயிற்றி யரிய
வன்பு, பெருகினரை யாங்காங்கே கற்கவெனக் கலைத்துவிட்டுப்
பின்னியுள்ளந், திருகினரை யொறுத்தடக்குஞ் சேர்முத்துக் குமா
ரசாமிச் செம்மல்கண்ணோர், மருகினரை யுயர்ந்துயர்ந்து வருவதெ
ன்றே வெனக்காத்து மகிழ்ச்சிபெற்றான், (உ௪௭)

காத்திருந்த மாதுலர்க்கு மதிப்பினுடன் குதூகலமுங் கதித்து
மன்னப், பூத்திருந்த வசோகவனப் பொற்புடைய விலங்கைநகர்
பொலிவுசெய்ய, நாத்திருந்த நன்குகற்றே யொருநான்கு பட்டமு
டனுடிவந்து, கோத்திருந்த குலந்துதிக்கக் குலவருணாசலக்குரி
சில் குலவியுற்றான், (உ௪௮)

நீத்திருந்த குறையரிதிற் பயந்தருளுமிருவோரும் நீங்கியுற்றா
ரேத்திருந்த தம்பியென வினிதணைத்தே யின்மொழிக ளியம்பியி
ன்னு, மூத்திருந்த விருவோரும் மூதறிவிற் கொருவனென்றே
மொழிந்துபற்றாற், றேத்திருந்தப் பாராட்டி மூவருமாய்ச் செயற்
கரிய செயல்கள்செய்தார், (உ௪௯)

மேதியொடு மாவினம்மேய் மருதவளத் திருநாட்டின் மிகுத்
துவந்த, வாதியொடு வரும்பிரதி வாதிகளை நேர்நிறுத்தி மறைத்த
வுண்மை, யாதியொடுமாராய்ந்தே யறுத்தெடுத்துத் தீர்ப்பளிக்கு
மருமைத்தான, நீதியொடுவரும் நீதிபதியாகவிருந்தருணாசல விள
வனிலவிவந்தான், (உ௫௦)

சேதமிகவாராமற் காப்பலெனத் தொடர்வழக்கிற் றிறமைத
ன்னால், வாதமிகப்பேசிவருந் தனிஞாய தூரந்தராய் வதிந்துவந்
தார், நீதமிகத் தருங்குமார சாமியுடனிளவலென நிகழ்த்தநின்ற,
நாதமிக வாக்களித்தே நல்லிசைகொண் டுயர்ராமநாத னின்னோர்,
(உ௫௧)

மாணிலங்கவரும் குமாரசாமியிவ னுயர்வுபெறீ வருமந்நாளி
ற், சேணிலங்கவருநம சிவாயமெனு முதலிமுனஞ் சிறப்பிற்பெற்ற,
நாணிலங்கவந்த வன்னபூரணியை நல்வதுவை நயந்துசெய்தே,
யேணிலங்க வயங்குசிறீ காந்தனென்றே யொருமகனை யினிதுதந்
தான், (உ௫௨)



சுகங்களிக்கப் பெறுஞ்சீர்த்தித் துரைராம நாதனென்னுந்
தோன்றலந்நாண், முகங்களிக்க மொழிபேசி முந்துநன்னித் தம்பி
யென்னும் முதலிபெற்ற, சகங்களிக்கத் தோற்றியசெல் லாச்சியெ
ன்னுஞ் சீருடைய வைதயறன்னை, யகங்களிக்க மணம்புரிந்தே யே
ழருமை மக்கடம்மை யரிதிற்பெற்றான், (உ௫௩)

சந்திரனேர் சத்திரமொன் றதுவிரித்துக் கோலோச்சத் தனி
த்துவைகி, மந்திரநேர்ந் தாராயும் மந்திரிகடாமாக மதிக்குமாச,
தந்திரமே யாநான்குஞ் சட்டநிரூபணசபையிற் றந்துமண்ணி, லிந்
திரரே யாகுமென மூவருமங் கொருகாலத் திருந்துவந்தார்,
(உ௫௪)

பொன்னையுயர் நிலங்களினைப்பூவையரை மக்களினைப் பொரு
ந்தநின்ற, பின்னையுள பொருளையெலாம் பெற்றிடினும் பெறற்கரி
தாய்ப் பேசுகின்ற, தன்னையுடன் கொண்டுதிக்குந் தவப்பெருமை
தயங்கிய சோதரர்களின்றே,றென்னையுரைதந்திடுவலிலங்கைசிறந்
திருந்தறிவரிருந்தவந்நாள், (உ௫௫)

முன்னையிவர்தாமொழியச் சேரருணாசலக்குரிசின் முதலிலெ
ங்குந், தென்னையிவர் தோப்புகளாற் செந்நெலுயர் கழனிகளாற்
சிறப்புமன்னித், துன்னையிவர்சலாபமெனச் செப்புதிருநாட்டினுக்
குத் துரையேயாகத், தன்னையிவரேத்திடுவான் றனிநீதிபதித்துவத்
திற்றயங்கியுற்றான், (உ௫௬)

கமந்திருந்து செஞ்சாலி கவின்வளனுங் காரினத்திற் கனைந்து
மொய்க்கு, மிமந்திருந்துமலைவளனு மலைவளனு மலிந்திலங்குமிலங்
கைதன்னைச், சுமந்திருந்துநாடுகளைத் திருத்திடுவானெண்ணியெண்
ணித் தொடர்ந்தவுள்ள, மமந்திருந்து நடத்திவருந் துரையருணா
சலம்வதுவையறைவனின்னே. (உ௫௭)

## மணம்புரிதல்

ஊரறியத்தக்கானென்றுலகறியத்தாதைதன்னைப்
பேரறியவைத்திடுவான் பிறந்தபெறு பேறுபெற்றே
நேரறியவில்லாதநீடுபுகழ்மக்களொடும்
பாரறியவந்த பொன்னம்பலமுதலி வாழ்வுறுநாள், (௨௫௮)

மூத்தவிருபுதல்வருக்கு முதன்மைபெற வதுவைசெய்தே
பூத்தமனக்களிப்பொடவர் பொற்பினுடன் வாழ்வுறுநாண்
மாத்தவமேயுருவாக மானிலமேலவதரித்த
வேத்தகுசீரிளவலுக்கு மெழின்மணத்தையெண்ணினனால், (௨௫௯)

குலத்துயர்வுங் குடியுயர்வுங் குலத்தளவாங்குணத்துயர்வும்
வலத்துயர்வுந்தருநமசிவாயமென்னும்முதலிபெற்ற
நிலத்துயர்வுந்திகழ்வனப்பும்நேரிழைகட்கானன்மை
நலத்துயர்வும்வாய்ந்தசொர்ணநங்கைமகற்கமையுமென்றே, (௨௬௦)

நெஞ்சமதுவேநினைவாய்நினைந்துபொன்னம்பலமுதலி
விஞ்சவருந்தனயருடன்விழைவிளைந்துவைகுமந்நாள்
வஞ்சமகன்றுயர்நமசிவாயமென்னும்முதலிதவ
மஞ்சனையகுழன்மகட்குமணப்பருவம்வந்ததென்றே, (௨௬௧)

சொன்னபொன்னம்பலத்திளைய சுதன்றுரையாந் தோன்றலுக்கே
யென்னருமைமகளைமன்றலியற்றுவலென்றெண்ணியுற்று
னென்னநினைந்தெதுசெயினுமெய்துவதொன்றெய்தாதோ
வுன்னிடுங்காலூழ்வழியேயுளம்போதலுண்மையன்றோ, (௨௬௨)

சுற்றமுடனயலவரைச்சூழவைத்துத்தானிருந்தே
யுற்றமுறையானவெலாமுலகியலின்படியாய்ந்து
பெற்றகுலந்தனமிவற்றிற்பெருமுதலியூழ்செலுத்த
மற்றவரைநன்னாளின்மணம்பேசிவிட்டனனால், (௨௬௩)



வந்தவரையிருத்தியவண் மணப்பேச்சுமுடித்துமொழி
தந்தவரையுபசரித்தே தகவனுப்பியொருதினத்தி
லிந்தவரைவிகந்ததனத்திருமுதலிமாருமொன்றிச்
சந்தவரைவதற்காகத் தக்கநன்னாள்வரைந்துகொண்டார். (௨௬௪)

### வேறு.

ஈங்குவந்த விருவரு மொன்றியே
வாங்குநாடுகண் மாநகரெங்கணுந்
தாங்குமன்னர் தலைவர்களாயினர்க்
கோங்குமங்கல வோலைகள் போக்கினார், (௨௬௫)

போக்கிமங்கலப் பொற்புகள் செய்குவா
னோக்கிநோக்கிற்கு நூதனமாகவே
யாக்கிவல்லகையாளர்கடங்களை
யூக்கியேவின ரோங்குமணிசெய, (௨௬௬)

காட்சிமுற்றிய கைத்தொழில் வல்லவர்
மாட்சிபெற்றவர் மங்கலவேலைமே
லாட்சியுற்றவவர் தொடங்குற்றனர்
மீட்சியற்றவிளங்கலங்காரங்கள், (௨௬௭)

85442

பீடு சான்மனைப் பித்திகை முற்றவும்
நீடுசுண்ணநிலவெனப் பூசினர்
மாடுசாளர வாய்தற் கதவங்க
ளீடுமிக்கொளிரெண்ணெ திமிர்ந்தனர், (௨௬௮)

புரையில் பித்திகை பூக்கொடி சோடித்தார்
கரையின்மாலை கவின்கொள நாற்றினார்
நிரையிற்றாண்கணிறங்களைச் சுற்றினார்
தரையின் முற்றுறத் தந்தனர் கம்பலம், (௨௬௯)

எத்திசைக்கணுமேர்பெற முற்றத்திற்
பத்தியாகவே பந்தற்காணட்டினர்
பொத்திமேலுறப் போக்கினர் வேய்ந்தனர்
மெத்தியிட்டார் விதானவகைகளை, (உஎ0)

நாட்டுகால்கட்கு நானிறஞ்சூழ்ந்தனர்
கோட்டுமுள்ளிடைக் கொய்சகத்துசுடன்
நீட்டுதோரணம் நேர்பெற நாற்றியே
கூட்டுமாலையுங் குஞ்சமுந் தூக்கினர், (உஎக)

கன்னலோடு கமுகவிலைகளை
யன்னகால்களிலாயாத்திட்டன
ரின்னநன்னிலந்தேர்கொள் பூக்கம்பலம்
மன்னவெங்கும் மயங்கவிரித்தனர், (உஎஉ)

தாவிநின்று தருங்குலைப்பாக்குகண்
மேவிநீண்டு வினங்குகமுகொடு
மாவினன்முகம்மானுங்குலையொடு
வாவியோங்கிய வாழைகணட்டினர், (உஎங)

தொடக்கியின்னணந்தோன்றக்கை வல்லவர்
கடக்கிலாவகை காட்சியிற் கண்டன
மடக்கியிந்த வனப்புகள் யாவையு
மடக்கிக்காட்டுகண்ணாடிகள் வைத்திட்டார், (உஎச)

வெவ்விதாக விரிந்த விருள்களை
வவ்வியுண்டு வயிற்றுளடக்கிமேற்
கவ்விநின்ற கதிரைவிழுங்கொளி
செவ்விதாகிய தீபங்களேற்றினர், (உஎரு)

ஏலுமாறிந்தவீரிடத்தொக்கவே
சாலுமாறணிதந்துமணச்சடங்
காலுமாற்றினரிவை தன்மாமனை
மேலுமாற்றுற வேண்டினர்கைவலோர். (உஎகூ)



வேறு.

கருவினின்வந்தகாவற் கடவுளம்மிசமேயான
மருவுபோழகுவாய்ந்த மணமகனினிதுவைகித்
திருவினம்மிசமேயான சேயிழையாளைவைத்தே
யுருவுறவேட்டற்காகவுயாலங்காரஞ்செய்வார், (உஎஎ)

சேணாசிருக்குந்தேவேந்திரதிசைமுகமேயாகக்
காணலமமைந்தசாதிக்கண்ணடிபதித்துச்செய்து
வேணலவகைக்கணுள்ளோர் விழிகளைவிருந்துசெய்ய
மாணலச்சோபிதத்தோர்மணவறைகோடித்திட்டார், (உஎஅ)

ஆரணமறையோர்வேள்வியாற்றுவான்குண்டமாக்கிக்
காரணவாசுநாட்டிக் கவினரசாணிதந்து
பூரணகும்பநான்கு பொருந்தவே விளக்குநான்கு
சீரணவுறவேவைத்துச் சிலையுமொன்றங்கண்வைத்தார், (எஉகூ)

இன்னவாறுனயாவுமேவுவாரிலாதவண்ணஞ்
சொன்னவாறுகத்தாமே துணைக்காந்துணையேயாக
வன்னவானுலகவேந்தனமர்ந்தமர்சுதன்மையென்றே
முன்னுவானமைத்துக்காட்டமுதலிமாருவகைபூத்தார், (உஅ0)

ஓதிடவேறென்றுண்டோவூழினும்வலியதேதோ
போதிடமாகவைகும்புங்கவன்விதித்தநாளோ
மாதிடமாகவைத்தோன்வலக்கணேயாகமன்னுஞ்
சோதிடமுகூர்த்தநாளுந் தொடர்ந்துவந்தடுத்ததம்மா, (உஅக)

நேருயர்தினம்வந்தெய்த நேர்திசைநான்கும்பொங்க
வாருயர்தவிலேசின்னம்மங்கலமுழவம்விம்மப்
பேருயர்மாந்தரோலை பெற்றநாட்டொடுத்துமன்றற்
சாருயர்மனைகணடித் தனித்தனிவருவதானார், (உஅஉ)

அன்னவனிலங்கைத்தேசவதிபதியவற்குச் சார்பாம்
மன்னவனமைச்சர்மேலாம் மதியுளவமைச்சர்வாதந்
துன்னவந்தடுக்கும் ஞாயதுரந்தரர்துரைகளின்னு
மின்னவர்நிலைக்களத்தோரிவரெலாங்குழுமிவந்தார், (உஅங)

வீட்டினிலறங்கள்செய்வோர் விளைவுளகமங்கள்செய்வோர்
கூட்டினிற்செல்வமுள்ளோர் குலமெனுமுயர்ச்சியுள்ளோர்
நாட்டினினகரிலுள்ளோர் நால்வகைத்தாயமாந்த
ரீட்டினிலொருங்கேயாக வெய்தினர்குழுமிமொய்த்தார், (௨௮௪)

முந்தவேவருநர்யார்க்கும் முதலிமார்முகமன்வார்த்தை
தந்தனரவர்கடத்தந் தகுதிகட்கேற்கவேற்க
நந்தலிலாசனங்கணல்கியே யிருத்தித்தங்கை
வந்தவர்தம்மால் வாசக்கலவையும் வழங்குவித்தார், (௨௮௫)

ஆங்கிலமாதர்செய்ய வருந்தமிழ்மாதர்செவ்விச்
சிங்களமாதராதித்தெரிவையர் வரவையேற்றுப்
பங்கமின்முதலிமார்தம் பத்தினிமாதராங்கே
தங்கவைத்துபசரித்தே சாந்தடைகளிக்கத்தந்தார், (௨௮௬)

போதவந்தவர்கள்யாரும் பொன்னவைபொலியவைக
மாதவம்விளங்குவார்க்கு மணச்சடங்காற்றற்கொத்தோ
ரோதவந்துற்றாரோடு மோமநற்பொருள்களோடும்
வேதவந்தணர்கள்வந்தே வேறிடத்தமர்ந்தாரங்கண், (௨௮௭)

சீர்பெறும்மக்களாலுந் திகழ்ந்தகோடிப்பினாலும்
நேர்பெறுமாறொன்றின்றி நிலவுதீபங்களாலும்
வார்பெறுமழகுவாய்ந்த மணமகண்மனையிலிட்ட
வேர்பெறும்பந்தாப்போ திந்திரன்சபையையொத்த, (௨௮௮)

கணமதுந்தாழ்க்கலேனோ கடிகைவந்துற்றதென்னாக்
குணமலியறிஞர்நாடிக் கூறப்பொன்னம்பலப்பேர்ப்
பணமகிழ்முதலிகேளாப் பணித்திடப்பணிகள்செய்வோர்
மணமகன்றனக்குவாய்ப்பவதுவையின்கோலஞ்செய்வார், (௨௮௯)

சாமனுக்குவமைகூறிற் சாலுமோதம்பியன்றோ
பூமனுக்கழிந்துபின்னர்ப் பொற்புருவெடுத்துநின்ற
காமனுக்கொத்ததேசு தருமருணாசலச்சீர்க்
காமனுக்கழகுசெய்யக் கருதுதலேழைமைத்தே, (௨௯௦)



ஆயநன்னீரினாட்டி யாடையாற்றுவட்டியீரந்
தூயனகலவையாதிச் சுகந்தங்கடிமிர்ந்துவெள்ளை
தூயபட்டாடைதாறு வைத்தனருடுத்திச்சோதி
யேயவேதெரிந்துகொண்ட வெழில்பெறுங்கவசமிட்டார், (௨௯௧)

மேலுறவனப்பைத்தந்து மிளிர்தலைப்பாகைவைத்து
மாலுறமடந்தைநல்லார் மார்பிலுத்தரியமிட்டு
நாலுறவிருளைச்சீக்க நவமணியாரஞ்சாத்தி
யேலுறநுதற்கண்ணாக விட்டனர்பொட்டுமொன்றே, (௨௯௨)

ஈண்டையோர்மதனன்கொல்லோ விந்திரன்கொல்லோவென்றே
யாண்டகையோரும்பெண்மை யவாவினர்மாழ்கவாங்கே
பூண்டகவமையவைத்தே புருடவுத்தமனுக்கிங்ஙன்
காண்டகவனப்புச்செய்யா கன்னியர்க்கலக்கண்செய்தார், (௨௯௩)

இன்னவரின்னவாறே யெழின்மிகப்படுத்தபின்னர்ச்
சொன்னநூற்கடிகையின்னே தோற்றுமென்றறிஞர்கூறத்
தன்னமுமறுவிலாத தனிமணவாளனந்தப்
பொன்னவைபொலியத்தோன்றிப் பொற்புளகாட்சிதந்தான், (௨௯௪)

மங்கலமுழவமார்க்க வயிர்துடிதவில்களார்க்கச்
சிங்கலிலாமனாகச்சின்னங்களினிதிசைக்கத்
தங்கலரவைக்கணானோர் தாமருங்காகச்செல்ல
பொங்கலரொழுந்துபோர்க்கப் போதவேயெழுந்தானையன், (௨௯௫)

தொங்கலதணிந்துநான்ற சுவேதமாவிணையப்பூண்ட
தங்கலதாகச்செல்வ சாரதரிருவருய்ப்ப
கொங்கலராகலத்தண்ணல் குலவுமிவ்விரதமூர்ந்தே
மங்கலமனையைநாடி வந்துதேரிழிந்திட்டானால், (௨௯௬)

வருமவள்பாங்காய்வந்த மைத்துனன்பதநீர்வார்ப்பத்
தருமலர்மாலைநாற்றித் தயங்குதீபங்களேற்றித்
திருமகள்விலாசஞ்செய்யுந் திகழ்மணப்பந்தருட்போய்
மருமலர்கமழும்மன்றன் மணவறையமர்ந்தானையன், (௨௯௭)

வேறு.

மணமகன்மணவறைவதியத்தாதையக்
கணமகட்கணியினிக் கவினச்செய்கென
வணமகளீரவண் வயங்கக்கைகொடு
குணமகட்கணிமணக் கோலஞ்செய்குவார், (௨௯௮)

வேறு.

நாணமேமடமேயச்சம்பயிர்ப்பெனநான்குந்தானே
பூணெனப்பூண்டவிந்தப் பொற்கொடிசொர்னமின்னைக்
காணவேவண்ணமாதர் கைபுனைந்தழகுசெய்தல்
பேணமேலேதுமில்லைப் பேதைமையெள்ளலாமே, (௨௯௯)

இயற்கையாமழகுவாய்ந்த விளமயிற்சாயலாளைச்
செயற்கையாமழகுசெய்தே சேர்த்துவரவைக்கணுயிற்
கயற்கணுள்வடிவைக்கண்ட காளையர்வசங்கள்கெட்டே
மயற்கையாலிழப்பாவி வனப்பினுக்களவுமுண்டோ, (௩௦௦)

பொற்பினிற்கமலமாதைப் பொறையினிலவனிமாதைக்
கற்பினின்வடமீன்மாதைக் கலையினினுவின்மாதை
வெற்பினிற்குணமேன்மாதை விளம்பலாமினையமாதை
யற்பினிற்கோலஞ்செய்வான்றிமற்றேதுசெய்வார், (௩௦௧)

வாண்மதிமுகத்தினாளை மடந்தைநல்லார்கள்கூடி
மாண்புனலாட்டியீரம் வறந்திடத்துகிலாலொற்றி
யேண்புகைக்கமழவூட்டியேலமுந்திமிர்ந்துகையாற்
சேண்புயற்குழலைக்கோதித் திருத்தியேசடையிட்டார்கள், (௩௦௨)

காந்துவெண்முத்தினாலுங் கதிர்விரிவயிரத்தாலு
மேந்துபூணனையாவுமெழில்பெறவணிந்தபிள்ளர்ப்
பூந்துகில்புனைந்துசாத்திப்பொருந்தவேகச்சுஞ்சேர்த்திச்
சாந்துகொண்டொளிர்நுதற்கட்டயங்கவேதிலகமிட்டார், (௩௦௩)

பொன்னொக்கும்மேனிகஞ்சப்பூவொக்குமுகங்கார்த்தோன்று
மின்னொக்குநுசுப்புச்செய்யவேயொக்கும்பசியமென்றோழ்
தன்னொக்குமொருவரில்லாடனக்கணியணிகள்யாவு
மென்னொக்குமெள்ளலாகுமிவளணிக்கணிகளாவாள், (௩௦௪)



கோமகள்களிப்புக்கொள்ளக் குலவுசெங்கமலம்வைகு
மாமகள்களிப்புக்கொள்ளமன்னியபொறையான்வாய்ந்த
பூமகள்களிப்புக்கொள்ளப்பூண்டவெண்மணிகளாலே
நாமகள்போலச்செய்தே நல்லவையேற்றினார்கள், (௩௦௫)

பேணிப்பெண்பெண்மைநச்சும்பெருமணக்கோலம்பூண்ட
சேணிற்பெண்ணரம்பைநேருஞ் சேயிழைசொர்னமென்னு
மாணிப்பொன்னனையாளிந்தவவையிலாண்மக்கடம்மைக்
காணிற்கற்பழியுமென்றோ கவின்முகங்கோட்டிவந்தாள், (௩௦௬)

கோட்டினணாணிவந்த கோல்வளைக்குழைமென்கொம்பைக்
நாட்டினரணங்குகொல்லோ நங்கைதான்கொல்லோவென்னக்
காட்டினர்கணையானென்றே காளையர்கலக்கமெய்தக்
கூட்டினரவைக்கண்ணாகக் கொடுங்கையாலணைத்துவந்தார். (௩௦௭)

வேறு.

உற்றநங்கையொதுங்கினள்வெள்கியே
யற்றமெய்தியவையினையஞ்சலுஞ்
சொற்றநற்றுணைத்தோழியர்கைதந்தே
பற்றதாயவண்பற்றியணைத்திட்டார், (௩௦௮)

ஆகுமென்மையளிச்சம்பூமேவியே
போகுமேற்கொப்புளங்கொளுமெல்லடி
யேகுமோவிந்நிலந்தனிலேகுமே
னோகுமேயெனநூபுரமார்த்திட, (௩௦௯)

அன்னமென்னவடி பெயர்ப்பித்திட்டே
நன்னலத்தவை நாடநடத்துறீஇக்
கன்னலின்றியகாமனையொத்ததன்
மன்னனோடு வலத்திலிருத்தினார், (௩௧௦)

நோற்றநோன்மையி னுண்பயனாமெனத்
தோற்றமெய்தித் துலங்குமிருவரு
மாற்றநோக்கு மவையினர்கண்களுக்
கேற்றமானவிலக்கெனலாயினார், (௩௧௧)

இந்தமாலுடனிந்திரைதன்னையும்
முந்தநின்று முதலிகள்கண்ணாரீஇ
யந்தமில்லன வானந்தமூழ்கியே
நந்தமுன்னைய நற்றவமோவென்றார், (௱௧௨)

நாதமிக்கன நல்லனதூரிய
மோதவேலையொலியெனவார்த்திட
பேதமில்லன போவையேத்திட
வேதவந்தணர் வேள்விதொடங்கினர். (௱௧௩)

வேறு.

மாத்தவமடந்தையோடும் மாதுலன்னமசிவாயம்
பூத்தபேருவகைபொங்கப் பொன்னவைபொலியத்தோன்றி
யேத்தகுசொர்னமான்கை யெடுத்தவன்காத்தினல்கிக்
காத்தனைகோடியென்னாக் கரகநீர்த்தாரைவார்த்தான், (௱௧௪)

ஓதியமறையால் வேட்டவோமத்தீசாட்சியாக
வேதியர்சாட்சியாக வேத்தவைசாட்சியாகத்
தீதியலாதுமேனாட்டிருத்தவஞ்செய்துபெற்ற
கோதியகுழலினாளைக் கொடுத்தனன்கோடியென்றே, (௱௧௫)

மனமுடன்வாக்குக்காயம் வழங்கியமூன்றுமொத்தே
தனமுடனறந்திறம்பாத் தகுதிசேர்நமசிவாயந்
தினமுடன்பயந்த செல்வச்சேயிழைசொர்னமின்னைக்
கனமுடன்றத்தஞ்செய்தே கதித்தபேருவகைபூத்தான், (௱௧௬)

சேணினையளாவப்பேரி சின்னங்களிசைத்துப்பொங்கப்
பூணினையொலிக்கப்பூண்ட பொன்னவைகளித்துப்போற்ற
நாணினையேந்திநம்பி நங்கைதன்கழுத்திற்சேர்த்தி
மாணினைமதிப்பான்முல்லை மாலையுஞ்சூட்டிநின்றான், (௱௧௭)

ஆயகன்றவைக்கண்வைகுமாண்மகர்க்கொருகாணி
மேயகமலிந்துபொங்கும் விளைவையுமொருகாற்பேணித்
தாயகன்முலையாரேந்தித் தருமுல்லைமாலையொன்றை
நாயகன்கழுத்திற்சேர்த்தி நாயகியொதுங்கிநின்றாள், (௱௧௮)



அந்தணரிட்டவிட்ட வாகுதிமாந்திமாந்தி
யுந்திமேலெழுந்துபொங்கு மோமத்தீதன்னையையன்
கந்தநற்குழலார்சூழக் காதலிகாத்தைப்பற்றி
முந்தினன்கொண்டுகொண்டே மும்முறைவலமாய்வந்தான்,
(௱௧௯)

இந்திரனாலேநேர்ந்த விடரினாற்பாவமெய்திக்
கந்தநீள்தபோவனத்திற் கருங்கல்லாய்ச்சமைந்துவீழ்ந்த
வந்தமாமுனிவன்றேவி யகலிகைகாணென்றங்ஙன்
சிந்தனையாகவன்னாள் சீறடிசிலைமேல்வைத்தான், (௱௨௰)

காமமைத்ததனைத்தோாள் கல்லெனநெடுநாள்நின்றே
தாமெனவுயர்த்தப்பட்டுத் தாரமாய்வசிட்டனுக்குஞ்
சிரமெனவணங்கவிண்மேற் றிகழ்ந்தனள்காண்டியென்னா
வாமுயர்வடமீன்றன்னை வானிடைத்தரிசிப்பித்தான், (௱௨௧)

அருந்துறுமடிசிற்றீப மரிசனமறுகுநிம்பம்
பொருந்துபொற்றட்டமேந்திப் பொலிந்தபொற்றொலிமாத
ரிருந்தவையொதுங்கிவந்தே யெதிர்முகமாகநின்று
திருந்துமாலாத்திகாட்டித் திட்டியுங்கழித்திட்டார்கள், (௱௨௨)

மாற்றருஞ்சிறப்பிற்றூய மங்கலவினைகண்முற்ற
வாற்றவும்முதியோரிந்த வழகிக்குமழகனுக்கும்
போற்றரும்செல்வத்தோடும் புத்திரப்பேற்றினோடு
மேற்றமாயமர்திரென்றே யேத்தியக்கதமெடுத்தார், (௱௨௩)

முக்கனிநறும்பால்செந்தேன் மொய்த்தசிற்றுணவுவர்க்க
மொக்கவேயருந்திப்பின்ன ரொண்டொடியணங்குந்தானு
மிக்கசீருவகைபொங்க வேந்தரும் பிறரும்வைகுந்
தக்கபோவைக்கண்வந்தே சார்ந்தனன்காட்சிதந்தே, . (௱௨௪)

திருநகைப்பவளச்செவ்வாய்ச் சேயிழையணங்கன்னாளு
மருவமர்தாரினானும் மருவியங்கிருத்தல்காணா
விருவருமுருவுபெற்ற விரதியுமதனுமென்றே
கருதியவ்வவையத்துள்ளோர் கண்களாற்பயன்கள்பெற்றார்,
(௱௨௫)

சேர்ந்தவர்பாலேயாகத் திகழ்மணப்பந்தர்மத்தி
சார்ந்துவந்தமர்ந்தசெவ்வித் தலைவனைத்தலைவிதன்னை
நேர்ந்தவாடவரும்மற்றை நேரிழைமடந்தைமாரு
மார்ந்தநற்களிப்பின்மூழ்கி யடுத்தளவளவியுற்றார், (௯௨௬)

தொன்மனையகங்களொவ்வா சொல்லுகிலளகையாளும்
மன்மனையொப்பேயாகு மனையிவன்மனையதாகுந்
தன்மனையாகவந்த தனித்திருமகளைக்கொண்டப்
பொன்மனைசெல்லவென்றே புந்திமேனினைந்தானையன், (௯௨௭)

தூரியமொலிக்கவெங்குஞ் சுடரொளித்தீபமாரச்
சீரியதெருக்கடோறுந் திகழ்நிறைகுடங்கள்பொங்க
வேரியலணிகள்செய்யா விணைத்துரகதங்களீர்க்குந்
தேரியலாகவேறித் திருவுடன்வீதிவந்தான், (௯௨௮)

எத்தவமியற்றினானோ விவனுக்குமிவளேயென்பா
ரித்தவமிருத்தலாலே யிவளுக்குமிவனேயென்பார்
வித்தகமானமேதாவியனிவனோமோவென்பார்
நத்தனூலுருவமான நாமகளிவளோவென்பார், (௯௨௯)

துனைவளமலியிலங்கைத் துரைமகனிவனேயென்பா
ரணையவன்றனக்குவாய்ந்த வரசியுமிவளேயென்பார்
தணையவர்போற்றவைகுந் தரேந்திரனிவனேயென்பார்
புனையணிதிருந்தப்பூணும் புலோமசையிவளேயென்பார், (௯௩0)

காதலனுளமுங்கண்ணுங் கவர்வனப்புடையளான
காதலிமேனித்தேசு காட்டியேவீதிசெல்லும்
போதினிற்றீபமெல்லாம் பொங்கொளிமழுங்குகின்ற
வாதலினிவளேயில்லத்தவிர்விளக்காகுமென்பார், (௯௩௧)

கோங்கியல்முகிழிற்கோட்டிற் குலவிளமுலைகடாங்கி
வாங்கியநுசுப்பினுடன் வாண்முகமதியைக்கண்டோ
வாங்கியலாசைமூழ்கு மாடவர்முகங்களான
வோங்கியகமலம்யாவு மொளிமழுங்குற்றவென்பார், (௯௩௨)



இன்னணம்வீதிதோறு மெய்தினர்பலவுங்கூறக்
கன்னல்வில்லொழித்துநின்ற காமனையனையமன்ன
னன்னநன்னடையுமின்ப மமுதமென்மொழியும்பெற்ற
சொன்னமின்றனையுங்கொண்டே தொன்மனையகத்தைச் சேர்ந்
தான், (௯௩௩)

நன்மனையென்றுசொல்லும் நாட்டுளமனைகடம்மை
யென்மனையென்றேயெண்ண வேர்நனிபொலிந்துமன்னுந்
தன்மனைநோக்கநோக்குந் தரணியோர்நோக்கமொக்கும்
பொன்மனையகத்தில்வைத்தான் பூமகள்சொர்னமின்னை, (௯௩௪)

ஓதியிலதிபன்மித்தை யுலகமென்றுணர்ந்தோன்ஞாய
வாதியிலதிபன்விஞ்சும் வாதமென்றறிந்தோன்சீர்த்திச்
சோதியிலதிபனிந்தத் துரையருணாசலம்நன்
னீதியிலதிபனாகநெறிமுறை நடாத்தியுற்றான். (௯௩௫)

---

## சலாப வழக்குத் தீர்ப்பு.

முன்னமாங்கு மொழிந்த சலாபமேன்
மன்னன் றீர்த்த வழக்கு விளம்பியே
யன்னசாலு மளவைகளாய்ந்தவன்
பின்னு நீதிபதித்திறஞ் செப்புகேன், (௯௩௬)

### வேறு.

கலாபத்து நிழறந்தாடிக்களிமயில் சிந்துந்துள்ளி
நலாபத்துப்பெடையுண்டீன்ற நற்கருக்காக்குங்கானச்
சலாபத்துமுனீச்சுரற்கே தானமாம் நிலங்கடம்மை
யிலாபத்துக் கிலாமன் மீட்டுக்கொடுத்ததுமிந்தவேந்தன்,! (௯௩௭)

சகத்தினிலிலங்கைமீதிற் றனக்குயர்வொப்புமில்லோ
னிகத்தினிலுயிர்கள்வேண்டு மிருமைப்பேறுதவுகிற்போன்
மகத்துயர் வானோர்வேந்தை வாரிதிபருகிக்காத்த
வகத்தியன்வியாதனேனோருச்சனைபுரிந்த மூர்த்தி, (௯௩௮)

ஆனமாவிலிங்கமாகு மருண்முனீச்சுரனுக்கென்றே
மானமாமரசரேனோர் மனமகிழ்ந்துதவுந்தேவ
தானமாநிலங்கடம்மைத் தமதெனப்பின்னைநாளி
லீனமாயனேகர்பற்றி யெழுதிச்சாதனங்கள் செய்தார், (௱௩௯)

முன்னவன்கருணைவள்ளன் முனீச்சுரனருளாலாங்கே
யுன்னருஞ்சிவில்லோவாய்ந்தே யுயரருணாசலச்சீர்
மன்னவன்றுரையே யாகவந்ததையுன்னுங்காலை
யன்னநற்றவத்தினுக் கோரதிட்டமேயானதன்றே, (௱௪௰)

தள்ளவேயரியதான சாதனவகையிலுள்ள
கள்ளமேயானயாவுங் கரதலாமலகம்போல
மெள்ளவேயாராய்ந்தையன் விதியொருமூன்றுநாடிக்
கொள்ளவேநிலங்கள்யாவுங் கோவிலுக்கமையச்செய்தான், (௱௪௧)

வேறு.

பலவழக்கென் சட்டமதி நுண்மைகொண்டு மளந்தெடுத்துப்
பகுக்கவொண்ணா, நிலவழக்கொன்றது குடிக்குமுடியினுக்கும்வரு
முரிமை நெடிதுமுண்டா, நலவழக்கென்றரசினுக்குமஞ்சுவனோ
தருமநெறிநடத்துமையன், றலவழக்கையூரவற்கேதீர்ப்பளித்தான்
தண்ணளிக்கோர் சார்புமுண்டோ, (௱௪௨)

அன்புடையதாய்மகனை யடித்துமனைக்கப்புடனேயணைத்துக்
கட்டித், தன்புடையிற்குழிசிகொண்டு தண்ணீர்க்குப்போய்த்திரு
ம்பித் தனயன்றன்னை, முன்புடைய கட்டவிழ்க்கவருமளவிலவனி
றந்தான் மொழிவதென்னோ, வன்புடையவரசவனைக் கொலைத்தீர்ப்
புச்செய்துசிறைவலிந்துவைக்க, (௱௪௩)

தீதறிந்தாற்பொறுக்குமதோசோருணாசலநிருபன்சேருமங்க,
ணீதறிந்தானுடனேகித் தூண்பிழந்து பொங்கிருந்த வெரிவாய்ச்
சர்ப்பங், காதறிந்தானரசனுக்கக் கடுஞ்செயலைக் கடிதனுப்பக் கல
ங்கியந்தப், போதறிந்தான் கொலைதபுத்துத் துரைமதியினுண்மை
தனைப் போற்றியுற்றான். (௱௪௪)



## நீதிபதித்துவம் நடாத்தல்

கொழுத்துறையிலேறுழக்கக் கயலுகண்டுபூகநறுங்குலையிற்
றாவிப், பழுத்துறைபைங் காயுதிர்க்கும் மருதவயற் சலாபமெனும்
பதியைவிட்டு, விழுத்துறையென்றிவ்விலங்கைத்தென்கோடிதனி
லிருந்துவிளங்குமிந்தக், கழுத்துறைக்குத் துரையாகக்காதலியொ
டினிதுவந்தான் களிப்பின் மன்னன், (௱௪௫)

அலைக்கரை சேரூரி தன்கணுயர் குலத்தோர் சிங்களர் களரி
திற்கற்ற, கலைக்கரை தேரறிவுடையர் கனதனத்தர் கதிப்புடையர்
கழறுமின்னும், வலைக்கரையோர் மதிகெடுக்குங் களிமதுவுண்ட
டாது செயும் வலியரின்னோர், நிலைக்கரையார் விலகாதநீடுபழியா
ளருமே நிறைவரிங்கே, (௱௪௬)

தேன்சுமக்குங் குலைக்குரும்பை விரித்தடுக்கித் தலைசுமக்குந்
தென்னையுண்டு, மீன்சுமக்கும் நாவாய்களெடுத்தேந்தி யலைசுமக்
கும் வேலையுண்டு, கான்சுமக்குந் தேயிலைகள்பறிக்குமடவார்ச்சும
க்குங்காடுமுண்டு, தாள்சுமக்குமித்தனையுங்கழுத்துறையென்றீண்
டெடுத்துச் சாற்றுமிவ்வூர், (௱௪௭)

இவ்வூர்க்குச் சோருணாசலந்துரையாய் வருகுவதென்றியம்
புமுன்ன, மவ்வூர்க்குக்காட்சிசெயு நிதியினருங்குலத்தினருமவா
விமன்னச், செவ்வூர்க்குக் கெடுவினைக்குந் தீயரென்றிவர்வெருவிச்
செயல்கள்கெட்டே, யெவ்வூர்க்கு முபகார வேந்தறனையெண்ணி
மனமேங்கியுற்றார், (௱௪௮)

ஓதிநெறிமுறைமை பெறவுயர்தரத்துப் பட்டமெலாமொருங்
குபெற்றோன், சாதிநெறிசமயநெறி யுலகநெறிசட்டநெறிசார்ந்து
வஞ்சங், காதிநெறிபகைநொதுமனட்பிவைகள்பாராமற்கருணைதங்
தும், நீதிநெறி நடத்தருணாசலநீதித்தலத்துவந்து நீதிசெய்வான்,
(௱௪௯)

வாதிசொலும் வழக்குகளின் வாக்குகளைக் கேட்டுவைத்தும்
மறுத்துநிற்கும், வாதிசொலும்வாக்குகளைக் கேட்டுவைத்துங்கண்
டதென்றுவந்து நிற்குஞ், சாதிசொலும் வாக்கினுட னுத்தியனு
போகமிவை தானுந்தந்து, நீதிசொலும் முறையாய்ந்துதீர்ப்பளிக்
குங் குரிசிலிவன்னீதிமன்னன், (௱௫0)

வெள்ளமெனப் பறவையென விலங்குமெனவடுத்தணைக்கும்
வேசியர்க ளுள்ளமெனவோதுமிவையொருவழியேயமையநெறி
யொட்டி நிற்போன், கள்ளமெனப்பொய்மையெனவாய்ந்தறியின்
மேலோங்கிக் காட்டியச்சம், மெள்ளவகத் தடைத்திரங்கிக் குறை
த்தொறுக்குமிதுவன்றோ வேத்தியல்காண், (௱௫௧)

கந்தனருட்சத்தி வேலாயுதபுரமென் றின்னமும்பேர் கழற
நின்ற, விந்தவளக் கழுத்துறைக்க ணீதிவிசாரணைநடத்தியிதற்குப்
பின்னர்ச், சந்தநகர் மாத்துறையென் றிந்நகர்க்குத் துரையாகத்
தானங்குற்றே, நந்தவரும் வழக்குகளைத் துரந்தரோடாராய்ந்து
நடத்திவந்தான், (௱௫௨)

பகரவருநாடுகளிற் பண்டமெலாந் தினந்தினமும் பகர்தற்
கொத்த, நிகரமிகவருஞ்சனஞ்சே ரங்காடிமன்னுமின்னு நீடுஞ்
செல்வச், சிகரமனைபலவிளங்கு முயர்குலத்தோமருமில்லஞ் சிறந்
துமன்னும், நகரமிதுபுகலுறுங்காற் காட்சியுள விலங்கையுபநகர
மொன்றே, (௱௫௩)

பொறையுடையன் புகழுடையனருளுடைய னறிவுடையன்
போற்றுங்கல்வித், துறையுடையன் றுதியுடையனுயர்வுடைய ன
ரசுமுறைதுலங்குஞ்சட்ட, நிறையுடைய னவருணாசலப்பேர்த்
துரைவருகை நிகழ்த்துமிம்மாத், துறையுடையாறிந்தவன்றே யி
னித்திருந்து மூர்களெனச் சொல்லியுற்றார், (௱௫௪)

மஞ்சனையமலர்க்கூந்தன் மாதினுடன்மாத்துறைமேன் மதிக்
கமன்னி, யெஞ்சலிலாதிருங்கலைக ளெவ்வெவையுமெளிதுகற்ற
வேந்தலிந்நாள், துஞ்சலிலர் தொடர்வழக்கிற் றுரந்தார்கடுணிந்து
நெறிசொலவுந்தூக்கி, நெஞ்சநனி நிரம்புசட்ட நெறியறிந்து நீதி
கண்டந் நிலையினிற்கும், (௱௫௫)



துரைகளெனச் சொல்வதெல்லாஞ் சொல்லளவே பொருள
ளவிற் றுரைகளல்லர், நிரைகடந்துவருஞாய சாத்திரமும் பிறகலை
யும்நெறியிற்கற்றே, கரைகடந்தபேரறிவாற் சாலுமருணாசலத்தை
க்கழறப்போகிற், றுரைகளெனச் சொல்லுமது சொல்லளவோ
பொருளளவே சொல்வதென்னோ, (௱௫௬)

தேயவகையாய்ந்தெடுத்துங் காலவகையாய்ந்தெடுத்துந் தெ
ளித்துச்சொல்லும், ஞாயவகையாய்ந்தெடுத்து மளவைகளையாய்ந்
தெடுத்தும் நவிலுமின்னு, மாயவகையானவெலா மாய்ந்துநெடுநீ
திகளை யெடுத்துநின்றே, யேயவகைவழக்குகளைத் தீர்வைசெயுமி
வற்கீடிங்கெவருமில்லை, (௱௫௭)

ஆண்டுசிலமாத்துறைக்க ணமர்ந்ததன்மேலவர்துதிக்க வாங்
குநின்றுந், தோண்டுகடற்சார்பாகக் குலைநெருங்குந்தேங்கமரத்
தோட்டமின்னு, நீண்டுபரந்துயர்கதிர்ச்செஞ்சாலிவளர் நன்மருத
நிலமுமெங்கு, மீண்டுமட்டக்களப்பினுக்கே யுயர்நீதிபதியாகவேந்
தல்வந்தான், (௱௫௮)

நேர்நிறுத்திநாடுநகர் நிலைநிறுத்திமுறைநெறிக ணிலவவைத்
துச், சீர்நிறுத்தி நனியிலங்கைக் கேற்றவுபகாரமுற்றுஞ் செய்து
செய்தே, பேர்நிறுத்திவரப்பிறந்த சோருணாசலந்துரையைப் பெரி
துமிங்கே, யோர்நிறுத்தியெல்லவரு மெதிர்ந்துவா வேற்றுமிகவெ
ழில்கள்செய்தார், (௱௫௯)

பாடுதமிழகத்தினர்கள் பதியதன்கணுயர்நீதி பதியேயாக, நீ
டுநடுநீதியினி லிம்மியுயே வழுவாமனெறியினின்று, நாடுதுரந்தார்
களையுந் தழுவியவ ணோரமின்றி நயந்துசொல்லக், கூடுவழக்கறுத்
தருமைத் தீர்ப்பளித்து நெடுங்காலங் குலவியுற்றான், (௱௬0)

அண்ணலினித் தலைநகர்க்குத் தான்றுரையாய்ச்சேறுமென
வறிந்தவன்றே, வண்ணமுளவன்னியர்க ளுயர்ஞானவாதியர்கண்
மற்றுமுள்ளோர், பண்ணமையவலங்கரித்த பந்தரிடைப்பத்தினி
யார் பாங்கினெய்தக், கண்ணியமாயழைத்திருத்திக் கானவிசையி
னிதிசைக்கக் காட்சிசெய்தே, (௱௬௧)

கற்றுவல்லவறிஞருடன் வன்னியர்க டுரந்தரர்கள் கருதித்
தம்மூர்க், குற்றசுகஞ் சீர்திருத்தமுதலியதுந் தம்முடனேயுவந்து
நித்தஞ், சுற்றமெனக்கலந்துநகை தந்துரைகளாடியதுந் துரை
தன்சீர்த்தி, பெற்றபெருங் குணத்துயர்வும் பாராட்டிப்படித்தன
ராற்பெரிதுமங்கண், (௱௬௨)

சிறந்தவவை தனக்குநடுநாயகமாய்த் தேவியுடன்றிகழ்ந்து
வைகு, மறந்திறம்பாத் துரையருணாசலக்குரிசி லாற்றவுந்தனகத்
திலன்பு, பிறந்தவையை மதித்தெழுந்து பெரிதுநன்றிபாராட்டிப்
பெரியீர்நீங்கள், மறந்திடுதற்கரிதாகக் கொண்டாடி யெங்களுளம்
மகிழச்செய்தீர், (௱௬௩)

இத்தகையகைம்மாறுகருதாதவியல்புடைய வியற்கைதம்மை
ச், சித்தமுறவாய்ந்துசெயுஞ் செயல்களினுட்செயற்கரிய செயல்க
ளென்ப, ரொத்தமனமுவந்துநெடு நாளிவணுமொருங்கிருந்த வுற
வையுன்னிச், சுத்தவுளமேவாதென் றெடுத்துரைத்தே யவைத
னக்குத்துதியுஞ்சொற்றான், (௱௬௪)

ஏற்றமுளவிலங்கைநகர்க் கிலங்குமொருகண்ணாக விமைக்கு
ங்காட்சித், தோற்றமுளதலைநகராய்த் தோன்றுதொன்மைக் கொ
ளும்பினுக்குத் துரையேயாக, மாற்றமுளசேரருணாசலப்பெரியோ
ன்வந்துமுனம் மனுநூற்சட்டஞ், சாற்றவரு முறைப்படியே வழ
க்காய்ந்து தீர்வைகளைத்தந்து வந்தான், (௱௬௫)

கூறுநகரொன்றுரைக்க நின்றநகரானநகர் கொளும்புநின்றும்
வேறுநகரிந்நகரை யத்திநகரென்றுரைப்பர் விளையுஞ்செந்நெ, லே
றுநகரிளங்கமுகு கன்னலிலாங்கலிகதலி யெங்குமன்னி, மாறுநக
ரிதுகுருநாக்கல்லு நகரிந்நகர்க்கு மாறிவந்தான், (௱௬௬)

மண்டலத்துத் துரையாகத்தகும் ராசபுத்திகளான் மாண்பு
பெற்ற, விண்டலத்திலெழுஞ்சீர்த்தி விளங்கருணாசலவேந்தல் விரு
ம்புமீழ, மண்டலத்து நகரினென்றாய்த்திகழ்குருநாக்கல்லிருந்து
வழக்கினுள்ள, வெண்டலத்தினுண்மை கண்டேகோடாமற்றீர்ப்பு
களை யெளிதிற்செய்யும், (௱௬௭)



செகம்வெறுத்தோ னருளபரானந்தகுரு ஞானநிட்டைதிருந்
தப்பெற்றோ, னகம்வெறுக்கை தருநகர்க்கட்டன்னுடனே யினி
திருத்திஞானநிட்டை, யிகம்வெறுக்கப் பயின்றுவரு நாட்களிலே
யாங்கிலத்திலிணைமற்றின்றி, யகம்வெறுக்கக்கற்றபெரும் புலமை
யுள்ளோ னிவனறிவை யளக்கவற்றோ, (௱௬௮)

சொற்றவிவனங்கிலனே துலங்கிய காப்பென்றரிவண்டுகடீர்
ஞானம், பற்றகலவரும்யோக சாத்திரங்களையுமறப்பயில வந்தான்
மற்றவரிற்றேசிகர்க்குத் தனித்தமிழும் புலவனுக்கு வழக்கமுள்ள
வற்றமகலாங்கிலமும் போமதனூற் றடையாத லறிந்தவையன், (௱௬௯)

இவ்விருவர்க்கிடையாகநின்றிரண்டுபாடைகளையிருவர்கட்கு,
மவ்வியமற்றரும் பொருள்கள் பிறழாமலவ்விதமே யரிதிற் செப்பி,
வெவ்வியதம் மனத்தமையத் தேற்றியுமேற்றானுமதி விளக்கமெய்
திச், செவ்விய யோகத்துடனே யுயர்ஞான நிலையினுந்தான் றிருந்
தப்பெற்றான், (௱௭௰)

வீடுபெறற்குதவுகுருவாங்கிலத்திற் புலமைதனின் மேன்மை
யுள்ளோன், றேடுபெருந்துணையான விருவரையுந் தன்னுடனே
சேரவைத்து, நீடுபெருந்தகுதியுள பத்திரநிவேசகராய் நியமம்பெ
ற்றே, யீடுபெற விலங்கைநகர்த் தலைநகராங்கொளும்புநக ரெய்தி
யுற்றான். (௱௭௧)

---

## இந்தியக் காட்சி.

துரைத்தனமேற்றுரையமர்ந்தே தொழினடத்திவருநாளிற்
றரைத்தனநேர் பம்பைமுதற்றகுநகர்கடலங்களென்ன
வுரைத்தபல காட்சிகளை யுலவியொருகாற்பார்க்க
விரைத்தவுள மேற்பயண வேட்கையெழுந் தெழுந்தனனே, (௱௭௨)

8

காட்டுதொழிற்கையாளர் கையாகக்கையகலாத்
தோட்டுவிழித்தோகையுடன் றுரையருணாசலக்குரிசி
லோட்டுமாக்கலமிவர்ந்தே யூர்ந்துதுறைகண்டிழிந்து
கூட்டுதனத்துயர்ந்தபம்பைக் குலவுகரைதானணைய, (௱௭௩)

முன்வருகையதுதெரியு மூதறிஞானசிலர்
பின்வருகையின்றெனவேபெயர்ந்து துறைமுகத்தணையா
மின்வருகைகண்டலரும் விரிந்தமடற்கைதையென்னத்
தன்வருகைதனக்கெதிரே வரவேற்றுச்சாகையுய்த்தார், (௱௭௪)

தங்குமுயர் சாகைதருந் தண்ணியநீ ராடிமிகப்
பொங்குசுவை கொடுத்தமைத்த போனகங்களருந்தியபி
னெங்குமிசை பெறுந்தனத்தி லேறுமறிவதினுயர்ந்தே
யங்குவருமவர்களுட னளவளவி யமர்ந்தனனால், (௱௭௫)

பேர்படைத்தபம்பையெனும் பெருநகரமெங்குமுள
சீர்படைத்த வீதிகளைச் செல்வமனைச் சிறப்புகளைச்
சார்படைத்ததலங்கடமைத் தையலுடன் சென்றுசென்றே
கார்படைத்த வள்ளலிவன் கண்டு களிகூர்ந்திருந்தான், (௱௭௬)

மண்ணிலுள மண்டலமாய் வகுத்த வொன்றுக்கொருவனென்றே
யெண்ணிவருமரசர்பலர்க் கேற்றமுளபதவிபெற்றோன்
விண்ணினுயர் மாளிகையின் மேன்மையின ரெனவிருந்த
குண்ணியரைக் கூவியுயர் கொண்டாட்டமொன்றுவைத்தான், (௱௭௭)

தனத்துயர்ந்தோரறிவுயர்ந்தோர் தகுமாச சேவையுளோர்
கனத்துயர்ந்தோரறத்துயர்ந்தோர் கதித்தவதிகாரமுற்றோர்
மனத்துயர்ந்தோர் மதியுயர்ந்தோர் மரபுயர்ந்தோராகுமிந்தச்
சனத்துயர்ந்த மைந்தருடன் தையலருமவணமர்ந்தார், (௱௭௮)

தேவியருந் தானுமுடன் சோருணாசலந்துரையு
மேவியவணமர்ந்தளவின் மேன்மைபெறும் வேந்தர்பிரான்
காவியருங் கண்ணியரைக் கைகோத்துக் கனந்தருவான்
ரூவியருங்காரீட்டத் தையலொதுங்குற்றனளால், (௱௭௯)



வேந்ததிபன் சொர்னமின்னை வியந்து முகமாகவைத்தே
தாந்தனருந் தேவியர்க்குந் தையலர்க்குங் குறித்துரைத்தான்
போந்தகுலப் பெருமைதனைப் போற்றவளர் வளர்ச்சிதனை
யேந்திரிய வொழுக்கமதை யிவணார்க்கு மிலையெனவே, (௱௮0)

கற்றகலையளவான காட்சியுளகாவலனங்
குற்றசொர்னமாதொழுக்க வுயர்ச்சியெலாஞ்சொற்றதன்மே
லற்றமகலவ்வவைக்கணமர்ந்தவர்க ளெல்லோர்க்குங்
குற்றமிலதாகவெகுகொண்டாட்ட நடத்திவைத்தான், (௱௮௧)

மன்னனுடன்கொண்டாட்ட மதிப்பினுடனேந்தலிந்தப்
பன்னுபம்பைநகரநின்றும் பலநகருங்கண்டிடுவான்
றுன்னுமருட்கண்ணனமர் துவாரகையில்வந்திருந்தே
பின்னாதற்கப்பாலிற் பெயர்ந்தசராபாத்தணைந்தான், (௱௮௨)

தோற்றிலங்கைநின்றுமந்தத் துரையருணாசலக்குரிசி
லேற்றமுளநகரிதன்க ணெய்தினனென்றறிந்தவன்றே
யாற்றலுளவவ்வரசர்க் கரியமுதன்மந்திரிதான்
போற்றுநைசாவென்னுமிவன் போந்துபுகழ்ந்தளவினால், (௱௮௩)

மதித்தமைச்சன்போயினபின் மகிழ்ந்தசராபாத்திலுள
கதித்தபெருஞ்சீர்களெலாங் கண்டுகளிப்புற்றதன்மேற்
பதித்தனங்கள்பழவருக்கம் பல்குபங்களுரணைந்தே
விதித்தபலகாட்சிமுற்றும் விழிகளிக்கக்கண்டுசென்றான், (௱௮௪)

கன்னடர்கள்கொங்கமிது கதித்தபொருள்வாரிமிக்க
மன்னனுறுமாட்சிபெற்ற மைசூரென்றிவ்வூர்க்கண்
சொர்னமுடன்றோன்றலெய்தித் தூயபெருமக்களுட
னன்னவரசாண்மனைமற்றற்புதங்கள் கண்டிருந்தான், (௱௮௫)

சித்திதருமிந்தவடதேயமுள தலந்தீர்த்த
மத்திசைமேற்பணிந்தாடி யமையுமெனவங்குநின்று
மத்தனமர்தென்பாற் கண்ணருண்மயமாந்தலம்பணிவான்
சித்தமுடனண்ணலுயர் சென்னைநகர்வந்தனனால், (௱௮௬)

நகரமிதிலிருந்துசில நாளதன்மேற்றென்றிசைக்கண்
பகரவரும்பலதலமும் பத்தியுடன்பணியவந்து
நிகரமலியாலயங்க ணோர்காஞ்சிப்பதியிறைஞ்சிச்
சிகரமுயர்கோபுரஞ்சூழ் திருப்பதியுந்தொழுதனனே, (௱௮௭)

சேயுருவாய்விருத்தனுமாய்த் திண்ணியநற்குமாரனுமாய்த்
தாயுருவாய்வருமமலன் றலைமயங்கியொருகாலம்
போயுருவாய்க்கீழொடுமேல் போதனுடன்மால்காணத்
தீயுருவாய்நின்றருளுந் திருவருணைப்பதிபணிந்தான், (௱௮௮)

அப்பதியினுமமுளவண்ணலரு ளங்குபெற்றே
யொப்பரியவைந்தொழிலை யொருகூத்தென்றுலகுரைப்பச்
செப்பருமைத்திருநடஞ்செய் சிதம்பரத்தைத்தேடிவந்தான்
றப்பரியதாயிடத்திற் றவித்துவருங்கன்றெனவே, (௱௮௯)

தீர்த்திகையிற்படிந்துதுய்ய திருநீறுதான்றரித்தே
யார்த்தியுளவைந்தெழுத்தை யாதரித்துச்சென்றுருகிப்
பார்த்திறைஞ்சியவன்வசமாய்ப் பதந்தூக்கிநடநவிலு
மூர்த்திதிருவருட்கடலுண் மூழ்கியெழுந்திட்டனனே, (௱௯௦)

கோலமுளதிருவாய்தற் கோபுரமுந்தான்றொழுது
சீலமுளவப்பதிமேற் சிலதினங்களிருந்திறைஞ்சி
யாலமுளகண்டனமரிய பலபதிபணிவான்
காலமுள சீகாளி கண்டுபணிந்தேகினனே, (௱௯௧)

புள்ளிருக்குவேளூரிற் பூவையுடன்பொற்பினுட
னள்ளிருக்கும்பெருமானை நயந்திறைஞ்சியேத்தியையன்
கள்ளிருக்குங்குழன்மடவார் கதித்ததிருவிடைமருது
ருள்ளிருக்குநாதனையு முவந்துபணிந்தேகினனே, (௱௯௨)

மாட்சிபெறுமதிற்சிறப்பார் மாமதுரைப்பதியமர்மீ
னாட்சியுடனயலிலிருந் தருள்சோமசுந்தரனைச்
சாட்சிதரும்பொற்கமலத் தடம்பணிந்துநீறணிந்து
காட்சிபெறுந்துதிகுளறிக் கைதொழுதுதானகன்றான், (௱௯௩)



இங்கிருந்துசிலதினங்க ளிளங்கொடியாளுடனெழுந்தே
கொங்கிருந்தமலர்த்தாரான் குழைகிழிக்குங்கண்ணியொரு
பங்கிருந்தகண்ணுதலைப் பதியவுளத்தமைத்தலைவாய்ச்
சங்கிருந்தகடறுவித் தனிக்கொளும்புவந்தமர்ந்தான். (௱௯௪)

---

## திரிகோணாசலமென வழங்கும் தக்ஷண கயிலாயம் சைவர்க்கெனல்.

சிந்தமாருதன் வீசிய மேருவின் சிகர
முந்தமூன்றுமே யுரைத்த காளத்தியா வதுவோ
டந்தமேற் றிரிசிராவுடன் கோணமா வசல
மிந்தமூன்றையுந் தக்கிண கயிலையென் றிசைத்தார், (௱௯௫)

அடுத்த தாய்தனக் ககத்தில்வைத்தருச்சி யென்றறைந்தே
மடுத்த வென்றிசேர் தொல்லிலங்காபதி வலியோன்
கடுத்த தன்வலி காட்டினன் கருதிலன்கடிதி
னெடுத்த தென்பெருங் கயிலையென் றிருப்பதுமிதுவே, (௱௯௬

ஞானவம்பிகை யஞ்சினடி டுக்கிட்டு மயங்க
வானவெற்பினை யூன்றின னசுங்கிய வரக்கன்
மேனவங்கத்தால் வீணையொன் றமைத்தனன் மீட்கக்
கானமார்ந்தா னவற்கருள் செய்ததிக் கயிலை, (௱௯௭)

ஆயவப்பரும் புகலியர் கோனென வமரு
நாயனாரு முன்னருட் டிருப்பதிகங் கணவிலா
மேயவன்பினாற் போற்றின னெனினது வியப்போ
வேயதெக்கண கயிலையென் றிலங்கிய விதற்கே, (௱௯௮)

வந்துவீசிய கொடுமுடி மூன்றினுள் வகுத்தே
முந்துகூறிய கயிலைக டரைமிசை முயங்க
சிந்து மொன்றதே யாகியவிப் பெருஞ்சிகர
மிந்து வென்றிடுஞ் சலதியுள் வீழ்ந்திருந்திலைக்கும், (௱௯௯)

இந்த வெற்பினைத் தொழுதுளார் பவமெலாமேகு
முந்தநாள் வருமங்கில ரறிவரோ முறைகள்
வந்தசை வரைப்பூசைகள் செயாவகை மறிப்பா
ரந்தவீகளு மறியுமோ லிங்கத்தி னருமை, (௪௦௦)

வேதமாதிய நூலெலாந் தனித்தனி விதித்தே
யோதநிற்புறு மகண்டித முதல்வனை யுளமே
லேதமின்றிநாம் பணிவதைத் தடுத்திடு மிவர்கள்
பாதகந் தனக்கென்செய்வ தென்றிவர் பரிந்தார், (௪௦௧)

**வேறு**

மனையதெங்கும் வயங்கமலையின்மேற்
றுனையவாற்றினர் தொக்கனரங்கிவர்
வினையதுன்னுவர் விட்டிடல்செய்திடா
ரினையபெற்றிக்கினிச் செயலென்னென்றே, (௪௦௨)

இன்னவேலைக் கினியருணாசல
மன்னனன்றி வலிந்தெவர்செய்பவ
ரென்னவெண்ணின ரெய்தினரையன்பா
லன்னயாவுமவற்கு முறையிட்டார், (௪௦௩)

எயிலைமுன்ன மெரித்தவிறையவன்
மயிலையொத்த மடந்தையொடுற்றிடுங்
கயிலைதன்னையுங் காவற்படுத்தினாற்
றுயிலைமேவவுந் துய்க்கவுமொண்ணுமோ, (௪௦௪)

கொற்றமுள்ளவன் கோன்குளக்கோடணாற்
சொற்றபூசைத் தொழின்முறைமுந்தைநா
ளற்றதாகவருச் சனைக்கிந்தநா
ளூற்றதீதென வுத்தமற்கோதினார், (௪௦௫)

**வேறு**

என்றன ரென்னுமுன்ன மிருசெவி யூடுதீக்கோல்
சென்றெனப் பதைத்தேயெங்க டென்பெருங் கயிலைநாதற்
கின்றிதோ வருவதென்றே யெண்ணின னுயிர்த்துப்பின்ன
ரன்றவர் தம்மைத்தேற்றி யதற்குமே விதனைச்செய்வான், (௪௦௬)

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.



லேடி அருணாசலம்.



எந்நா ளிலங்கையென்றே யேற்றதோ வாயுங்காலை
யந்நா ளினுக்குமுன்னே யாரம்பங் கயிலைவெற்பு
முந்நா ணடந்தபூசை முறைமைகள் வழுவிவேந்தே
யிந்நா ளேதுமில்லா திருப்பது தருமந்தானோ, (௪௦௭)

சாதகமாகவந்த சமயத்து விரோத மொன்றோ
தோதக மானராச துரோகமு மாகுமன்றோ
பாதக மென்பதிதே பாணிக்கா தின்றுதானே
நீதகநாடிப்பூசை நெறிப்படி நடத்தச் செய்வாய், (௪௦௮)

நலம்பெற வினையவாறே நாடுதென் கயிலையான
தலம்பெறு மகிமைகாட்டித் தட்பமுஞ் சூடுங்காட்டி
நிலம்பெறு மிலங்கைத்தேச வதிபற்கு நேர்மையாக
வலம்பெற வேண்டித்தோன்றல் வரையுமேற் றவறுமோதான், (௪௦௯)

மாற்றவே யரிதாய்விட்ட விண்ணப்ப வாசகத்தைத்
தேற்றமே யாகவன்றே தேசமா ளதிபன்பாரா
போற்றவே றுவமையாகாப் புண்ணியத் தலமென்றுன்னு
தாற்றவே தீங்குநாட லரசினுக் கடாதென்றோர்ந்தே, (௪௧௦)

தந்தபே ரருளான்மிக்க தக்கிண கயிலைப்பூசை
யந்நா ளிருந்தவாறே யாற்றவுந் தொழவுமின்று
மெந்நா ளினுந்தானேது மிடர்வாரா வகையுஞ்செய்தா
னிந்நா ளண்ணல்செய்த விதுசெயற் கரியதொன்றே. (௪௧௧)

---

## மனைமாட்சி.

நல்லறமிரண்டாமென்றும் ஞாலமேன்மனுக்கட்கென்றுஞ்
சொல்லறமவற்றுளொன்று துறவறம்வீடுநல்கும்
பல்லறமானவெல்லாம் பண்புடனாற்றற்கொத்த
வில்லறமொன்றுதானே யிருமையுமின்பநல்கும், (௪௧௨)

போற்றருமிருமைப்பேறும் போதவேதருதலாலே
யேற்றநல்லறமாமிந்த வில்லறமென்றுதானே
மாற்றமென்சனகன்மற்றை வள்ளுவன்வசிட்டனின்னோர்
சாற்றருந்தவங்கள்செய்தார் தையன்மாரோடுமொன்றி, (௪௧௩)

புண்ணியப்பேறும்வேண்டும் போற்றியகற்பும்வேண்டுந்
தண்ணியகுணமும்வேண்டுந் தருமமும்வேண்டுங்கண்போற்
கண்ணியகலையும்வேண்டுங் கவினுந்தான்வேண்டுமிந்த
வெண்ணியமாதராயி னில்லறஞ்சிறந்துமன்னும், (௪௧௪)

துய்யவள்கணவனன்றித் தொழுதிடாவிரதமாது
பெய்யெனமாரிபெய்யும் பெருநிலமிவளைப்போற்றும்
வெய்யதீயவியுமல்லும் விடிகிலாதிருக்குமிந்தச்
செய்யவடன்னைநாடித் தெய்வமுமேவல்செய்யும், (௪௧௫)

திருந்தவிப்புவியிலுள்ள தேயங்கடோறுந்தோறும்
வருந்தவந்துதித்துப்பின்னு மாண்புளமக்களாகப்
பெருந்தவத்தேறியேறும் பிறவிகடோறுஞ்செய்த
வருந்தவத்தவர்க்கே யிந்த வாயிழையணைவளம்மா, (௪௧௬)

குலந்தனிற்சொர்னம் ஞானங்கொடுக்குநற்கல்வியாலே
நிலந்தனிற்சொர்னமின்னு நிலவுமில்லறஞ்செய்தற்குத்
தலந்தனிற்சொர்னம்மற்றைத் தையலார்தமக்குள்ரூப
நலந்தனிற்சொர்னஞ்சொற்ற நாமமுஞ்சொர்னந்தானே, (௪௧௭)

வானிலத்தவர்கட்காக வனசமேன்மகளைத்தந்தே
மாநிலத்தவர்க்குமிங்கோர் மாமகள்வேண்டுமென்றோ
மேனிலமுற்றவேதன் விதித்திடுமிந்தமாது
கானிலந்தோயத்தோன்றுங் கமலைதானுவளன்றே, (௪௧௮)

கூறிடுங்கலையைத்தேசு குலந்தனைக்குணமேசொல்லும்
பேறிடுஞ்செல்வந்தானே பெருந்தவமுரைக்குஞ்சீரை
யேறிடுமொழுக்கஞ்செப்பு மிவைகள்கண்கூடேயான
தேறிடுமிவளைமண்மேற் றெய்வமாதென்னலாமே, (௪௧௯)



வாவிக்கண்புறம்பு செல்லாவாசுகி கணவன்றொண்டிற்
றுவிக்கண்டுஞ்சலில்லாத் தனியன சூயையாதிப்
பாவிக்கவருமின்னோர் நேர்பத்தினி யென்றேயாருஞ்
சேவிக்கப்பிறந்த கற்பிற் றெரிவையென் றியம்பலாமே, (௪௨0)

தன்றனைக்காத்தன் மற்றைத்தகுதிசேர் சொல்லைக்காத்தன்
மன்றனைக்காத்தலென்னு மூன்றையும் வழாமற்காத்த
மின்றனைப்பெண்ணே யென்னப்பேசும் பெண்ணிவளேயம்ம
வொன்றனைத்தானுங்காக்க வொண்ணுமோபூவையர்க்கே, (௪௨௧)

நண்ணியவைந்தேயான நாயகன் பணியைநாளும்
பண்ணியவருதலாலே பாவையர் திலகமீதோ
தண்ணிய வறத்தை நோன்பைத்தானனி காத்துத்தன்சீர்க்
கண்ணிய கணவனுர்க்குங் காட்டியவிரதமாது, (௪௨௨)

தென்னனன் மதியைப்பெற்ற சோருணாசலம்பா
லுன்னவிங்கழகுவாய்ந்த வுலகினின் மகளிர்யார்க்கு
மின்னலினழுந்தக்காட்டு மிலக்கணமாகத் தோன்றுஞ்
சொர்னமின்றுணைவியானுடொல்லை நாட்டவமேயன்றோ, (௪௨௩)

சொன்னநூற் கலைகளாய்ந்த தூயவனறிவின்மிக்கோ
னுன்னமாசிலாத நல்லவொழுக்கத்தா னுவமையில்லோன்
மன்னவரமைச்சேயாகி வருமருணாசலப்பே
ரின்னவன் கணவனான திந்தமான்றவமேயன்றோ, (௪௨௪)

இன்னநல்லணங்கன்னாளு மேந்தலு முலகங்கூற
வுன்னருமுயிரினோடு முள்ளமுஞ் செயலுமொன்றாய்ப்
பொன்னவிர் மனையின்மேவிப் புந்திமேலபேதமின்றி
மன்னவில்லறங்கள் செய்தே மலர்மணம்போலவுற்றார், (௪௨௫)

வல்லினைப்பழித்துவீங்கி வளர்முலையணங்கன்னாளை
யில்லினுக்குரிமையாலே யில்லவளென்றுசொன்ன
சொல்லினுக்கிலக்கேயான சொர்னமாணிருகையாலு
மல்லினுக்கிந்துவென்ன வம்மனைத்தருமஞ்செய்வாள், (௪௨௬)

கதித்ததன்கணவற்போற்றிக் கதிரெழுமுன்னெழுந்தே
விதித்தவிற்கருமம்யாவும் விதம்விதமாகச்செய்யா
துதித்திடவுலகந்தன்னைத் தூயநல்லொழுக்கினலே
மதித்தவள்ளுவனர்தேவி வாசுகிநிகர்ப்பளம்மா, (௪௨௭

ஆதுலர்க்கன்னமீயு மறவர்கடம்மைப்பேணு
மோதுநற்சிறுவர்கற்க வுறுபொருளுவந்துநல்குந்
தீதுவந்தடுத்தநோய்க்குத் தீர்மருந்துதவுவிக்கு
மாதுகூர்கன்னிமார்க்கு மன்றல்களியற்றிவைக்கும், (௪௨௮)

குற்றமற்றிலங்குந்தங்கள் குலத்துளோர்க்குதவிநிற்கு
மற்றமாமகத்துகட்கு மடங்களாலயங்களாக்கு
முற்றதம்நாட்டுக்காக வுயருபகாரியாகுங்
கற்றவர்க்கிருகை யுள்ள கற்பகம்போலநல்கும், (௪௨௯)

வந்தவர்க்கமுதமூட்டி வருவிருந்தூட்டாநிற்குஞ்
சந்ததங்கற்றோர்க்கூவிச் சாத்திரம்படிக்கவைக்கு
நொந்துதம்முடம்பைவாட்டி நோன்புகள்காத்துமன்னுஞ்
சிந்தைமேனேயந்தூண்டச் சிவாலயசேவைசெய்யும், (௪௩௦)

திருவுளகலைகளுள்ள சிவத்துவஞானமுள்ள
வுருவுள வுருவச்சொர்ன வுத்தமத்தேவியானுள்
கருவுளவுயிர்கண்மீதே கண்ணோட்டமோடவோட
மருவுளமகிழாவின்ன தருமங்கள் வழாமற்செய்வாள், (௪௩௧)

கொக்கனைஞெண்டுகொக்குங் குளவயன்மாதரேங்க
மிக்கனைகடையுமோதை விறற்புலிமுழக்கங்காட்டு
மிக்கனையிலங்கையேந்தற் கிவைகளில்லணிகளேனு
மக்களைமாட்சிபெற்ற மணிக்கணிகலங்களென்பர். (௪௩௨).

---

## மக்கட்பேறு.

தம்மைவாட்டுந் தவந்தருமங்கொடை
வெம்மைநோன்பு விரும்பினர்செய்துமென்
செம்மை மக்கடிகழ் முகம்பார்த்திடார்க்
கிம்மைதன்னினு மின்பமொன்றில்லையே, (௪௩௩)



மருளகற்றியமாண் வினைசெய்துமே
லிருளகற்றியிருங்கதி சேர்த்தலா
லருளதோடு மளித்தவர்தங்கட்குப்
பொருளதாயுளர் புத்திரர்தாமன்றே, (௪௩௪)

பார்கொண்மாந்தருட் பண்ணுந்தவமுடைப்
பேர்கொண்மக்கட்குப் பெற்றிடநல்கிய
வேர்கொண்டோங்குமோ ரெண்வகைத்தாகிய
சீர்கொள்செல்வத்துட் செல்வநன்மக்களே, (௪௩௫)

பொன்னிலந்தனைப் போலும்பொற்பேறிய
தென்னிலங்கையிற் சோருணசல
மன்னிலந்தொழு மக்கட்சிறப்பையும்
பின்னிலங்கை பெறுந்தவம்பெற்றனன், (௪௩௬)

பேறதாகப்பெறும் பொருள்பற்பல
கூறநின்றனவாயினுங் கூறுங்கா
லேறநல்லறிவேறிய மக்களின்
பேறதேபெறும் பேறெனச்சொல்வரால், (௪௩௭)

## வேறு

நேர்நிறுத்தி யரசியலை நிலைநிறுத்திக் கலாசாலைச்
சீர்நிறுத்தித் தனதுருவச் சிலைநிறுத்தி யநாதை தர்மச்
சார்நிறுத்தித் தருமருணசலந் தகுதிதகுதியென்னப்
பேர்நிறுத்தி வைத்துவரிற் பேசுவதென் மக்களையே, (௪௩௮)

முந்தையுள கலைக்கடலுண் மூழ்கியெழும் போறிஞன்
சிந்தைதனி லேழைகளிற் றிருநாட்டிற் றியானமதே
சந்ததமு முளனருணசல வேளென்றெடுத்துரைக்குந்
தந்தையருந் தகுதியனேற் சாற்றுவதென் மக்களையே, (௪௩௯)

பொற்பமையப் பிறந்தகுடி புகுந்தகுடி யிரண்டினுக்கு
மிற்பழிகணோராம லிரும்புகழை வளர்க்குமம்மை
கற்பதெனு மிலக்கணத்திற் கிலக்கியமாங் கவினழகி
யற்பகலுந் தவிராம லாற்றிவருந் தருமவதி, (௪௪௦)

பூதேவியுளமயங்கப் புவிபோற்றிவரும் வடமீன்
மாதேவி யொளிமழுங்க மாநிலத்தோர் மதித்தெடுத்தே
நீதேவியென்றேத்த நின்றதனிச் சீமாட்டிச்
சீதேவி சொர்னமெனிற் செப்புவதென் மக்களையே, (௪௪௧)

பாருலவுஞ் சாதிகளுட் பதுமினியே சாதியெனி
னேருலவும் வாணியெனி னிந்திரையுமாகுமெனிற்
பேருலவுஞ் சொர்னமெனிற் பெருமாட்டி பெற்றெடுக்குஞ்
சீருலவு மக்களையுஞ் செப்பிடலாஞ் சொர்னமென்றே, (௪௪௨)

வேறு

நவமுன்னேத்துமிந் நம்பிக்கு நங்கைக்குஞ்
சிவமுன்னீந்தருள் செல்வர்புவிமிசைப்
பவமுன்னெய்தற்குக் காரணப்பாங்குறத்
தவமுஞ்செய்யுந் தவமெனிற்சொல்வதென், (௪௪௩)

ஈன்றவிந்த விருவர்தகுதிக்குஞ்
சான்றதாமெனத் தாரணியேத்துற
வான்றகல்வி யறிவுளமக்களின்
றோன்றுதோற்றமுஞ் சொல்லுவன்கேண்மினோ, (௪௪௪)

வேறு

மந்திரசபைக்குப்பின்னாண் மந்திரியாதற்கொத்தோன்
தந்திரத்தொகுதியாவுந் தனித்தனியாயவல்லோன்
சந்திரகலைபோலோங்கத் தாதையையேற்றிவைப்போ
னிந்திரரூபமுள்ளோ னிவன்பெயர்பதுமநாபன், (௪௪௫)

சேட்டனாமிவற்குத்தம்பி தேவனேயனையநீரா
னாட்டமாமமைச்சேயாவோ னவையகலவர்க்கோநல்லன்
கோட்டமில்குணங்களுள்ளோன் கோவுக்குங்கோவேயாவோ
னீட்டமாமின்னோர்க்கன்ப னிவன்மகாதேவனம்மா, (௪௪௬)

சொல்லியவிவற்குத்தங்கை தோகையர்திலகங்கற்ற
கல்வியாற்சித்திபெற்றே கதித்தபோறிவான்மிக்காள்
மெல்லியலொழுக்கந்தன்னான் மேதினியேத்துமிந்த
வல்லியலழகிதானே மகேஸ்வரியாகுமம்மா, (௪௪௭)



நேரியதங்கைகற்பா னோர்வடமீனுமொவ்வாள்
சீரியவொழுக்கந்தானோ சித்திரப்பாவைநேருங்
காரியலழகபந்திக் கட்டழகுடையளிந்த
வாரியன்முலையினாளே மனோன்மணியாகுமம்மா, (௪௪௮)

இன்னவடனதுதங்கை யிமையவராம்பையொப்பா
டன்னலவணிகளென்னத் தகும்பொறையொழுக்கமுள்ளா
ளென்னலந்தானுமுள்ள வேந்திழையிவளைத்தானே
வன்னமாநிலத்திற் பத்மாவதியெனப்பகர்வர்நாமம், (௪௪௯)

தழையவிழ்மலர்மென்கூந்தற் றையலுக்கிளையநங்கை
யுழையிசைமொழியாளோங்கு மொழுக்கமேயுருவமானாள்
விளைவுகூரழகியென்றும் வித்தைகள்வளர்க்கநிற்பா
ளிளையவடன்னையொப்பா ளிவள்சிவானந்தவல்லி, (௪௫௦)

திண்ணியனிவட்குத்தம்பி திருவிராமேச்சுரத்துப்
புண்ணியன்வரத்தினாலே புவிமிசைப்பிறந்தசெம்மல்
கண்ணியன்றனங்களுள்ளோன் காவலர்க்கமைச்சுமாவோ
னெண்ணியகலையில்வல்லோ னிவன்பெயர்ராமநாதன், (௪௫௧)

மாற்றருமொழுக்கந்தன்னால் வனப்பினாலவனிமீதி
லேற்றமாம் வசிட்டன்றேவி யிந்திரைநிகரேயாகுஞ்
சாற்றருங் குணங்களாலே தாரணியோர்துதிக்கத்தோன்றுந்
தோற்றமாமிளையமாது சுந்தரேஸ்வரியேநாமம், (௪௫௨)

சீமகாதேவனென்னச் சோருணாசலப்பேர்ப்
பூமகாதேவனுக்குப் போதுமென்றுவகைதேங்க
மாமகாதேவனிந்த மாபெருங்குணங்கள்சான்ற
நாமகாதேவனுக்கு நாமமுமிதுவேசாலும், (௪௫௩)

சீர்பெறுங் குணங்கள் யாவுந்திரண்ட வோருருவமானோ
னேர்பெறுந் தாதையொத்தே நெறியன்றி மறங்களில்லோன்
சார்பெறுஞ் சனங்கள்மீதே தண்ணளி மிகவுமுள்ளோ
னேர்பெறு மமைச்சனாகி யிலங்கையைப் போற்றவந்தோன், (௪௫௪)

பேசருமமைச்சர் தோற்றும் பெருங்குலம்விளக்குஞ்செம்மல்
வாசமேயாகச்சங்க மன்னரை யிடிக்குந்தோன்ற
னேசநாளசொடென்றே நின்றுயிர்க் குதவிசெய்வோன்
றேசவூழியத்துக்கென்றே தேசமேற்பிறந்ததேவன், (௪௫௫)

காதலானயோத்திவேந்தன் கடியவற்கோறும்பாவம்
போதனுணிறுத்திப்போற்றும் புண்ணியன்வரத்தைவேண்டித்
தாதனுமண்ணல்பெற்ற தருமகனந்தராம
நாதனூர்நாமமான நாமமோராமநாதன், (௪௫௬)

அங்கிலந்தமிழிலாழ்ந்த வறிவினின் ஞாயவாதிற்
சங்கங்கட்கங்கமான தகுதியினரசர் செய்யுந்
துங்கநன் மதிப்பிற் சூழ்ச்சித் துணைவனுங் கதிப்பிற்றேசி
னிங்கிதன் ராமநாத னியம்பிய வெவைக்கு நாதன், (௪௫௭)

சாற்றிய விலங்கைமாதின் ருயருணசலம்போ
லாற்றவே யழகுவாய்ந்தவறு வுருவமைந்த செம்ம
ரேற்றிய பயனேயான தொல்புகழ்க்குரிசிலின்னே
னேற்றமா மீழநாட்டிற்கெய்துவ னமைச்சாய்ப் பின்னுள், (௪௫௮)

அங்கிலாமைச்சர் நால்வராசிய திருத்தற்காக
விங்கிலந்திருந்து வந்தே யிவணனி தாங்களெண்ணிச்
சிங்களர்க்கேற்ற முன்னத்திற லுடனெதிர்ந்து நின்றே
சங்கமேல் வாதுசெய்யாத் தமிழரை யுயர்த்துமேந்தல், (௪௫௯)

ஆர்தரச் சங்கங்கூட்டு மந்தக் கல்லூரிதன்னி
னோர்தரத் தலையாய் நின்றே லோக்கலை நெறிகள் செய்யாச்
சீர்தரநிறு விவைத்துச் சேர்ந்த தன் குலத்திஞேருட்
பேர்தர லோயனென்றே பெரும்புகழ் பெற்ற மன்னன், (௪௬0)

இருங்குணமுடையனென்ன யாவர்க்குமேற்கவந்த
வருங்குணம்படைத்தசெல்வ வாண்மக்கள்போதுங்கொல்லோ
தருங்குணமானவெல்லாந் தனித்தனியமையப்பெற்ற
பெருங்குணம்படைத்தவிந்தப் பெண்மக்கள்சிறப்பேசெல்வம், (௪௬௧)



அயிலினைக் கண்களொக்குமவிர்மதி முகங்களொக்குங்
குயிலினையோசையொக்குங் குழல்களைக்கார்களொக்கு
மயிலினைச்சாயலொக்கு மழலைகள்கிள்ளையொக்குந்
தொயிலினையெழுதுங்கொங்கைத் தோகையராம்பையொப்பார், (௪௬௨)

கற்புக்குமொழுக்கங்காட்டிக் கற்பிக்குமொழுக்கமுள்ளோர்
பொற்புக்குமழகுகாட்டிப் பூமகட்குறுகண்செய்வோ
ரற்புக்குமீன்றோர்தம்மை யணைந்துகைதொழுதுநிற்போர்
வெற்புக்குமுயர்ச்சிகுன்ற மேலுயர்குணங்கள்சான்றோர், (௪௬௩)

ஒருமைசேரின்பந்தானு முதவுதலரிதேயாக
வருமைசோறத்தின்பேற்று லரிதுபெற்றெடுத்தோர்தத்தம்
பெருமைசேர்தகுதியாவும் பேருலகறியநாட்டி
யிருமைசேரின்பமீந்தோரிம்மகார் தாமேயன்றே, (௪௬௪)

தரைசெய்ததவமென்கேனே தருமருணசலப்பேர்த்
துரைசெய்ததவமென்கேனே சொர்னமான்றவமென்கேனே
வுரைசெய்தவிலங்கைமேலிவ் வுத்தமனறத்தின்பேற்றால்
வரைசெய்தமக்கட்பேற்றை மானுமோமக்கட்பேறே, (௪௬௫)

மண்மணிவிளங்குஞ்செய்ய மாமணியமையுங்கொல்லோ
கண்மணியாகவிந்தக் காவலற்கமலன்றந்த
பெண்மணிமார்களோடு பெருமகன்மாருமான
வெண்மணிவதுவைமேலே யியம்பவென்றிங்குக்கூறேன். (௪௬௬)

---

## சாதனச் செனறலாய் வருதல்.

சொற்றமுறை தவறாத வுயர் நீதியதிபதியாந் துரையேயாக, வுற்றவிவனுயர்வுதனை யுண்மைதனைமதியூக வூக்கந்தன்னைப், பெற்றபெரும் பேறுகளைப் பெரிது முன்னியினி யிவற்குப் பெறும் பேறென்னுப், பற்றகலா தமைய வைத்தான் பத்திர நிவேசகராம் பதத்தை மன்னன், (௪௬௭)

சீரிலங்கைக் கினியருணாசலந்துரையே சாதனத்துச் சென்ற
லென்ற, பேரிலங்கை யெழுந்தளவிற் படஞ்சுருக்கு மரவினம்
போற் பெரிதுமஞ்சி, வாரிலங்கை நாடுதொறு நகர்கடொறுஞ்
சாதனங்கள் வரைதற் கொத்த, நீரிலங்கையாளர் நெஞ்சங் கலங்
கினராலினியவதி நேருமென்றே, (௪௬௮)

தோன்றுமனமிரங்கவருந் தனது பக்கங் குற்றமென்று தொ
ழுதுதன்னை, யேன்றுபணிவோர்களது பக்கமின்னுஞ் சட்டநெறி
யியம்புகின்ற, வான்றுவரும் பக்கமொன்று மாகவிவணமையுமென
வறையநின்ற, மூன்றுபக்கமுளதேனுஞ் சட்டநின்றபக்கநின்றே
முடிவு செய்யும், (௪௬௯)

சீதனங்கண் முதுசொமுட னறுதிபெறலாட்சியெனச்செப்ப
வந்த, வாதனங்க ளவரவர்க்கே யமைந்தவென வடியிலுளோ
ரமைத்துவைத்த, சாதனங்களேயவற்றை வரையுமதிகாரமுளோர்
தங்கள்கைக்குண், மாதனங்கடருமவர்க்கே மாறியகைச் சாத்து
மிட்டு வரைவர் கண்டீர், (௪௭௦)

மாதமுடன்றேதிகளை யாண்டுகளைப் பின்முன்னாய் மாறிலஞ்
சம், வாதமதில் வருமெனவும் வரும்பொருண் முன்னுள பொரு
ளும் வாங்கிமிக்க, வேதநனிதருமதுவுங் கருதுகிலர் வாங்கிவஞ்ச
மெழுதுகிற்பர், போதமிவர் தமக்கிருந்தும் பொருளாசை யிருந்
திடுமேற்புலனை வெல்லும், (௪௭௧)

பட்டடையிலடுக்கு பழஞ்சாதனத்திலுள பிழைகள் பார்ப்பர்
சில்லோர், சட்டமுறை மேலுமிலக்கண முறைகள் வழுவுமெனச்
சலிப்பர் சில்லோர், திட்டமுறவாண்டுமதி தேதிகளைத்திருத்திடுதல்
செய்வர் சில்லோ, ரிட்டமுள வேலைகளுக் கென்வருமோ வென
மறுகியிளைப்பர் சில்லோர், (௪௭௨)

இன்னமதி யித்தேதி வருமெனவு மறியேமென்றிருப்பர் சில்
லோர், மன்னனிவன் கற்றவன்கா ணஞ்சாம னிற்குமென மதிப்
பர் சில்லோர், பன்னுவதென்னார் முகமும் பாராமலெதிர்க்குமெ
னப்பகர்வர் சில்லோ, ருன்னுவதென்னினி நோய்வரைகுவதே
யுத்தமமென்றுரைப்பர் சில்லோர், (௪௭௩)



குடிப்படியே வைத்திலங்கைக் குதவுமுபகாரமெலாங் குறை
வின்றாக்கிப், படிப்படியே மந்திரியாம் பதவிபெற்றுப் பார்த்திபற்
குப்பார்வையொத்தே, யடிப்படியே வருமருணாசலக்குரிசிலொரு
நீதியதிபனென்றான், முடிப்படியே வருமிதனையாரறியாரெடுத்தெ
டுத்துமொழிவதென்னே, (௪௭௪)

ஒருங்கலையார்கலிசூழாவோங்குவளத்தென்னிலங்கைக்குதவ
வந்த, மருங்கலையா மனமுடையோன் மதியினர்க்கு மதியளிக்கு
மதியுமுள்ளோன், பெருங்கலையான் போறிஞனுமருணாசலம் பெரு
மை பேசவற்றோ, விருங்கலையா ரறிகுவா லெடுத்துரைக்கிலினி
யறியாரெவருமில்லை, (௪௭௫)

ஈட்டுகைப் பொன்னிருக்காதென்றிரு நிலத்திற் போட்டுறுதி
யெழுதிவைக்க, மாட்டுவஞ்சர் சாதனங்கள் படைத்தெழுதித் தம்
வசத்தின் மறைப்பரென்னிற், றேட்டுமவ ரிழந்திருப்ப ரென்னு
மதையிப் பெரியன் றெரிந்துகொள்ளாக், காட்டுகாவவரொழுதா
வொழுங்குகளை நிறுவியின்றுங் காத்துவைத்தான், (௪௭௬)

ஒன்றதுபோற்பற்பலநாட்டகங்களுடன் பட்டணங்களொன்
பதும்போ, யன்று வருமென்றறியா ரயர்ந்திருக்கவரை யதிபாகங்
கள்புக்கே, மன்றவ வணிருந்த பிழைச் சாதனங்களாய்ந்தாய்ந்து
வரைந்து தன்பாற், சென்றிடும்பின் வேலைகளினிறுத்திவிடும் பொ
றுத்திடுமோ செம்மலம்மா, (௪௭௭)

தனி திருத்தி யிலங்கையரசி சையவைத்துத் தந்து சட்டத்,
தினிதிருத்திச் சோருணாசலந்துரை தன்னதிகாரத் திறமைதன்னாற்,
றுனி திருத்தி யுறுதிகளின் சோரமெலாங் கண்டு கண்டே சோர்வ
தின்றி, நனிதிருத்தி யெந்நாளுந்தன் பெயரை நிலைபெறவே நாட்
டிவைத்தான், (௪௭௮)

தேடுபொருளதிகமெனிற் கையளியாதிருக்குமெனிற்சேணிற்
சென்று, கூடுமவன்றனத்திலொரு கூறாசுக்காக்கி யிந்தக்குரிசிலந்
நா, னுடுமறு கூறினொன்றை யிறையறத்துக்கெய்துவித்து நடுக்கி
லின்ப, வீடுபெற விடுத்தபெரும் புண்ணியத்தினொரு கூறுமேவு
மன்றோ, (௪௭௯)

தேன்பிறந்த மலர்ப்பொழில் சூழ்ந்திலங்கிலங்கை சிறப்படை
யச் செய்துமென்றே, தான்பிறந்தநாட்டிதுவோ தானேழைதமக்
கிரங்கித் தருமமின்றே, னான்பிறந்த பயன்பயனே வென்றுநனி
யறம்புரிவானாடி மன்னன், கான்பிறந்த வூர்களுக்கேதருமுதவி
யரசினொடுங் கலந்துசெய்வான், (சஅ0)

விலக்கலிலா வொரு மூன்று தினத்துறுதி பதிவு செய்வான்
விதித்துச் சட்டங், துலக்கமுற நிறுத்துமிந்த மந்திரிதான்றொழின
டத்திச் சூழ்ச்சி மன்னற், கிலக்கமென நின்றிலங்கைச் சாதனங்க
ளுள மயக்கமெளிதிற் கண்டே, யலக்கணிலாதறியு நெறியானவெ
லாந்திருத்தமுற வமைத்துத் தந்தான், (சஅக)

வேறு

மாதனம் வருந்தியீட்டி மதிப்பளவாக நாடி
யாதனம் வாங்குவோர்க்கோ ரபாயங்க ணேரிடாமற்
சாதனம் வரைவோர் யார்க்குஞ் சத்தியமுறைகள் காட்டி
மீதனம் வழுவாவண்ணம் விதிகளை யமைத்து வைத்தான், (சஅஉ)

சீர்பெறச் சாதனத்தின் செனறலாய் வந்தஞான்றி
னேர்பெறத் தனக்குப்பின்னு நேர்பவர் தமக்குமாக
வேர்பெறத் திருத்தஞ்செய்தே யிலகுவில் விளக்கியே தன்
பேர்பெற நிறுத்திவந்த பெருந்தகை யிவனேயாவன், (சஅ௩)

நாவைநேர் நிறுத்துமென்றே நவிலருணாசலத்தின்
சேவைமேற் றிறமைகாட்டித் திருத்திய திருத்தங்காட்டி
யாவைநேர் சாந்தமுள்ளோ ரமெரிக்காந்த நாளிற்
கோவையே நோக்கிநோக்கக் கொளும்புக்கு வரைந்திட்டார்கள். (சஅச)

---

## கதிர்காமப்பூசை நடைபெறச் செய்தல்.

ஒப்பரு நல்லுணவுகளை யூட்டிவரு நாடுகளு
ளிப்பெரு நன்னாடான வீழவள நாட்டினிலே
செப்பருநற் றென்கோடி திகழுமருட் கதிரையென்னுந்
தப்பரு நற்றலந்துதிக்கத் தவமெனக்கு மிருந்ததுவே, (சஅரு)



ஒருஞானத் தலமாகி யுலகினொன்றாய்ச் சதாசிவற்குத்
திருஞான வெளியான சிதம்பரமன் றுற்றதுபோ
லருஞான மயமான வறுமுகற் கித்தரையினொன்றாய்த்
தருஞான விச்சை யிப்பேர் தயங்கவுறுங் கதிர்காமம், (சஅசு)

ஈனமுள சூரோடு மேற்றவமர் செயக்கருதி
வானமுள வவர்க்கருளும் வள்ளலறுமுகப் பெருமான்
மானமுள வீரரொடும் வந்தமர்ந்த படைவீடாங்
கானமுள தானவருட் கதிரை வெற்புக் காட்சிதரும், (சஅஎ)

விண்மணிதன் கதிர்தடவா விடவியடாடவி யெங்கு
மண்மணிதன்பாற் பெயரும் வாய்ந்த கங்கைத் தீர்த்தமன்னும்
வண்மணி தன்னொடு நீறுவடிவமுற்றும் வயங்கநுதற்
கண்மணிதன் பெயர்முழுதுங் கரையுமடியவரிடங்கள், (சஅஅ)

பண்ணமைந்த விந்தநிழற் பழமுதிருஞ் சோலையிலே
யெண்ணமைந்த வள்ளிதெய்வயானையெனு மிவர்களொடும்
விண்ணமைந்த வமரரொடு மேதினிமேற் றொண்டரொடுங்
கண்ணமைந்த கருணையொடுங் கந்தனடத்தொடு மமரும், (சஅகூ)

மாட்சிபெற மனங்காயம் வாக்கிவைகளொரு மூன்றுஞ்
சாட்சிபெற வேத்துநர்க்குத் தற்போதங் கெட்டொளிருங்
காட்சிபெறப் பக்குவர்க்குக் காட்டியருட் கந்தனென்று
மாட்சிபெற வமருமிங்கே யநுபூதி ஞானமுண்டால், (சகூ0)

அகத்தியனு மன்பார்ந்த வருணகிரிநாதனின்னு
முகத்தியலு மருந்தவரு முவந்துதவ மிருந்ததலஞ்
சகத்தியலுங் கலியினுந்தான் றளராமற் காட்சிதந்தே
யிகத்தியலும் வரங்களையு மீந்தமருங் கந்தனிங்கே, (சகூக)

மருளுடைய கலிகாலவாத னறுமுகப்பெருமா
னருளுடைய வடியாரோடற்புதத்தோ டமர்கோவிற்
பொருளுடையதருக்கதனாற் பூசைசெய வொட்டாம
லிருளுடைய மனந்துணிந்தே யெழிற்கதவஞ்சாத்திவைத்தே, (சகூஉ)

தனப்பூர்த்தித் தருக்கினுடனதிகாரத் தருக்கதனுன்
வனப்பூரையாகியதன் வதுளையிலே வந்திருக்க
மனப்பூர்வமில்லாத மதவலியான் றீமையினுற்
றினப்பூசை யில்லாமற் பலவருடஞ் சென்றனவே, (சகூங)

**வேறு**

பாவமே யுருவமான பச்சநாயக்கனென்போன்
கோபமே லிட்டதாலே கோவிலை யடைத்தானென்ற
தாபமே விளைக்குஞ் சத்தந்தானது மலைமேல்வைத்த
தீபமே லொளிபோலீழ தேசமேற் பாவிற்றன்றே, (சகூச)

நினைவினிற் றெண்டனுயு நிசியினிற் றுயிலிற்றேற்றுங்
கனவினிற்றூனுமாகக் கதிரைவேற் பெருமான் வந்தே
தனதருள் காட்டிக் காட்டித் தருமருணசலம்பா
லினமுள வடியாரோடு மின்னமுமனேகர் வந்தே, (சகூரு)

அறுமுகன் முருகன் கந்தனச்சுதன் மருகனன்பர்
பெறுமுகன் குறிஞ்சி வேந்தன் பேதையரிருவர்க்கின்ப
முறுமுகன் கதிரைவேலனுவந்த வாலயத்தைப் பூட்டி
வெறுமுகன் வைத்தானென்னு விம்மினர் வேண்டிச்செப்ப, (சகூசு)

கண்ணருட் கடல்வைகுற்ற கதிரையம்பதிக் கோவீது
புண்ணிய னிவனைப்போலப் புவியின் மற்றூர்கொலென்னு
வெண்ணிய வளவிற்சீற்ற மேறிடக் கலங்கியண்ண
னண்ணிய வவர்க்குக் கோவினுளையே திறக்குமென்றூன், (சகூஎ)

கட்டுணை கலுழவோய்ந்தே காங்களுஞ் சோரத்தீயோன்
மட்டுணை கருதான் செய்த வஞ்சமுமடியாரீதை
யிட்டுணையளவு நோக்கி யேந்தலுக்கரிது கொல்லோ
வெட்டுணை தாளான்றேச வதிபனுக் கெழுதலானுன், (சகூஅ)

இலங்கை மேலீதுபோல விளையவன்வதிந்த சைவத்
தலங்களிற் சிறந்ததானதல மினிப்புகல வுண்டோ
துலங்கநற் கருணைகாட்டுந் தொல்கதிர்காம மன்பர்
கலங்கவே பலவாண்டாகக் கதவுகள் பூட்டிவைத்தான், (சகூகூ)



கறைபெற வடைத்தமூலக்கதவவன் றிறத்தல்வேண்டு
மறையுமக்காலந்தோறு மருச்சனை நடத்தல்வேண்டுங்
குறையிலாக நித்தங் குமரவேளுபயபாத
நறைமலரிட்டுத் தொண்டர் நாளையே பணிதல்வேண்டும், (ருOO)

வையகமாளுமாற்றின் மன்னவன் றூழ்க்கலாமோ
செய்ய செங்கோலுக்கீது சிறப்பலவென்றே யேந்தல்
கையகலா மலாய்ந்தே கடிதினின் வரைந்துவிட்டா
ணையனென் றெழுதுமாயி னரசனு மசையுந்தானே, (ருOக)

ஆங்கிதை யதிபன் பாராவந்த மாகாணமுற்ற
தீங்கை வாராமற் காக்குந் திறமுளதுரைக்குப் போக்க
வீங்கிதை விளங்கியின்றே னேந்தலார் வரைந்தவாறே
தேங்கருட்கதவையன்றே திறப்பித்துப் பூசைவைத்தான், (ருOஉ)

**வேறு**

அந்த மாகாணத்தினரச சேவைமேல்
வந்த வவ்வமையங்கள் வழாமல் வந்துவேற்
கந்தவேள் பதங்களைக் கதிரைபோற்றியே
சிந்தனையான நற்சித்தி பெற்றிடுஞ், (ருOங)

சத்தினி பாதமாந்தகுதி பூண்டவன்
மத்தினி லுடைததி மானவுண்ணெகிழ்ந்
தொத்தினி தறங்களை யோம்பக்கைவரும்
பத்தினியாரொடும் படர்ந்து போற்றுவான், (ருOச)

பாங்குறவே யிருபாலு மென்றைக்குந்
தூங்குற விளக்குக டுக்கிவைத்திடா
வாங்குற ராப்பகலணைத லின்றியே
யோங்குற வெங்கணு மொளியைச் செய்தவன், (ருOரு)

தலத்தினுக்காகிய தருமசாதன
நிலத்தினைப் பிறாபகரித்து நின்றிடக்
குலத்தினரொடு முறைகூறிக் கோவிற்கே
புலத்தினை மீளவும் பொருந்தவைத்தனன், (ருOசு)

காலவன் றூதரைக் கடியும் வன்மைசேர்
வேலவன் கதிரை மேன்மேவு மன்பரைப்
போலவன் மனைதனிற் போந்து போந்துதன்
ஞாலவன்பரு ளருளடைந்த பத்திமான், (௫௦௭)

## மக்கள் மணக்காட்சி.

பண்புள பாரியேயாம் பத்தினித் தெய்வத்தோடும்
விண்புகல் விருந்துகாத்தும் விளைவுகூ றறங்கள் காத்துந்
தண்புலனடங்கவாற்றுந் தவப்பயனாகப்பெற்ற
மண்புகழ் மகார்க்குச்செய்த வதுவைகளடைவிற் சொல்வேன், (௫௦௮)

கோத்திர மொழுக்க நல்ல குணம் பொறை வனப்புமாண்பு
நேத்திரமாக வாய்ந்தே நிரம்புறக் கற்றகல்வி
பாத்திரமான யாவும் பண்புற வினத்துணாடிக்
காத்திரமாக வையன் கடிமண மியற்றுவானால், (௫௦௯)

எண்ணிய வுத்தியோகரேற்ற மேற்குலத்தினார்க்கு
நண்ணிய நகர்நாடெங்கு நன்மணவோலை போக்கி
விண்ணிய லிங்கிலந்தின் மேவு மந்திரிகளுக்குங்
கண்ணிய திருமுகங்கள் கனம்பெற வனுப்பிவைத்தான், (௫௧௦)

பின்னுற மணங்கள் செய்வான் பெட்புறவலர்ந்தகஞ்சப்
பொன்னுறவமைந்த செல்வப் பொன்கிளார் மனையின் முற்றந்
துன்னுறப் பந்தரிட்டே துதையமேல் விதானம்போக்கி
மன்னுற வகத்துளார மகர தோரணங்கணாற்றி, (௫௧௧)

மாமுகக் குலைகடுங்க வாழையுங்கமுகு நாட்டித்
தேமுகத் தெழுந்து காட்டச் சித்திரச் சிகரம்போக்கிப்
பூமுகக் கம்பலங்கள் பொலியவே விரித்து நள்ளிற்
கோமுகத் தொளிரத்தீபக் குலங்களும் பகல்போலேற்றி, (௫௧௨)



வண்ணமா மணிகண் முற்றும் வயங்கவே யடக்கிக்காட்ட
வெண்ணமையாடி யொன்றை யெதிர்முகமாகத் தந்து
கண்ணடி வகைகளாலே கமலங்கள் வைத்துச்செய்த
மண்ணமர் விருந்தேயான மணவறையமைத்துவைத்தார், (௫௧௩)

உன்னினர் வினைஞரின்ன வுயரணி நிரம்பச்செய்ய
முன்னினரறிஞர் சொற்ற முகூர்த்தநாளாகு மந்நாட்
டுன்னினர் தோகைமாருந் துரைமக்கடாமு மன்னத்
தன்னிக ரிலாமலந்தச் சபை யலங்காரம்பெற்ற, (௫௧௪)

தேங்கவேத வில்களார்க்கச் சின்னங்களிசைத்துப் பொங்கத்
தாங்கின ரவையுளோர்க்குச் சந்தடைபாகுநல்க
நீங்கலதிலாம லெங்கு நிரம்பியவ வைக்கணாகப்
பாங்கமர்ந்தேந்தல் யார்க்கும் பகர்ந்தன னுபசாரங்கள், (௫௧௫)

தொங்கலா லுயர்ந்த பந்தர் துலங்கவே யமரும்போதிற்
சிங்கல திலாமற்றீட்டுந் திருமுகங் கண்டபோதே
யிங்கிலந்தமைச்சர் தாமும் ராணியு மியம்பியாசி
தங்கிலரனுப்பி வைத்த தந்திகள் கிடைக்கப்பெற்ற, (௫௧௬)

இன்னவாறாக மன்றற்கேற்ற நல்லணிகள் யாவும்
வன்னமார் மகேஸ்வரிச்சீர் மணமகண் மனைக்கே யீங்குச்
சொன்னவா றமைந்ததன்றோ சொற்செக ராசசிங்க
மன்னவனான செல்வ மணமகன் மனையுந்தானே, (௫௧௭)

கனத்தினின் மரபின்மாண்பிற் கதியிழந்தவரைக் காக்கு
மனத்தினிற் கோவில்கட்கு வழாதபூசனைத் தர்மத்திற்
றனத்தினினுயர்ந்த ரத்னசபாபதி சேட்டமைந்தற்
கினத்தினினுயர்ந்த மன்றலியற்றணி யியம்பப்போமோ, (௫௧௮)

சொல்லுநாழிகை வந்தெய்தத் தோன்றற் குத்தூநீராட்டி
நல்லபட்டுடுத்தி மார்பினளி ரொளிக்கவசம் பூட்டி
யொல்லுமுத்தரியமிட்டே யுயர்மணியாரஞ் சாத்தி
யெல்லவிர் பாகை சேர்த்தி யிலங்கவே பொட்டுமிட்டார், (௫௧௯)

புரையகன் மணத்தின் பந்தர் பொற்பவே மருகன்வந்து
வரையகன்றழகு காட்டு மணவறை யமரும்போதிற்
கரையகல் களிப்புப் பொங்கக் கடிகைவந்தடுத்ததென்னாத்
துரையவண்மட நல்லார்பாற் றோகையைக் கொணர்மினென்றான், (௫௨௦)

பூமகள் வனப்பினாட்குப் புவிமகட் பொறையினாட்கு
நாமகள் கலையினாட்கு நளிருமீனெறியினாட்கு
நீமகளான தெங்கணிறை தவமென்றே மாதர்
தேமகளிவளென் றெண்ணித் திகழ்மணக்கோலஞ் செய்வார், (௫௨௧)

ஆயபோ தரிவைமார்க ளாயிழை தனக்கு மெல்லத்
தூயநீராட்டியீரந் துவட்டியே குழலைக்கோதி
யேயசாந் தப்பிவாச வெழிற்புகை யூட்டிப்பின்னிக்
காயநல் வனப்பைக் காட்டக் கயிற்புறந் தொங்கவிட்டார், (௫௨௨)

பவமணி யணியேயாகப் பண்புட னியற்றிவைத்த
தவமணியான தைய றலைமுதற் பதமீறாக
நவமணி யிழைத்துச்செய்த நகைகளை யணிதல் செய்தா
ரவமணி யென்பதோரா ரவளணி குணங்களாமே, (௫௨௩)

கோற்றொடி நிறத்துக்கேயக் குலவுகச்சமையச் சாத்திச்
சாற்றுபட்டாடை யொன்றைத் தகுமெனப் புனைந்துடுத்தித்
தோற்றமா நுதலிற் சாந்தாற் றுலங்குறத் திலகமிட்டே
யேற்றினாரவைக்கணாக விருந்தவர் விழிக்கிலக்காய், (௫௨௪)

அஞ்சமு நடைக்குநாண வரிவையர் நடத்திமெல்லத்
தஞ்சமில் கொழுந்தேபோலத் தளிரடி தவறக்கொண்டு
விஞ்சுபேரவைக்கணுள்ளோர் விழிக்குநல் விருந்தாய் வந்து
வஞ்சிநேரிடையினாளை மணமகன் வலப்பால் வைத்தார், (௫௨௫)

அடுத்தவவ் வமையமேழைக் கருளருணாசலந்தன்
றொடுத்த வன்பார்ந்ததேவி சொர்ணமுந்தானும் வந்தே
கடுத்த கற்பமைந்த வெங்கள் கன்னியையவை சான்றாகக்
கொடுத்தனன் கொள்கவென்னாக் கூறியே தாரைவார்த்தான், (௫௨௬)



PUBLIC LIBRARY JAFFNA.

தந்த நல் வாச்சியங்க டழங்கிட வோதி நர்களும்
வந்த வேதியர்கள் வைகி மணச்சடங் கியற்றவாசி
நந்தலிலவையோர் சாற்ற நாயகனாணைத் தாங்கிக்
கந்தமார் குழலிதன்னோர் கழுத்தினிற் சேர்த்தினானே, (௫௨௭)

கோதிய குழலாள் கையைக் கொழுநன்றன் கரத்தாற்பற்றி
யோதிய விதியா லோங்குமோமத்தீ வலமாய் வந்தே
தீதியலாத வண்ணஞ் சிலையின்மேற் பாதம் வைத்துச்
சாதிய துயர்வுபெற்ற சாலியுங் காணச்செய்தான், (௫௨௮)

ஆற்றவுஞ் சிறப்புப்பெற்ற வரிவையரிருவர் கூடிப்
போற்றவே யவையின் வந்து பொலியுமாலாத்தி யேந்தச்
சாற்றரு முயர்வு சான்ற தகுமுதியோர்க ளெய்தி
யேற்றமா மக்கதந்தா மெடுத்து மேலாசி செய்தார், (௫௨௯)

தொன்மைசேர் முறைகணா டித்தூயவை சான்றேயாகப்
பன்னுநூன் மறையோர் தம்மான் மறைச்சடங்கான பின்னர்ச்
சொன்னல முழுதும் பெற்ற தோகையுந் தோன்றலுமு
மன்னவே யினிதுகூடி மனையறங் காப்பதானார், (௫௩௦)

இங்கிவரிருவர்தாமு மியைந்து நல்லறங்கள் பேணிப்
பங்கமில் பதுமினிப்பேர்ப் பாவையை நமசிவாயத்
துங்கநன் மகனை யன்னபூரணத் தோகை தன்னைப்
பொங்குபேரன்பிற் பெற்றே போற்றி நல்வாழ்வுபெற்றார், (௫௩௧)

இன்னவாறாக மன்ற லிளங்கொடி மாருண் மூத்த
வன்னமா மகட்குச் செய்து வைத்தபி னீதுபோலச்
சொன்னசீர் மக்களுக்குந் துலக்கமா யாண்டுக்காண்டு
பன்னவே மணங்கள்செய்த பான்மைகடொகுத்துச்சொல்வேன், (௫௩௨)

வேறு

கதித்துவருங் கேம்பிரிச்சிற் கற்றதிக தேர்ச்சியுறாத்
துதித்துவரு முயர்ஞாய துரந்தரனாய் வந்த செம்மன்
மதித்துவருந் தாதையரின் மந்திரியாம் பதவிபெற்று
விதித்துவருஞ் சட்டவகை மேற்காட்டி வருங்குரிசில், (௫௩௩)

கோனுயர்த்திவரும் ராச குடும்பமிதை யிந்நாளின்
மேலுயர்த்தி வருமொருவன் விரும்பு குலக்கொழுந்துமிவன்
மாலுயர்த்தி வருமிலங்கை வளநாட்டுக் குதவவந்தோ
னாலுயர்த்தி யாய்ந்துவரு நுண்ணறிவாலுயர்ச்சி பெற்றோன், (௫௩௪)

பூதேவனெனப் போற்றும் பொறுமைமுதற் குணங்களுளோ
னாதேவனாகுமென நவில்வாக்குமுள னிவற்றா
னீதேவனென மதிக்கு நேர்மையுள தந்தையரெம்
மாதேவ னென்றேந்தி வளர்க்குமகா தேவனுக்கே, (௫௩௫)

கனமுடையன் கண்ணோட்டன் கசிந்துதிருப் பணிகள்செயு
மனமுடையன் மதியுடையன் மதித்துவரு நல்லவின
சனமுடைய னறத்தாற்றிற் றவருமனின் றீட்டுந்
தனமுடையனா மூத்ததம்பி தருஞ் செல்வமகள், (௫௩௬)

மாவியலும் புவிப்பொறையும் வடமீனினெறியுமிக
மேவியிவண் டிகழணங்கு மெல்லியரும் வேட்கைமிஞ்சித்
தாவியெதிர் தொழுந்தேவி தயங்கு திருவாலுயர்சீ
தேவியெனுந் திருந்திழையைத் திகழமணஞ் செய்துவைத்தான், (௫௩௭)

ஆயினுய ராங்கிலத்தை யாய்ந்து நல்ல வாக்குரைக்கும்
வாயிலொரு வீரனிவன் மணமாதைப் பயந்தெடுத்த
தாயினுடன் பிறந்த ரத்னசபாபதி வேட்கன்பார்ந்த
சேயினைய பண்பமையுஞ் சிறீ பத்மநாதனுக்கே, (௫௩௮)

பொருந்து வனப்புடன் வானிற்பொன் மகளை முதலான
முருந்து நகை யரம்பையரை முதலமைத்துக் கைபடிந்து
திருந்து புவிமேலுமொரு செந்திருவை வேண்டுமென்றே
வருந்துமயன் படைத்த மனோன்மணியை மணஞ்செய்து வைத்
[தான், (௫௩௯)

பன்னு திருவுயர் மானிப்பாயிலொரு கல்லூரி
யின்னுமவண் டெருவுமொன்றையியற்றிவைத்துத் தன்பெயரான்
மன்னுபுக ணிறுத்திய சங்கரக்குரிசின் மகிழ்ந்தளித்த
துன்னு புகழ்ப்ப ராசசிங்கமெனுந் தோன்றலுக்கே, (௫௪௦)



தேமாதை யனையாட்குத் தேமாதையலது நிலத்
தாமாதை யுரைப்பதெவ ணழகுபொறை நிறையினுக்குப்
பூமாதை மீன்மாதைப் பூத்த செழுந்தாமரைமேன்
மாமாதை நிகர்த்த பத்மாவதியை மணஞ்செய்து வைத்தான், (௫௪௧)

சீரிலங்கைத் தலைநகர்ச் சத்திர மமைத்துச் சிறப்புளதன்
பேரிலங்க வைத்துயர் தம்பையா தன் பேரனிவ
னேரிலங்கு முருகேச வேந்தலருள் செல்வமகன்
பாரிலங்குங் குணத்துயர் தம்பையாவாம் பார்த்திபற்கே, (௫௪௨)

ஒண்மையுள கலைபயிலாவோது மதன் பயனாகப்
பெண்மையினர் கழகநிறீஇப் பேசுமங்கத் தவளாகித்
தண்மையுள கிளிமொழிபோற் றமிழ் மொழிகள் பேசிவரு
மெண்மையுள வறிவழகா மிதினதிகம் வடிவழகே, (௫௪௩)

உதித்த மதி முகத்தழகா லுற்றகுறுஞ் சிரிப்பழகால்
விதித்த வன்னநடையழகான் மென்குதலைச் சொல்லழகாற்
கதித்த கருங்குழலழகாற் கட்டழகியென்று கண்டோர்
மதித்த சிவானந்தவல்லி மாதை மணஞ்செய்துவைத்தான், (௫௪௪)

பற்றவரும் பருவமதிற் பலகலையுங் கற்றதன்பி
னுற்ற பிரமாணமென வோது சட்டநெறிகளிலே
சொற்றபடியாய் ஞாய துரந்தரனும் பட்டமொன்று
பெற்றமகன் பேருவகைப் பெருமைமிகப் பெற்றமகன், (௫௪௫)

ஓட்பமுள வறிவுயர்ச்சி யோது கலை யடக்கமுண்மை
பெட்பவரு மதன் வனப்புப் பெரிதுதுரை மக்களுட
னட்பதிக தனமுடைமை நலமிலர் கடம்மை யஞ்சாத்
திட்பமிவை யானவெலாந் திகழ் ராமநாதனுக்கே, (௫௪௬)

ஒத்துவரு மாபுடையோ னொருவாமற் றொழினடத்திச்
சொத்து நனியீட்டியுளோன் றாயவறத் துறையினிற்போன்
மெத்துமருட் பத்தியுளோன் மேன்மையுளோனும் வைர
முத்து முனம் பெருநோன்பு முயன்று பெற்றவருமை மகள், (௫௪௭)

வாவிமலர் மேன்மாதும் வட..மீனும் புவிமானு
மேவி வருந்தவற் பிரியா விரதியுமென் றிளங்கொடியார்
தாவி மனமுவந்தேத்துந் தையனல்லாளாம் வாம
தேவியெனுந் திருமாதைச் சிறந்த மணஞ்செய்து வைத்தான், (ருசஅ)

தனமதிகன் மணமகட்குத் தாய்மாமன் சிவதரும
மனமதிகன் ரத்னசபாபதி யளித்த மைந்தனிவன்
கனமதிகன் காட்சியுளன் கதித்த குலத்துதித்த பல
வினமதிகன் றாயனிந்த நடராச வேந்தனுக்கே, (ருசகூ)

இந்த மடமாதருக்கு ளிவளிளைய ளென்பதெவ
ணந்த வரவிந்த மலரமரிளையா ளிவளாக
வுந்த மடந்தையர்க் குரைத்த வொழுக்கமெலா முருவாகி
வந்த சுந்தரேஸ்வரியை மகிழ்ந்து மணஞ்செய்து வைத்தான், (ருரு0)

## வேறு

வள்ளியனிணையவாறே மகார்களிலெழுவருக்கு
மொள்ளிய வதுவை செய்த வுயர்சிறப்பொழுங்கிற் சொன்னேன்
றெள்ளிய பதுமநாபச் சேட்டனுமகற்கு நேர்ந்த
வுள்ளிய வரலாறெல்லா முரைக்குவன் முறையிற் பின்னே. (ருருக)

## திருக்கேதீச்சுரப்பதி சைவர்க்கு ஆகுதல்.

ஈழநாட்டினுக் கிரண்டு கண்ணெனத் திருந்திசைக்கு
மாழ மன்னிய தக்கிண கயிலையு மடர்ந்த
வேழமார் வனத்துட னொருபுடையினின் விரிநீர்
சூழமேவு கேதீச்சுர மிரண்டுமே துலங்கும், (ருருஉ)

தேடல் கூடுருத்தலந் தொறுஞ் சென்றனர் திருமுன்
சூடல் செய்திருப்பதிகங்கள் பாடினர் துதித்த
நாடல் சேர்ந்த சம்பந்தரு மப்பரு நவின்ற
பாடல் பெற்றது மீழமேலிவ்விரு பதிகள், (ருருங)



அன்ன போலையெழுதருஞ் சலதியுளழுந்தித்
துன்னமன்னிய கோணமாமலை நின்றுதுலங்கு
முன்னவந்தமா தோட்டத்து மணலினுண் மூழ்கி
யின்னதாய கேதீச் சுரத்திருப்பதி யிலங்கும், (ருருச)

அன்ன நாளினிற் கோள்களிற் கேதுவணமர்ந்தே
சொன்ன நூன்முறை யருச்சனை செய்தனன் றுதித்த
வின்னதா லவன்றனதொரு நாமமே யிலங்க
முன்ன மேவினனிப்பதி யமர்தரு முதல்வன், (ருருரு)

நந்தலின்றிய தானிய மலிதரு நலத்தாற்
பிந்தலாகலா திருந்த மாதோட்ட நற்பிரிவின்
முந்த வந்தவன் சவேரியென் றியம்பிய முனியாற்
றந்த போதனையு வந்தகத் தோலிக்க சமயம், (ருருசு)

முன்னு மித்தகைச் சமயமிந்நாடு கண்முழுது
மின்னு மிங்கிவர் தாந்தொழு மடுவு மொன்றிருந்த
மன்னுநீற் றெளியொளிதரு சமய மேன்மக்க
ளென்னு நாமமு மிங்கிலையே தினியியம்ப, (ருருஎ)

அந்த விச்சுவகன் மனை யொத்தவனவனே
யுந்த மாதுவட்டாவென வழங்குற மொருவன்
சொந்தமாக வுற்றருச்சனை செய்தனன் றெழுத
விந்தவேது வாலிவண் மகாதோட்டமென்றிலங்கும், (ருருஅ)

சொற்ற விந்தமா தோட்டத்தி லிவனடி தொடர்ந்த
வற்றமில்லவர் கம்மியராமாரு மமரக்
கற்ற கைத்தொழில் வல்லவர் கடியவர்க் கடிவோர்
உற்ற மாந்தை யென்றாரு மொன்றிவ்விடை யுளதால், (ருருகூ)

வந்தபே ரொளிப்பரிதி சொல் சாபத்தின் மறைந்தே
கந்தநீள் பொழிலூடு பாலாவியின் கரைசே
ரிந்த மாத்தல மிருப்பதை யிலங்கை மேலிலங்கு
மந்த நன்னகரத் தவராய்ந் தனராறிந்தே, (ருசு0)

தேண்டு மித்தலம் பாடல் பெற்றிருந்தது தெரியக்
காண்டுமாலிது மறைந்து தான்கிடந்தது கவின
வீண்டுநாமினித் தேடியே திருப்பணியியற்ற
வேண்டுமென் றாசற்கொரு விண்ணப்பம் விடுத்தார், (ருசுக)

தோட்டமான விப்பிரிவினஞ் சமயமே துலங்கு
மீட்டமான தேவாலய மடுவு மொன்றிலங்கு
நாட்டமான வித்தலமு நந்தலமென நவின்றே
வேட்டநேர் குருமார்களும் விண்ணப்பம் விடுத்தார், (ருசுஉ)

அந்த வேலையிலரிய யாழ்ப்பாண மேலறிஞர்
சிந்தை செய்திடு வித்துவ சிரோமணி முதலோ
ருந்த நம்மருணாசலக் குரிசினல் லுதவி
வந்ததா மெனிற்றல மெமக்காமென மதித்தே, (ருசு௩)

கூர்ந்து தூண்டிய வுளத்தின ரொருங்குறக் கொளும்பிற்
சேர்ந்து நாடிவந்தவர்க் குதவிகள் செயவே
நேர்ந்து நின்றிடு மன்னனைக் கண்டிது நிகழ்த்த
வோர்ந்து தானிது முடிப்பனென் றனுப்பினனுவரை, (ருசுச)

புதிய தோவிது புராதனமாகியே பொருந்தும்
பதியதேயிது பாடலும் பெற்றது பணியிற்
கதியதீவது கதலிக்கர் தமதெனக் கருதல்
விதிய தோவென வேந்தினுக் கறிக்கைதான் விடுத்தான், (ருசுரு)

விடுத்த பின்பு கத்தோலிக்க சயத்தின் விரிவுந்
தொடுத்த காலமுந் திருவருட் குரவர்கடுதித்தே
யெடுத்த பாடலின் காலமு மத்தலத்திறைவ
னடுத்த மான்மியத் தளவையு மவன்முன மறைந்தான், (ருசுசு)

கேட்டு வேந்தவனிருவர் விண்ணப்பமுங் கிடைத்தே
கூட்டுவாசகத் துண்மை கண்முழுவதுங் குறித்து
மீட்டு மவ்வருணாசலந் துரைதனக் கெடுத்துக்
காட்டு நீதியுங் கண்டு தன்னகந்தனிற் கருதி, (ருசுஎ)



பூதிசேர் சமயத்தவர் தமக்கிது புகலி
ஞாதி தொட்டுள தலமென வுண்மை யென்றறிய
வேதிலுற்ற பன்முறைகளை யேற்றிட வெழுதிச்
சேதிதன்னை யச்சமயிக டெரிந்திடத் தெரித்தான், (ருசுஅ)

வேறு

யார்க்கென வைஃமெய்தி யாதினிச் செய்வமென்ன
வோர்க்குறு நகரத்தாரு மேலும் யாழ்ப்பாணத்தாருஞ்
சீர்க்கொரு திலகமாகத் திகழருணாசலத்துக்
கேர்க்குமிப் புண்ணியந்தா னென்றவற் புகழ்வதானார், (ருசுகூ)

திருந்திய நகரத்தார்கள் சிவன்றிருப் பணிகளென்றாற்
பொருந்திய பொருளைவாரிப் போதவே செலவு செய்வோர்
வருந்திய கூலிதம்மான் மணலினைத் தோண்டித்தோண்டி
யிருந்திய லிங்கங் கண்டாரிருள் கண்டாரொளிகண்டன்ன, (ருஎ0)

தோற்றருட் குறிக்குத்தக்க தொழிலமை கோவிலாற்றிச்
சாற்றருந் தன்மைத்தாகத் தாபித்துக் காலங்கால
மேற்றரும் பூசை யின்னும் விழாக்களு நடத்தி யிந்நாட்
போற்றினர் வருவதானார் புண்ணியமிதன்மே லுண்டோ, (ருஎக)

பண்ணமை மொழிகளுள்ளாள் பத்தினித் தெய்வமான
வொண்ணகை யுடையளான வுத்தமி நாய்கன்பெற்ற
கண்ணகை யமர்ந்த கோவில் கருதல ரிதனைப்பின்ன
ரெண்ண மற்றவர்கள் மாதா மடுவென வியம்புவாரால், (ருஎஉ)

சொன்ன கேதீச்சுரத்தைத் தொடுத்திந்த வாலயத்தை
மன்னவே மார்க்கமொன்று வழங்கியதின்று முண்டா
லின்னதா விநயகோவி லிரண்டு மங்கொன்றேயாக
வன்னவரமைய வைத்தே யாட்சிசெய் திருந்ததாகும், (ருஎ௩)

பேர்தரு சவேரி கூற்றுற் பின்னொரு சமயந்தன்னிற்
சார்தருமாறு கண்டே சங்கிலி யந்தக்கால
நேர்தரு மநேகர் தம்மை நெரேலெனத் தேடிப்பற்றிக்
கூர்தரு வாளினாலே கொய்தனன் சிரங்களென்பர், (ருஎச)

இந்திரன் வானேரேத்த வீழ மண்டலத்திலிந்தச்
சந்திர மவுலிகேதீச்சுரனடி தலைப்போதாகத்
தந்திரத் தொகுதிசூழுந் தாணிபனேடு சூழ
மந்திரியாக வேந்தல் வந்தது விளம்பலுற்றேன். (ருஎரு)

## சட்டநிரூபணசபை மந்திரி ஆகுதல்.

தொகுத்துவரு ம..யிரத்துத் தொளாயிரத் தைந்தாண்டுதனின்
மிகுத்துவரு நாடுகட்கு வெவ்வேறு மொழுங்குகளைப்
பகுத்துவருஞ் சட்டநிரூபண சபைக்கு மந்திரியாய்
வகுத்துவருமாறு வந்தான் மன்ன னருணுசலமே, (ருஎசா)

இட்டமுட னவரவர்க ளியம்பிமுடி வாமளவி
லொட்டவொரு பொருளமைந்த வுரைநவிலும் பேறிஞன்
கிட்டவரு மவ்வளவிற் கிளர்ச்சிமிகப் பெற்றேங்கிச்
சட்டசபை யந்நாளிற் றயக்கமிகப் பெற்றதுவே, (ருஎஎ)

### வேறு

தகியுடனமைச்சர் சூழுஞ் சட்டநற் சபைக்குவாய்ந்த
மதியுடைத் திலகமான மந்திரியாக நாடு
துதியெடுத்திடவே தோன்ற ஸெரன்மைசேர் முறைகணுடித்
திதிபெறுமீழ நாட்டைத் திருத்தஞ்செய்திடவே வந்தான், (ருஎஅ)

கலையினிற் பெரியன் வேந்தர் கதிப்பினிற் பெரியன் வாய்மை
நிலையினிற் பெரிய னீதிநெறியினிற் பெரியன் சங்கத்
தலையினிற் பெரியன் செய்யுந் தருமத்திற் பெரியன் சாந்த
மலையினிற் பெரியனிந்த மாணருணுசலங்காண், (ருஎகூ)

பண்ணளிர் பழனவேலி பாம்புதலாலு மிக்க
கண்ணளிர் வனங்களாலுங் காட்சிபெற்றுலவுகின்ற
விண்ணளி ரிலங்கை முற்றுமேவிய வுயிர்களுக்குத்
தண்ணளியான சட்டந் தனித்தனி யெடுத்துக்காட்டும், (ருஅ௦)



தேனுற்ற விலங்கைமீதே தெரிந்தன ரெடுத்துவைத்த
தானுற்ற பிரிவினுக்குத் தகுதுணையாவ தன்றிக்
கானுற்ற நாடுமுற்றுங் கருதிக்கண் ணேட்டமாகக்
கோனுற்ற சமையநோக்கிக் குறைகளைக் காட்டிவைக்கும், (ருஅக)

இங்கியன் மலைநாடெங்கு மிலங்குதேய்த் தோட்டமெங்குங்
கொங்கியல் வனவூரெங்கும் குறைவில்பட் டணங்களெங்கும்
பொங்கிய வீதியெங்கும் போற்றுந ரிலாமற்றேம்பித்
தங்கிய வனைதைகட்குத் தருமங்கள் காட்டிவைக்கும், (ருஅஉ)

பொருமதி யலைகள்வீசும் புணரிசூ ழிலங்கைகாத்துத்
தருமதி யமைச்சர்தாமுஞ் சார்ந்தவர் புகன்றவாறே
வருமதி யாசுத்தேச வளமையை விலக்குவாரா
யொருமதி யாகநிற்ப வுதுதகா தென்றேமன்னன், (ருஅங)

நிலம்வரு நெடுநாட்டொட்ட நெறிவருந் தருமநூல்சொன்
னலம்வரும் வழக்கென்றில்லா நயம்வரும் வகுத்துக்காட்டுங்
குலம்வரும் முறையீதென்று கூறியே நாட்டுக்கெல்லாம்
வலம்வரும் பண்டைத்தேச வளமையை நாட்டிவைத்தான், (ருஅச)

சங்கிலங் கலையாரிந்து சமுத்திர நடுவட்பூத்த
கொங்கிலங் கடவிகுன்றங் கோலஞ்செய் யிலங்கைநின்றும்
பங்கிலங் கருமைத்தேவி பாலக னிவர்களோடு
மிங்கிலந் தேகுமாறு மேனவு மினிநான்சொல்வேன். (ருஅரு)

## சக்கரவர்த்தியின் சன்மானம் பெறுதலும், கேம்பிரிச்சில் மகாதேவாவைக் கற்கவைத்தலும்.

முடியுடை வேந்தர் கோன்முயங்குமாநக
ரடியுடைத்தாகிய வவனிக் கோர்நகர்
கொடியுடை யமைச்சர்கள் குலாவுமிந்நகர்
படியுடை நகர்களைப்பழித்த நன்னகர், (ருஅசா)

முற்படு மன்னருண்முடி கொண்மன்னற்குச்
சொற்படு புரமெனத்தோன்றும் பெற்றியாற்
பிற்படு புரங்கட்குப் பிறங்குந்தாளெரு
பொற்படு மகுடமாம் புரமென் றுற்றது, (௫௮௭)

இன்னன சிறப்புகளெய்து மிங்கிலந்
தென்னுநன்னக ரினுக்கிலங்கை போற்றுமிம்
மன்னனுந் தேவியுமகனு மேகுவான்
பன்னுமோர் நாடனிற் பயணமாயினர், (௫௮௮)

நாட்டிய தொளாயிர நான்கினிங்கிலந்
தோட்டிய மரக்கலமோங்கி மேற்செலக்
காட்டிய கடல்படு காட்சிமூவரு
மாட்டிய கலத்தின்மேலமர்ந்து நோக்குவார், (௫௮௯)

மேலு மிழாவகைமேவு மேன்மையோ
ராலுமி தெனுமருணா சலந்தனக்
கேலுமி தெனவுளவேந்தி ரங்களை
மாலுமி தினந்தினம் வந்துகாட்டுவான், (௫௯௦)

நலந்தனை நனிதரு நாள்கள்பிற்படச்
சலந்தனை யஞ்சுமோ தாண்டிமாலுமி
கலந்தனை யோட்டினன் கடிதினேடியிங்
கிலந்தின துயர்துறைமுகத்தைக் கிட்டினன், (௫௯௧)

ஆர்க லியலையொலி யடக்கியஞ்சித்தான்
பேர்கலி லிலாதவிப் பெருந்துறைக்கணே
சீர்கலி னேங்கியே திகழிலங்கையாம்
பார்கலி தீர்ப்பவன் பாங்கிறங்கினன், (௫௯௨)

கண்டங்க ளுள்ளன கதித்தபற்பல
பண்டங்க ளாயின பரவவெங்கணுங்
கொண்டங்க ணிருப்பது குலாவுமித்துறை
யெண்டங்க வுளதெனி னியம்பலாகுமே, (௫௯௩)



துறைமுகமிறங்கிய துரையை மைந்தனைப்
பிறைமதி நேர்நுதற் பெண்ணரசியை
நிறைமுகந்தந்தவ ணோர்ந்த சிற்சில
ருறைதர வாசனமுதவி வைத்தனர், (௫௯௪)

சலவையின் மாபிளிற் றயங்கும்பித்திகை
நிலவையு மழுக்குறு நிலவுமிந்தக்கற்
சுலவையி லொருபகற் சுடருந்தீபங்க
ளுலவையு மென்மெலவுலாவு மெங்கணும், (௫௯௫)

ஏற்றிவந்திறக்கிய விறைமைச் சேவையின்
கூற்றினி னுள்ளவர் குலம்பகற்களி
லாற்றினி னேற்றியே யவிர்விளக்குக
டோற்றிய சுடர்களிற் றுலங்குமாக்களில், (௫௯௬)

குறைமுக மாகலாக் கோக்களாளுறுந்
தறைமுக நகர்களைத் தாழ்த்தித்தானுய
ரிறைமுக மாயுறு மிங்கிலந்துள
துறைமுக மாகுமேற் சொல்லவேண்டுமோ, (௫௯௭)

தேவியுமகன் மகாதேவுந் தானுமாய்
மாவியலித்துறை மாண்பை நோக்கிப்பின்
கோவியனகரினுட் குலாவுஞ் சாய்கைபோய்
மேவியகளிப்பினர் மேவி வைகினர், (௫௯௮)

## வேறு.

சங்கிலங்கிய சாகரமத்தியி
னங்கிலங்கையம ருணாசலம்
பொங்கிலங்கிய பொற்புடைத்தாகிய
விங்கிலந்தினிலெய்தின னென்றே, (௫௯௯)

இந்தக்கேம்பிரிச் செய்துகல்லூரியி
னந்தநாட்க ளமர்ந்துடன்கற்றவர்
வந்தசீர்த்தியர் மந்திரிமார்பிறர்
முந்தநேர்ந்து முகமன்கள்பேசினர், (௬௦௦)

தோற்றமுள்ள துரையருணாசல
மாற்றலுள்ளவமைச்சரை யாதியோர்க்
கேற்றவேற்ற வெதிர்மொழிதந்துமே
லாற்றவுமகிழ்ந்தன் பொடளவினன், (௩௦௧)

ஈட்டுசெல்வத்திலங்கை முறையொடு
மீட்டுமுள்ள விளைவுகள்யாவையு
மாட்டுவந்தனர் மந்திரிமார்பிறர்
கேட்டுநெஞ்சங் கிளர்ச்சிகளாயினர், (௩௦௨)

ஓங்குமாதர்க்கு யர்திலதம்மென
வாங்குவைகுமாம்பை நேர்பாரியைத்
தேங்குதேசு திகழ்ந்தமர்மைந்தனைப்
பாங்குபார்த்துப் பரிந்துபாராட்டினர், (௩௦௩)

திருந்துமீழ நற்சீதளவுட்டணம்
பொருந்துமிந்தப் புதுநகர்சீதள
மிருந்துநேர்சுக மெய்துங்கொன்மேனிதான்
வருந்துமென்றுப சாரம்வழங்கினர், (௩௦௪)

முந்துமுந்திய மூதறிவாளர்கள்
வந்துவந்து மகிழ்ந்துகொண்டாடிட
வுந்துசீர்த்தி யுவர்க்குத்தனோர்காந்
தந்துவைகினன்று னருணாசலம், (௩௦௫)

தாயுமைந்தனுந் தன்னுடன்வந்திட
வெயுமிந்தவிறை நகர்சூழ்ந்துபோ
யாயுநல்ல வணிகளைநோக்குறுத்
தோயுமின்பந் துலங்கவங்குற்றனன், (௩௦௬)

இந்தவாறிவனிங் கிலந்துள்ளன
நந்தலில்லன நல்லனநாடியுந்
தந்ததேவி தனயற்குக்காட்டியு
மந்தமாளியமர்ந்த மர்நாளிலே, (௩௦௭)



வேறு.

முற்றவுல கோம்பிவரு முனைநாளின் முடிசூடப்
பெற்ற மன்னர் மன்னவன்றன் பேருவகையுடனளித்தே
கற்றவாண் மணைப்புலவக்கதித்த பட்டந்தான் கொடுத்து
மற்றமனைக் கணித்தாக மாளிகையுந் தந்துவைத்தான், ௩௦௮)

அங்கில நூலறிவாள ஏருமைசொல வரைந்துவரு
மிங்கிலந்தி லுயர்புலவ னென்றிருந்தாலி வன்றிறமை
யெங்கிலங் காதாமரச னெய்துமாண் மணையிலிவ
னங்கிலங்கை யானருணாசலம் வரவை யறிந்தவன்றே, (௩௦௯)

கற்றவரைக் கற்றவரே காமுறுவ ரென்றாங்கே
யுற்றவொரு கடிகைவந்தே யுரையாடியு வந்ததன்மேன்
மற்றவாண் மனைநிகர்தன் மாளிகைக்குக் கொடுபோகி
யற்றமிலன் சிலவாரம மாவைத்தான் றன்னுடனே, (௩௧௦)

அருங்கலை தோரண ணையோ ரமர்புலவர்க் கொருவிருந்தாய்த்
தருங் லை தேர்தருமருணா சலக்குரிசி லங்கமர்நாண்
மருங்கலை சூழிலங்கைநின்றும் வருமவரைப் புலவர்சொல
வருங்கலை யாராண்மனைக்கு மன்னளளித்திட நினைந்தான், (௩௧௧)

பேருலகிற் போரசாம் பிரித்தானி ராச்சியத்தி
னேருலகி லில்லாம னிலவுமுடிக் குடும்பமம
ராருலகி லிந்நாளின ரண்மனையின் பொற்புகளைப்
பாருலகி லெடுத்துரைக்கப் பாவலருங் கருதுவரோ, (௩௧௨)

சுற்றுசுவர்ச் சூழலுள சுழலுமொளித் தேசாலும்
பற்றுபல கதவமைத்த பலவாய்தற் றேசாலுஞ்
செற்றுமுகத் தேசாலுஞ் சேர்முகட்டுத் தேசாலு
முற்றுமெடுத் திதன்றேசை மொழிவதற்கு முடியுமதோ, (௩௧௩)

பரந்தவொளிப் படிகமதோ பணியமைந்த சலவைகொலோ
சுரந்தமதிக் காந்தமதோ சுடர்வயிரச் சலாகைகொலோ
நிரந்தவிருடுமித் தெழுந்த நிலவுதனு னிலவுதனைத்
துரந்தவாண் மணையியற்றுந் தொழிலமை கல்லென்னகல்லோ,
(௩௧௪)

பொற்பியலும் பூச்செடிகள் பொருந்தவமைத் தொளிர்கதவம்
வெற்பினுயர் சிகரவகைமேல் விளங்குஞ் சித்திரங்கள்
கற்பியலுஞ் சாளரங்கள் கண்ணிகரு மாண்மனையிற்
சிற்பியலுங் காட்டிவைத்த சித்திரமே சித்திரங்காண், (௱௧௫)

கண்ணமைந்த வுள்ளகத்திற் கண்ணடிகள் சித்திரங்கள்
பண்ணமைந்த பட்டமைந்த பஞ்சவர்னப் பட்டமைந்த
வெண்ணமைந்த சோபாக்க ளிருந்தவிசு சாரணைகள்
விண்ணமைந்தவ வர்களுக்கும் விருந்தாக விளங்குமன்றே, (௱௧௬)

மணிமகுட மாராணி மகனுலகிற் பெரும்பிரிவை
யணிமகுடம் புனைந்தளிக்கு மரசபிரா னொருதினத்திற்
பணிமகுட மேந்துபுவி பகருமிந்தச் சீர்சிறந்த
துணிமகுட வாண்மனைக்குத் தொடர்ந்து வரவளைப்பனுப்ப, (௱௧௭)

மன்னவுயர் மரபினுக்குண் மதிபோல வந்துதித்தே
பின்னமகன் றிலங்கரத்தின் பிரபைந னிதந்துவருஞ்
சொன்னமகா தேவியுடன் றுரையருணா சலக்குரிசி
லின்னவகை வருமளைப்பை மிளிதாக வெடுத்துரைக்கும், (௱௧௮)

வேறு.

தாவியே யமுதவாரிதாராத விந்திரையே யான
தேவியே மடநல்லார்க டிலகமேமணிவி ளக்கே
யாவியே யரசன்றன்னு லாண்மனைக் களைக்கலானே
மேவியே நாங்கணுளை விருந்தாய்ச் சேறல்வேண்டும், (௱௧௯)

என்னலும் பாங்கினுற்ற விளமுலைக்கொவ்வைச் செவ்வாய்க்
கன்னலின மொழிவார்கூந்தற் கட்டழகுடைய நங்கை
மன்னவன் களிக்கச்சொற்ற மதுரவாசகத்தைக் கேட்டே
நன்னய வுரைகளாடி நயந்துவேறின்றி யுற்றார், (௱௨௦)

அத்த வெற்பணுகி யப்போதாதவன் மறைந்தகாலைச்
சுத்த நல்லுணவுமாந்தித் துயிலிடைப் பயிலல்கண்டே
வித்தகவேந்து தன்பான் மேவகான் றடையென்றெண்ணி
நத்த மற்றங்குநின்று நடந்தது விடிந்ததன்றே, (௱௨௧)



மன்னுதன் மாளிகைக்கே வரமகா வேந்துதம்மா
லின்னது நாழியென்றே யியம்பிமேற் குறித்தலாலே
துன்னுமத் தோகைதானுந் தோன்றலு மெய்துமாற்றாற்
சொன்ன நற்கடிகை நல்கிச் சூரியனுதயஞ்செய்தான், (௱௨௨)

காலையிற் கடன்கண்முற்றிச் கருதுண வருந்தித்தேமாச்
சோலையிற் குயிலினோசைத் தோகைவார் குழல்கைசெய்தே
வேலையின் முத்தமாலை விளங்கக் கச்சிட்டுமென்மைச்
சேலையின் மேன்மைத்தான சேலையு முடீஇயபின்னர், (௱௨௩)

அண்ணலு மாசுக்கேய்ந்த வணியுடை யுடுத்துத்தன்பாற்
பெண்ணரசான வன்னப் பெடையுடன் மெல்லச்செல்ல
வெண்ணமே லுவமையேலா விந்திரன் சுதன்மைநேரும்
வண்ணமாய் விளங்குஞ் ராசமாளியை யடுத்துவந்தான், (௱௨௪)

கன்னலுங் கசக்குந்தீஞ்சொற் கற்பினுக் கரசியான
சொர்னமான்றனையுங் கொண்டே துரையரு ணாசலப்பேர்
மன்னவன் களிமீக் கூரவாய்தலில் வருதல்காணா
வன்னமா ராணிதானு மரசனு மகிழ்வுபூர்த்தார், (௱௨௫)

வேறு.

தக்கமுறை தவறுமற் றந்துகரங்கொண் டளைத்துப்
பக்கமுறை சொர்னமின்னைப் பஞ்சவர்னச் சோபாமேன்
மிக்கவேகா சனத்திருத்தி விரும்பியதன் மேற்றானு
மொக்கவமர்ந் திருவோரு முறைவாடி யுவந்தனரால், (௱௨௬)

கொற்றவனுங் குரிசிறனைக் கொண்டிருத்தியின் மொழிதந்
துற்றபொழு தரசிபின்னு மோரறைக்கு ளுத்தமியைப்
பற்றகலா தளைத்தேகிப் படங்களிடைத் தானரிதிற்
பெற்றமகார் தமைக்காட்டிப் பெரிதுகளிப் புதவியபின், (௱௨௭)

பொன்னுடைய மணியிழைத்த பொன்மகுடம் புனைந்தபடி
யென்னுடைய திதுகாண்டி யெவ்வெவர்க்குங் கிடைப்பரிதா
லுன்னுடைய மனையகத்துக் கொளிகொடுக்கு மென்றெடுத்துத்
தன்னுடைய படமுமொன்றைத் தான்கொடுத்தாள் ராணியம்
மாள், (௱௨௮)

திருந்துமதி மேன்மையரைச் சேரவைத்துக் கொண்டாடிப்
பொருந்து முயர்மாளிகைக்குட் பொற்புமிகும் மாளிகைமே
விருந்துமுடி மன்னனொடும் ராணியம்மா ளிவர்களுடன்
விருந்துபெறு வாராயின் மேன்மையிதன் மேலுமுண்டோ, (௩௨௯)

இன்னவகை யானவெல்லா மெவ்வெவர்க்குங் கிடையாத
வன்னவகை யிருவரையு மாண்மனை மேற்கொண்டாடிச்
சொன்னவகை வழியனுப்பத் துரையுமுயர் பத்தினியு
மென்னவகை யெனக்களித்தே யிருந்தமனை வந்தமர்ந்தார், (௩௩௦)

பரிந்துவரும் விருந்துமொன்று பகருகிற் பேனல்விருந்து
விரிந்துவரு மண்டலங்கள் வெவ்வேறு மிவைபுரப்பான்
றிரிந்துவரு மாறடக்குந் தேசாதி பதிகடமைத்
தெரிந்துதெரிந் தெடுத்தெடுத்தே தேயமெங்கு மனுப்பிவைப்
போன், (௩௩௧)

அந்நாளிற் கேம்பிரிச்சி லமர்ந்துகலை தன்னுடனே
பன்னாளிற் கற்றுவந்தோன் பார்சுக்கு மேலமைச்ச
னிந்நாளிற் றன்மனைக் கணேந்திழையோ டெய்திடலும்
நன்னாளினல் விருந்து நயந்தளித்தான் மன்னனிவன், (௩௩௨)

வேறு

அவனிமண் டலங்கட் டேசாதிபர்களைத் தெரிவுசெய்யுங்
கவனமந் திரிக்குத் தானோர்கதித்தநல் விருந்தையூட்டிப்
புவனமேற் கண்ணேயாகப் பொருந்து மற்றமைச்சருக்கு
மிவனிவணமர வைத்தே யினியநற் களிப்புத்தந்தான், (௩௩௩)

பெற்றவன் றனக்குப்பிள்ளை பேசுங்கா விவனேயென்று
சொற்றிடப் பிறந்தமைந் தன்றாயமாதேவ மைந்தன்
கற்றிட வின்னுமின் னுங் கருதநன்மதியுஞ் செப்பி
யுற்றமேற் கேம்பிரிச்சி லுவக்கவேயமைத்து வைத்தான், (௩௩௪)

தேனிருந் திசைசெய் கூந்தற்றெரிவையுந் தானுமையள்
கோனிருந் தொருகோலோச்சுங் குறைதவிர்நகரே யான
வானிருந் திலங்கிற் றென்னவனப்புளவிங்கி வந்திற்
றூனிருந் தின்னுஞ் சின்னாட்டன்பெயர் நிலவச்செய்தான், (௩௩௫)



சீரிடைமூழ்கு மண்ணல் செப்பிய சிறப்பையெல்லாம்
பாரிடை மதிக்கப்பெற்றுப் பார்த்திபர் விடையும்பெற்றே
யூரிடை யுளங்கொண்டேக வுத்தமி தனையுங்கொண்டே
நீரிடை நெறியே யாகநிமிர்மாக் கலத்தில்வந்தே, (௩௩௬)

உளமாக் கலத்துநின்று முபலங்க ணதிகடோட்டங்
களமாக் கழனிகன்னல் கமுகுநீள் வேலிவாழை
பழமாப் பலவுசூகம் பச்சிலை மாமசோக
விளமாக் காவுமெங்கு மிலங்கிலங் காவைச்சேர்ந்தான். (௩௩௭)

## சுகாதாரம் செய்தல்.

வீடுக ணெருக்கினாலும் வீதிக ளொடுக்கினாலு
மூடுக ளிலாமையாலு முறுநகர் களடர்தலாலுஞ்
சூடுகளெழுதலாலுஞ் சுதந்தா ரலாத மற்றை
நாடுக ணகரினுள்ளோர் நாளும் வந்தமர்தலாலும், (௩௩௮)

நெருக்குறு கருமமுற்ற நேரிட மிலாமையாலு
மிருக்குறு மனைகளுக்கே யேற்ற நீரிலாமையாலு
மொருக்குறு மனைகளூடே நச்சுக்காற்றுலாவ லாலுந்
தெருக்குறு கான்கண் மாரிச்சிதநீர் நிலைத்தலாலும், (௩௩௯)

தொற்றுநோய் காணின் மெல்லத்தோற்றிடா தமர்த்தலாலு
மற்றவரி றப்பின்மாலை மறைத்துப்போய்ப் புதைத்தலாலுஞ்
சொற்றத தம்மனைகளுள்ளே தூயகாற்றிலாமை யாலுங்
குற்சமேயான வஞ்சக் கொலைகணேர்ந் திடுதலாலும், (௩௪௦)

உற்றமர் மாக்களுக்கே யுறவுநோய் வருதலாலுஞ்
செற்றிய வகங்களெங்குஞ் செத்தைக ளுறுதலாலும்
பற்றவே றினைத்தேயான பான்மைக ளிருத்தலாலே
சொற்றவிப் பட்டணத்திற் சுகமிலையென்று தேர்ந்தான், (௩௪௧)

பேருடனிற்க நிற்கும் பெருந்தருமங்க ளாற்றி
யூருடன் வதிவோர்க்கின்னு மோங்கரு ணாசலந்தா
னேருடனின்றி மன்னு நெடுநகர் நாடுதோறுஞ்
சீருடன் சுகாதாரங்கள் செய்யவே சிந்தைசெய்தான், (கூசஉ)

அத்தம துடையரேனு மருங்கலை யுடையரேனு
முத்தம வுத்தியோக முடையவரேனுந் தர்மச்
சித்தம துடையராகச் சீருணா சலம்போ
லொத்தம ரொருவரிங்கே யோதிடற்கரிது போலும், (கூசஙு)

ஆலிவணநாதை யாதி யணைவர்க்கு மூபாதியுண்டாற்
சாலிவண் சுகங்கணுடித் தருவது முறையாமென்றே
கோலிவண் செய்தற்கொத்த குறைகளைக் காட்டிக்காட்டி
மேலிவண் சுகாதாரங்கள் வேந்தொடு முசாவலுற்றான், (கூசச)

நீடுவரி லங்கையாளு நிருபனே காண்கவந்தக்
காடுவன் னாட்டிலுள்ள கடுஞ் சுரமாதியாய
சாடுவன் னோய்களுண்டாற் றகுஞ் சுகமெவையுமில்லைக்
கேடுவந் துறுதமுன்னிக் கேதங்களகற்ற வேண்டும், (கூசரு)

என்றுதான் வரைதலோடு மிலங்கை மன்னவனும்பாரா
வொன்றுதான் மனத்தினுன்னி யுதவிய வுதவிதன்னா
லன்றுதான் றொடக்கமாக வணிநகர் நாடுகட்ட
நன்றுதான் கருதியையனற் சுகாதாரஞ் செய்தான், (கூசகூ)

நிறைதரு நகரினுக்கு ணெடுந்தெருக் குறுக்கதெங்கும்
குறைதவிர் நீரைக்காலுங் குழாய்களை வைக்கச்செய்தான்
மறைதர வவதிதோறு மலசலங் கழித்தற்காகத்
தறைதர நாடிப் பற்பலுணங்க ளமைக்கச்செய்தான், (கூசஎ)

பண்டிகள் சனங்களெங்கும் பரவியே செல்லும்வேலை
மிண்டினரிலாமற் செல்ல வீதிக ளகட்டச்செய்தான்
எண்டி ணந்தோறுந்தோறு மெழிலிகளெழுந்து பெய்த
மண்டின நீர்கள்பாய மதகுக டிறக்கச்செய்தான், (கூசஅ)



தொல்லகப் பாங்கர்சூழ்ந்த தாலுகள் களைவித்தின்
சொல்லகச் செதுக்கைபோக்கிச் சுத்தமே செய்யச்
எல்லகத்தூடு நல்லவிதமுள காற்றுச் செல்லப்
பல்லகச்சுவர்க டோறும் பலகணி யிடவுஞ்செய்தான்.
தொற்றுநோ யின்னுமின்னுந் தோய்ந்திடா வண்ணஞ், (கூகூஉ)
மற்றவர் தம்மைவைத்தே வயித்தியஞ் செய்யவைத்தான்
சொற்ற நோயதனின் மாழ்கித்துஞ்சினர்ப்பு தைக்குமுன்னம்
வெற்ற வெள்ளிடையில்வைத்தே விசாரணை நடத்தச்செய்தான்
(கூரு

ஊறிய விரக்கமில்லா ருயிர்ப்பழியதனை யஞ்சார்
மாறிய திருடரிந்த வஞ்சருக்காக வெண்ணி
யேறிய விரவுமுற்ற விராணுவ வீரரான
தேறிய காவன்மேலுந் தீபமு மமைக்கச்செய்தான், (கூருக)

தந்தைமுன் கொட்டாஞ்சேனை தந்திடுமீ மந்தன்னை
யிந்த நாளெடுக்கவந்து மெடாவகை நிறுத்திவைத்தான்
சிந்தவே தெருவுக்காகத் தீவினிற் சிவாலயத்தை
யந்தரா ளிடிக்கவந்து மடாதெனத் தடுத்துவைத்தான், (கூருஉ)

இன்னவா றனையாவு மேந்தலா ரெண்ணியெண்ணி
நன்னக ரதற்குவேண்டு நற்சுகாதாரஞ் செய்தே
சொன்னவை யொழியமேலுஞ் சூழ்ந்தன னவற்றுட்கல்வி
மென்னலப் பாலர்கற்கும் விதாலயங் கூறலுற்றேன், (கூருஙு)

வேறு.

ஆற்றலுள சாதனத்தின் சென்றலெனத் தத்துவத்தோடமருங் கால, மேற்றமுள சனத்தொகைகளெடுக்கையிலே சனமதிக மிறந் ததெண்ணி, நாற்றமுள காற்றழுக்கு நீரிதற்கோ ரேதுவெனநாடி யையன், றேற்றமுள நல்லசுகா தாரமெலாமாசுதவச் செய்துவைத் தான், (கூருச)

பாவுநகர் தொறுமுறுபல் லாயிரத்து மேலுமுளபாலரிங்கே
யிரவுபக லாட்டயர்வ ரலதுகலைகற்கவிட மில்லையென்றே
காவகலு மருந்தரும னீதுபெருந்தருமமெனக் கருதியந்நாள்
விரவுவிதா லயங்களிந்தப் புரமுழுதும்வேந்துதவ விளைந்துவைப் பான். (கூருரு)

## விதாலய தாபனம்.

பேருடனிற்க
யூருடன் வதி
னேருடனின்,
சீருடன் சுகாணிவழிபோகுங்கா

னமுமைக்குதவுறு
அத்தம
த வொருபொருள்கல்வியே
முத்தம
ங்கிது செல்வத்துட்செல்வமே, (௯௫௬)
சித்

னமிக்கது தானதுவேயன்ன
தானமாமெனிற் சாரும்பசிமட்டே
தானமென்னத் தகுமதுவித்தியா
தானமா மதுசாற்றவும்வேண்டுமோ, (௯௫௭)

கற்றகல்விக் கடற்கரைகண்டவன்
பெற்றஞானத்தின் பேரறிவாள்பவ
னுற்றதர்மத் துறுபயன்றேர்பவன்
சொற்றசீர்த்தித் துரையருணாசலம், (௯௫௮)

பன்னுஞ்சீருடைப் பட்டணமீங்கிதின்
மன்னுகின்றவர் மாணவப்பாலர்க்காய்
முன்னுபள்ளிகள் முற்றவும்வைத்திடத்
தன்னுளத்திலித்தர் மத்தைமுன்னியே, (௯௫௯)

பிரசமென்மொழிப் பிள்ளைகள்கற்றிட
வரசனோநனி யாகுந்துணைதர
பரசவென்றும் படிபுகழ்சீரினன்
விரசவெங்கும் விதாலயம்வைத்திட்டான், (௯௬0)

நீசசாதிக வீடுங்கொளும்பினிற்
பேசநேரும் பிறமொழியென்றுதான்
தேசசாகிய செந்தமிழூட்டுற
நேசமாக நினைந்தனனேவண்ணல், (௯௬௧)



## வேறு.

பெற்றவாண் மகாரினோடு பெண்மகார் தாமுமாக
முற்றவே கலைகள் கற்பான்முதலிலோர் பாடசாலை
சுற்றிய மனைகளாலுஞ் சூழ்ந்தமர் சனங்களாலுஞ்
செற்றிய தானமாகுஞ் செக்கடித்தெருவில் வைத்தான், (௯௬௨)

அரியசெந் தமிழுமின்னு மாங்கில மதுவுங்கூட
வரிபெற வெழுதிக்கற்க வருநெடுங் கணக்குத்தொட்டே
தெரியமேற் கலைகளெல்லாந் தினந்தினம் வந்துவந்து
விரியவே பயிலுமாறு விதானமு மமைத்துவைத்தான், (௯௬௩)

உற்றவிக் கழகிற்கற்றோ ருயர்தர வுத்தியோகம்
பெற்றன ரின்னும் பல்லோர் பேரறிவாளரானார்
செற்றவே பின்னும்பின்னுஞ் செல்வமா நகரினெங்கு
மற்ற மிலாங்கிலத்தோ டருந்தமிழ் கற்றற்காக, (௯௬௪)

ஈன்றவர் தமினுந்தானே யினியதோர் தாதாவாக
வான்றசீர்ச் சிறுவருக்கே யருங்கலை யமுதமூட்டச்
சான்றபே ரறிவினாலுந் தகுந்ததரு மத்தினாலும்
போன்றவ ரிலாதநம்பி புகல்விதா லயங்கடந்தான், (௯௬௫)

கோவியநகரியான கொளும்பினி னெங்கு மெங்குந்
தாவிய கழகநாடித் தாபித்த பின்னுமைய
னேவிய தாங்களாய்ந்தே யிதற்கிது சாலுமென்ன
மேவிய பாடங்கட்காம் விதானமு மமைத்துவைத்தான், (௯௬௬)

இன்னவா றுகவேந்த விளைஞர்பா வீரக்கம்வைத்தே
மன்னுமா றந்நாளின் மாண்பெற நிறுவித்தந்த
சொன்னநற் கழகம்யாவுந் தோற்றமா யிந்நாளிற்
பின்னமற் றிலாமலோங்கும் போறமிதுவே யன்றோ (௯௬௭)

## பரமகுருசாமி சமாதித் தாபனம்.

ஆத்தலை கறித்துக் கிட்டவணை தருமளவு மேதி
காத்தலை யுறங்குகின்ற கல்லகந்தோறுந் தேயின்
மீத்தழை யெடுக்குந்தோட்டம் விரவியே யெங்குமன்னு
மாத்தலை யெனவேயென்றும் வழங்குப நகரொன்றுண்டால், (௬௮)

இத்தகு நகரின்மேனாள் யாவர்க்குங்காட்சி யீந்தான்
தத்துவஞானம் பெற்றோன் றாணியை வெறுத்தமுத்த
னெத்தகை யிடத்தும் நிற்போனிராப் பகலறியாயோகி
சித்தமா யீவோர்க்காகச் சிற்சிலபோதி லுண்போன், (௬௯)

பக்குவமுடையோன் பச்சைப் பாளிதங்கண்ணி னப்பி
யக்கண மபிடேகஞ்செய் தடிபணி மகத்துத்தன்பாற்
புக்கவர்கருதத் தெய்வப் புதுமைகள்காட்டி மேலு
மக்கடம் பாலின்வேண்டும் வரங்களுங்கொடுக்குஞ் சித்தன், (௭௦)

### வேறு.

ஞானநனிபெறுமிவன்பா னயந்துமனஞ் சென்றிடலு நாடிநல்ல
மானமுள வில்வாழ்வானிவர்க்குதவி புரிவதுதான் வழக்கமென்றே
வானமுற வளர்சீர்த்திசோருணை சலந்துரை தன்மனத்திலுன்னி
யீனமில தாமருந்தோ டுணவாடையென் றிவைகளினிதுநல்கும், (௭௧)

சொல்விதமே வருநாளிற் சாமிசெய்ததொல்லைவினைத் தொடர்பு முற்றப், பல்விதமே யானவறம் பேணுமருணாசலவேள் பணியத் தக்க, நல்லவிதமாஞ்சமாதி யவணமைத்துக் கட்டியின்னும் நவிலு நாள்க, ளொல்விதமே பூசைநிய மனமுமுடன்செய்தனனு லொழுங்கினுங்கண். (௭௨)

## யோக சாதனை.

சோறுலயுந் தனிச்சோழ மண்டலத்துத்தலைநகராய்த்துலங்குகின்ற
வீறுலவுந் தஞ்சைநக ராண்டுவந்த சரபோச வேந்தன்பின்ன
ரேறுலவுஞ் சிவாசியிவன் பின்புவருஞ் சரபோசியிருந்தவந்நாட்
கூறுலவும் வேந்தனுக்குங் காலமுணர்ந் துதவியசீர்க்குடும்பமுள்ளோன், (௭௩)



அகழ்ந்துவருந் திருமாலு மறியவரியமலரடியோனமர்ந்து மன்னு, முகழ்ந்துவருங் கயலுழக்குங் கழனிவளக்காளியின்கண் ணுதித்த பிள்ளை, புகழ்ந்துவருந் தலங்கடொறுந் திருப்பதிகத்தார் சாத்திப் போற்றியெங்குந், திகழ்ந்துவருந் திருஞானசம்பந்தப் பரம்பரையிற் றீக்கைபெற்றோன், (௭௪)

அஞ்ஞான மூலகமென வுணருமிந்தவருளபரா னந்தனென்னுஞ்
சிவஞான யோகிதன்பாற் சிறந்தசிவஞான முதற்றிருந்தக்
கற்றே, நவஞான நிட்டையனுபூதிகளிற் பயிற்சிகளு நன்குமுந்
நாட், டவஞான னெனவிருந்த தேசிகனைச்சமாதியினுந் தருவ
தானோன், (௭௫)

நன்னாளிற் றனக்குநிட்டை ஞானமுடன் பயிற்றிவந்தஞானி
சொன்ன, வந்நாளிற் றேசிகனே யாமருளபரானந்தனையன்
றன்னைத், தன்னாளி னவனகரேயான தஞ்சைமாநகரிற் சமாதி
வைத்துப், பின்னாளிற் பூசைசெயவரும்பொருளு மனுப்பிவரும்
பேசுமின்னோன், (௭௬

சொன்னசொல்லன் றுரை யருணாசல
மன்னனிந்த மனுநெறி தன்னுட
னின்ன தேயத்தினூழிய னீதலா
லன்ன யோகத்திலாற் றரும்வல்லனால், (௭௭)

ஆசிலாத வருள பரானந்த
தேசிகன்றனைச் சேர்ந்து தினந்தினம்
வாசியேற்றி யிறக்கும் வழிகளை
மாசிலாமற் பயின்றனன் வந்தனன், (௭௮)

நீதிமன்னென நேர்ந்துறை யந்தநா
ளாதியாக வடுத்தடுத் தென்றைக்குந்
தீதிலா தவத்தேசிகன் றன்னிடம்
பேதியாவருள் பெற்றுத் திருந்தினாள், (௭௯)

1931 C.C.

அந்தவேலை யமர்ந்தினைப் பாறிட
வந்தநாளின் வழியினியீ தென்றே
மந்தமின்றி மௌன நிலையினைச்
சந்தமாகவே சாதனஞ் செய்தனன், (சூ௮0)

வேறு.

மடுத்த நித்திரையினின்றும் வைகறை யெழுந்தேயைய
னடுத்த நித்தியமேயான வவசியகரும முற்றித்
தொடுத்த சுத்திகளேயாகுஞ் சுத்திகளிரண்டுஞ் செய்யாப்
படுத்த வெண்பட்டின்மீதே பங்கயாசனமாய் வைகி, (சூ௮க)

தூய வெண்ணீறு பஞ்சாக்கர செபத்தோடுதோற்றக்
காய மெங்கணுமே பூசிக்கருத்து வேறிலனேயாகி
மாய மென்றுன்னவாங்கே வாகியை யேற்றியேற்றி
மேய மெய்யசைதலின்றி மெல்லவே துரியஞ்சேர்த்தி, (சூ௮உ)

தேடரும் நிலையிலங்கச் சேட்டைகளேதுமின்றி
நாடரும் பரான்மாவோடு நாட்டமாய் லகித்தேயென்றும்
நீடநாழிகை மட்டுக்கும் நிட்டைமேலிருந்து வந்தா
னோடமே போலுமிந்த வுடம்பினாலுறுதி யீதே, (சூ௮௩)

எழுவகைப் பிறவியாலு மெடுத்த புண்ணியங்களாலே
வழுவறு மனுவாயிந்தப் பாக்கிய பூமிவந்தாற்
றொழுவரும் கல்விசெல்வந் துலங்கவே பெற்றிட்டாலுந்
தனவரும் யோகஞானந் தான்பெற லரியதாமே. (சூ௮ச)

ஏர்தரு முத்தியோகத் தெதிரிலா வுயர்ச்சியாலுஞ்
சீர்தரு மனைவியாலுஞ் சித்திர மகாரினாலுஞ்
சேர்தரு செல்வத்தாலுஞ் சிறந்து மேலோங்கியென்றும்
வார்தரு மீழநாட்டின் வாழ்வுகூர்ந் தமருநாளில். (சூ௮ரு)



## இராசாங்க அந்தரங்க மந்திரித்துவம் பெறுதல்.

இந்தவிலங் காபுரியை யிருதோழிற் சுமந்துகொளா
வந்தமுறை யாராய்ந்தும் வருமுறைக ளாராய்ந்துந்
தந்தசட்ட நெறிநிறுவித் தனிக்கோலை நேர்செலுத்த
வந்தரங்க மந்திரிக ளைவருள ரமைச்சியற்கே, (சூ௮௬)

திருத்தியிவண் டென்னிலங்கைத் தேசாதிபதி யிவன்றன்
கருத்தினுடன் காவலற்குக் கண்ணோராய் வருவாய்கள்
விருத்திசெயும் வகைகளையும் வேந்திய வினெறியைமுறை
பொருத்திவரும் வகைகளையும் புத்திகளின் வகைகளையும், (சூ௮எ)

பெரியபிரித்தானி யெனும் பேராசைச் சுமந்துவாற்
குரியமுதன் மந்திரிமுன் னுவனரசுக் குதவுதலை
யரியபெருந் திறமைகளை யாராய்ந்து தனக்கெழுதித்
தெரியவிவண் விட்டிருந்த திருமுகத்தின் வகைகளையும், (சூ௮௮)

நேராய்ந்து திறமைகட்கு நேராருமில்லை யென்றே
சீராய்ந்து கோனடத்துந் திறலருணா சலந்தனக்குப்
பாராய்ந்து கொள்கவெனப் பகர்நான்காங் கிலர்களுட
னாய்ந்து மந்திரியா மதிகார மளித்ததன்மேல், (சூ௮௯)

ஆட்டமுள வரசியலை யடுத்துவரும் விதிகளைநீ
காட்டிவருந் திறமைகளைக் கண்கூடா முண்மைகளை
நாட்டமுட னாடியின்று நானுனக்கு மந்திரியா
மீட்டமுள வதிகார மீந்தனனென் றெடுத்துரைத்தான், (சூ௯0)

காலமிதி னமைச்சுரிமை காவலனாற் பெற்றளவி
லேலுமிவ னெங்களுக்கு ளேற்றததி யற்புதமென்
றுலமனங் களிகூர்ந்தே யகந்தூயரானவர்கள்
கோலமிக வலங்கரித்தே கொண்டாட்டஞ் செயநினைந்தார், (சூ௯க)

## வேறு.

பொங்குபே ருவகைபூப்பப் பொன்கிளர் மனைக்குமுன்பாற்
கொங்குசேர் மாலைநாற்றிக் கொடிவகை துலங்கவேற்றித்
தங்கவேயகத்தி லெங்குந் தாந்தாமறிந்து வல்லோ
ரெங்குமாசனங்கள் வைத்தே யிமையவரவை போற்செய்தார் (௬௯௨)

எல்லவர் தமக்குமெய்தா தேறுசீரமைச்ச ரானோர்
தொல்லை நன்னீதிமன்னர் துரந்தார் பெறுதற்கொத்த
சொல்லரும் பட்டம்பெற்றோர் துரைமக்க ளறிவிற்சால
வல்லவரதிக மேன்மை வரும்பிரபுக்க ளோடும், (௬௯௩)

இன்னமு முத்தியோகத் தேறிய நிலைமையோருஞ்
சொன்ன பேரமைச்சனுகித் துரையருணு சலந்தான்
முன்னுகீழ் நாட்டினோர்க்கு முதன்முதல் வழிதிறந்தா
னென்னவே யெய்தியெய்தி யீண்டினர் குழுமிமொய்த்தார், (௬௯௪)

இவ்வியலவைக் கண்வைகு மிலங்கைமே லுயர்ச்சித்தான
வவ்விய லாளர்தங்க ளவிர்முகங் கமலமாகத்
திவ்விய மதிவல்லோனுஞ் சோருணுசலந்தான்
செவ்விய தினகரன்போற் றிகழ்ந்துவீற் றிருந்தானங்கண், (௬௯௫)

நாடு மங்கவர்க்குத் தானோர் நாட்டமேயாகவைகக்
கூடு சேர்ப்பட்டம் பெற்றோன் கொயிலன்பேக்கென்னுமின்னோ
னீடு சோமைச்சேயாக விலங்கருணு சலத்தின்
பீடு சேர் திறங்கள்காட்டிப் பேசுவானினையவாறே, (௬௯௬)

மாற்றமென்னிந்த வேந்தல் வல்லபந்தனக்கு வாய்ந்த
வேற்றமாம் வேலையெப்போ தெய்துமென் றெதிர்பார்த்துற்றே
மாற்றவே யந்தாங்க வமைச்சனுய் வருதலாலே
தேற்றமேயாக நாங்கள் சிந்தைமேலுவகை பூத்தேம், (௬௯௭)

பார்பெற நாடுநீதி பதியென வமருங்காலம்
நேர்பெற நிஞாயச்சட்ட நெறிகளை நிறுத்திக்காட்டி
யூர்பெற வழக்கைத்தீர்க்கு முபாயத்தின் திறமைகண்டேஞ்
சீர்பெறச் சிவில்லோவந்நாட் டிருத்திச்செய் ததுவுங்கண்டேம், (௬௯௮)



பர்விய நிலங்கட்காகப் பத்திரச் சென றலாகாக்
கரவிய லாய்ந்துகண்டே கள்ளமே யிலாதவண்ணம்
விரவிய சாதனங்கள் விளக்கமாய்த் திட்டச்செய்த
வுரவிய வல்லபத்தி னுயர்ச்சிகண் முழுதுங்கண்டேம், (௬௯௯)

இன்னன சேவையானீ யெடுத்தபேர் மதிப்பாலிந்நாண்
மன்னவற் கமைச்சனுய் மறிகட லிலங்கையோர்க்குச்
சொன்னவா றுகநீயே சுகமெலாஞ் செய்தல்வேண்டு
மென்னவே கொயிலன்பேக்கங் கெடுத்தெடுத் தியம்பியுற்றான், (௭௦௦)

பின்னரும் பாபாவோடு பீரிசென் பவனுமின்னு
முன்னரு முத்தியோகத் துயர்ந்தவராயுள் ளோரும்
மன்னருந் தலைமைபெற்ற மந்திரிதன்னை நோக்கிப்
பன்னரும் மதிப்புக்காட்டிப் பகர்ந்தனர் வேறுவேறே, (௭௦௧)

நன்மதி யமைச்சனுய் நன்றதேயாகும் நாடிற்
பொன்மதி யுடையோ யிந்தப்புணரிசூ ழிலங்கைமுன்னாட்
டன்மதி கொண்டுசெய்த தவமென லாகுமென்றே
தொன்மதியாளர் தத்தந் துணிபுகளெடுத்துச் சொற்றார், (௭௦௨)

ஏதமந் தாங்கணோரா தீழநாட்டி னரைக் காக்க
வேதமந் திரங்ளொக்கும் வேத்தியன் முறைநோக்கி
நீதமந் தாங்கம் யாவும் நிருபனுக் குணர்த்தவந்த
போதமந்திரியை நோக்காப் பொதுசனர் வேண்டிச்சொல்வார், (௭௦௩)

பொன்னவி ரிலங்கைசெய்த புண்ணியமாகத் தோன்றி
யுன்னரும் நலங்களெங்கட் குதவுறுமமைச்சர் கோவே
மன்னவ னேற்றிவைத்த வரிகளைக் குறைக்கவேண்டு
மின்னமு மேழைகட்கே யிதஞ்செய்துவருதல்வேண்டும், (௭௦௪)

ஈங்கிவரினைத் தேயாக வெடுத்தெடுத் தரிதிற்காட்டிப்
பாங்குள வுபசாரங்கள் பகர்ந்தனர் முடிந்தபின்ன
ரோங்கிய வவைக்கண்மேவு மொளிர்மதி யமைச்சர்கோமா
னுங்குளவவர்கள் யார்க்கு மரியசன்மானஞ் சொல்வான், (௭௦௫)

சீர்செயு மீழநாட்டிற் செலுத்துறுஞ் செய்யசெங்கோ
னேர்செயும் போதிலாளும் நிருபற்கும் குடிக்குநன்மை
தார்செயுந் தோழமைச்சன் றாசுபோ னடத்துமாயின்
பார்செயு முயிர்கள் செய்யும் பாக்கியமென்னலாமே, (எ0௬)

பக்கமேற் சாராப் பொற்கைப் பாண்டியனென்றுசொல்லத்
தக்கவன் றருமந்தானே தானுருவெடுத்த தொப்போன்
மிக்கவ னமைச்சர் வேந்தாய் விளங்கருணாசலந்தன்
னொக்கவர் தாமுங்கேட்ப வுளக்கருத் துரைத்தான்மன்னோ, (எ0எ)

உற்றிவண் கருமம்யாவு முயாவைக் கேற்குமாறே
செற்றிவ ரெடுத்துப்பேசித் தீர்ந்தன ரீதுநிற்க
பெற்றிவ ணரசை யோம்பும் பெருமைசேரைவராக
மற்றிவ னுரைத்தவிந்த மந்திரர் கடமைசொல்வேன், (எ0அ)

மன்மதி யுடையோனிந்த வளமலியிலங்கை வேந்தன்
றன்மதியாலே யொன்றைத் தாபிக்கமுடியுங் கொல்லோ
வன்மதியுடைய வைந்து மந்திரரொருங்கே தங்கள்
கொன்மதி கொண்டேயாய்ந்து சம்மதங் கொடுத்தல்வேண்டும், (எ0கூ)

நவையுள வெனினுமின்னு நவையில வெனினுமாகக்
குவையுளராக வொன்று கூடியே யணையசட்ட
சவையுள வமைச்சரானோர் தரும்பிரமா ணமிந்த
வவையுள வைவரானு மழித்திட நாட்டவேனும், (எக0)

குற்றமே யாகத்தீர்த்த கொலையையும் வேந்தனோடு
மற்றிவ ரிரக்கங்காட்டி மன்னிப்புத் தாலுமாகு
முற்றவிவ் வமைச்சர்தாமே யுலகையாண் முறைகடம்மை
யிற்றெனக் காட்டிமன்னற் கிலங்குகண்ணாக நிற்பார், (எகக)

மானுள வமைச்சேயாக மன்னவ னமருநாளிற்
கோனுள விலங்கைவேந்தன் கூடுமோ தனக்கென்றெண்ணான்
சானுள தேனுமின்னுந் தன்னது மேலைநாட்டின்
மேனுள வாங்கிலர்க்கே வேதனங் கூட்டவந்தான், (எக௨)



நால்வரு மாங்கிலேயர் நானொரு தமியனென்று
மேல்வரும் விளைவென்னென்றும் விடுங்கொலோ நெறியிற்றப்பா
மால்வரு மமைச்சேயன்றோ மற்றிவன் மறுத்துச்செய்ய
கோல்வரு மாசனோடு கூற்றெதிர் கொடுத்துநின்றான், (எக௩)

சொற்றிடத் தகுமோவீது துரையென விகிதமேற்றின்
மற்றிவர் கொடுத்துவந்த வரிகளை யேற்றவேண்டுஞ்
செற்றினர் வறிஞர்தாமே செல்வருஞ் சிலவருண்டாற்
குற்றமே யாகுமன்றோ குடிகளை வருத்தலாமோ, (எக௪)

ஆங்கில ரங்குநின்று மாறுசென் றிடுதலாதி
யோங்கிய செலவுகாட்டி வேதன முயர்த்துவீரேற்
றேங்கிய வளங்கடம்மாற் றிகழுறு மிலங்கையென்னு
மீங்குள நமர்களுக்கு மேற்றுமென் றேற்றிவைத்தான், (எக௫)

என்றிவ னெடுத்துக்காட்டி யிலங்கைமன் மறுக்காவண்ண
மன்றினர் தமக்குமொக்க மனுநெறி முறைகள்செப்பித்
துன்றிய வாங்கிலேயத் துரைகள்வே தனத்திலேற்ற
மன்றிவன் றிருத்திவைத்தா னமைச்சனு மிவனேயன்றோ, (எக௬)

ஈதுதானென்றோ வின்னு மிலங்கைமே லெமர்கட்கென்று
மோதுவா னுயர்ந்தவுத்தி யோகங்க ளுதவச்செய்தான்
மீதுதா னேற்றியேற்றி வேதனம் வழங்கச்செய்தா
னேதுதான் செய்யானைய னின்னமு மனேகமுண்டால், (எகஎ)

சலநிதி கடத்தலின்றிச் சாதியைப் பிரிதலின்றி
யிலநிதி தணத்தலின்றி யிங்கிலந் தேகலின்றிக்
குலநிதி விளைவுசாலுங் கோடுசூழிலங்கைமீதிற்
பலநிதி செலவுமின்றிப் பட்டங்கள் பெறவுஞ்செய்தான், (எகஅ)

பண்ணமை வேடம்பூண்டு பாண்டியற் கமைச்சாய்க்காட்டி
வண்ணமாம் பரத்தைத்தேடும் மாணிக்க வாசகன்போன்
மண்ணா சனுக்கேயிந்த மந்திரியாக வைகி
நண்ணுதன் நாட்டவர்க்கே நலங்களைச் செய்துவந்தான். (எககூ)

## இங்கிலாந்தில் நயிற்பட்டம் பெறுதல்.

ஓங்குபெருந் திருவினொடு முயர்ந்த வுத்தியோகமொடும்
வாங்குபெருஞ் சீர்த்தியோடும் வாழ்ந்துவருங் குரிசிலுளந்
தாங்குமன்பு தலைக்கூடத் தலைமகனைத் தான்காண்பா
னீங்குநின்று மிங்கிலந்துக் கேகமனம் வலித்தெழுந்தான், (௭௨௦)

நலமுறு நாளிலிவ னற்பயணமாகி வந்து
சலமுறுந் திரையூருஞ் சலதிவழி தானூருங்
கலமுறுங் காலையவண் கடல்வளங்கள் கண்டுகப்பற்
குலமுறு மிங்கிலந்துக் குலவுதுறை முகமணைந்தான், (௭௨௧)

துறைமுகம்வந் தழைத்தமகன் சுகம்வினவுந் தாதையரை
நிறைமுகந் தந்தன்னையரி னீடுசுகந்தான் வினவிப்
பொறைமுகஞ்செய் தம்பியரின் பொலிந்தசுகம் வினவிநுதற்
பிறைமுகஞ்சேர் சோதரிகள் பெருஞ்சுகமும் வினவினனால், (௭௨௨)

ஈகையுடன் செல்வம ரிங்கிலந்தின் வீதியிலே
வாகையுடன் வருமகனு மன்னவனு முளத்தெழுந்த
வோகையுட னுலவிவந்தே யுயர்வுடைத்தா யுலவுகின்ற
சாய்கையுடன் வந்தமர்ந்தார் தக்கவர்கள் கைவழங்க, (௭௨௩)

கற்றவர்கள் கற்குநர்கள் காவலரிற் கதிப்புமிகப்
பெற்றவர்கள் பேற்றினர்கள் பேரசி னமைச்சினர்கள்
மற்றவர்க டினந்தினமும் வந்துவந்து களிகூரச்
சொற்றமக னுடனமருந் தோன்றலுடன் கலந்தமர்ந்தார், (௭௨௪)

பாரிலங்க வைத்தாலும் பலவரசர் தாமிருந்தும்
பேரிலங்க வருமரசு பிரித்தாணி தானலவோ
நேரிலங்க மண்டலங்க ணில்லாத பலவகைத்தாஞ்
சீரிலங்கை தன்னிலின்னுந் திருத்தவகை யதிகமுண்டால், (௭௨௫)



ஆய்ந்தமருங் குடிகளுடை யைந்துவகைப் பகைதவிர்த்த
லேய்ந்தவளம் பெருக்கிடுத லேற்றவகை கோல்செலுத்தல்
வாய்ந்தவகை சுகமளித்தல் வரிகடக வைத்திடுதல்
வேந்தரா சளித்துவரும் வேத்தியலின் முறைமைகளே, (௭௨௬)

கோதினெறி நடத்திவரிற் கோவினுக்குக் குறைவருமோ
சாதிநெறி சமயநெறி தருமநெறி யென்றிவைக
ளாதிநெறி யானவெலா மருகாமல் வருவதுவே
நீதிநெறி யாமிவைக ணிருபாருங் கடமைகளே, (௭௨௭)

இன்னவகை வருவாயு மெடுத்தருணா சலக்குரிசி
லென்னவகை யின்னமுநீ ரிலங்கைதனக் காற்றுமெனச்
சொன்னவகை யேசூழ்ச்சித் துணைவரிசைந் தவ்வூருக்
கன்னவகை யானவெலா மாற்றுவமென் றுரைத்திருந்தார், (௭௨௮)

தண்ணளியா லமைச்சியலாற் றக்கமுத லமைச்சனிந்த
வண்ணலரு ணாசலத்தை யாற்றவுந்தா னுண்ணயந்தே
கண்ணியனே யெனக்கருதிக் கலந்துமகி யாய்ந்துவருந்
திண்ணியமந் திரிகளுடன் சேரவைத்துத்தா னுரைப்பான், (௭௨௯)

மீத்துவரும் படைகளுடன் மேவலரை வென்றிலங்கை
காத்தவவர் கையினின்றுங் கையாடு மாங்கிலர்கள்
வேத்தியலை யக்காலம் வெவ்வேறு யாராய்ந்து
கோத்துவந்தோ னுன்பாட்டன் கூறுவதென் யாரறியார், (௭௩௦)

உற்றமகன் மாராணி யுவந்துதன்முன் வைகவைத்து
முற்றவுணர்ந் தேகொடுக்க முதலினயிற் பட்டமதைப்
பெற்றிலங்கை கொண்டுவந்த பெருந்தகையான் செப்புவதென்
மற்றிவனு முனதருமை மாதுலன்காண் கண்கூடே, (௭௩௧)

இலங்கைநக ராசியலுக் கின்றளவு நீயுழைத்த
நலங்களுள வல்லமைக ணயந்துநயந் தெழுதிவந்த
கலங்கலிலா வகைதெரித்துக் காட்டுவன பத்திரங்க
டுலங்கநயிற் பட்டமினிச் சூடுதலு முனக்குரித்தே, (௭௩௨)

நாடுமுடி வேந்தனக்கு நயந்துநயிற் பட்டமினிச்
சூடுமென வெடுத்துரைத்தே சூழுமதி யமைச்சனவண்
கூடுமவர் தன்னுடனே கொண்டாடி பெழுந்திருக்க
நீடுமருணாசலவே ணின்றுமனை யகத்தணைந்தான், (௭௩௩)

சீரோங்கு மிலங்கைதனிற் றிலகமிவ னாசியனுக்
கேரோங்கு கடமைகளை யேற்றமுறை நடத்திவந்தான்
பாரோங்கு பட்டமுட னமைச்சியல்செய் பரம்பரையோன்
பேரோங்கு கலைகளினாற் பேரறிவாற் பெரியனிவன், (௭௩௪)

குன்றுரைத்த குணத்தமைச்சன் குலவுமுடி யரசனிடஞ்
சென்றுரைத்த விவ்வனைத்துந் தெரிந்தருணா சலந்தனக்கு
நன்றுரைத்த படிகொடுப்பேம் நாளைநயிற் பட்டமிவ
னென்றுரைத்து விடையளித்தே யேந்தலுக்கு மளைப்பனுப்ப, (௭௩௫)

மண்ணுமணி மகுடமணி மன்னவர்கண் மன்னனவண்
கண்ணிவா வளைப்பனுப்பக் கருதியுளங் குதூகலித்தே
யெண்ணுதினங் கடிகையுட னெண்ணுமண்ண லுடைபுனையா
விண்ணுயரு மாண்மனையுள் வேந்தனவை யகத்தினெய்த, (௭௩௬)

மற்றுமுள காவலரும் மணிமகுட பதிதனுக்குச்
சுற்றமுள தகுசூழ்ச்சித் துணைவர்களுந் தந்திரங்கள்
கற்றபல வறிவினருங் காட்சியுள வேனையரு
மற்றமகன் றமர்ந்திருக்கு மத்தாணி மண்டபத்தில், (௭௩௭)

பீட்டியலும் பெரும்பிரிவாம் பிரித்தானி யரசியற்கு
வீட்டியநல் வளமலிந்த விலங்கையிலே நீபெரிதும்
நாட்டிவந்த நெறிகளுட னடத்திவந்த வல்லமையைத்
தீட்டிவந்த பத்திரங்க டெரித்ததென வேந்துரைத்தே, (௭௩௮)

பேர்பெரிய ராச்சியமாம் பிரித்தானி ராச்சியத்துள்
ஏர்பெரிய தானவமெ ரிக்காது ராச்சியத்துள்
நேர்பெரிய ரில்லையென நேர்ந்தபல றிப்போட்டாற்
சீர்பெரிய னுமுனது திறமையையான் கண்டனனே, (௭௩௯)



அந்நாளி னயந்தருணா சலந்துரையை யமரவைத்துப்
பொன்வாளிற் புறம்வலது புயத்தினுட னுச்சிதொட்டு
நன்னாளின் மகுடபதி நாடிநையிற் பட்டமதை
யென்நாளுஞ் சீர்பெருக வெனப்புகன்று கொடுத்தனனால், (௭௪௦

சீரியர்க்குட் சீரியர்க்குச் சேர்ப்பட்டஞ் சூட்டிடவே
பாரியர்க்கும் லேடியென்னும் பட்டமுடன் கிடைத்ததுகா
ணாரியர்க்குங் கிடைப்பரிதா மரியபட்ட மீதிலங்கை
நேரியர்க்குட் சொர்னமென்னும் நேரிழைக்கே முதற்கிடைத்த, (௭௪௧)

வேறு.

பாரியார் தனையுந்தன்போற் பட்டவர்த் தனியேயாக்கி
நேரியாரென்னவிந்த நெடுநிலம் மதிக்கத் தோன்றும்
பாரியான் றனுமாங்கே பட்டவர்த்தனனே யாகி
நேரிலான் சாய்கைவந்தா னிருபதி விடையும்பெற்றே, (௭௪௨)

இன்னணம் பட்டம்பெற்றே யேந்தலும் மகனுமந்த
நன்னகர் வதியுநாளி னவின்றகேம் பிரிச்சினுக்குச்
சொன்னதோ ரெதிரேயாகத் துலங்குகல் லூரியொன்றின்
மன்னவ வுபன்னியாசஞ் செய்கென வளைத்தார்வந்தே, (௭௪௩)

கருத்துக ளாயவேண்டிற் கலைகளை நாடவேண்டிற்
றிருத்தமா முபன்னியாசஞ் செய்திட வேண்டுமென்னிற்
பெருத்தநல் லுவகைதூண்டப் பின்னையும் விடுமோவங்க
ணருத்தியோ டேகியன்றே யரியசொற் பொழிவுசெய்தான், (௭௪௪)

கிளத்து மேனாட்டினோடு கீழைநா டாண்டினுக்குங்
கொளத்தகு கலைகட்குள்ள குற்றமுங் குணமுங்காட்டித்
தளத்தகு மாறதில்லாத் தகுங்கலை கற்றலாலே
யளத்தலி லறிவுசால வாகுமென்றெடுத்துச் சொன்னான், (௭௪௫)

அங்குவந் தவைக்கண் வைகுமருங்கலை யறிவாற்சாலப்
பொங்குபேர் வித்துவான்கள் புலவர்பண்டிதர்கள் யாரு
மிங்கி வனுங்கிலத்தை யெடுத்திடு விடயப்போக்கை
யுங்குறை நலத்தையேத்தி யுவந்தநவதித்தல் செய்தார், (௭௪௬)

ஏத்தகு மிங்கிலந்நி லேற்றமா மமைச்சராதி
மீத்தகு மவர்கட்கெல்லாம் விருந்தனாய்ச் சின்னாண்மேவி
நாத்தகு சீர்த்தியாள னன்மகன் றனையுங்கொண்டே
பூத்தகு காவிலங்கும் பொலியிலங்காவில் வந்தான், (எ௪எ)

ஈடுசால ரசஞான மின்னமு முலகஞானங்
கூடுதத் துவஞானங்கள் குலவருணா சலந்தான்
பீடுசால்பட்ட மிங்கே பெற்றிடுங்காலஞ் செப்பி
ணுடுமாயிரத்தித் தொள்ளா யிரத்துப்பன் னன்காமாண்டே. (எ௪அ)

## துறைமுகத்து வரவுகோடல்.

கறங்குதுறை சங்கமிக்குங் கலங்களிதஞ் சுமையிறக்கி
யுறங்குதுறை யிலங்கையிலே யிலங்குதலை நகர்க்கொளும்பிற்
பிறங்குதுறை யென்னி னினிப்பேசுவதென் னேந்தலையிவ்
விறங்குதுறை முகத்துநின்றே யெதிரேற்க வலங்கரித்தார், (எ௪௯)

திரையுயர வெழும்பாமற் செய்துகுளம் போன்றகடற்
கரையுயரப்பந்த ரிட்டே கமுகுகன்னல் கதலிநட்டு
விரையுயர மலர்மாலை வெள்ளைகளா லலங்கரித்து
நிரையுயரத் தவிசுமிட்டே நீடவெதிர் கொண்டனரால், (எ௫௦)

நந்தளவி யேந்தியலை நல்குகரை யேறியிவர்
வந்தளவி லெதிராக வந்தவர்க ணகைமுகங்க
டந்தளவி யிருத்தியவண் டாமுமுட னிருந்துநயந்
துந்தளவி லாமகிழ்வா னுபசாரங் கூறுகிற்பார், (எ௫க)

தோற்றிவரு முங்களது தொல்குலத்துத் திலகமொப்பா
யேற்றிவரும் நல்லநயிற் பட்டமுநீ யின்றுபெற்றாய்
போற்றிவரு மிவ்விலங்கா புரப்புருட வுத்தமருண்
மாற்றிவரு முத்தமர்கள் மற்றினியா ருரைப்பதற்கே, (எ௫௨)



நல்லவரும் வல்லமைக ணயந்தாச னிங்குனக்குச்
சொல்லுநயிற் பட்டமிதைச் சூட்டினமென் றன்னலைநீ
யில்லவரு முள்ளவரு மிலங்கைநக ரீதிலிவ
ரெல்லவருந் தனித்தனியே யெய்தினர்கள் பட்டமிதே, (எ௫௩)

என்றிவர்க ளெல்லோரு மேற்ற வுபசாரமொடு
நன்றிவரும் மலர்மாலை நபந்து கழுத்திட்டினிநாஞ்
சென்றிடுதும் பொன்மனைக்குச் சேரவென வெழுந்தளவி
லொன்றிவர்க்குச் செம்மலவ் னுவகையுட னோதுகிற்கும், (எ௫௪)

வே று.

விதித்தனன் வேந்தன்பட்டம் மேவினனா னென்றென்னைக்
கதித்தநீர் யாருமிந்தக் கடற்றுறைமுகத்தில் வைத்துத்
துதித்தபே ருபசாரங்கள் சொல்லுறு மளவிற்றோமோ
மதித்துநா னிந்தநன்றி மறக்கல னென்றுமென்றான், (எ௫௫)

தன்மனை யனையனீது சாற்றலுங் களிப்புவிஞ்சி
நன்மனைக் களைப்பமென்றே நல்லவர் யாருமொன்றாய்
மன்மனை நிகர்த்துநாளும் மலர்மகள் விலாசஞ்செய்யும்
பொன்மனை யகத்துக்கொண்டே புடையுற வருவதானார், (எ௫௬)

திருந்திய வழகுவாய்ந்த செல்வமார் மனையில்வந்தே
பொருந்திய தவிசுதோறும் பொற்புட னமர்ந்தபோதி
லருந்திய வந்தோர் யாருமருந்தின ரருந்தித்தத்த
மிருந்தியன் மனைகடோறு மெய்தினரு வகையோடும். (எ௫எ)

## றோயற் கல்லூரியில் கொண்டாடுதல்.

கற்று வல்லவர் காட்சிகளுள்ளவர்
பற்று மிக்கவர் பற்பலவாகவே
மற்றுமுள்ள கொண்டாட்டம் வழங்கியே
செற்று நாட்கள் சிலச்சிலசென்றன, (எ௫அ)

துன்னு சீர்த்தித் துரையருணாசல
மன்னு பட்டம் வகித்தமகிழ்ச்சியா
லுன்னு மாறவன் ஞேயற்கல்லூரியிற்
பின்னு மங்கோர் பெருஞ்சபைகூடினர், (௭௫௯)

ஏதிலாவைந் தமைச்சி லிருவர்மே
னீதிமன்னர் நெறிசெயு மந்திரர்
பேதியாதவன் பீரிசு பாபாவோ
டாதியான வரச்சபை மன்னினர், (௭௬௦)

அன்ன போதி லவணருணாசல
மன்னனெய்தி வதிந்தன னவருட்
சொன்னமந்திரி சூழ்ச்சியின் வல்லவன்
பின்னமில்லவன் பேற்றிறன் பேசுவான், (௭௬௧)

கரைதன்னின்றிக் கவினு மவையுளீர்
வரைதன்மீது வயங்கும் விளக்கெனத்
தரைதன்சீர் கடயங் கருணாசலத்
துரைதன்வல்லபஞ் சொல்லுவன் கேண்மினோ, (௭௬௨)

வேறு.

தேய மிங்கிதிலே யிந்தச் சேரருணாசலத்தி
னேய பேரறிவினுக் கோரீடில்லை யென்றுசொல்வே
னேய மேலிட்டே யென்றும் நேர்ந்ததன்கடமைபார்க்கு
மாய பேர்த்திறமைக்கிங்கே யாரெதிரென்று சொல்வேன், (௭௬௩)

போற்றவே வருமிலங்கா புரந்தனைப் புரத்தற்கொத்த
தேற்றமாம் பிரமாணங்க டெரிப்பவனென்று சொல்வே
னாற்றவுஞ் சிறிதேயேனு மனுதைகள் கருமமென்னி
னேற்றமா யெடுத்துநாட்டு மிரக்கவானென்று சொல்வேன், (௭௬௪)

நேரிலா வந்தரங்க நியமனவமைச் சேயான
பேரிலா ரிவன்போ லிந்நாட்பெற்றவரென்று சொல்வேன்
றேரிலா ரிலங்கை மீதிற்றிறலுள விவனைப்போல
வாரிலா ராசுக்கேற்ற வருந்துணை யென்றுசொல்வேன், (௭௬௫)



இன்னவா றமைச்சன் பேசியிருந்தன னதன்பின்னாகப்
பன்னுமாறிவன் முன்னீதிபதியென வமர்ந்த ஞான்றி
னன்னய வழக்கையாய்ந்தே நவில்பிரமாண நூல்கள்
சொன்னவா றுகத்தீர்க்குந் துரைத்தன நேர்மைதன்னை, (௭௬௬)

தயங்கவே நிலங்கட்கேய்ந்த சாதனச் சென றலாக
வயங்கவே வந்தஞான்றில் வரைபவர் கரவையாய்ந்து
மயங்கவே கண்டுகண்டு வாய்ப்புறத் திருத்தஞ்செய்யா
வியங்கவே யமையவைத்த வேற்றமாந் திறமைதன்னை, (௭௬௭)

நீடிய நியாயச்சட்ட நிரூபணசபையில் வந்தே
கூடிய வந்தஞான்றிற் கோலினைக் குடியையொக்க
நாடிய முறைகளாய்ந்தே நல்லனவெடுத்து நாட்டும்
பீடியன் மதியினுண்மைப் பெற்றியின் றிறமைதன்னை, (௭௬௮)

மாறிலா வந்தரங்க மதியுள வமைச்சனாகிக்
கூறிலா விலங்கைக்கான குறைகளைத் தவிர்க்கவேண்டி
யூறிலா வரசினோடு முரையம ராடுமந்தப்
பேறிலார் நேரென்றோதப் பெற்றிடுந் திறமைதன்னை, (௭௬௯)

அங்கிலர் தமக்குமட்டோ வாய்ந்திடின னீதியென்றே
சிங்களர் தமிழருக்குஞ் சேவைக ளுயர்த்திவைத்துப்
பங்கமில் வேதனங்கள் படிப்படி யுயரச்செய்து
மிங்குள விலங்கையாரை யேற்றிய சூழ்ச்சிதன்னை, (௭௭௦)

மயங்கு மிங்கிலந்தினுக்கு மரக்கல மேறிடாம
லுயங்கிய தனமில்லோரு முயர்தரக்கலைகள் கற்பான்
வயங்கிய வரசினோடு வாதித்து நெடிதுகாலந்
தயங்க விங்கமைத்த சர்வத்தனிக் கலாசாலைதன்னை, (௭௭௧)

என்பினு லெடுக்கும்பேறென் றெண்ணியே யனுதைகட்கா
யன்பினு னட்டிவைத்த வாதார சங்கந்தன்னைப்
பின்பினு யெவரும் வேண்டப்பெறுஞ் சுகாதாரந்தன்னை
வன்பினு லரசினோடு வாதிக்குந் திறமைதன்னை, (௭௭௨)

இன்னமு மேந்தலார்த மிரும்பெருந் திறமைதம்மை
மன்னவர் மதிவல்லோர்கள் மற்றுள மதிப்பின்மிக்க
பன்னரு மிவர்கள் யாரும் படிப்படியாகச்செப்பிப்
பின்னரு மண்ணலோடு பேசுவா ரினையவாறே, (௭௭௩)

நகமுள நதிகளுள்ள நளினநீர்த் தடங்களுள்ள
சகமுள மணிகளுள்ள தானிய வகைகளுள்ள
விகமுள நலமுமுள்ள வீழநா டென்றுமுள்ள
சுகமுள நாங்களென்றுஞ் சுதந்தரம் பெறுதல்வேண்டும், (௭௭௪)

முத்திடு மாழிசூழு முதுநக ரிலங்கைக்காக
வைத்திடு சட்டம்யாவும் மன்னநீ யாய்தல்வேண்டு
மொத்திடு முறையேயான வொழுங்குக ளமைத்தல்வேண்டு
மெத்திடு மீழநாட்டோர்க் கிவைகளே வேண்டும்வேண்டும், (௭௭௫)

எத்தனை நலங்களெல்லா மியற்றிற்றே வையனிங்கே
யத்தனை வகையை யிவ்வா றரிதினி லெடுத்துக்காட்டி
யித்தனை யாகச்செய்த வேந்தலையகத்தா லென்றுஞ்
சுத்தனை யிவர்கள்வைத்தே யாசியுஞ் சொன்னாரம்மா, (௭௭௬)

சொற்றவாறாக விந்தத் துரைமக்க ளாதியாக
மற்றவர் தாமுமையன் சிறப்புச்சொன் மாரிபெய்ய
வுற்ற நற்சீர்கடம்மா லோங்கருணா சலந்தான்
பற்றுள விவர்கள் யார்க்கும் பணிவுரைபகர்வதானான், (௭௭௭)

துதித்திடும் மேன்மைபெற்ற துரைகணீ ரென்பால்வைத்த
கதித்திடு கருணைதம்மாற் கனமிவை பெறுவதானே
னுதித்திடு முள்ளமூக்க வுயர்த்தியிப் பெற்றித்தாக
மதித்திடு நலனைநானும் மறக்கல னென்றுமென்றான், (௭௭௮)

மன்னவர் மதியான்மிக்க மந்திர ராதியானோ
ரின்னவாறாக வாங்கே யின்புடனள வளாவிக்
கன்னல் வேளனையாற் காங்கேகைதந்து செல்லாநிற்பத்
தன்னமு மறுவிலாதசபை நிறைவேற்றிற் றன்றே, (௭௭௯)



## யாழ்ப்பாண வருகையும் கொண்டாட்டமும்.

அந்த நன்னாட்டினு மநாதியாகிய
விந்த நன்னாட்டினி னினிதழைத்துநா
முந்தை நம்மவர்க்கு மேன்முதன்மை நல்கிய
வந்தநந் தோன்றற்கு மகிழ்வு நல்குவேம், (௭௮௦)

என்றன ரெண்ணியே யேந்தல்பாற்சிலர்
சென்றன ரின்னமுந் திருமுகங்களு
மொன்றென விடுத்திடா வோதுமோர்தினம்
நன்றென மதித்தனர் நயந்துவைத்தனர், (௭௮௧)

கார்தரு புகையுமிழ் காங்கையீர்த்துறுந்
தேர்தரித்திடு மிடஞ்சேர்ந்து மன்னனை
நேர்தர வெதிர்கொளா நீடுகைதரச்
சீர்தரு மாறலங்காரஞ் செய்தனர், (௭௮௨)

கோட்டையின் முன்னுறக் குலாவுமுற்றத்தின்
மாட்டுள றிச்சுவே மண்டபந்தனிற்
கூட்டமா மாலைகள் கொடிகடுக்கியே
சேட்டமா மணிகளைச் செய்துவைத்தனர், (௭௮௩)

மீதுதானோங்கியே விளங்கு சாகையொன்
றீதுதானாகு மென்றோர்கள் செய்தன
வேதுதா னமைத்தி லரிந்தவேந்தனுக்
கோதுதாய் நாடெனி னுரைப்பதென்கொலோ, (௭௮௪)

வேறு.

மன்னனை யழைக்கவென்றும் வரவெதிர் கொள்ளவென்றும்
முன்னவே கொண்டாட்டங்கள் முதன்மையாய்ச் செய்யவென்
றுஞ், சொன்னலமான வெல்லாந் தோற்று யாழ்ப்பாணத்துள்
ளோர், நன்னல வழிகள்செய்தே நாடினர் வாவுகாத்தார், (௭௮௫)

கொற்றவன் வதியுஞ்செல்வக் கொளும்புநின் றெழுந்துபாங்கிற்
பற்றுள தேவியான பாக்கியவதி தன்னோடுஞ்
சொற்றவந் நாளினீதி துலங்கருணா சலம்வந்
துற்றனன் வருகைநோக்கி யுற்றவரெதிர் கொண்டாரால், (௭௮௬)

வருகை வந்தெதிர்ந்த யாரும் வந்துவந்தெதிரேயாகத்
தருகை வந்துவந்து கூப்பித் தனித்தனிமுகமன்சாற்றி
யிருகை வந்தழைத்துச் சென்றேயேற்ற நற்சாகைசேர்த்தி
யருகை வந்தணைந்துவைகி யளவளாய்க்கலந் தங்குற்றார், (௭௮௭)

வன்னமா னேக்கினல்லார் மன்னு யாழ்ப்பாணமாதர்
சொன்னமான் வருகைகேளாத் தொடர்ந்தபேர் மகிழ்வுதூண்ட
வன்னமா மென்னவைகு மணங்கினை யணையவந்தே
யுன்னமா தவஞ்செய்தானை யுனத்தவா வோடுகண்டார், (௭௮௮)

சந்தத மொழுக்கம்பேணுந் தையலரான வின்னோர்
வந்தனர் தன்பாலென்றே மாதவமடந்தை யார்க்கு
முந்தையே தவிசுநல்கி முகமன்க ளெடுத்துப்பேசிச்
சொந்த நம்மூரிதென்றே சொற்றள வளவினாளே, (௭௮௯)

வேறு.

இன்னணமள வளாயிருக்கும் வேலையிற்
பின்னமிலா வகைபெரிது முன்னியே
யன்னவராகு மென்றடுத்த நாளினின்
மன்னவன் றன்னைக் கொண்டாடவைத்தனர், (௭௯௦)

பாத்திய மாயவன் பரிவிற்சூட்டிடக்
கோத்திய னறுமலர்க் கோதைமங்கல
வாத்திய மின்னமும் வாணவர்க்கங்கள்
சாத்தியமாகவே தாச்செய் திட்டனர், (௭௯௧)

இன்னமும் வேண்டுவதென்ன வென்னவே
யன்ன வாசரிப்பினுக் கமையத்தந்திட
னென்னவி நேர்ந்த நன்னோம்நோக்கியே
சொன்ன மண்டபத்தவைத் தோற்றமுள்ளவர், (௭௯௨)



அன்னமா காணமா ளதிபன்மேலைநாட்
சொன்னவா றுண்டவத்துவையின மன்னவன்
றன்னநன் னீதியாய் துரைகள்சட்டமாம்
மன்னவே வருஞ்சபை மதித்தமந்திரர், (௭௯௩)

நிரந்தரம் வாதமே னீதிவாதிக்குந்
துரந்தரர் சேவைகடொடர்ந்த மேன்மையர்
சிரந்தர மானவர் செப்புமிங்கிவர்
தரந்தர மெய்தியே தவிசின்வைகினார், (௭௯௪)

வேறு.

ஈங்கினிக் கூட்டவென்றே யெண்பெறுஞ்சிலர் வந்தாற்றத்
தேங்கிய விலங்கை லெற்பிற்றிகழ் தினகரனையொத்து
வாங்கிய சீர்த்திமல்க வாழ்வுகூர் வள்ளறன்னை
யாங்கினி வருகவென்றே யழைத்தனர் வரிசையோடும், (௭௯௫)

மேல்வரு மவாழைக்க மேதகு வரிசையோடு
மால்வரும் வனப்புவாய்ந்த மைந்தனுமகளுந் தன்னோர்
பால்வரு கனனேர் கற்பிற் பத்தினியாருந்தானும்
நால்வருமாக வந்தே நல்லவைக் கழகுசெய்தார், (௭௯௬)

அவையினர் விரும்பியாங்கே யக்கிராசனத்தின் மீதாய்
நவை யறவைய ணுங்கணுயக மாகவைக
விவையிவை யிவர்க்கென் றுய்த்த வெழில்கொளா சனங்கள்மேவிக்
குவையினர் கணிக்கத் தேவிகூட வேமகாருமுற்றார், (௭௯௭)

அன்ன நல்லமையத் தன்னினவையினர் மகிழ்ந்தேகற்ற
வுன்னரு முயர்வுதன்னை லுயருத்தியோகந் தன்னை
லின்னசேர் பட்டந்தன்னை லிலங்கருணா சலச்சீர்
மன்னவன் கழுத்தினுகமலர் நறு மாலையிட்டார், (௭௯௮)

கூர்ப்பட்ட வொருமாகாணக் கோட்டுயர் நீதிமன்னன்
சீர்ப்பட்ட குணங்களுள்ளோன் றிருந்தியவறிவு சான்றோ
ரார்ப்பட்ட சீர்த்தியாளளம் பலவாண வேந்தல்
பேர்ப்பட்ட வவையின் முன்னர்ப்பேசுவான் பணிவுஞ்செப்பி,
(௭௯௯)



தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
...ப்பாணம்.

பலம்புரி வரத்தான் பொன்னம்பலம் புரிதவத்தினாலுங்
குலம்புரி தவத்தினாலுங் கோடியரிலங்கை யென்னுந்
தலம்புரி தவத்தினாலுந் தமிழர் சிங்களர்கடம்மூள்
வலம்புரி போலத்தோன்று மகனிந்த வண்ணல்கண்டீர், (௨௦௦)

தெரியவே வழக்கை நேரிற்றெரித்திடும் ஞாய நூல்க
ளரிய விந்நாட்டை யோம்பற்குதவிய சட்ட நூல்க
ளரிய நல்லறிவு நூல்களாகிய நூல்கள்கற்ற
பெரிய மேதாவியென்றிப் பெரியரைப் பெரியர்சொல்வர், (௨௦௧)

அடுத்துறு மரியநீதி யதிபதியாக மன்னித்
தொடுத்துறு வழக்கைக்கேட்டுந் தூரந்தார் நியாயங்கேட்டு
மெடுத்துறு பிரமாணங்க ளிதற்கிதாமென்று காட்டிக்
கொடுத்துறு தீர்ப்புக்கிந்தக் கோமகற் கிணைதானில்லை, (௨௦௨)

கோட்டிய னிஞாயந்தன்னாற் கூடியதிறமை காணாத்
தீட்டிய சாதனத்தின் செனறலா யுயர்த்தவந்நா
ணீட்டிய நகர் நாடெங்கும் நேர்ந்தசட்டம்பிமார்கண்
மாட்டிய கரவையஞ்சி மறுக்கமாய் வரைவதானார், (௨௦௩)

மாதமே தேதியாண்டை யன்றன்றே வரைதல்செய்யார்
நீதமே யாகநாடி நெறிநெறி யடுக்கல்செய்யா
ரேதமே வருமென்றஞ்சா ரிறையினுஞ் சேர்த்தல்செய்யார்
பேதமே யாகவின்னும் பிழைகளைப் பெரிதுசெய்வார், (௨௦௪)

தேதிகண் மாதமாண்டைத் தினந்தின மெழுதச்செய்தும்
வாதிகளிலா மனோராய் வகைவகை யடுக்கச்செய்து
மாதிக டொடுத்து மூன்றினாசினிற் சேர்க்கச்செய்தும்
நீதிக ளினையவெல்லாம் நியமித்த திந்தமன்னன், (௨௦௫)

கோனுயர் சேவையெல்லாங் குறைவற நடத்துநாளில்
வானுயர் சீர்த்திபெற்றே வருமிந்தக் குரிசிறன்னைத்
தானுயர் ஞாயச்சட்டசபை யினுந் தெரிந்துவைத்தார்
நானுயர் வென்றுசொல்லே னாட்டுயர்வென்று சொல்வேன், (௨௦௬)

1931 C.C.



நேருறு மினையசட்ட நிரூபணசபையில் வந்து
சேருறு காலயென்றே செப்பலாம் மெல்லமெல்லச்
சீருறு மிலங்கையென்னுந் தேசவூழியத்தி னெண்ணந்
தேருறு மாறே யிந்தச்செம்மல் பாலுதித்தகண்டீர், (௨௦௭)

சீர்பெறச் சட்டஞ்செய்த திருத்துத லிரண்டுஞ்செய்து
மூர்பெறத் தக்கநல்ல வுதவிகண் மேலுஞ்செய்தும்
பேர்பெறப் பிறந்தவிந்தப் பெருந்தகை திறல்கணன்றி
நேர்பெற விருந்து கண்டென்னெஞ்சகங் களிக்கப்பெற்றேன், (௨௦௮)

தேவரும் விரும்பத்தக்கோர் சீர்பெறுங் குமாரசாமி
நாவரும் வாக்கினாலே நல்லவன் ராமநாத
னேவரும் மதிக்குமிந்த வேந்தலோ டியம்புகின்ற
மூவரு மாகவைகி முன்னைநாட் சட்டஞ்செய்தார், (௨௦௯)

கோன்செயு மென்னுஞ் சேவைகுறைவற விந்தமன்னன்
றன்செயுங் கடமையாகத் தந்தினைப்பாறு மிந்நாட்
டேன்செயுந் தெரியல் வேந்தன்றெரிந்து தன்னகரிற்கூவி
நான்செயுங் கடமையென்றே நயிற்பட்டங் கொடுப்பதானான், (௨௧௦)

மாலிய விலங்கைமீதின் மாதுலன்பெற்ற பின்னர்
வாலிய தமிழர்தம்முண் மருமகன் பெற்றதாகும்
மேலியல் வேந்தினோடு மேவிய குடும்பமீது
போலிய குடும்பமின்னும் புகலவுமுளது கொல்லோ, (௨௧௧)

ஓரவே பிறந்தவிந்த வுத்தமன் றனக்கோ பாங்காய்ச்
சேரவே யமருமிந்தச் செல்வச் சீமாட்டியார்க்குஞ்
சாரவே தமிழைப்பேசுந் தையன்மார் தமக்குட்சீர்த்தி
யாரவே லேடிப்பட்ட மத்தினத் தமைந்தகண்டீர், (௨௧௨)

சொன்னநல் லேடிப்பட்டஞ் சொல்லுங்கா லிலங்கைமீதின்
மன்னிய தமிழ மாதர் மறுமதமாதரென்னப்
பன்னிய மாதர் தம்முட் பண்டுதொட்டின்றுகாறு
மின்னமும் பெற்றாரில்லை யிதுமுதற்காட்சி கண்டீர், (௨௧௩)

இன்னதோர் நாட்டிலுள்ளோர் யாவருங் கல்விகற்பான்
முன்னின னெடிதுகாலம் முயன்றபேர் முயற்சியாலே
தன்னதாங் கொளும்பிற் சர்வத்தனிக் கலாசாலைதந்த
மன்னவன் ருனுமிந்த வள்ளலே யாகுங்கண்டீர், (௮௧௪)

ஈதுதா னென்றோ வின்னு மீழமாநாட்டுமாந்தர்
மீதுதா னுட்டம்வைத்தே வேண்டிய சுகந்தந்தின்னு
மேதுதான் வேண்டிற்றென்ற வெண்ணமாய் மன்னுமிந்தக்
கோது தானிலாதவேந்தல் குணங்களைக் கூறலாமோ, (௮௧௫)

என்றிந்தப் பெரியார் செய்கை யாவையுமெடுத்துக்காட்டி
யன்றிந்த வாறேயாக வம்பல வாணவண்ண
னன்றிந்த வாறதென்று நாடுறப்பேசக் கேட்டே
சென்றிந்த வவைக் கணுற்றோர் சேரநல்லுவகையானுர், (௮௧௬)

எண்ணிய வவை தனக்கோ ரெழில்கொணுயகமேயாக
நண்ணிய வண்ணல் பின்னர் நல்லுபகாரங்கூறக்
கண்ணிய சபையோர் மேலுங் கருதியேயறிவிற்சாலத்
திண்ணிய யேந்தலார்க்குச் சிறப்புகள் செய்வதானுர், (௮௧௭)

வே று.

அண்ண லு மவைக்களத்தவரும் யாவரு
மெண்ணிய மண்டபத்திருந்தும் முற்றமாம்
வெண்ணில வெளிவர விளையும்வாணங்கள்
கண்ணெளி மழுங்குறக்க வினவிட்டனர், (௮௧௮)

அலையினைக் காட்டுவ வ ணைக்காட்டுவ
கலையினைக் காட்டுவ கதிரைக்காட்டுவ
மலையினைக் காட்டுவ மதியைக்காட்டுவ
சிலையினைக் காட்டுவ திகரிகாட்டுவ, (௮௧௯)

அரியினைக் காட்டுவ வலரைக்காட்டுவ
பரியினைக் காட்டுவ பகட்டைக்காட்டுவ
கரியினைக் காட்டுவ கடிகைகாட்டுவ
புரியினைக் காட்டுவ புகலும்வாணங்கள், (௮௨௦)



வெண்மையும் பசுசையும் விளங்கும்நீலமுந்
திண்மையுஞ் செம்மையுஞ் சேர்நிறத்துடன்
றண்மையுந் திகழ்ந்த மத்தாப்புவாணங்கள்
கண்மையும் பெற்றிடக் கொளுத்திக்காட்டினுர், (௮௨௧)

வே று.

சீர்தரு வாத்தியத்தின் றிறமை சேர் சமாவும்வைத்து
நேர்தரு மினையமுற்ற வெளியிலே நெடிதுநேரம்
வார்தரு காட்சித்தாய வாண வேடிக்கையாலே
யார்தரு மெங்களேந்தற் கரியகொண்டாட்டஞ் செய்தார், (௮௨௨)

இன்னன கொண்டாட்டங்கள் யாவுங் கொண்டாடியையன்
நன்னல மானதங்கள் கொளும்புமாநகரஞ் சேர்ந்து
தன்னதாந்த மிழைச் சைவசமயத்தை வளர்க்கவேண்டிப்
பின்னரு மிங்கேசெய்த பிரசங்கமினிமேற் சொல்வேன், (௮௨௩)

## இராணுவ வதிகாரத்தில் சிறைமீட்டல்.

ஆனதோள் ளாயிரத்துப் பத்துட னைந்தாமாண்டிற்
கானநல் வருவாய்குன்ருக் கதிப்புள விலங்கைக்கென்று
மூனமொன்று ருதவண்ண மொளிகொள் செங்கோலையோச்சுங்
கோனவ னீதிசற்றுக் கோடியவாறு சொல்வேன், (௮௨௪)

ஈட்டிய தனங்களுள்ளோர் யவனர்சிங் களர்கடங்கள்
காட்டிய சமயக்கொள்கை காரணமாக வந்து
மாட்டிய கோளினுலே மனைகளை யிடித்துங்கையிற்
றீட்டிய படைகள்கொண்டு திறலுடன் கொலைகள்செய்தும், (௮௨௫)

விஞ்சிடா நகர்நாடெங்கும் வீடுக டெருக்களெங்கு
மஞ்சிடா ராசினுக்கு மடாப்பெருங் கலகஞ்செய்யா
வெஞ்சிடா ரென்றுமென்று மிராப்பக லொளியாராகித்
துஞ்சிடா ரிருவர்தாமுந் தொழிலது வாகநின்ருர், (௮௨௬)

நாட்டுட னகர்களெங்கு நடுக்குறு மாறுமாந்தர்
வீட்டுட னழியுமாறும் வெகுண்டனன் வேந்தன்காணு
வேட்டுடன் கொண்டுதேடி வீதிமற் றிடங்களெங்குங்
கூட்டுட னிற்போர்தம்மைக் கொல்கெனப் படையைவிட்டான், (௮௨௭)

சாதிகள் சமயமில்லைத் தகுதிமற் றேதுமில்லை
நீதிகள் பெண்மையாண்மை நெறியெனு மிவையுமில்லை
யேதிகள் படைகள் கொண்டே யெவரையுங்கொன்மினென்னு
வீதிகள் சந்திமுற்றும் வீரரை நிறுவிவைத்தான், (௮௨௮)

அளியினி னுயர்ந்தோர் செல்வராசு செய்திருந்தசாதி
யொளியினி னுயர்ந்தோர்சீல ரோய்வற வுளத்திற்றேன்றுங்
களியினி னுயர்ந்தோரான கதித்த சிங்களர்சில்லோரை
ளியினி னிறுத்திவைத்தே வேட்டினுற் கொல்லுவித்தான், (௮௨௯)

போற்றவும் முடியுங்கொல்லோ போர்ப்படை வெகுளுமாயிற்
சாற்றவும் வேண்டுமோதான் சரியெலாந் தேடித்தேடித்
தோற்றவுந் தொடர்ந்துசென்றே தொடங்கிய கலகத்தோரை
யாற்றவும் வீரர்சீறி யங்கங்கே கொலைகள்செய்தார், (௮௩௦)

ஏறின ரானசில்லோ ரிறந்திட விவருளின்னும்
வீறின ரானோர்தம்முள் வேறு மங்குள்ளோர்தம்முண்
மீறின ரானோர்தம்மை வீரர்க டேடித்தேடிச்
சீறின ரகப்படுத்திச் சிறையினும் வைத்திட்டார்கள், (௮௩௧)

வேறு.

வெறிகடந்து விறலுடையாளராய்க்
குறிகடந்து குடிகளெழும்புமேற்
றறிகடந்த தனிநாசிங்கம்போ
னெறிகடக்கவும் சேரும்நிருபர்க்கே, (௮௩௨)

கோதிலாத குடிசனராயினும்
வீதிவந்து வெளிப்படுவாரெனிற்
றீதிதென்று தெரிகிலர்வேட்டினுற்
காதிநிற்பர் கதித்தபடைஞர்கள், (௮௩௩)



முந்தநின்று முடுகுகலகத்தை
வந்தவீரர் வலிந்தடக்குற்றிட
விந்தநல்ல விலங்காபுரத்திடை
யந்தநாளி லழுகுரலானதே, (௮௩௪)

வேறு.

பரித்திடு கணவர்மீதிற் பதிந்தபே ரன்புபூண்டோர்
சிரித்திடு முகங்களுள்ளோர் சிங்கள மாதர்சில்லோர்
தரித்திடு மணிகளின்றித் தகுமுடை தானுமின்றி
விரித்திடு குழல்கள்சோர விதவைக ளாயினுர்கள், (௮௩௫)

கோடிய கோலினுலே கொளும்புமற் றிடங்களுள்ள
நீடிய சதுக்கஞ்சந்தி நெடுந்தெரு மனைகள்கொல்லை
கூடிய வவலமான கூக்குரள் மலியவந்நாட்
டேடிய மாதர்தாமுஞ் சிங்களர் தாமும்நாடி, (௮௩௬)

தீபத்துக் கீதுபோலுந் தீமைகளோர்ந்த தில்லைக்
கோபத்துக் கொருவனுகக் கொடியகோல் செலுத்துவானு
லாபத்துக் கினியாரெம்மை யருளருணு சலம்பாற்
சோபத்துக் குதவநாம்போய்ச் சொல்லுவ மென்றுவந்தார், (௮௩௭)

பட்டத்து வேந்தைக்காணுப் பணிவுரை பகர்ந்திட்டைய
சட்டத்து விரோதமான சட்டத்தைச் சட்டமாக்கி
யிட்டத்துக் கெதிரிலாம லித்தனை யாகச்செய்த
நட்டத்துக் கேதுசெய்வேம் நாடியே செய்கவென்றூர், (௮௩௮)

வீங்கு நீருடுத்த கண்டல்வேலிசூ ழிலங்கைவைப்பைத்
தீங்கு நீதிகளேயாகச் சிங்களர் தமிழரேனோர்
ராங்குநீ நானென்றுண்டா ராங்கில ரறந்திறம்பி
யோங்குநீ ணகரைநாட்டை யொறுத்ததென் னென்றுதேர்ந்தே, (௮௩௯)

என்னையோ செய்வமென்னு வேக்கமுந் தாமுமாக
முன்னையே புணரியூடு மூழ்குநர் கரைகண்டாங்கே
தன்னையே தஞ்சமாகச் சாருமங்கவரை நோக்கா
வன்னையே வனையவண்ண லறைதரு மினையவாறே, (௮௪௦)

வீடுக ளிடிந்தவாறும் வெறுக்கைக ளழிந்தவாறும்
நாடு ணகர்கண் முற்றும் நட்டமாய்ப்போனவாறு
மீடுக ளிலாமன் மாந்தரேங்கினர் கவன்றவாறும்
பாடுக ளானவாறும் பார்த்துநான் கலக்கமுற்றேன், (௮௪௧)

துலங்கிய செல்வமிக்கோர் துரைத்தன முள்ளோர்வேண்டு
நலங்கிளர் பருவமுள்ளோர் நாடுநாட்டாண்மையுள்ளோர்
நிலங்கிள ரிவரை நேரேநிறுத்தினர் வேட்டினாதே
கலங்கிய கொன்றபான்மை கண்டுநான் மயக்கமுற்றேன், (௯௪௨)

அருத்திய தோடுபெற்றோ ரடித்தனரொறுக்காய்த
திருத்தியே மகளா யாளுஞ்செய்கைபோல் வேந்தும்நாடின்
வருத்தினன் கடிதனோக்கின் கலகங்செய்குடி கடம்மை
யிருத்தியே யடக்கியாளு மென்னமற் றேதுமில்லை, (௮௪௩)

பயங்கர வநீதியென்றே பதறிநீர் கலங்கலிந்நாட்
கயங்கவே சிலரைக்கொன்றுங் காவலிற் படுத்துமேனும்
நயங்களை நாடிநாடி நராதிப னோடுநானே
தியங்கவே வைத்தவின்னோர் சிறைகளை விடுவிக்கின்றேன், (௮௪௪)

மீறுதல் செய்யக்கண்டே வேந்திவ னொறுக்குமாயி
னாறுத லாகமேலு மாந்துணை யதுமுண்டோ
கூறுதல் வேண்டுங்கொல்லோ குறைதவிர்த் திடுவனென்னாத்
தேறுத லவர்க்குச்செப்பிச் செல்கென விடுத்தபின்னர், (௮௪௫)

வேறு.

பேறுவரும் போரசாம் பிரித்தானி யரசினுக்குட்
கூறுவரு மிலங்கையிதைக் கூறுவதென் றாய்போல
மாறுவரு மொருவரின்றி மனுமுறைகள் வழுவாம
னாறுவரு மாண்டளவும் நோகாம லாண்டதுண்மை, (௮௪௬)

வாடாமற் பைங்கூழை வளர்த்துவரு மழைபோலக்
கோடாமற் கோல்செலுத்திக் குறைதவிர்த்தே யெம்மையென்று
மாடாமற் காத்துவரு மளியுடைய வரசெனவே
நீடாமற் குடிபோற்ற நிற்பதுவே ராசதன்மம், (௮௪௭)



இத்தனையு மிலங்கையினுக் கெண்ணியெண்ணி யாற்றுநல
மெத்தனையு மங்காதோ வெதிரூன்றிற் குடிகளொன்றோ
பித்தனையு முனிகுவரோ பேதைகளா மிவர்கள்குறை
யத்தனையு மினிப்பொறுத்திட் டாளு மதைவேண்டுகின்றேம், (௮௪௮)

என்றினைய வாறாக வெண்ணு மிரகசியமுள
நன்றிபெறு மமைச்சாக நயந்திருந்த பான்மையுடன்
றன்றிவரு நட்புரிமைத் தொடர்புகளு முண்மையினு
லின்றினைய கருமசித்தி யெய்துமெனக் கருதியன்றே, (௮௪௯)

முறையிருக்கு மிலங்கைநகர் முந்தநெறி தந்துநிதம்
நிறையிருக்கு மதிபதிக்கு நீதியுட னருளமையக்
குறையிருக்குங் குணமாகக்கொள்கவெனத் தானெழுதிச்
சிறையிருக்கு மவர்கடமைச் சிலதினத்து ணீக்கிவைத்தான். (௮௫௦)

கண்ணுடைய காவலற்குக் கண்ணாக வமர்ந்திடுவோன்
பண்ணுடைய தலைநகரிற் பண்டுபயின் றன்றிடுவோன்
மண்ணுடைய சுமைபொறுக்கு மந்திரிக்கு மிவ்விதமே
யெண்ணுடைய மனுவெழுதி யிங்கிலந்துக் கனுப்பியுற்றான், (௮௫௧)

வேறு.

மாற்றருஞ் சிறையை யின்னே மாற்றினனென் றுமிந்த
மேற்றரு மிலங்கை யோர்க்கோர் மேவுமுரு ணிதானென்றுந்
தேற்றருங் கலக்கந்தீர்ந்த சிங்கள ராதியானோ
ராற்றரு முவகைதூங்க வண்ணலைத் துதித்திட்டார்கள் (௮௫௨)

## சர்வகலாசாலைத் தாபனம்.

இந்த நாட்டினுக் கெதினெதி னேற்றங்களெனவே
முந்த முன்னினன் முறைமுறை சிலச்சிலமுடித்து
வந்த மன்னவ னின்னமும் வேண்டுவமதித்தே
யந்த நாளினினருஞ் செயலொன்றினை யறிந்தான், (௮௫௩)

சென்னை கற்கையே பம்பையா நகர்களிற்சிறக்க
முன்னை தொட்டிது முகமென வமைந்ததுமுறையே
யென்னை யிப்பெருங் கொளும்பினுக்கில்லை யென்றிருக்கிற்
பின்னை யிவ்விலங்காபுரிக் கென்னை கொல்பெருமை, (அருச)

தெரிய வெவ்வெவர்தங்கட்கு மிலகுவிற் றெரித்தே
யுரியதாகிய வுயர்தாக் கலைகளை யோதிற்
பெரிய பேறுகள் பெறுவரென்றுன்னியோ பெரிது
மரியதாகவே தனதுபேர் நகர்களி லமைத்தான், (அருரு)

சீருலாவரு மிலங்கையி லிவர்களுந் திருந்தி
யேரு மின்னமுங் கைத்தொழிலாகிய வியற்றிற்
சேரு நம் வருவாய்களை வரவாச்சிதைத்தே
நேருவார் தம தாசினுமென்பது நினைவோ, (அருசூ)

இற்றதாகிய தனமலி யெங்கட மிலங்கை
யுற்ற சிங்களர் தமிழர்க ளிருந்தனருவரென்
மற்ற நாட்டினர் வளங்களை வவ்வுதல்மதியார்
கற்ற விங்கிவ ரிருந்தன ரென்னைகொல்கருத்தே, (அருஎ)

கலங்களேறிடா கடலையு மேறிடா கலைக
ணலங்களேறிடா தகுதிக ளிலாதவர் நமர்கள்
வலங்களேறிடா மாதன மேறிடா வளஞ்சா
லிலங்கையேறிடா வருவது மில்லை கொல்லினியே, (அருஅ)

இந்த யூனிவே சிற்றியு மிலங்கைமேலிருக்கி
லெந்த மாநக ரிந்நகர்க் கிணைகொடுத்தியம்பல்
வந்த பட்டமோ கிருடிகங்கைத்தொழில் வலியுஞ்
சொந்தமாகவே பெறுகுவர் செல்வமுந் துலங்கும், (அருகூ)

இலக்கணத்துடன் கணிதமு மிரண்டுகண் ணிவற்றிற்
றுலக்கமுற்றவ ரிலங்கை நம்மாணவர் துரிதர்
வலக்கணோர் கலாசாலையு மிவ்விடை வருமேற்
கலக்கமற்றிவர் காண்குவர் கலைக் கடற்கரையே, (அசூ0)



என்றுதா னிதுவந்திடும் வந்திடி னெனக்கு
மன்றுதான் றுயில் வந்திடுமென்று தன்னகத்தி
லொன்றுதா னகோர ரத்திரம் நினைவதாயுறைந்தான்
நன்று தானென நாடுகின் வருவது நலனே, (அசூக)

பாரினல்லவ னீழமென் றெடுத்திவண் பகர்ந்த
வூரினல்லவ னுத்தமன் கலைகளி னுயர்ந்த
பேரி னல்லவன் சோருணாசலம் பெரியன்
றேரினிச் செயலுலகினிற் செயற்கருஞ் செயலே, (அசூஉ)

வேறு.

85442

மட்டிவண் புகலவொண்ணு வாலறிவுடைய வள்ளன்
முட்டிவணிதுவே யென்னு முழுவது முன்னிமுன்னி
யட்டிவண் வேண்டியே தொள்ளாயிரத்தாறு மாண்டு
தொட்டிவ ணதற்கேயான தொடக்கங்கள் செய்வதானுன், (அசூங)

பன்னவு முடித்துமென்றே பகரவு முயல்வதென்னு
வுன்னவு மரியதான யூனிவேசிற்றி யிங்கே
யென்னவு மின்னுமிந்த விலங்கைக்கு மகுடமாக
மன்னவுஞ் செய்யவையன் மகாசபையொன்று சேர்த்தான், (அசூச)

குலத்துளோர் தம்மை மேலாங்குறைதவிர் செல்வர்தம்மைத்
தலத்துளோர் தமக்குளின்னுந் தகுமுத்தியோகர் தம்மை
நலத்துளோர் தம்மையாய்ந்தே நாடிய கருமசித்தி
வலத்துளோ ருனமன்னன் மகாசபைக் கங்கஞ்செய்தான், (அசூரு)

நாட்டமா மவைக்குத்தானே நாயகமாகி யேந்தல்
வாட்டமா மனத்தனுகி மன்னிய குறைகள்காட்டி
நீட்டமா மதிப்பின் மிக்கீர் நிறைதரு புகழின்மிக்கி
ரீட்டமா மறிவின் மிக்கீர் கேண்மினென்றிவற்றைச்சொல்வான், (அசூசூ)

சீர்வளமான தேயஞ் செழிப்புளதான தேயம்
நீர்வளமான் தேயம் நெடுநிலத்தரிய தேயம்
பேர்வளமான தேயம் பெற்றவர் நேருந்தேய
மேர்வளமான தேய மெங்கணல் லீழதேயம், (அசூஎ)

நூறுமட் டாண்டேயாக நோன்மைய ராங்கிலேய
ரேறுமட்டேற வேற வேற்றங்களான யாவுங்
கூறுமட்டாகச் செய்யாக் குறைகளைத் தவிர்த்தாரேனுந்
தேறுமட் டின்னுமின்னுஞ் செய்வன வனேகமுண்டால், (௮௬௮)

படியுயர் நாடதெல்லாம் பலவகைத்திருத்த மிஞ்சின்
குடியுயர் தருமேயத்தாற் கோலொன்று செலுத்தியாளு
முடியுயர் தருங்கா ணிந்தமுடிமுத லேதுவாகுங்
கொடியுயர்ந் தெழுந்துதாவக் கொழுகொம்பு வேண்டுமன்றே, (௮௬௯)

தேருநர் கலைகளுக்காத் திறமைக ளுக்காப்பின்னர்ச்
சேருநர்க் கேற்ற வேற்றசேவைமே னிறுத்துமாறு
நேருமவ் வேதனங்க ளோர்பெற வமைக்குமாறு
மாருலகத்தை யாளு மரசதன் மங்களாகும், (௮௭௦)

முந்தமே லுத்தியோக முதிரப்பார்த்ததிற் றேர்ந்துள்ளோ
ருந்தமே லுபகாரத்தோடோடுவர் தம்முறென்றுற்
பிந்தவவ் வுத்தியோகப் பேற்றின்மேல் வந்தவன்னோ
ரெந்த வுத்தியோக ரோடே யிதிலறியாமைகேட்பர், (௮௭௧)

கைத்தொழிலாகக் கூறுங் கம்மிய முதலவாய
வித்தொழிலான யாவு மிலங்கைக்கு மிருத்தல்வேண்டு
மெத்தொழிலானு மேறி யேற்றம தடைவாரயி
னத்தொழிலாள ராலே யரசுக்கும் வருவாயுண்டால், (௮௭௨)

எட்டிடாக் கொப்பிளுங்கே யிருக்குமின் றேனைப்போலத்
தொட்டிடாத் தேயந்தோறுந் தூரத்தே வேறுவேறாய்க்
கட்டிடா வழங்குஞ் சர்வக்கலைக் கலாசாலையென்னில்
விட்டிடா தியாதுசெய்வர் வேறினி யிலங்கையாளர், (௮௭௩)

ஆற்றவே பொருள்களுள்ளோ ரங்குதான் போந்துகற்கி
லேற்றமாம் பட்டமென்றே யீவது பட்டமல்லா
லூற்றமாந் தொழில் கடம்மினுண்மையாம் நுணுக்கமொன்றுந்
தேற்றமே யாக்ககாட்டார் தெரிகுறிற் பிழைகொலென்றே, (௮௭௪)



கதித்திடக்கற்றல் வேண்டுங் கைத்தொழில் பயிறல்வேண்டும்
துதித்திடற் கரிதேயான தொழில்களைச் செய்தல்வேண்டு
மதித்திடத்தக்க வுத்தியோகங்கள் வருதல் வேண்டுந்
திதித்திடவந்த வீழதேய மேலோங்க வேண்டும், (௮௭௫)

உன்னரு முயர்ச்சித்தான யூனிவே சிற்றியென்னும்
முன்னரு மறிவுசான்ற முதற்கலாசாலை யொன்று
நன்னயமாக விங்கே நண்ணுமே லிலங்கைதானு
மென்னதான் சொல்லுமைய யாரிதையெண்ணுகின்றீர், (௮௭௬)

ஒளியிலா மணியைப்போல வுயிரிலா வுடம்பைப்போல
வளியிலா வறத்தைப்போல வணியிலா மாதைப்போலக்
களியிலா ரருமைத்தாய கழகமீதிலாத போதிற்
றெளியிலா தீழதேயஞ் சிறப்புப்பெற் றிருத்தலில்லை, (௮௭௭)

நட்டமேயான யாவு நாட்டினுக் குதவியாக
வொட்டவே நாடி நானும் யூனிவேசிற்றியொன்று
பட்டமே யின்னுமின்னும் பயிலவே தகுதியென்னக்
கட்டமே யிலங்கைக் கென்னுக் காட்டினன்மறுப்புமன்னன், (௮௭௮)

மிக்கமாணவர்க ளில்லை மேலு மிங்கிலந்தினோடு
மொக்கவே நோக்குங்காலை யிலங்கையு மொக்குங்கொல்லோ
தக்கமேற் றரங்களில்லைத் தானிது குறைகளென்னிற்
புக்க நீராய்ந்துநோக்கும் போதுமோ வெடுத்துக்காட்டே, (௮௭௯)

ஏற்படு மிங்கிலந்திற் கேகவேசத்தியில் லோர்
சொற்படு மேல்தரத்துச் சோதனை யெடுக்கமாட்டார்
கற்பவர் மெரிக்கலாதிக் கழகங்கடோறுங் கற்ப
ரற்ப கலாசை கூர்வாருங்கலை தேர்வதற்கே, (௮௮௦)

எண்ணு கினைந்து கோடியிலங்கை மேனார்களாக
நண்ணுகி னுய்ந்து யாமுநாடினு யிரத்தின்மேலுங்
கண்ணு மாணவர்கள் கற்பார் கருதுமிவ்வீழநாட்டி
னெண்ணுமோ கழகமென்றே யுரைப்பது தருமந்தானே, (௮௮௧)

முன் பிரித்தானியாவை முழுவதுந் தெரிவர்யாரும்
பின்பு கைத்தொழில்களாலே பெரிதெனக்காட்டு மிங்கா
ளன்பினீர் கேண்மின் கல்வியரிய கைத்தொழில்களுண்டே
லென் பிரித்தோத லிந்தவிலங்கைக்கோ ரிலக்குமுண்டோ,
(௮௮௨)

சாற்றவே தகுதிபெற்ற தாங்களை யில்லையென்ப
ரூற்றமேயான யூனிவேசிற்றி யுளதே யாயிற்
றேற்றமேயாக மற்றைத் திகழ்கழ கத்திற்கற்றே
யேற்ற மாந்தரத்துச் சேர்வரேனிவ ரில்லையென்பர், (௮௮௩)

ஊரினை யுயரச்செய்யும் யூனிவேசிற்றி வைத்த
ஞூரினையுடைய வேந்தன் றனக்கது கடனேயாயுஞ்
சீரினை யுதவுமென்னச் செப்பினு மிசையாதாயி
னூரினை யுரைத்துக்கேட்ப மறைகுவீ ரறிவின்மிக்கீர், (௮௮௪)

என்றின்ன வாறேயாக யாவையு மெடுத்துப்பேசி
நன்றின்ன பெற்றியெல்லாம் நலம்பெற யார்க்குமைய
னென்றின்ன மறிதிர்நாளு மூக்கமோ டூக்கியூக்கிச்
சென்றின்ன செய்மினென்றே செப்பியத்தினத்தில் வைத்தான்,
(௮௮௫)

வேறு.

தோன்ற லென்றுந் தொழிலதுவாகவே
யேன்ற மட்டு மிதற்கெனத்தானிது
போன்ற பற்பல பொற்சபைகூட்டியே
யான்ற கேள்வி யறிஞரையேவினன், (௮௮௬)

சிங்கலின்றிய சிற்சில புத்தக
மங்கட் டட்டியு மச்சிலிடுவித்து
மெங்கிலங்கை யிதன்ன வாகவோ
விங்கிலத்துக்கு மேறச்செய் திட்டனன் (௮௮௭)

ஆண்டு பற்பலவாக விவ்வாண்டகை
தூண்டு மூக்கத்தொழிலிது கைவிடான்
வேண்டு மட்டினும் வேந்தொடுவாதித்தே
மூண்டு நல்ல முயற்சியின்மூந்தினன், (௮௮௮)



சொல்ல வல்ல துரையருணாசலம்
நல்லநாட்டிற்கு நல்லன செய்குவா
னெல்லவர்க்கு மிதஞ்செய வெண்ணுகிற்
செல்ல வேண்டுங்கொல் சித்திபெறுதற்கே, (௮௮௯)

பண்ணு பொன்னம்பலஞ் செய்தமாதவம்
பின்னு முன்னைப்பெருங்குலப் புண்ணிய
மின்னுமிந்த விலங்கையர் பாக்கியந்
துன்னு சீர்த்தி துலங்கருணாசலம், (௮௯0)

வேறு

எவ்வவர் தமக்குமெங்க ளிலங்கைமே லுதவியாக
வல்லவனறிஞன் றன்மன் வளமலி யீழநாட்டி
னல்லவனென்றே யென்றும் நற்பெயர் நிலைத்துநிற்கச்
சொல்லவ னாயிரத்துத் தொளாயிரத் திருபானென்றில், (௮௯௧)

ஈட்டின னிலக்கே யில்லானேற்ற பல்வருடங்காறுங்
காட்டின னெடுத்துக்காட்டுக் காட்டித்தா னெடுத்துக்கொண்ட
பாட்டின னீழமென்னும் பாவை நேத்திரமேயாக
நாட்டினன் கொளும்பிலிந்த நற் கலாசாலையொன்றே, (௮௯௨)

காவலர்க் கமைச்சனாகிக் கவசமுங் கண்ணுமாவன்
பூவல ருயிர்களுக்குப் போற்றிய தாதையாவ
னேவலர் தமக்குத்தானோ ரேவலனாவ னின்னோன்
றேவலர் செயல்களெல்லாஞ் செப்புதற் கரியதாமே, (௮௯௩)

இன்னியலாக மன்ன னிலங்கைக்கோ ருயிரைவைத்தே
மன்னிய செய்யவேண்டி வகுப்புக டெரிந்துவைத்தான்
தன்னிய லாகவந்தத் தாங்களுக் கியைந்ததாகப்
பன்னிய பாடம்யாவும் படிப்படி வகுத்துவைத்தான், (௮௯௪)

சித்திய தடைந்த நல்லாசிரியரைத் தெரிந்துவைத்தான்
புத்தியதாக நாடிப் போசனசாலை வைத்தான்
கொத்தியன் மாணவர்க்காய்க் குரவரிலொருவ ரங்கே
நித்திய மிருக்கவென்றே நியமனஞ் செய்துவைத்தான், (௮௯௫)

கலைமக ளிவேன யென்னக் கருதவிங்கிலந்தினுற்ற
தலைமகன் பதுமநாபன் றனிக்கதி யடைந்தபின்னு
ணிலைமகன் கற்றுவந்த நிலவுபுத் தகங்கடம்மைச்
செலைமகற் கறமுண்டாகச் சித்தம்வைத்துப் பொடீந்தான், (௮௯௬)

மெய்ப்பொருள் கல்வியென்றும் மேலும் வந்துதவுமென்று
மிப்பொருள்போல மற்றென் றிருநிலத் தில்லையென்று
மெய்ப்பொருள் யார்சொன்னாலுந் தெரிப்பது மறிவேயென்றுங்
கைப்பொரு ளிதுவேயென்னுக் கருத்துடன் கண்ணுயுற்றான், (௮௯௭)

வேறு.

அன்றதாக வருமைக் கல்லூரியை
நன்றதென்றிட நாட்டின னட்டியே
யென்றதேயென வெத்திசை தன்னினும்
பொன்றலின்றிப் புகழையு நாட்டினான், (௮௯௮)

தோன்றவென்னிற் புகழொடு தோன்றெனச்
சான்றநூலுகள் சாற்றிய வாய்மைபோ
லேன்ற கேள்வி யிலங்கருணாசல
மான்ற சீரொவணியிற் றேன்றினேன், (௮௯௯)

இன்ன வீழத்துக் கின்றியமைகலாச்
சொன்ன வேற்றந் துலங்குங்கல்லூரியை
மன்ன னிங்ஙனம் வாய்ப்பவுதவிய
வன்ன நன்றிக் கறிகுறியகவே, (௯௦௦)

இன்னதாக வியற்றுங் கழகத்துள்
வன்னமா யருணாசல மாளிகை
யென்னவென்று மிவன்பெயர் நீடித்தே
மன்னவே யொரு மண்டபங்கோட்டினர், (௯௦௧)

யாதையோதுவம் யாதைக் கருதுவந்
தீதையோட்டித் திகழுங் கல்லூரிக்கே
யேதை மாருக்கிரங் கருணாசலந்
தாதை யென்று தேசாதிபன்சாற்றினன், (௯௦௨)



முந்தைவேந்தன் மொழிந்த முறைப்படி
சிந்தை தேர்ந்தனர் யூனிவேசிற்றிக்கு
விந்தை பெற்று விளங்கருணாசலந்
தந்தை யென்றென்றுஞ் சாற்றுவர்யாவரும், (௯௦௩)

வேறு.

ஒப்பருஞ் சீர்த்திதன்னு லோங்கருணா சலப்பே
ரிப்பெருங் குரிசிலிந்த வீழத்துக் குதவுமாற்று
ளெப்பெருஞ் செயல்களென்னு வெடுத்திவண் புகலப்போகிற்
றப்பரு மிதனைப்போலத் தருமமும் புகழுமில்லை, (௯௦௪)

இடைபுகன் றெதிர்ப்பா ரின்றியிலங்கையா ளதிபனேதுந்
தடைபுகன் றிடுமே யென்னிற் றனதற்கேதுக்காட்டி
விடைபுகன் றொருவர்போல மேலுறவரும் வேந்தர்க்கும்
நடைபுகன் றாண்டுதோறும் நலங்களைக் காட்டிவந்தான், (௯௦௫)

இன்னவா றேந்தல்காட்டு மித்தனை வகையுங்கேட்டே
யுன்னினனுன்னி யிந்த வுண்மையை முழுதுங்காணு
மன்னவன் மதிவல்லோர்முன் மந்திரச்சபையி லோர்நாட்
டன்னது கருத்தா லிந்தத்தனிக் கலாசாலைக்காக, (௯௦௬)

வித்திடப்பட்டாலன்றி விடவியு மில்லை யென்றே
வைத்திடத்தகுமென் றோர்ந்தோன் மனமுடன் வாக்குக்காய
மொத்திடத் தொகையுள் மேலாயோங்கு பொற்காசையள்ளி
முத்திடத்தக்க மூலமுதற் பணமென்று வைத்தான், (௯௦௭)

கலங்குலவுற்ற வாழக் கடலொலி யருதவீழ
நலங்குலவுற்ற வூர்க்கு நயிற்பட்டம் முதலிற்காட்டுந்
தலங்குலவுற்ற சீர்த்தி தருமுத்துக் குமாரசாமி
வலங்குலவுற்ற விந்த மாதுலன் பெயரினாலும், (௯௦௮)

விந்தையா முத்தியோக மேலதிகார முள்ளோன்
முந்தைநாட் சிவாலயத்தை முற்றுபு நடத்துஞ்சீலன்
பந்தமேயான பொன்னம்பலமெனப் பெயரை யிங்கே
தந்தவன் மகப்பேறேங்குந் தாதைதன் பெயரினாலும், (௯௦௯)

இன்னுந் தன் பெயரினாலு மிலங்கைநாடுள்ள மட்டும்
பின்னுந் தன் மக்துக்கேதும் பின்னங்க ளுறாதவண்ண
மன்னுந் தன்றுணையோடு மாதுலன் றன்மமாக
வுன்னுந் தன்கையினாலே யுயர்தொகைப்பணத்தை யீந்தான், (௯௧௦)

அளித்திடு மிலங்கைத்தேச வதிபன் கல்லூரிக்கென்றே
களித்திடு மவையின்முன்னர் கதிக்கவோர் தொகையைநல்கத்
தெளித்திடு கழகமின்றே சித்தியென்று வகைநீருட்
குளித்திடு குரிசின்மீண்டு குலவுபொன் கிளார்க்குவந்தான், (௯௧௧)

சிறந்தநற் கல்விசெல்வஞ் சித்திர மனைவிமக்க
டிறந்தரு முத்தியோகஞ் செப்புமா திருந்ததேனு
மறந்தவர் தபத்தான் மண்ணின் மானுடனாகயானும்
பிறந்த தன் பயனையின்றே பெற்றவனானேனென்றான். (௯௧௨)

## அநாதைகள் ஆதார சங்கதாபனம்.

எங்கணும் தெருக்கள் சந்தி யெங்கணுஞ் சதுக்கமுண்டா
லெங்கணு மனுக்கள் பண்டி யெங்கணுந் நெருக்கமுண்டா
லெங்கணு மனைகண் மாளி யெங்கணுந் துடைவையுண்டா
லெங்கணுஞ் சிகரந்தெற்றி யெங்கணுங் கிடைகளுண்டால், (௯௧௩)

அங்கங்கே மேலைமாடி யங்கங்கே யரங்கமுற்ற
மங்கங்கே தொழில்செய்சாலை யங்கங்கே கடைகள்கூல
மங்கங்கே யரசமாளி யங்கங்கே பண்டசாலை
யங்கங்கே வீரர்மாலை யங்கங்கே யொழிவில்வேலை, (௯௧௪)

மன்னவ ரமர்வரோர்பான் மந்திர ரமர்வரோர்பாற்
றன்னவ ரமர்வரோர்பாற் றனத்தின ரமர்வரோர்பான்
முன்னவ ரமர்வரோர்பான் மூத்தவ ரமர்வரோர்பா
லின்னவர் மனைகள் யாவுமிந்திரர் மனைகளொக்கும், (௯௧௫)



வீதிசேர் கவலையல்லால் வேறிவண் கவலையில்லை
யோதி சோலரேயல்லா லோத வேறலரேயில்லைச்
சர்திசேர் சமயமல்லாற் றங்கவே சமயமில்லை
நீதிசேர் கோடதல்லா னிகழ்த்தவே கோடதில்லை, (௯௧௬)

தோடுசேர் முல்லையுண்டாற் றோகையர் முல்லையுண்டா
னாடுசேர் பொருள்களுண்டா னாடுநூற் பொருள்களிண்டாற்
கூடுசேர் சொற்களுண்டாற் குலாவிய சொற்களுண்டால்
வீடுசேர் மாடுமுண்டால் விரும்புபான் மாடுமுண்டால், (௯௧௭)

கலிதரு வறுமையில்லைக் கருணைதா னிலாருமில்லை
நலிதரு முளநோயில்லை நல்குத விலாருமில்லை
வலிதரு மறங்களில்லை வந்துதவு ரூர்களில்லை
மலிதரு மனைகளெங்கு மங்கள மிலாமலில்லை, (௯௧௮)

கூரிய வணிகளாலுங் கோமகள் விலாசத்தாலு
நேரிய வரசினாலு நில்மக டவநோன
வாரிய செல்வத்தாலும் வடக்குள வளகைநேரும்
பாரிய தானதென்பாற் பட்டணங் கொழும்பேயாகும், (௯௧௯)

தொழுமரன் றன்னைச்சூழ்ந்தே தொண்டர்கள் வதியுமாபோ
லுழுமரந் தன்னைச்சூழ்ந்தே யுயிரினம் வதியுமாபோற்
பழுமரந் தன்னைச்சூழ்ந்தே பறவைகள் வதியுமாபோ
லெழுமரண் டன்னைச்சூழ்ந்தே யேழைகள் வதியுமென்றும், (௯௨௦)

மணமுள மலரைநாடி வண்டினங் குழுமியென்னக்
குணமக ளுடுநின்றுங் கொழுந்துகொய் தோட்டநின்றும்
பணமுள தானநல்ல பட்டண மென்றுவந்த
கணமுள வநாதையிந்தக் கடிநக ரெங்குமுண்டால், (௯௨௧)

கோலமே யானமென்மைக் குழவிக ளிடுப்பினூற்றே
காலமே பசியோவன்றிக் கடுகிய நோயோவோயா
வோலமே யிடுதல்கண்டு முறைதாரப் பருவங்கண்டு
மேலமே லேதுஞ்செய்ய வென்செய்வர் கதிகளில்லை, (௯௨௨)

உற்றுள நோயையேனு முறுபசி யுறுவதேனும்
பெற்றுள தாயர் தந்தை பெருவயதுடையரான
மற்றுளர் சகிப்பரின்னும் வாயினுற் சொல்வரொன்றோ
பற்றுள வினையபச்சைப்பாலரேற் பாவம் பாவம், (௯௨௩)

வருத்த மதாயசூலால் வயாவுவந்த வதியெய்தின்
மருத்துவ மின்மையாலே மடிபவ ரனேகருண்டால்
விருத்தரே யாதியானோர் வேதனை நோயினெய்தி
னொருத்தரு முதவியின்றி யோய்பவ ரனேகருண்டால், (௯௨௪)

வேலைமே லென்றுமென்று மேவிய கூலியாள
ராலை போலோடியோடி யலைந்து தங்கடமைபார்த்தே
மாலையே யணையுமட்டு மனநனி யலுக்கத்தோன்றுங்
காலையே தொடுத்துநிற்பார் கற்கவுஞ் சமயமில்லை, (௯௨௫)

வேறு.

ஆற்றவு மருந்துயரநாதை பாடுகண்
மாற்றவும் வரும்வரும் வசதிசெய்குருப்
போற்றவு முளமிசைப் பொருந்தவுன்னினன்
சாற்றவும் வேண்டுமோ தருமனல்லனோ, (௯௨௬)

ஏலவு மேழைகட்கிரங்கு மிங்கிதைப்
போலவு மறமினிப் பொருந்துமோவென
வேலவு மெதையெதை யியற்றுவேமெனச்
சாலவு நினைந்தனன் றருமஞ்செய்குவான், (௯௨௭)

எண்பெற வனேகமா மனைவகளெங்கணுங்
கண்பெறக் கூட்டியே கசிந்துசெய்ம்மென
மண்பெறத் தகுமற மாண்புசெப்பினன்
பண்பெற வநாதைகள் பதைப்பைத்தீர்ப்பவன், (௯௨௮)

கனத்தினர் மன்னவர் கதித்தசிங்களர்
தனத்தினர் செயத்தகுந் தருமஞ்செய்வதின்
மனத்தினர் மக்களாய் மதிக்குமித்தகைச்
சனத்தினர் தங்களாற் சபைகள்கூட்டியே, (௯௨௯)



ஈண்டு மச்சபைதொறு மீதுதர்மமென்
றூண்டுகள் பலப்பல வநாதைதர்மத்தை
வேண்டு மட்டாகவே விரும்பிக்காட்டுறுத்
தூண்டு வானவர்களைத் தூக்கிவந்தனன், (௯௩௦)

ஆற்றவு மருளருணாசலந் துரை
தேற்றவுந் தேற்றமாய்த் தெரிந்ததர்மிகள்
சாற்றவு மரிதெனத் தா முன்னிமேன்
மாற்றவு மோவெனு மகிழ்ந்துகைதந்தார், (௯௩௧)

தாந்தன மென்றவர் தருமமென்றிட
வேந்தனு முதவிகள் வேண்டிச்செய்திட
வேந்தலுந் தானதற்கிரட்டி நல்குறீஇ
யாந்தன மாமென வாற்றக்கூட்டியே, (௯௩௨)

ஏற்றமாங் கொளும்பினி லிந்தநாளினிற்
சாற்றவே யோரநாதார சங்கமொன்
றூற்றவு நிலைபெற வமைத்துவைத்தனன்
போற் றருணாசலப்பொருவில் புண்ணியன், (௯௩௩)

வேறு.

கொச்சை மென்சொற் குழவிகடங்கட்கும்
பச்சைப் பாலர்க்கும் பால்கள்கொடுக்கவும்
யச்சை நோய்க்கு மருந்துகணல்கவு
மிச்சையாயிவ ணீங்குநி யோகித்தான், (௯௩௪)

உயங்கு மேழைகளுற்றமர் தம்மனை
மயங்கு கர்ப்பவயாவரும் வேலைகள்
வயங்கு சங்கம் மருத்துவர்ப்போக்கவுந்
தயங்கு மிந்தத்தரும னமைத்திட்டான், (௯௩௫)

தெள்ளிதாகத் தினம்பகன் முற்றவுந்
துள்ளிவேலைத் துறைகளி னிற்பவ
ரொள்ளி தாங்கலை யோதிடற்கேயிராப்
பள்ளி தன்னையும் பண்புடன்றாபித்தான், (௯௩௬)

அந்தமற்ற வநாதைக ளாபத்துக்
கெந்தவெந்த வியற்றுதற் கொத்தன
முந்தமுன்னி முழுவதுஞ் செய்குவா
னிந்தவேந்த லெவற்றையும் வைத்திட்டான், (௩௩௭)

ஆரநல்ல வநாதைகட் காகுமா
தார சங்கத்தைத் தந்துதாபித்தது
பாரமானவிப் பட்டணத் துன்னுங்கா
லோரமற்றுய ரோருப காரமே, (௩௩௮)

வேறு.

தருமத்துட் டருமமா மித்தருமங் கடவமேயான
கருமத்துட் கருமமென்றே காதலாய் நாளுநாளும்
வருமத்துட் டவரு வள்ளன் மன்னனுமுதவிகூர
மருமத்துட் பாரமாக வைத்தன னடக்கச்செய்தான், (௩௩௯)

இப்பெருந் தருமந்தன்னை யிலங்கைமே னகர்நாடெங்குந்
தப்பரும் வகைமைத்தாகத் தனித்தனி நிறுவச்செய்தே
யப்பெரும் வெயிலினுற்றோர்க் கரியநள் ளீழல்போல
வொப்பருந் தருமவேந்த னுதவினுன நாதைகட்கே. (௩௪௦)

---

## பதுமநாபன் இங்கிலந்திற் கதியடைதல்.

---

பன்னுமுறை யெடுத்தெடுத்துப் படிப்படியே திருத்திமன்னன்
பின்னுமிங்கு குறைமுறைகள் பேசவிருப்பா னுண்டின்
மன்னுமிலங்கா புரிக்கே மனுமுறைகள் செயக்கருதி
யின்னுமொருகா லேக விங்கிலந்துக் கெழுந்தனனே, (௩௪௧)

வறந்தமரந் தழைத்திடவும் மலர்ந்திடவுஞ் செய்யவல்ல
சிறந்தமொழி நகையினுடன் சீரடக்கம் பொறைகருணை
நிறைந்த குணஞ் சாலுமிந்த நேரிழையாளுடன்போத
வறைந்த பெருஞ் சலதிகடந்தணைந் தமர்ந்தார்பரிசுநகர், (௩௪௨)



ஈதுநிற்கத் தாமேகிப் பரிசுநக ரெய்துமந்தப்
போதுவரைந் தனுப்புதலும் போந்துகலை கற்றவண்சே
ரோதுதலை மகனான வுயர்பதுமநாப னென்போன்
மீதுவள ரன்புளமேன் மென்மேலும் பெருகவுற்றான், (௩௪௩)

அன்றுவருந் திருமுகத்தை யடுத்தடுத்துப் பார்த்துவகை
யென்றுவருங் கடலழுந்தி யெய்தியெய்தித் துறைமுகத்தி
லின்றுவரும் நாளைவரு மென்றுவரு மவாவுடனே
நன்றுவரும் பெற்றோரை நாடவென்று காத்திருந்தான், (௩௪௪)

என்றுமுகங் காண்பனென விவன்காக்கு மதுபோல
வொன்றுமுகந் தந்திவனை யுற்றவர்கள் கொண்டாட
வன்றுமுகந் தந்தருண சலக்குரிசி லருமைமக
னன்றுமுகங் காண்பதுநாம் நாளையெனக் காத்திருந்தான், (௩௪௫)

அரும்பிவருங் காந்தமென வங்கங்கே யுருகிமனம்
விரும்பி யிவரிருந்தளவில் விதியுமொன்று விட்டிடுமோ
வரும்பிறகே யீதறியார் மாநிலத்தோர் மறந்தலைவர்
திரும்பிவரு கென்றாலுஞ் சென்றிடுமோ வூழ்வலிதே, (௩௪௬)

பெற்றோர்கள் வருவரென்றும் பெரிதுமனஞ் சோர்வொன்றுஞ்
சற்றோர்த லில்லாமற் றான்பதும நாபமக
னுற்றோர்க ளாங்கிலரே வுறுந்துணையாய் மெய்மறந்து
மற்றோர்த லென்னவினி வானுலகை விரும்பினனால். (௩௪௭)

வேறு.

மைந்தனுங் கிறந்தபெற்றி மாதவ வயத்தாற்பெற்ற
தந்தையார்க் கிவர்கடந்தி தருதலு மறிவுமாழ்கிச்
சிந்தையைத் தானேதேற்றிச் செல்வனைப் பார்க்கவேண்டு
மந்தநல்ல வாவொடுற்ற வன்னைக்கு மறைவுசெய்தே, (௩௪௮)

தயங்குறு மறிவிற்பெற்ற தாய்தன துயிரைம்பேறாள்
மயங்கிடிற் றீமைமேலும் வருமென வறிவின்மேலோன்
பயங்கிளர்ந் தயலினங்கோர் பண்டிதன் றனையுங்கொண்டே
வயங்குறு மிங்கிலந்தில் வந்தன னந்தநாளில், (௩௪௯)

பெற்றிடும் தலைமகன்மேற் பேரன்பு பெருகநற்று
யுற்றிடு முவகையோடு மொருநொடி யளவினெய்திக்
கற்றிடுவா னிங்கேகுங் கான்முளை மனையில்வந்தே
சுற்றிடு மவரைப்பார்த்தென் றோன்றலைக் காணேனென்றாள், (௯௫0)

என்னவே யேதும்பேசா ரிரங்கின ராகநிற்க
முன்னவே மகனை யங்கே மூடிவைத்திருத்தல்காணா
மன்னவே யம்புபட்ட மானெனத் துடித்துவீழ்ந்தே
பன்னவே றென்னவின்றாள் பதைபதைத் தாவிசோர்ந்தாள், (௯௫௧)

வேறு.

பேறரிய தவமியற்றிப் பெறும்பதும நாபமைந்தா
கூறரிய வெங்கள் குலக்கொழுந்தாக வந்துதித்தாய்
தேறரிய நங்குடிக்குப் பிள்ளைகலி தீர்த்திருந்தாய்
மாறரிய கண்மணியே மறந்திருக்க வந்ததென்னோ, (௯௫௨)

தந்தை யிதைப்பொறுக்குமென் றுஞ் சகோதரர்கள் சகிப்பரென்
சிந்தை துணிந்தெங்கிருந்தாய் செல்வா சிந்தாமணியே [றுஞ்
முந்தையுள விதியுனக்கு முடியுமென்று நானறியேன்
விந்தைபெற வோடிவந்தே மென்மொழிக டாராயோ, (௯௫௩)

தலைநாளி னுன்புரிந்த தவமனைய திருமகனே
கலையான கழஞ்சியமே கண்மணியே வாராயோ
மலையான நின்றுதை மாழ்குமதைப் பாராயோ
தொலையாத துன்பமெனுந் தொடுகடலுள் வைத்தனையே, (௯௫௪)

நன்குலத்துக் கொளிர்விளக்கே நாடுபுகழ்ந் தேத்துமுன்றன்
முன்குலத்துத் தோன்றல்கடம் முழுப்பெயரும் நாட்டவந்த
மன்குலத்துக் கொருதிலகா மாண்பதும நாபமைந்தா
நின்குலத்து மாதாவை நீகலங்க வைத்ததென்னோ, (௯௫௫)

உன்முகத்தை நான்பார்க்க வுவந்துமற்றோர் முகம்பாரா
வென்முகத்தை நீபார்க்க வெண்ணியவா வுடன்வருமுன்
மன்முகத்தை யொத்தொளிர்விண் மணிபோல விளங்குனது
நன்முகத்தை மறைத்திருத்த லலமோசொல் மாமகனே, (௯௫௬)



வேறு.

சேரவே யங்கிலேய சிங்கள மகளிரேந்தித்
தேரவே யாற்றவாற்றச் சேயிழை தேம்பித்தேம்பி
யாரவே கண்ணீர்வார வரியமா மகன்மேலன்பு
கூரவே குரலைவிட்டுக் குயிலெனப் புலம்பலுற்றாள், (௯௫௭)

மாற்றிடா வரத்தினாலும் வாட்டிச்செய் நோன்பினாலும்
வேற்றிடா வறத்தினாலும் வேண்டின ரரிதிற்பெற்றுப்
போற்றிடா வருந்தஞ் செல்வப்புத்திர சோகமென்னி
னாற்றிடார் முனிவர் தாமுமா யிழையாற்றுமோதான், (௯௫௮)

ஆண்டுதா னழுதிட்டாலு மதிற்பயன் யாதுமில்லை
மாண்டுதான் போனபேர்கள் மற்றினி வருவதுண்டோ
வீண்டுதா னியற்றவேண்டு மீமத்துக் கடன்கள்செய்வேம்
பூண்டுதா னிரங்காயென்றே பூவையை யொருசாருய்த்தார், (௯௫௯)

பொன்னை நோணங்கினல்லாள் பொறுப்பளோ புதல்வன்றன்
மின்னை நோரகமீண்டும் விழவிழ விலக்கிவைத்தே [மேன்
தன்னை நேரிலாதமைந்தன் றவமகன்றுதை தன்னால்
முன்னை நேரிலாத சைவமுறைகளை நடப்பித்திட்டான், (௯௬0)

வந்த சிங்களர் களங்கண் மன்னுமங்கிளர்கள்கூடி
யந்தநல் வகைகட்கேய்ந்த வரும்பொருள் பலவுந்தேடி
யிந்தள மடுக்குவித்தே யீர்த்திடும் பரித்தேர்மீதி
றந்தனர் மயானஞ் சேர்த்தித் தகனமுஞ்செய்தாரங்கண், (௯௬௧)

ஈண்டிது நிகழ்ந்ததாக வினியருணா சலப்பே
ராண்டகை வந்தவாறு மணங்களுள் வந்தவாறுங்
காண்டகு வாக்கின்வல்ல காமனேர் பதுமநாபன்
மாண்டிடுவாறு மெல்லாம் மந்திரி யறியப்பெற்றான், (௯௬௨)

நாத்தரு புகழ்நாட்டி நாட்டுபகாரி யான
வேத்தருணா சலத்துக் கித்துயர் விளைந்ததென்றே
கோத்தரு நெறிகணோர்செங் கோறனை நடாத்தற்கொத்த
மாத்தரு மதியின்வல்ல மந்திரியிதனைச் செய்வான், (௯௬௩)

நன்மகன் கலைஞன்றக்கோர் நட்பினன் வாக்குவல்ல
னுன்மகன் பதுமநாப னுலவுயிர் துறத்தலாலே
மன்மக னளிக்கு மெங்கள் வயப்பிரித்தானியாவோ
தன்மக னிழந்ததொத்தே தகுதிசற் றிழந்ததக்கோய், (௯௬௪)

என்றிதை வரைந்தே யெங்களேந்தலுக் கனுப்பிவைத்தா
னன்றிதை யறிந்தமேலு மமைச்சர்க ளாதியானோர்
சென்றிதை யெடுத்துச்செப்பிச் சிந்தனை கலங்காவண்ணம்
நன்றிதை யொழிமினென்றே நயமொழி பகர்ந்தங்குற்றார், (௯௬௫)

மாண்டுறு பதுமநாப மகனையே யெண்ணியெண்ணி
யீண்டுறு தாதைதானுந் தாயுமா யிரங்கும்பெற்றி
வேண்டுறு மாசின்மேலாய் மிளிர் பிரித்தானியாவை
யாண்டுறு மகுடவேந்து மரசியு மறிந்தாரங்கண், (௯௬௬)

இலங்கையா மாதைச்சட்ட வெழிலணி யாடைசாத்தித்
துலங்கவே வைக்கவந்த துரையருணா சலத்தைக்
குலங்கவின் வனப்புக்காட்டுங் கோதையை யற்றைஞான்றில்
வலங்கலந் திமைக்கும் ராசமாளிகைக் கழைத்திட்டார்கள், (௯௬௭)

நன்முகங் காட்டிக்கிட்ட நண்ணிய வளவிற்றக்க
வின்முக மொழிகளோடு மிருத்தியே யொக்கவைத்துப்
பின்முக மன்கள் பேசிப்பெரிதகங் களித்துத்தங்கள்
சொன்முக மலரச்செய்தே துன்பத்தைத் துடைத்தாரங்கண், (௯௬௮)

அங்கிதமாகப் பேசி யளவளா யிருக்கும்வேலை
தங்கிதனுட்டின் ராச தன்மங்கள் பெறுவான்வேண்டி
யெங்கிதனிடமே யென்னு விருந்தவ னமையம்பாரா
விங்கிதமான யாவுமிறைவனோ டியம்பு மையன், (௯௬௯)

பொருதலு மொன்றற்கொன்று பொருந்திடாச் சட்டநாட்டக்
கருதலுமாகு நிற்கக் காவல ராசதர்மந்
தருதலும் வேண்டுமின்னுந் தனியிள வரசுமிந்நாள்
வருதலும் வேண்மென்ன மன்னவர் மன்னன்சொல்லும், (௯௭0)



ஐயனே யிளையவேந்தை யனுப்புவே னின்னுமாங்கே
செய்யவே நின்றவெல்லாஞ் செய்துநான் றருவேனீழ
முய்யவே வேண்டுமென்னு முயர்தர்ம முடையையற்றா
னையவே வேண்டாமென்று நல்விடை யதுவுந்தந்தான், (௯௭௧)

அரசியும் பெண்மகாரு மழகுசான் மகளிர்யார்க்கும்
வரசிர மணியைநேரும் வளப்பமை சொர்னத்தோடும்
விரசிய மொழிகள்பேசி மேன்மைகள் செய்தபின்னர்
பாசியே விடையும்பெற்றுப் பாங்கு தம்மனைக்குமீண்டார், (௯௭௨)

திண்ணிய கவுணமார்க்குச் சென்றலிங் கிவரைக்கூவிக்
கண்ணிய வுரைகளாடிக் கலந்தன ரனையபோதி
லெண்ணிய கலைவாக்காள னிலங்கையா னுபன்னியாசம்
பண்ணிய வகையாற்சான்றோ னிவன்பெயர் பதுமநாபன், (௯௭௩)

உன்னரு முபன்னியாச முவப்புற விந்தவார
மன்னவன் செய்யுமென்றே யழைப்பிங்கும் வந்தகண்டீ
ரின்னவன் றன்னைநீவி ரறிவிரோ வென்னலோடு
மென்னதான் சொல்வ ரந்தோ விருகணுங்கலுழ்வதானார், (௯௭௪)

அக்கணஞ் சென்றனுடி யளித்தவ ரிவராமென்னு
வொக்கவே கவலைகூரா வுவருளந் தேற்றவுன்னி
மிக்க பேரன்பென்செய்யும் விதியினை விலக்கப்போமோ
தக்கவ னிறந்ததுங்க டவக்குறை வாகுமென்றான், (௯௭௫)

ஆண்டிரு பானொடொன்றி லரசர்கோன் பணியைப்போற்றி
யீண்டுமெய் காப்போர்சூழ விளவரசிலங்கை யெய்திக்
காண்டுநற் காட்சிதந்தே கவினகர்ச் சிறப்புநோக்கி
மீண்டுபோ யிங்கிலந்தின் மேவினன் முன்புபோல, (௯௭௬)

ஆனவிந் நாட்டுக்கிந்நா ளரசிளங் குமாரன்வந்து
போனபின் செங்கோலேந்தும் பொன்முடி புனைந்தமன்னன்
றனருணா சலம்முன் சாற்றியே கேட்டவண்ண
மேனவூர்க் கியைவதான வேண்டின செய்வதானான், (௯௭௭)

மன்னவ னாசுக்கேய்ந்த வகைகளைத் திருத்திவைத்து
மென்னல மென்றே நாடியிலங்கைக்கு வகுத்துச்செய்துஞ்
சொன்ன நற்சமயங் கல்வி துலங்கியே யோங்கவுய்த்து
மின்னண மேந்தலிங்கே யிருந்திளைப்பாறி வந்தான். (௯௭௮)

—•—

## இலங்கைச் சரித்திரமும், நூல்களின் வியாக்கியான மொழி பெயர்ப்பும்.

—•—

தோற்றுமெழு பிறப்பினுக்குந் தொடர்புகழை வேண்டிடுகிற் றெல்லைநல்லோர், தேற்றுமுடை யியற்றிடுதனூற்பாக்க ளியற்றிடுத றரியவென்று, மேற்றுசிலை நிறுத்திடுத லிருநிலத்திற் பிறந்த பயனென்றுமுன்னஞ், சாற்றுமிவை மூன்றினுக்கு மிலக்கானோ னிவ்வருணாசலமே யன்றோ, (௯௭௯)

பன்னுபல பாடைகளிற் பயிற்சிபெற்றோன் பண்புளதாய்ப் பாடையென்ன, மன்னு தமிழ்ப்பாடை தனினிலக்கணமுமிலக்கியமும் வரம்புகண்டோன், முன்னு சிவஞானமுதற் சித்தாந்தசாத்திரங்கள் முதிரக்கற்றோ, னின்னு மிவனுயர்யோக சாதனமேலென் றுமென்று மிருக்கப்பெற்றோன், (௯௮௦)

நிலமுழுதும் பரந்துவரு மங்கிலத்திலீங்கொருவர் நேரின் றென்னப், புலமுழுது மமைந்துகற்றே யோங்கு பலபட்டமதாற் புகழுநிற்போ, னலமுழுதுந் தருமினைய பாடைகளைத் தனித்தனியேயோதிக்கற்றித், தலமுழுது மெடுத்துரைக்கப் பெற்றதனிப் பேரறிவாற் றயங்கப்பெற்றோன், (௯௮௧)

கற்றதனு லாயபயன் பலர்க்குமுபயோகமுறக் கருதியைய னுற்றவிலங்கா புரியினுண்மை வரலாறுகளை யுணர்விற்கொள்ளாச் சொற்றபல நூன்முறைகளாய்ந்துகொண்டே தொடர்ந்து கற்றோர், மற்றவர்க ளுய்த்துணர்வா னுங்கிலத்தி லரிதாகவரைந்து வைத்தான், (௯௮௨)



விண்புதைத்த வானவர்க்கு விருந்தாக வில்லறத்தில்விருந்து நல்கி, மண்புதைத்த சீர்த்தியினுன் பொருணூலுட்டலை மகற்கு மாதுநாணிக், கண்புதைத்த துறைவிரித்த கல்லாட நூலினுக்குக் கருத்தைமுன்னி, யெண்புதைத்த விளக்கவுரை யுய்த்துணர்வா னுங்கிலத்தி லெழுதிவைத்தான், (௯௮௩)

நாடுதிருத் தொண்டுடைய கீரனருள்பெறவேண்டி நவிலுமன்பாற், பாடுதிரு முருகாற்றுப்படைக்குநச்சி னார்க்கினியர் பகர்ந்த செவ்வி, கூடுதிருத் தமிழுரையை யெழிதாக விளக்கியின்னுங் கூடுமென்றே, தேடுதிருவாய் மொழிகடிறம்பாம லாங்கிலந்திற் றீட்டிவைத்தான், (௯௮௪)

மேவிமகற் குபதேசம் புகறியென்றே யயோத்திநகர்வேந் தன்சொல்லத், தாவிவருவ சிட்டமுனி தாசரதிக்கரிதரிதாய்ச்சாற் றியுற்ற, தேவியலுந் தனிஞான வாசிட்ட நூலினுக்குந் தோத்தக்கபூவியலும் விளக்கவுரை யதுவுமிவ னுங்கிலத்திற் பொறித்துவைத் தான். (௯௮௫)

வேறு.

சொன்ன நற்றமிழினுள்ள சொற்களை யவற்றுட்சாலப்
பன்னு சித்தாந்தத் துள்ளபதங்களை யாராய்ந்தையன்
பின்னமில்லாத வாற்றாற் பிறமொழிப்படுத்து மாற்றை
யின்ன நூலுரைகள் சொல்லுமெழிதெனக் கருதமாமோ, (௯௮௬)

தோய்ந்தன வுலகமுற்றுஞ் சொல்லு மிப்பாடையென்று
மேய்ந்தனர் கற்போரெல்லா மிதனையே கற்பரென்றும்
வாய்ந்தநந் தமிழினுள்ள வான்பொரு ளுணர்வரென்றே
யாய்ந்தன னிவற்றை யெல்லாமாங்கிலத்தெழுதியிட்டான், (௯௮௭)

கூறிய தேயமுற்றுங் கொண்டுள பாப்பைமாந்தர்
வேறியலாக வைத்தே வேறுவேறாக வாள்வர்
மாறிய நிலங்கட்காக வாதங்க ணேருமாயிற்
றேறிய தீர்ப்புச்செய்வான் சிவில் லோச்சட்டமுண்டால், (௯௮௮)

சட்டமிங்கிதிலே சொல்லா சங்கைக டருமாற்று
னட்டமேயாக நண்ணுநயங்களை நாடி நாடிக்
கட்டமற்றிலாத வண்ணங் காவலர் வழக்கைமெல்லத்
திட்டமாய்த் தீர்ப்புச்செய்வான் சீவில்லோ நூலுஞ்செய்தான், (௯௮௯)

## ஆனைக்குட்டிச்சாமி மடாலய தாபனம்.

அறுபகை யாங்காமமுத லுட்பகையும் பகைமைமுதலடுத்து நிற்கு, மறுபகையாம் புறப்பகையுங் கடந்தவுயர் மாஞானிமக்க டம்பா, லுறுபகையாங் குறைவுகளை தீர்க்குமருட் பெற்றியுளோ னுலகம் விஞ்சப், பெறுபகையாமென வெறுத்தோன் போனைக் குட்டியெனும் பெருமகத்து, (௯௯௦)

ஓரிடம்போற் பலவிடத்து மொருதினத்திற் காட்சிபெறவுல வுகிற்போன், பாரிடம்போன் மறைவனங்கங்கழற்றியிடும் பக்குவ னும் பான்மையுள்ளோன், சீரிடம்போ யமர்ந்திருக்குஞ் சித்திகளு மவர்தமக்கே சிறக்கநல்குஞ், சேரிடம்போய் விளையாடல்செய்யு மிந்தச்சாமிநிலை செப்பலெங்ஙன், (௯௯௧)

மாற்றவரும் விருப்பு வெறிப்பற்ற நிலைமதித்தரிய மகத்து வென்னுத், தேற்றமுடன்றுரை யருணாசல மவற்றுச்செயுமுதவி செய்து நன்கு, போற்றிவரும் நாளொருநாட்பூத வுடம்பிதுபுவி யைப் பொறுத்ததன்றே, வாற்றவருஞ் சேட்டையெலா மவிந் தவிந்தே புலன்களைந்துமடக்கமுற்ற, (௯௯௨)

கடக்கரிதாம் விதிவலியைக் கடந்தவரைக்காசினிமேற் கண் டதில்லைத், தொடக்கமுற வருமானைக் குட்டிச்சாமிதான் யோகத் துயிலென்றுன்னத், தடக்கமுறு மளவிலருணாசல வேள்மகத்து வுக்குக்குச் சமாதிவைத்தே, யடக்கவரு ளோங்கிவருமென வரு ளாற்றுணிந்திட மீதாகுமென்றே, (௯௯௩)



சங்கநனி யெடுத்தெடுத்தே தனிதமிடுந் திரைக்கரத்தாற்றந்து வீசிக், கங்கநிரை துரத்துகின்ற சலதியுடனணைந்தொருபாற் களனி யென்னுங், கங்கைநதங்கலந் தொழுகுஞ்சாகர சங்கமமான கதிப்பு மிக்க, வங்கநிரை நிரையாக வருஞ்சிறப்புத்தரு முகத்துவாரந்தன் னில், (௯௯௪)

கூடுமென விலங்கையிலே பிரயாகைபோற் கொளும்பிற்குலவு மென்னுப், பீடுபெறச் சமாதிவைத்தே போருடானென்றுமென் றும் பெருகிநித்த, மாடுமென்றும் நினைந்தருளை முன்னிட்டே யாலயமுமமைத்துத் தந்து, தேடுமருட்குறியு மவண்டாபித்தே யின்னமுந்தான் றெரிந்து மன்னன், (௯௯௫)

முன்னுமுதற் கணேசனம்மை யெடுத்ததண்டபாணியு மேன் முறையிற்பாங்கர்ப், பன்னுநடராசரெனும் மூர்த்திகளைத் தாப னங்கள் பண்ணியின்னுந், துன்னுநவக்கிரகமு மங்கமாவைத்தே சூலியையுந் துலங்கதந்து, மன்னுபிரமாலயமும் மலர்மலருந்தோட் டமொன்றும் மருவவைத்து, (௯௯௬)

சித்திதரு மபிடேகமருள்பெருக விதிப்படியே சிறக்கச்செய் து, நித்திய நைமித்தியங் கடவருமனிபந்தனைக ணிறுத்தித்தந்து சத்திய நன்மகத்துகட்குச் சமாதிதந்தே யெந்நாளுஞ் சாதுதர்மப் பத்திநனி தெரிக்கினண்ணற் குளஞான முதிர்ச்சிதனைப்பகர்த லென்னே. (௯௯௭)

வேறு.

தன்னைநேர் முகத்துவார சாகர சங்கமந்தான்
பொன்னைநேர் கொளும்பிற்கண் போற்புண்ணியத்தான மிங்கே
மின்னைநே ராகவெங்கும் மேவியே மறைந்துதோன்று
மன்னைநேர் சாமியென்று மாடலா யமர்தல்காட்சி, (௯௯௮)

அளிதரு மன்பர்கட்கே யருடருந் தன்னினின்று
மொளிதரும் யார்க்குங்கேட்க வொலிதரு மற்புதங்க
டெளிதருஞ் சித்திகாட்டுஞ் சிந்தித்த வரங்கணல்குங்
களிதரு சாமியாடல் காணக்கண்கூடே கண்டீர், (௯௯௯)

## அரசினர் ஆசிய சங்க அக்கிராசனம் வகித்தல்.

இந்தவீழத் ததிபதி யின்னமும்
பிந்தலற்ற பிரதி நிதிகளோ
டந்தவங்கில ரானவர் தங்களாற்
சொந்தமென்னத் தொடங்கிய திச்சபை (௧௦௦௦)

அங்கிலர்க் குளரிய தமிழர்க்குட்
சிங்களர்க்குட் டெளிந்த கலைவலோர்
துங்கமெய்தித் துலங்கிய சங்கத்துக்
கங்கமாக வமைந்தவ ராயினார், (௧௦௦௧)

சங்கமுற்ற தகுதிக் கிணங்கவே
யங்கணீழத் ததிபதி யாயினோன்
றங்கணாகத் தலைமை கொளாசனத்
துங்கமெய்தித் தொடர்ந்து நடத்தினான், (௧௦௦௨)

கூறுமிச்சங்கங் கூடுமக் காலங்க
டேறுமாசனந் தேசாதிப னாற
வீறுபெற்றுள வித்துவ சேகரர்
பேறுதாமெனப் பெய்குவர் சொன்மழை, (௧௦௦௩)

சாத்திரங்கள் சமயங்கள் மேதையோர்
கோத்திரங்கள் குலவு மாசிய
னேத்திரங்களி னின்று முறைமுறை
காத்திரம்பெறக் கட்டுரை பெய்வரால், (௧௦௦௪)

சாற்றநின்ற வதிபதி சங்கத்துக்
காற்றவெண்ணில வாண்டுக ளாகவே
மேற்றலத்திடை மேவு மவ்வாசனம்
மாற்றமின்றி வதிந்தனள் வந்தபின், (௧௦௦௫)



பின்னமின்றிய போறி ாளனென்
றுன்னவிம்ப ருயாருணா சல
மன்னனக் கிரவாசன மன்னியே
யன்னநாளிற் பத்தாண்டு நடத்தினான், (௧௦௦௬)

கோதகன்று குலவுமச் சங்கத்தி
னாதனாகி நவிலருணா சலம்
போதனென் றிந்தப்பொன்னவை போற்றிட
வோதவேண்டுவ துன்னி யுணர்ந்தவன். (௧௦௦௭)

வேறு.

ஆதியாயது வடமொழி தென்மொழி யறிஞ
ரோத வுள்ளது பதிபசு பாசங்களுரைக்கும்
வாதி யாவரு மதங்களினுண்மைகள் வகுக்கு
மேதிலாவகை யாய்வுறும் பாடைகளிவையே, (௧௦௦௮)

இந்த நாடுக ணகர்களி னிருப்பவரெவரும்
வந்த சாத்திரமுரைத்திடு நுண்பொருள் வகையு
நந்த லாவருமுப்பொரு ளுண்மையி னலனு
மெந்த நாளினுமாய்வது மறிவது மிலையால், (௧௦௦௯)

இன்னதாகிய செந்தமிழ் வகைகளை யிறைவன்
முன்னதாகிய வுருவின திலக்கண முறையை
மன்ன நாட்டினுக் கேற்றிடு திருத்தத்தின் வகையைச்
சொன்ன விச்சபைக் குரைப்பது தகுமெனத்துணிந்தே, (௧௦௧௦)

சாத்திரங்களைக் கடவுட னுருவினைச் சமய
மாத்திரங்களை நாகுடன் முத்தியின் வகையைச்
சேத்திரங்களைப் பணிபவர் நிலைகளைத் திருந்தப்
பாத்திரங்களை யறிந்தறிந் தேற்றிடப் பகர்வான், (௧௦௧௧)

ஏத நீங்கிய விறையவனாதியி லியம்பும்
வேத நான்குள வழிவரு நூலெனவிளங்கும்
பேத மில்லன வேழுநான்காகமம் பிறழா
தோத வின்னமுஞ் சார்புகளளப்பில வுளவால், (௧௦௧௨)

இன்ன வன்றியும் பதிபசு பாசத்தினியல்கள்
சொன்ன சித்தாந்தம் பன்னான்கெனத் துலங்கு
முன்னதாகிய கருவி நூலாமென முறையி
லுன்ன நிற்பன விலக்கணந் தருக்கமுமுளவால், (௧௦௧௩)

உன்னு மன்ன சித்தாந்த நற்சமயத்திலுளதா
மன்னு நூல்களின் வகைகளை முறைமுறைவகுத்துப்
பன்னு மங்கவற்றும் பொருள்யாவையும் பலகான்
முன்னு மாறவன் விரித்தனன் றெளிவுறமொழிந்தான், (௧௦௧௪)

அன்னதாகிய பதிபசு பாசங்க ளநாதி
பன்ன வந்திடும் பாசந்தான் பற்றிடும்பசுவைத்
துன்ன நிற்புறும் பாசமேற் பற்றறத் தொலைந்தாற்
பின்ன ரப்பசுமுறைப்படி முத்தியிற் பிறங்கும், (௧௦௧௫)

கருவ தோடிறப் பில்லவன் பதியெனுங்கடவு
ளுருவ மில்லவன் குணங்குறி யில்லவனுரைக்கிற்
றிருவ தில்லவன் பெயரிடமில்லவன் றெரியா
வருவ முள்ளவனவன் வடிவென்பதே யபத்தம். (௧௦௧௬)

வேறு.

ஐந்து பூதங்களாலே யமையத் தந்துலகையாங்க
ணைந்து நற்றலங்க ளூடேயாவிகட் காகவேண்டி
யைந்து பேரவைகளாக்கி யங்கங்கே யாடலாக
வைந்து தன் றொழில்களுமாற்றுவ னிந்தவீசன், (௧௦௧௭)

ஆக்குத லழித்தல் காத்தலருளுதன் மறைத்தலென்ன
நோக்கு மத்தொழில்களைந்து நவலினோர் நடனமாகத்
தேக்குமச் சபைகடோறுந் தினந்தினமாடவேண்டி
யூக்குமக் கடவுளுக்கோ ருருவமும் வேண்டிற்றன்றே, (௧௦௧௮)



நாதனச் சபைகளெங்கு நடனஞ்செய்திடவே தூக்கும்
பாதமேயான வந்தக்குஞ்சித பாதந் தொட்டே
யேத மிலங்கந்தம்மி லைந்தொழி லிருந்தமற்றை
வேத மந்திரமே யாகும் விளம்பியவங்க மெல்லாம், (௧௦௧௯)

முன்புள தொழில்களைந்து முறைமுறை நடக்கவேண்டி
யன்புள தனது கூறுமருளையே சாத்தியாக்கி
யின்புளனாகக் காட்டி யியற்றுவ னிதனைத் தோரார்
பின்புளமாக்க ளிதைப் பேசுவ ரிச்சை யென்றே, (௧௦௨௦)

ஓரிய லுரைக்கவொண்ணா னுருவரு வுருவினுக்குச்
சூரிய னொளியுமான தோற்றமே யுவமையாகுங்
காரிய முளதேயாயிற் காரணமுளதா மிந்தச்
சீரிய வுலகந்தானே தேவுமுண்டென்று சொல்லும், (௧௦௨௧)

உற்ற விவ்வுலகை யீசனுடலினை யுயிரையின்னு
மற்ற மில்லாம லென்றுமைந்தொழி னடாத்துமாற்றைக்
கற்றவர் விழுங்குகின்ற கடவுளினுண்மை தன்னைத்
தெற்றென வுணரக்காட்டிச் செய்குவ னுபந்நியாசம் (௧௦௨௨)

சொற்றுள விவைகளன்றித் தொல்லைநூற் காவியங்கள்
பற்றுள முருகனாற்றுப் படைதிருக் குறளோடின்னு
மற்றுள வொடுக்கம் ஞானவா சிட்டஞ்சித்தியென்னப்
பெற்றுள சாத்திரங்கள் பேரவைக் கேற்பப்பேசும், (௧௦௨௩)

வேறுள மதமேயான விவிலிய வேதம்பேசிப்
பேறுள பவுத்தவேதப் பிடகநூற் கொள்கைபேசிக்
கூறுள விலங்கையாளுங் கோலுள திருத்தம்பேசி
யேறுள காலந்தோறு மின்னணம் பேசிவந்தான், (௧௦௨௪)

இன்னவ னின்னவாறே யிச்சபைக் காலங்காலம்
பன்னல வமைச்சர் மற்றும் பண்டிதர்புலவர்கேளாச்
சொன்னல மாகுமென்னத் தோற்று பத்தாண்டுமட்டு
நன்னலமாக நாடி நடாத்தியே மதிக்கவந்தான். (௧௦௨௫)

## தோட்டக் கூலிகளைப் பாதுகாத்தல்.

விற்பகல்லள பாகவிண் மேலெழுந்
தற்பகல்லி னருவிகளாரம் போற
பொற்பகமெங்கும் பொங்கி வடிதரும்
வெற்பகந்தொறு பேவுந் தேய்த்தோட்டங்கள், (௧0௨௬)

வாட்டமில்லவர் மன்னுந் தனத்தினர்
தேட்டமீதெனத் தேடினர் வந்தவ
ராட்டமானவ ராங்கிலரே யிந்தத்
தோட்டமுற்றுந் தொடங்கின ரந்தநாள், (௧0௨௭)

கொடுக்குஞ் செல்வக் கொழுந்துகளாயவும்
படுக்கு மற்றைப் பிசின்மரப்பால்களை
யெடுக்கு மாற்றிற்கு மிந்தியக்கூலிக
ளடுக்குமன்றி யவனிமே லாருளர், (௧0௨௮)

இந்தக் கூலிகளிங்கு வருதற்காய்ச்
சொந்தமான துரைக ளிடந்தனிற்
பந்தமான பணத்தொகை பற்றியே
யந்த நாட்டினரான கண்காணிமார்; (௧0௨௯)

உந்தத்தோட்ட முழைப்பத் தகுமென
வந்தகூலி வசப் படச் சொல்லிப்பின்
முந்தக்கொஞ்சப் பணமு முதற்கொடுத்
திந்தத் தோட்டங்களெங்கும் வருவிப்பார், (௧0௩0)

தோட்டம் வந்து தொழிரூடங்குற்றபின்
வாட்டமற்ற வருடங்கள் செல்லினும்
வேட்டகூலிக்கு வேதனந் தான்கொடார்
கோட்டமின்றிக் கொடுப்ப ரரிசியே. (௧0௩௧)



நேருங் காசுநெருங்கினர் கேட்பரேற்
கூருங் கோபக்கொடியகண் காணிமா
ராருங் கோலாலடிகளும் போட்டுமுன்
சாருஞ் சம்பளந் தந்தனமென்பரால், (௧0௩௨)

வாயு மற்று வலிகளுமற்றவர்
நோயுமாயினர் நொந்துபுண் பாட்டுடன்
பாயுமின்றிப் பசியுந் தலைக்கொளப்
பேயுமாகிப் பெரிதுந் திரிவரால், (௧0௩௩)

வருத்த மென்னின் மருந்துகணல்கி_ார்
திருத்த மெய்தச் சிறுவர்கள்கற்றற்கே
விருத்தமான வித்தாலய மில்லையாற்
கருத்தழிந்து கலங்குமிக் கூலிகள், (௧0௩௪)

ஊர்க்க ணேகவொருபணங் கைக்கிலை
வேர்க்க நின்றும் வெறுங்கைமுழமிடா
வார்க்க தேனுமவதி யிதினுண்டோ
பார்க்கவே யதிபாதகம் பாதகம், (௧0௩௫)

வேறு

சொல்லு மிவ்வாறேயாகத் தோட்டங்கடோறுந் தோறுங்
கல்லைநேர் மனத்தரான கடியகண் காணிமார்க
ளல்லலே புரிந்து கூலியாட்களை வருத்தும்பான்மை
மெல்லவே யுணர்ந்தானையன் வேண்டுபகாரஞ் செய்வான், (௧0௩௬)

மேவியே யழைக்குமாறும் வேதனங் கொடாதவாறும்
பாவியோர் கூலிதம்மைப் பசியினால் வருத்துமாறும்
வாவியே நோய்களுக்கு மருந்துகள் கொடாதவாறுங்
கூவியே கற்கப் பள்ளிக்கூடங்கள் வையாவாறும், (௧0௩௭)

இன்னமு மேழைக்கூலிக் கெய்துறு விபத்தையெல்லா
மன்னவ னுன்னியுன்னி மன்னுயிர்க் கிரங்குவானாய்ச்
சொன்ன தோட்டங்கடோறுந் தொடர்ந்துபோய் நாடிநாடிப்
பன்னிய தருமமென்றே பாது காத்திடுவதானான், (௧0௩௮)

சூதங்க ணிலாமற் றேட்டத்துரைகளே நயந்துநாடி
யேதங்க ளின்றிக்கூலி யேழை வேதனங்களென்று
மாதங்கள் செல்லச்செல்ல வரம்பது வாகவைத்துக்
கோதங்க ளேதுமின்றிக் கொடுத்திடுமாறு செய்தான், (௧௦௩௯)

மணிமுடி மகிபன்றெட்டே வறியவர் வரைக்குமெண்ணிற்
பணிமுடி யுலகில் யாரும்பசியென வருத்திநிற்கும்
பிணிமுடி பொன்றற்காகப் பேருணாத் தேடற்கென்றே
துணிமுடி பாகப்பேசிற் றொழில்களு மதற்கேயம்மா, (௧௦௪௦)

வாடையும் பனியுமின்னு மழையொடு வெயிலும்பாரார்
கூடையுங் கோலுங்கொண்டே கொழுந்துகொய்யேழைமாரை
யாடையும் போர்வைதானு மரிசியும் வழங்கியென்றும்
பீடையும் வாராமற் காக்கப்போறிவாளன் செய்தான், (௧௦௪௧)

தோட்டங்க டோறுந்தோறுஞ் சுரமுத னோய்கட்கென்றே
நாட்டங்க ளாகநாடி நன்மருந் துதவுசாலை
நீட்டங்கள் பெறவே யெங்கு நிறுவியக்கூலிமார்க்கு
வாட்டங்கள் வாராமற் காத்தான் மன்னவன்றருமசீலன், (௧௦௪௨)

தோடங்க ளிதுவுமென்றே தோட்டங்க ளெங்குமெங்கு
மூடங்களிலாத வண்ண முறைமுறை சிறுவரென்றும்
பாடங்கள் கற்கவென்றே பரிவுடனாய்ந்து பள்ளிக்
கூடங்களமைத்து வைத்தான் கோதகலறிஞர் கோமான், (௧௦௪௩)

வாட்டுகண் காணிமார்கள் மறியலும் வைப்பரொன்றோ
கோட்டுமுன் வழக்கும்வைத்தே கூலியை வருத்துமாறுங்
கேட்டுமே லவரையின்னுங் கேதங்களான வேதம்
மீட்டுவர் செய்யாவண்ணம் வெகுண்டன னிதனைச்செய்தான், (௧௦௪௪)

அன்னநாட் பாளிமேந்தி னமைச்சொடுவரைந்து பேசிச்
சின்னமாஞ் சட்டமாக்கிச் சிறைசெயாவகைமை செய்த
வின்ன சீரேந்தலென்று மேழைகட் கிரங்குமாற்றை
மன்னினர்க் கெடுத்துக்கூறி மந்திரிபுகழ்ந்திட்டானால், (௧௦௪௫)



ஏறிய நாகுற்றோருக் கின்பவீடுய்த்த வாபோற்
கூறிய சுகங்கள்யாவுங் கொடுத்திடக் கூலியாள
ரூறிய கருணையாள னுதவியாற் கேதம்யாவு
மாறிய வந்ததென்னா வள்ளலைத் துதிகள்செய்தார், (௧௦௪௬)

## யாழ்ப்பாணம்
## சைவப்பிரகாச வித்தியாசாலை
## உபந்நியாசம்.

தோற்றியிடும் பாண்டிதொண்டை சேரமுடன் சேர்ந்திலங்
குஞ்சோழமின்னு, மாற்றியிடு மீழமுமென்றெடுத்தியம்பு மண்ட
லங்க ளைந்துமட்டோ, வேற்றியிடு மலாய்நாடென்றினைய பலதேய
மெங்கு மிருப்போர்தம்முட், சாற்றியிடு தமிழ்மொழியைப் பேசு
கிற்போ ரிருகோடிசனங்களுண்டால், (௧௦௪௭)

நாடுடைய வீழமதி லின்னமுமே யாழ்ப்பாணநாடுதன்னின்
வீடுடைய நெறியளிக்குஞ் செவிக்கினிமை தந்திருக்குமேன்மைத்
தாகு. மீடுடைய தாய்மொழியைக் கல்லாமற் சீவனத்துக்கென்று
கற்றே, பீடுடைய தெனக்கருதி யாங்கிலமே யெவரெவரும்பேசு
கிற்பார், (௧௦௪௮)

முந்திருந்து செந்தமிழை வளர்த்தரிய நூல்களையுமுறையி
னச்சிற், றந்திருந்து முனமெழுபா னாண்டளவிற் றமிழினுக்காய்ச்
சலித்துநெஞ்ச, நொந்திருந்த நாவலனார் திருத்திவந்த தன்னாளை
நோக்கவிந்நாள், வந்திருந்தால் யாழ்ப்பாண மெங்கிருந்ததெனத்
தேடிமயங்கிநிற்பார், (௧௦௪௯)

பேருலவு நாவலர்க்குப் பெருமகனாங் கயிலாசபிள்ளையந்நாட்,
பாருலவு மாங்கிலமே பயில்வதுவும்பேசுவதும் பழக்கமென்றுஞ்,
சீருலவுஞ் செந்தமிழோ சீர்குலைந்து போனதென்றுஞ்செல்வமன்
னி, யேருலவும் யாழ்ப்பாண நாகரிகத்தா லுயர்ச்சியிழந்ததென்
றும், (௧௦௫௦)

தேறிய சீர்ச்சமய பத்திவரவாவே மறைவாகிச்சிதைந்ததென்
றுங் கூறிய சீர்த்தலைநகரென்றிலங்கு செல்வச்சிறப்பமையுங் கொ
ளும்பினெங்க, ளேறிய சீர்க்கவுரவ சேர்பொன்னருணாசலம்பால்
வந்தியம்பியைய, வீறிய சீர்ப்படுத்தலினித் தமதுகட னாகுமென்
றேவிரும்பியுற்றேன், (க0ருக)

என்று கயிலாசபிள்ளை யழைத்திடலுமேந்தலதற் கிசைவு
கொண்டே, யன்று புறப்பட்டுவந்தே யரிதமைத்த ஈாகையொன்
றிலமர்ந்தபின்னர், மன்றுநனி யணியியற்றிவயங்கு மகாசபையை
யவர்வாய்ப்பக்கூட்டிச், சென்று துரைதனை யழைத்தார் செய்ய
பிரசங்கமவண்செய்யவென்றே, (க0ருஉ)

செந்தமிழை வளர்த்துவந்த வாறுமுக நாவலனாற்றிருந்த
மைத்த சந்தமிக விளங்கிவருஞ் சைவபரிபாலனஞ்செய் சபை
யில் வந்தே, நந்த விலாதிருந்த சைவப்பிரகாச விதாலயத்தின யந்
துதக்கோர், தந்த வுபசாரமதற்கிணங்கியையன்ற யங்குமக் ராச
னத்தின்வைகி, (க0ருஙு)

எண்ணறிவோ மெழுத்தறிவோ ரியல்பறிவோ ரெப்பாலுமெ
ய்திமொய்ப்பப், பண்ணறிவோர் பாங்குநின்றே பத்தியுடன் றிரு
ப்பதிகம்படித்தபின்னர்த், தண்ணறிவோன் கலையறிவோ னுலகறி
வோ னுயிர்களின்மேற்சார்ந்துமன்னுங், கண்ணறிவோன் றமி
ழருமை சமயமுடனினி தெடுத்துக்காட்டிப்பேசும், (க0ருச)

ஆதியெனுந் தமிழ்ப்பாடையதுபோகிற் பாடைதனை யடுத்து
வந்த சாதியெனு மதுபோகும் போந்திடுமேற் போற்றிவருஞ்
சமயமென்னு, நீதியெனு மதுபோகும் போந்திடுங்காலுயர் மூன்
றுநிலையுமின்றி, யோதியெனு மதுபோகுந் தமிழரெனும் பெயர்
தானுமொழியுமன்றே, (க0ருரு)

ஆவலுடன் கற்பதுவு மனேக வித்துவாமிசர்களானதுந்தான்
னுவலர் தன்காலமதன்மேற் காலம்புலவ ரிந்தநாளிலில்லை, யேவ
லுள மாணவர்கள் பிழைவரைந்த புத்தகங்களெடுத்துவைத்துக்,
காவலனின் கட்டளையாற் பள்ளிதொறுந்தாமூன்றே கற்றல்செய்
வார், (க0ருசூ)



தாந்தார்க ளின்னுமுத்தியோகரிவர்த் தொடர்ந்த பெண்கள்
வரந்தாமாய் வருந்தனயர் மனையகத்தும் மற்றிடத்தும்வாய்ந்த
தென்றே, நிரந்தரமும் பேசுபவராங்கிலமே தாய்ப்பாடைநினைவு
மில்லை, யிரந்தமொழி பேசிவருமிவர்களுக்குச் சொந்தமொழியிகழ்
ச்சியன்றோ, (க0ருஎ)

தோற்றுமொவ்வோர் சாதிகட்கு முயிர்நிலையாந்தாய்ப்பாடை
தொலைந்ததென்றாற், போற்றிவரு மவரிறந்தோராவரெனப் பிறஞ்
சிலொரு புலவர்சொற்றார், சாற்று தமிழபிமான மிலார்க்குயிரொன்
றுண்டதெனல் சாலாதன்றோ, ரேற் றெலும்பைத்தோல் போர்த்
ததென்று குறட்டிருட்டாந்தமெடுத்துச்சொற்றார், (க0ருஅ)

மற்றவர் தம்பாடையுத்தியோகமுடன் றம்வயிறு வளர்ப்ப
தற்குங், கற்றிடவும் வேண்டுவதே யன்றியதைக் கல்வியெனக்
கருதலன்றோ, வுற்றதிரு வள்ளுவனார் செவிக்குணவன் றோதிய
தையுன்னுகிற்பீ, ரற்றமறவே யதிகங்கற்றிடினும் மேற்பயனென்
றதன்கணில்லை, (க0ருகூ)

ஆற்றுதொழிற்கேற்றளவு கற்குமதாற் கலைவளர்ச்சி யறிவு
யர்ச்சி, யூற்றமுறப் பெறலாகாதெனக்கூறும் விவிலிய நூலுண்
மையொன்று, தேற்றமுள சீவியத்துக்கேற்ற பொருடேடுமதிற்
சிந்தைவைத்த, வேற்றமுறும் வாழ்வை யற்பவாழ்வெனவே தெ
ளிவாகயியம்புகின்ற, (க0சூ0)

மேலுயரு மெண்ணமதை முயற்சிகளைக்கல்வியென விளம்பு
பந்தப், பாலுயரு முயர்ச்சிகளையில்லாத மக்களுக்குப் பண்டை
யுள்ள, நூலுயருந்திருக் குறளினுள்ளுவதெல்லா மெனவும் நுனி
த்துப்பின்னும், மாலுயரும் விலங்கினொடு மக்களையுங் காட்டின
னன்மன்னனங்கே, (க0சூக)

இனிப்புடைய வெங்கடமிழ்த்தாயான பெருமாட்டி யிசைப்
பதென்னே, தனிப்புடைய மாது தெருத்தெருவாக வலைந்தலைந்து
தவிக்கவிட்டோம், தொனிப்புடைய விவளருமை தோன்றவுள்ளு
தோறெனவே தொல்லைநன்னூல். நுனிப்புடைய கல்லாடங்காட்
டினனற்கலை யறிவான் னேன்மைமன்னன், (க0சூஉ)

வனஞ்சாலு மிலங்கையிலே வழங்கிவருஞ்சிங்களமோ மகத
மென்னுந், தனஞ்சாலும் நாட்டுநின்றும் வந்ததது தமிழ்ச்சிறப்புத்
தருவதில்லை, கனஞ்சாலுங் கொளும்பு கண்டிகழுத்துறை மாத்து
றையோடுகவினுங்காலி, யினஞ்சாலு மிடங்கடொறும் பலப்பல
வாங் கல்லூரியிருக்குங்கண்டீர், (க0சுங)

உற்றவவர் சிங்களத்திலிலக்கியமு மிலக்கணமு மோதமுன்
னஞ், சொற்ற புத்தவாகமங்கள் வரைந்திருந்த பாளியின்னுந்
தொடர்ந்துநின்ற, மற்றவடமொழி மகதியெனு மிவைகளாராய்ந்
து மதித்துமைந்தர், கற்றலல தாங்கிலத்தைக் கற்கவெனக் கருது
வது கனவிலில்லை, (க0சுச)

சேர்ந்தகலை பயிலுமுயர்விதாலயங்க ளெக்கவெனவற்றோ
ணிச்சென றறனே, நேர்ந்தழைக்க விருவோருஞ் சென்றுசென்றே
திருத்தமுற நிதமுங்கல்வி, தேர்ந்துவருஞ் சிங்களக்கல் லூரிதொ
றுங் குருமாருஞ்சீடரென்னச், சார்ந்துவரும் பவுத்தமதசாத்திரங்
கள் பயில்வதையே தயங்கக்கண்டேம், (க0சுரு)

முந்தையுள வந்தணர்களொழுக்க மொருபுறமாகமுந் நூண்
மார்பிற், சந்தமுறத் தொங்கவொரு செம்புசலந்தான் முழுகித்
தாங்கள்சைவச், சொந்தமுள நஞ்சமயக்குருக்களென்பர் சாத்தி
ரங்கள் சூனியந்தான், சிந்தைபொரு டேடுமதிற் படிப்பதற்குநோ
மில்லைச்சிரிப்பே யன்றோ, (க0சுசு)

காட்சிபெறுங் கொளும்பு வித்யோதயமென்னுங் கல்லூரி
காணவந்தேம், மாட்சிபெறு மைஞ்ஞூறு மாணவர்கள் கற்றபடி
மன்னியுற்று, ஈட்சிபெறு மொருவகுப்பிற் சிறீறகுல தேரரென்
போரமைத்துவைத்த, சாட்சிபெறு காவியசேகர நூலைச் சிங்களத்
திற் சார்ந்துகற்றார், (க0சுஎ)

இன்னுமொன்றிலலங்கார சாத்திரத்தை வடமொழியி லிலங்
கக்கற்றார், பன்னுமொன்றிற் பாணினி தன்சூத்திரமும் பண்பி
னெடு படிக்கலுற்றார், மன்னுமொன்றிற் பாளியினின் மொக்கள
ன ரிலக்கணனூல் வயங்கக்கற்று, ருன்னுமொன்றிற் சிறீறகுல
சேகரர்செய் பஞ்சிகதீபமதை யொளிரக்கற்றார், (க0சுஅ)



ஒருவகுப்பிற் புத்தகுருமார்களது நியமமுட னொழுக்கமுற்
றும், பெருவகுப்பிற் புத்தரொருமூன்றுகச் சொல்லியுற்ற பிடகந்
தம்முள், வருவகுப்பின் வினயமெனத் தரும்பாளி வேதமதை
மனனம்பண்ணித், தருவகுப்பிற் பத்திபெறத்தந்து பாராயண
மவர்கள் சார்ந்துசெய்தார், (க0சுகூ)

செற்றுதவக் கவுசிகன்முன்னீன்ற சுதருதுவெனுஞ் செம்ம
லந்நாட், சொற்ற வயித்திய நூலை யொருவகுப்புக் கற்றதிவண்
சோர்தலில்லை, மற்றினி நான்சொல்வதென்னோ மாணவர்கண்
மாதனத்தர் மதியின்மிக்கோ, ருற்றகலாசாலைகளி லியம்பியுந்தா
னுங்கில மென்றுன்னல் செய்யார், (க0எ0)

தேவனஞ் செய்காசி பம்பைபாஞ்சாலம் பங்காளதேயநின்
றுந், தாவனஞ் செய்யினைய பலகழகமெங்கும் மாணவர்கள்சார்ந்து
கற்பார், சீவனஞ்செய்யதிலு முத்தியோகமெனு யதிலுமிவர் சிந்
தையில்லை, நாவனஞ் செய்கலை யறிவாமொன்று மட்டேசென
றனிநயந்துகொண்டான், (க0எக)

அலைசாரும் கற்கையினிலாசினரா லாரியத்திலமைத்த கல்வி,
நிலைசாருங் கல்லூரித் தலைமையுளோனந்தணனன் னெறியின்
மிக்கோன், கலைசாரும் வித்துவத்தோனந்தநகரத்தவர்க்குக் கண்
போலுள்ளோன், றலைசாருஞ் சதிச்சந்ரா நித்யாபூஷணனெனும்
பேர்தரிக்கப் பெற்றோன், (க0எஉ)

இயம்பு மறிவாளனிவனிங்கு வந்திக்கல்லூரியிருந்து பன்னு,
ணயம்புகலும் பாளியிலே தத்துவசாஸ்திர வகைனன்குகற்றேக,
வியம்புரிதல் புத்தகுரு வெறுக்கமெனச் சபைகூட்டி விரும்பும்வண்
ணஞ் சுயம்புகலும் பாடலவன்மே லியற்றிக்களிப்பித்துத் தனதூர்
சேர்ந்தான், (க0எங)

சீனமுடன் பர்மா நேர்பாளம்யப்பான் காம்போதியாவுஞ்
சேர்ந்த, தானமுள கீழ்நாட்டினுள்ள பருஞ்சர்மனியுஞ்சாற்றின்
மற்றை, மானமுள தாமமெரிக்கா விறைசியாவுமென மன்னுகின்
ற, கானமுள மேனாட்டிலுள்ளவரும் வந்து கலைகற்பரிங்கே,
(க0எச)

அரியபெருஞ் செயல்களிவையிருக்கினன்றே நாட்டினுக்கு மழகுஞ்செய்யுந், தெரியவருங் கல்வியழகெய்திடினம் யாழ்ப்பாணஞ் சிறக்குங்கண்டீ, ரூரிய திருநாடாகமதித்து நல்லோர் நாடியிவணுறுவர் கொல்லோ, விரியவருந் தமிழ்மொழியும் நாவலர்பின் போனதென்றே விளம்பிலென்னே, (௧௦௭௫)

தென்மொழியோ வடமொழியும் போனவினியாக மசாத்திரமுமில்லை, மன்மொழியோ வேற்றமுறக் கற்பதில்லை மிடனரிமார்கள்வைத்த, நன்மொழியோர் கழகமதிற் கற்றவர்களாம் விசுவநாதபிள்ளை, பன்மொழியோர் தகுந்தாமோதரம்பிள்ளையே முதலிற்பட்டம் பெற்றோர், (௧௦௭௬)

நாட்டிலுள வளப்பமென்றும் நகரிலுளவளப்பமென்றும் நாடலின்றி, நீட்டியுள செல்வமெலாம் நினைத்தலுளசெல்வமென்றும் நினைதலின்றி, யீட்டிவருஞ் செல்வமதிற் செல்வமென்று மிதற்கிணைதானில்லை யென்றுந், தேட்டிவருங் கல்வியிதைத் தேடுமினோ குறையாத செல்வங்கண்டீர், (௧௦௭௭)

ஓங்கிவரு முத்தரத்துப் பன்முறையுஞ் சென்றிருந்தேனுயர்ந்தகற்கை, பாங்கியலும் பம்பைபிரயாகை முதலிடங்கடொறும் பயிலுகின்றோ, ராங்கிலந் தாங்கற்றிடினுந் தாய்மொழியோ டாரியமுமாய்ந்துகற்றே, தேங்கிய பன்னூல்வரைவர் பழநூல்களச்சுவெளியீடுஞ்செய்வர், (௧௦௭௮)

அங்குகற்கைச் சர்வகலாசாலையுள யாழ்ப்பாணத்தவர்கள் கற்க, தங்குவர்கள் வங்காளிபாடையிலே தத்துவத்தோ டோதும் மற்றைப், பொங்குரா சாயமுமின்னுமுயர் சீவசாத்திரங்கள் போதித்திட்டா, லிங்குநமக்குப் பொருடெரிவதில்லை யென்றுமுறையீடுசெய்வர், (௧௦௭௯)

புந்தியுள வாசிரியர் தாய்ப்பாடை யபிவிருத்திப் பொருட்டாமின்னும், நந்தி யொருநூற்றாண்டின் முன்னமறைந்திருந்தவிந்தநவிலும்பாடை, முந்தியிவணுற்றற வேந்திரா முதலாம்புலவருயர் முயற்சி தன்னாற், பிந்தியிது சிறந்ததின்னும் பற்பல நன்னூல்களையும்பிறப்பித்திட்டார், (௧௦௮௦)



அருத்தியவர்க் கிருந்ததனாலவர் பாடையுயர்ந்ததென வறிமினுங்கள், விருத்திசெய வேண்டுமெனினருந் தமிழினபிமானஞ் செய்தல்வேண்டும், திருத்தி விழாச்சந்தை முதலிடங்களிலே பிரசங்கஞ் செய்தல்வேண்டும், கருத்தினுடனே வரைந்த பத்திரங்கள் வெளிப்படுத்திக்காட்டல்வேண்டும், (௧௦௮௧)

பங்கமிலா தாங்கிலப் பாடமொன்றாய்ப்பயின்றிடுவான் பரீட்சைகட்கு, மிங்கிலந்துச் சர்வகலாசாலைவரும் பரீட்சைகட்கு மெடுத்துக்காட்டித், துங்கமுறத் தேர்ந்தோராலுயர்தரத்துத் தமிழ்களையே துலங்கவைத்தும், நங்களருஞ் செந்தமிழை யபிவிருத்தி செய்வதுவே நன்மைகண்டீர், (௧௦௮௨)

பள்ளிகளிற் பெண்ணாண் கடமைப்பயிற்று மாசிரியர் பழகக்கற்ற, வொள்ளிய மேற்கழக மமைத்திடல்வேண்டும் வங்காளத்துறுநரென்ன, வெள்ளியமன் சேவைசெயுமிடங்களன்றி வேறிடத்தின் வெறுத்தலின்றித், தெள்ளிய செந்தமிழ் மொழியைப் பேசுதனஞ் சாதியர்க்குச்சிறப்புக்கண்டீர், (௧௦௮௩)

பகவனன்று பார்த்தனுக்குக் கட்டுரைத்த கீதைசொன்னபடியேநாங்க, ளகமகிழுந் தொழில்களுக்கே யதிகாரியாவமலால வற்றாலெய்துஞ், சகமதிக்கும் பயன்களுக்கோ வதிகாரியாவதில்லைச் சாற்றலுன்னி, மிகவளர்ப்பீர் செந்தமிழைப் பயன்கருதீர் நாட்டினுக்கு மேன்மையெய்தும், (௧௦௮௪)

சொற்றபடி நாமெடுக்குங்கருமமிது யாவருக்குந் துலங்கும் நன்மை, பெற்றதொரு கருமமதாற் றனக்குவமையில்லாதான் பெரியன் போற்றும், மற்றவன் றன்றிருவருளை முன்னிட்டே தொடங்கியதன் மனத்திணெண்ண, முற்றபடி நிறைவேறுமிது நமது துணிபாமென்றுரைத்தான் மன்னன், (௧௦௮௫)

வேறு.

நன்னலமான கல்வி நயமெலா மவையினோர்க்குப்
பன்னல நூல்கள்காட்டிப் பண்டைநல்வழமை காட்டித்
தொன்னலத் தமிழிற்றீர்ந்த துரையருணாசலஞ் சொல்
லின்னல வுபன்னியாசமினிய புத்தமுத மொத்த, (௧௦௮௬)

சுத்தியோ டுபன்னியாசச் சொன்மழைப் பொழிவுகேட்டே
மத்தியோ டமர்ந்ததக்கோர் மதிப்புரை வழங்கிப்பின்னர்ப்
பத்தியோ டோதுவார்கள் பதிகங்கள் படித்திட்டாங்கே
புத்தியோடனைய தெய்வப் பொன்னவை சமார்த்திபெற்ற. (௧௦௮௭)

## இலங்கைக் குடிப்பெருஞ் சபை உபந்நியாசம்.

இற்றதா முதவிநாட்டுக் கியற்றரு ணாசலப்பே
ரற்றமி லறிவின் மேலோனான பன்னேழாமாண்டிற்
கொற்றவனா னிலங்கைக் குடிப்பெருஞ் சபையின்மேனாட்
சொற்ற நல்லுபன்னியாசச் சொற்பொழிவதுவுஞ் சொல்வேன், (௧௦௮௮)

உறைதரு குடிகள் பல்லோருரைத்திடுங் குறைகளான
திறைபெறு மரசியற்குத் திருத்தங்கள் செய்யவேண்டு
மிறைவரு மாசுக்கின்றி யமைவுறு திருந்ததீதென்
றறைதரு மிதனை யண்ணலவையிடை முதலிற்சொற்றான், (௧௦௮௯)

அரசியற் றிருத்தச் சங்கமாமென வொன்றமைத்தார்
விரவிய குடிகளுக்கும் வேத்திய லரசிற்பாதிப்
பரசுறு பங்குந் தங்கள்பன்னுநற் கருமஞ்செய்வா
னுரவியே தூண்டற்றனும் வேண்டுவ துரைத்தசங்கம், (௧௦௯௦)

கூறிய விவ்விலங்கைக் குடிப்பெருஞ் சபைக்குக்கீழே
தேறியதாக மேலுமரசியற் றிருத்தச் சங்க
மேறிய வினைய நல்ல விருவகைச் சபைகடம்மை
வீறிய னுடேதோறும் விளங்கவே யமைத்துவந்தார், (௧௦௯௧)

தேற்றா சியற்றிருத்தஞ் செய்திடல் குடிகடம்மைத்
தோற்று நற்றொழில்கள் செய்வான் றாண்டிடனீதிகோடாக்
கோற்றனி யரசிற் பாதியுரிமைதாங் கோடலென்னு
வேற்றமிம் மூன்றுந்தாமே யிச்சபை யிரண்டின்கொள்கை, (௧௦௯௨)



அடுத்த பதினெட்டினிந்த வருநகரத்தின் முன்னாட்
டொடுத்த சங்கத்தினங்கத் தொகுதி நூற்றறுபத்தொன்றோ
டொடுத்த விவ்விலங்கை மக்களெண்ணிலரவை யொன்றாக்கி
மடுத்தருணா சலத்தைத் தலைமையா சனத்தில்வைத்தார், (௧௦௯௩)

சேர்தரு மவையினாடிச் செய்தநற் றீர்மானங்க
ளார்தர விப்போதுள்ள வரசியன் முறையைமாற்றிக்
கூர்தரு மிவ்விலங்கைக் குடிப்பொறுப்பாக்கல் வேண்டுஞ்
சீர்தரு மிவ்வுருத்தைத் தந்திட றிருத்தமென்றான், (௧௦௯௪)

சாற்றிய வுந்தச் சட்டசபையுளோர் தொகைகளுக்குட்
டேற்றிய குடிகளாலே தெரிவுசெய் தெடுத்தநல்ல
பேற்றியலாக வூர்க்குப் பெருநலம் புரியத்தக்க
வேற்றிய லுறுப்பினோரே யதிகமாயிருத்தல் வேண்டும், (௧௦௯௫)

அரியவிச் சபைக்கு மேலாமதிகார சபையினுள்ளோர்
தெரிய விக்குடிகளாலே தெரிவுசெய் தெடுத்தோராகப்
பெரிய வித்தொகையிற் பாதிபெருவளஞ் சாரிலங்கை
யுரிய விம்மக்களா கவுறுவதே தகுதியென்றான், (௧௦௯௬)

கோலதிகாரமாகக் குடிகளைப் புரக்குமிந்த
மேலதிகார மொன்றும் வேந்தனுக்காக மற்றை
யேலதிகார முற்று மிலங்கை மக்களுக்கேயாகச்
சாலதிகார மிங்ஙன் றருவதே தகுதியாகும், (௧௦௯௭)

துன்மதியாளர் செய்யுந் துடுக்குக ளடக்கியாளும்
மன்மதியுடைய மன்னன் மன்னனேயாக வைகப்
பொன்மதியுடைய சென்னைப்புவிபுகழ் பொறுமை வாய்ந்த
நன்மதியமைச்சர் தானே நாட்டினை யாளல்வேண்டும், (௧௦௯௮)

ஆற்றா சதிகாரத்து ளாங்தொழிற் றுறைகடம்மி
னேற்றமாம் பாதிப்பாகங் குடிகளுக்கிருத்தல் வேண்டும்
மேற்றா நகரசங்கம் மேவிய கிராமசங்க
மூற்றமா மிரண்டுமென்று மூரவர்க்கிருத்தல் வேண்டும், (௧௦௯௯)

அந்நயச் சபையிலங்கை யரசினர் மூலமாக
நன்குடி யேற்றநாட்டு மந்திரிக் கறியநாடிப்
பின்மனு வொன்றை மேலும்பெருஞ்சபை பேசியுள்ள
மன்பெரு வாசகத்தை வரைந்தவ ணனுப்பிற்றந்நாள், (௧௧00)

இன்னவாறுக விந்த விலங்கையி னாசுக்கேய்ந்த
மன்னிய திருத்தப்பாங்கை வகைவகையாகக் காட்டி
யென்ன விங்கின்னுமின்னு மீழத்துக் கேற்பதென்று
நன்னயமாக நம்பி நாட்டுளோர்க் கிவற்றைச்செப்பும், (௧௧0௧)

வேறு.

நாடுகளு ளிவ்விலங்கை முடிக்குரிய குடியேற்றநாடுகண்டீ, நீடுபெறுங் குடியேற்ற மந்திரியினுளுகைக்கு ளிருக்குமென்றும், நீடுமொரு நாடாள்வோரந்நாட்டு நலங்கடமை நினைத்தனன்மை, தேடு தமதூர்நலத்தைக் கருதாரென்றுத்தமர்கள் செப்பியுற்றூர், (௧௧0௨)

ஆற்றுமா சியலிவிருந் தின்னமுந்தா னுறுதலையடைந்ததில்லை, நூற்றுள முன்னுண்டதுபோலிந்நாளு மிருந்ததென்றே நுவலு கிற்பேன், ஏற்றுகலை கற்றிடற்கு மிலங்கையிலே கலாசாலையிருந்த தில்லை, தேற்று கல்விஞானமின்றேற் செப்புவதென் னூரினுக்குத் திருத்தமுண்டோ, (௧௧0௩)

சீரிலங்கை தனிற்பாதி வருவாயு மில்லாமனிலவுமம்மை, சூரிலங்க வன்றுமுதற்சர்வகலாசாலை யொன்று துலங்கு மன்றே, வேரிலங்க வருமாங்கே யேற்றமுள கல்விமட்டோ வேறுமின்னுஞ், சீரிலங்கு தொழில்களுமே வளம்பெருக்கி யவ்வூரைத்திருத்தி யுற்ற, (௧௧0௪)

சிறுநாட்டிற் டென்மார்க்குச் சுவிசனுடன் சேரவின்னுஞ் செப்புகின்ற, மறுநாட்டிற் கல்வியொடு கைத்தொழிலும் வரவாவே மன்னிமன்னி, யுறுநாட்டிற் கிந்நாட்டுக் கிணையாகாதென் றுரைக்க வுயர்த்திச்செல்வம், பெறுநாட்டிற் பெருநாடென்றுமைத்திடவே யெந்நாளும் பெருமைபெற்ற, (௧௧0௫)



பேருடைய வைந்துதிணைப் பெருவளங்கள் மலிந்துமிகப் பிறங்குகின்ற, சீருடைய விருநிதிக்கோனளகை நிகர்நிதிகளுடன் சிறந்து மன்னிப், பாருடைய மற்றுமற்று மேலுளநாட்டவர்களுக்குப் பண்டுவைத்த, வேருடைய சேமவைப்பா யிருந்திமைக்கு நாம்பிறந்த விலங்கையம்மா, (௧௧0௬)

இன்னமுறைத் திடுமளவினு மொருவர்க் கடிமைகளென்றிருக்கலுற்றே, மன்னதனு லெமதாண்மை மாட்சிகளும் போகுநமதாற்றலெங்கே, யென்னவிவ ரென்னுளு நாமடிமை நாமடிமை யென்னுமெண்ண, மன்னவிவ ருளமேலும் வசமாகவிருக்குமெனின் மதிப்புமுண்டோ, (௧௧0௭)

கருத்தமைய வச்சீனி வாசகனென்றேதுமையங் காரந்நாட், டிருத்துமா சாசாக நாமடிமைத்திறநீங்கிச் செல்வநாட்டிற், பெருத்த குடியரசான சுயவரசைப்பெற்றிருத்தல் பெரிதுநன்றென், றருத்தமுள வாங்கிலத்தில் வரைந்திருந்த வாசகநீரறியீர்போலும், (௧௧0௮)

என்னடிமை யெனக்கருதி யெடுத்த பெருமுயற்சிகளாலேற்றமன்னிக், கன்னடியர் பிருன்சரசின் கீழிருந்தே தாங்கருதுங் கருமமுற்றிப், பின்னடிமை யென்னுமற் சுயவரசைப் பெற்றதெனப்பெரியோர்க்கென்றுந், :தன்னடிமைதருஞ் சீனிவாசக ரங்காங்கிலத்திற் றெளிவாகச்சாற்றியுற்றூர், (௧௧0௯)

ஏற்றமில்லை வளங்களில்லை யிருப்பவர்க்குவலியுமில்லை யிலங்கையுள்ளோர்க், காற்றவருஞ் சுயவரசையேனெனவே யெதிர்மறையா யறைவரென்னின், சாற்றவரு மீழமதிற் கன்னடிய நாடுரைக்கிற்றனமுமில்லைத், தோற்றமுள விவரிலவர் வலியுமிலரெவரறியார் சொல்வதென்னே, (௧௧௧0)

சுற்றியுள வப்பிலிப்பன் றீவுகளின் முப்பதுடனெட்டுமெனச் சொல்லுகின்ற, பெற்றியுள மாகாணநக ரெழுநூறே டெழுபான் பிறங்கிமன்னு, முற்றிடு தேசாதிபரை யூரவர்கடெரிந் தெடுப்பருமைக்குந்தீவை, பற்றிய மேலாட்சி யமெரிக்கருக்கென்றிருந்ததெனப்பகர்வர் கண்டீர், (௧௧௧௧)

இன்னவகை யாங்காங்கே குடியரசாஞ் சுயவரசையெய்தி யெய்தி, யன்னபல குடியேற்றநாடு முதலானவெலா மடிமையின் றிச், சொன்னவர சாட்சியின் கீழ்ச்சுதந்தரராய்த் தத்தமதுதொ ழில்கள்செய்தே, யுன்னவருஞ் செல்வமுடன் குறைவிலராயன்று மின்றுமுறுவர் கண்டீர், (௧௧௧௨)

அற்றமிலன் றன்றே சவபிமான னனுதைகண்மே லன்புவை ப்போன், பெற்ற கலைஞான மதின்மிகப்பெரிய னுற்றுதவப்பேறு முள்ளோன், சொற்ற விவன்மொழிந்த பெருவாசகத்தின் பொ ருண்முழுதுந்துலங்கச்செய்த, மற்ற வாசியற் குறைகளென்னு முறைதவறுமல் வரைந்துசொன்னேன். (௧௧௧௩)

வேறு.

உன்னரு நாட்டினுக்கே யூழியனுன சீர்த்தி
பன்னருணு சலந்தன் பழம் பதியாகுமீழத்
துன்னரு மூரினுக்கே சுயவரசியற்கை பேசிப்
பின்னரு மிங்குவேண்டும் பெற்றிகள் பேசலுற்றுன், (௧௧௧௪)

கூடுமண்டுகம் பாங்கிற் குலவுதாமரை யிற்றேனைக்
காடுபோம் வண்டேயுண்ணுங் காட்சியேபோல பேலூ
ரூடுநின் றெய்தியெய்தி யுறுபொருள் கவர்தற்கெங்க
ளூடுதான் பண்டுவைத்த சேமவைப்பாக நண்ணும், (௧௧௧௫)

இன்ன நாட்டினர்க்கே யானவேர்த் தொழிலதனைத்தானு
முன்னு கைத்தொழிலைத்தானு மூக்கமாய்ச் செய்வாரில்லை
சொன்னவே ராளருக்கே தோற்றுவ வறுமையென்னி
னன்னதை வறுமையாக வாளுத லறிஞர்க்காகா, (௧௧௧௬)

உன்னு மினுலகத்தாருக் குழுபவாணி யென்றும்
பின்னமாய்ச் சுழன்று மேரின் பின்னதேயுலகமென்றும்
நன்னயமாகநாடி நாயனுர் மொழிந்தாராயி
னின்னவேர்ப் பெருமைதன்னை யெடுத்து நானுரைக்கப்போமோ, (௧௧௧௭)



இவ்வியலான செம்பொ னேருளவாளர் தாமே
செவ்விய வுயிர்கட்கென் றுஞ் செறியுணவளிப்போ ரின்னுங்
குவ்விய லோம்பும் வேந்தர்கோலினை யுயர்த்திவைப்போ
ரவ்வியமிலாத மூவராற்றினுக் குதவி செய்வோர், (௧௧௧௮)

வேழவெண் மருப்பால் வெற்பின்விளை நவமணியாற்பொன்னு
லாழநீரிப்பி முத்தாலவிர் வலம்புரியா லின்னுஞ்
சோழநாடதற்கு மந்நாட் சோறுதந்திடலா லெங்க
ளீழநாடிதற்கு நேராயிருந்த நாடெந்த நாடோ, (௧௧௧௯)

பார்த்தொழி நாடுதம்முட் பலப்பலவாகச் சொல்லுஞ்
சீர்த்தொழிலான வெல்லாஞ் செய்திடற் கமையுமேனுங்
கார்த்தொழில் வழங்குகின்ற கனைநதி குளங்களாலே
யேர்த்தொழிற் கமைந்த நாடுமீழ நாடாகுமன்றே, (௧௧௨0)

கைத்தொழி ருனுமில்லைக் கமத்தொழி லதுவுமில்லை
யெத்தொழில் புரிவானிங்கே யிருக்கின்றீர் நாணமில்லீர்
முத்தொழி லொருவன் முன்னிமுனந்தரு மியற்கைத்தான
வித்தொழி லூக்கிச்செய்யி னெமக்கொரு குறையுமுண்டோ,
(௧௧௨௧)

உற்றுறையூரை மேலாயோங்கவே யுயர்த்த வேண்டிற்
பெற்றிடு குடிக்குவேண்டும் பெரும்புகழ் கொடுக்கவேண்டிற்
சுற்றுறை மாந்தருக்குச் சுகங்களைத் தருதல்வேண்டிற்
கற்றிடு கல்விதானே காரணமாக வேண்டும், (௧௧௨௨)

காட்டிய கனடா வின்னுங் கன்னடிபிலிப்பன்தீவு
மீட்டிய மைசூரோடே யினமுள நாடுமுற்று
நாட்டிய வுயர்தரத்து நற்கலாசாலை யூட்டும்
வீட்டியல் கலைகளாலே வேண்டிய சுகங்கள்பெற்ற, (௧௧௨௩)

கல்வியே கொடுக்கும் நல்ல கைத்தொழிலானவெல்லாங்
கல்வியே கொடுக்குஞ் சான்ற கைப்பொருளிவைகளொன்றே
கல்வியே கொடுக்குந்தங்கள் கவின்சுயவாசு மேலாங்
கல்வியே கொடுக்குங் கிட்டாக்கதியுமேற் கழறலென்னே,
(௧௧௨௪)

பண்ணிய முயற்சியானீர் பக்குவ ராகுங்கால
மெண்ணிய நுமது நாட்டிற் சுயவரசியக்கூடுங்
கண்ணிய மெய்தவென்றே காங்கிறசினுக்குத் தோற்றப்
புண்ணிய மொழியுமன்றே புகன்றன னவையினோர்க்கே, (௧௧௨௫)

கன்னலுந் தவிராதென்றுங் கல்விகைத்தொழில் பெருக்கிச்
செந்நெலுங் கரும்பு மோங்குஞ் செய்கலைத்திருத்தியின்னும்
பன்னலும் பழகி நாங்கள் பக்குவமெய்துவேமே
யின்னலும் வருமோ நாட்டுச்சுயவரசெய்த றிண்ணம், (௧௧௨௬)

பருத்தி நூல்வேலை வன்னப்பாய் முதற்பன்னவேலை
கருத்தி யலுலோக வேலைகழறு கைத்தொழில்களோடு
விருத்திசெய் கமத்தின் வேலைவேண்டிடும் நாட்டிற்கென்றே
யருத்தியதாகப் பேசியவ்வவர்க் கூக்கஞ்செய்தான், (௧௧௨௭)

உற்ற விந்நாட்டோர்க் குத்தியோங்க ளுயர்த்திவைத்தும்
பெற்றவே தனங்களின்னும் பெருகவே கூட்டிவைத்தும்
மற்றவர் தமக்குமேலு மதிப்புகளோங்கச் செய்துஞ்
சொற்ற நர்மவரையின்றும் தூக்கியே வைத்தமன்னன், (௧௧௨௮)

பெற்றவர் தமினுஞ்சாலப் பேருயிர்க்குதவி கூரு
மற்ற மிலறிஞர் கோமானான தன்னாட்டினுக்கே
சொற்ற நற்றொழில்கள் கூறித்தோற் றரசியலினிங்ங
னுற்ற மேற்றிருத்தஞ் செய்வானாக்கி யிங்கிலந்துசெல்வான், (௧௧௨௯)

வேறு.

மன்னவனு மமைச்சினரு மந்திரஞ்செய் சபையினுடன் மாண்புமிக்க, வன்ன வரசியற்றிருத்த மத்தனையும் வரைந்தெழுதி யந்தநன்னாள், சொன்னவலனுஞ் சமரவிக்கிரமன் பீரிசுடன் றுணையாய்ச்செல்ல, வுன்னு தலைநகராய விங்கிலந்துக்கேகியுற்று னுதவி கூர்வான், (௧௧௩௦)



பன்னு மதிகாரருட னளவளவியெடுத்தவற்குப் பண்புமிக் கோன், மன்னு மரசியற்றிருத்த மிலங்கைதனக்கேற்றதென மதித் திட்டன்றோ, றுன்னுமிது சாலுமென வுவந்தெடுத்தே யிலங்கை தனக்குதவுகிற்பே, மென்னவிடைபெற்றிவ ணச்சட்டமுறை நடத்திடுவா னியற்றிவைத்தான், (௧௧௩௧)

பன்னாளிற் றுன்றிருத்துமரசியலிற் றிருத்தமுறை பண்பே யென்ன, முன்னாளினங்கவர்க ளிலங்கையினுக் கமையுமெனமொ ழிந்திட்டடைய, பின்னாளி லிம்முறையே நடத்த னலமாகுமென்று பேசிவைத்தே, யின்னாளிலனைய சட்டவிதிமுறையே யாளுவரா லிலங்கை யன்றே, (௧௧௩௨)

தொட்டமுறை தவறுமற் சித்திபெறுமாறதனிற் றுலங்குமிவ் வூ. ரிட்டமுறை யொழுகுதற்கே சுகமளிக்கும்பான்மைதனி லினி திருக்குஞ், சட்டமுறை நடத்துதலிற் றனக்கிணையின் று மருணா சலந்தான்செய்த, வொட்டமுறை யிதுபோல வியைந்தமுறைதா னிலங்கைக் குரைக்கப்போமோ. (௧௧௩௩)

வேறு.

இங்கிலந் தெய்தியாங்கே யிறைமுறை திருத்தஞ்செய்யா
விங்கு வந்திறங்கும்போதி லெதிர்கொளீத் துறைமுகத்தி
லங்குசெய் நன்றிதன்னை அயர்க்கலராகி யுள்ளம்
பொங்கிய களிப்பினோடும் புகழ்ந்து கொண்டாட்டஞ்செய்தார், (௧௧௩௪)

பொங்கிய செல்வத்தோடும் பொருந்து நற்புகழினோடு
மங்கிய லறத்தினோடு மவனி யூழியத்தினோடு
மிங்கியல் சுகத்தினோடு மில்லியற் சிறப்பினோடுந்
தங்கிய வேந்தலிங்ஙன் றனிப்பெரு வாழ்விலுற்றான். (௧௧௩௫)

## மைந்தர் நலன்.

விந்தையாங் கலையிற்சால விற்பனன் வாக்குவல்லன்
றந்தையார் தமக்குச்சேட்டத் தனையனும் பதுமநாபன்
சிந்தையா குலத்தின்மூழ்கச் சேண்கதி யடைந்தபான்மை
முந்தநா மரைத்தே மங்ஙன்முறையதே யானதென்றே, (௧௧௩௬)

ஆய்ந்தநற் பதுமநாப வண்ணலுக் கிளைஞனாகி
வாய்ந்தவன் பழமைதொட்ட மந்திரிக் குடும்பத்துள்ள
வேய்ந்த நற்சீர்த்தியாவு மீழமே லெடுத்தசெம்ம
ரோய்ந்த வூழியத்துக்கென்றே தோற்றிய குரிசிலின்னோன், (கக௩எ)

துதிப்புடன் றுதை தாதை தொல்குலத்தவர்கட்கெல்லாம்
விதிப்புள பேரைநாட்ட மேதினி யுதித்ததோன்றல்
கதிப்புள வேந்தரென்றும் கண்ணெனக்காணு நீரான்
மதிப்புள நாமம் சான்றமா மகாதேவனென்ப, (கக௩அ)

அந்தநா டொடுத்தே யென்று மடியடியாகவிங்ஙன்
வந்த மந்திரிக்குடும்பம் வழாமலே யிந்தநாளி
லெந்த நாளினுமேபோல வேற்றமா மமைச்சனாகிச்
சொந்தமா மிலங்கைக்கென்றும் சுகநலந் தந்துவைகும், (கக௩கூ)

ஊரினி னூழியத்தி னொழுக்கத்தின் வாய்மைதன்னிற்
சீரினிற் கலைஞானத்திற் றெய்வ நேர்குணத்திலன்பி
லேரினி னுயர்ச்சியாவு மிம்மகா தேவனென்னும்
பேரினி லறியலாகும் பேசலென் செம்மலார்க்கே, (ககச0)

அந்தநா ளிலங்கைத் தேசவதிப னிம்மைந்தனுருக்
குந்தைபோ னீயுமூருக் கூழியம் செய்யத்தக்காய்
சிந்தைமே லுனது நல்லதிறமை நான்காண்பேனென்றான்
தந்தைதன் செய்கை மைந்தன் செய்வதுதகுதிதானே, (ககசக)

இன்னவற் கிளைஞன்றுதைக் கினியவ னிளையமைந்தன்
முன்னவர் தமினும்சால மூதறிவடக்க முள்ளோன்
மன்னமே லமைச்சுமாக வருபவன் கலையிற்றீர்ந்தோன்
பின்னமி லுறுதியுள்ளோன் பெயரொளிர் ராமநாதன், (ககசஉ)

நாட்டரசு சாவுதற்கே நால்வர்க ளாங்கிலேயர்
கூட்டுட னிலங்கைவந்தே குலாவு நற்சபைகள்கூட்டி
யீட்டுடன் நாட்டுக்குள்ள யிறைத்தொழில் முதலவெல்லாம்
வேட்டுடன் வினவுமாங்கே விளம்பிய ராமநாதன், (ககச௩)



உன்னு வீரீழநாட்டை யோம்பிய பண்டைவேந்தர்
பன்னிய தமிழரேலப் பளேமுத லாதியானோர்
மன்னிய கோல்கொள் ராசமரபுளோரின்னு மேன்மை
துன்னிய வழியில் வந்தோர் சொல்லலா மளவிற்றாமோ, (ககசச)

சாற்றிய வினையசீர்த்தித் தமிழரை யென்றுமென்று
மேற்றிய வுத்தியோக மின்னமும் வேதனங்கள்
தோற்றிய மதிப்புந் தந்தே துலங்கவைத்திடுதல்வேண்டு
மாற்றிய அரசுக் கீதோருங் கடனாகுமென்றான், (ககசரு)

வாக்கியலாளன் வாய்ப்பவருஞ் சபைக்கரியை யொப்பா
னூக்கிய வுளத்தினோடே யுவரொடும் வாதுசெய்யாத்
தாக்கிய நியாயங்காட்டித் தமிழருக் கன்றுமின்றுந்
தேக்கிய காதரூண்டச் சிறப்புகள் செய்துவைத்தோன், (ககசசா)

அவ்வியாழ்ப்பாணத்தோர் நாளவை யிடைத்தாதை தன்மு
னெவ்விய மனத்தினோடு மெதிரிலா விதிகள்காட்டி
யிவ்வியற் றமிழர்க்கேற்ற மீய்தலே கடமையென்னச்
செவ்விய யுயர்ச்சி நல்கச்செய்தது மிளையமைந்தன். (ககசஎ)

## யாத்திரையிற்
## சிவகதிப் பேறுபெறுதல்.

தேடுபெருந் திருவினொடுந் திறலரச வுரிமையொடு
நீடுபெருங் கலையினொடு நிலவுமற நெறியினொடுங்
கூடுபெரும் வாழ்வினொடுங் குறைவகலு முளத்தினொடு
நாடுபெருஞ் சீர்த்தியொடு நம்பி யமர்ந்திடுநாளில், (ககசஅ)

செப்பு தொளாயிரத்திருபா ணூண்டுதனிற் சித்திரையின்
முப்புவனத் தவிர்விரும்பித் தவம்பூசை முயலுதற்கா
மொப்புவமை யில்லாத வுயர்வுதரு மோருலகா
மிப்புவனப் பாதகண்டத் திலங்குதலம் பணியவென்றே, (ககசகூ)

கற்றகலை யறிவாட்சி காணுமருணா சலப்பேர்
பெற்றபெருந் திருவாளன் போரசின் கருமமொடு
முற்றதன தூர்க்குதவு முதவிகளை முன்னியிவன்
சற்றகல மாட்டா மற்றடையாகித் தானமர, (௧௧௫௦)

தேற்றமுற வாய்ந்தபத்தித் திருவுடைய தனித்தேவி
யாற்றலுள தவனருளு மனுமதியி னுவந்துமனஞ்
சாற்றவருந் துணையாகத் தன்னருமை மக்களுட
னேற்றமுற நாளையினி யாத்திரைக் கென்றெண்ணியுற, (௧௧௫௧)

ஆயவிர வதிற்கனவி னறுமுகவ னருள்வாதன்
காயமெழும் பழனிமலைக் கலியுகத்துக் கருணைவள்ளல்
மேய வருணாசலமுன் மேவியெனக் கன்புடையோ
யேயதலம் பணிந்திட நீயேகவெனச் சொற்றகன்றான், (௧௧௫௨)

கதியருளக் கண்டகனுக் காதலிக்குக் கடிதுரைத்து
மதியருளத் தேடருமைத் தேவியொடு மக்களொடுந்
திதியருளத் தாயிடத்தைத் தேடிவருஞ் சேய்போல
விதியருள யாத்திரைக்கே விளையுமுளத் தோடுசென்றான், (௧௧௫௩)

வேறு.

மதிவழி யாத்திரைக்கே மனமெழா திருந்தவாறுங்
கதிவழி பழனிவேலோன் கனவில் வந்தளித்தவாறுந்
திதிவழி வினைப்போகங்க ளூர்ந்தன தீரவந்த
விதிவழி யாகுமல்லான் வேறொன்றை விளம்பலாமோ, (௧௧௫௪)

பொங்கரவ ணிந்தமூர்த்தி புராந்தகன் பூதநாதன்
சங்கர னளித்த மைந்தன் றானளித்திடுவதன்றி
னங்கரவிலாத துப்பை நணுகருணா சலத்துக்
கங்காணாகவுள்ள தவன்செய் புண்ணிய மதென்பேம், (௧௧௫௫)

வேறு.

ஆய்ந்த சத்திநி பாதமடுத்தலாற்
காய்ந்த பற்றிற் கவின ருணாசலம்
வாய்ந்தவுள்ள மகிழ்வொடு யாத்திரைக்
கேய்ந்தயாவுங் கொண்டேவலர் பால்வர, (௧௧௫௬)



நீரினோங்கிய நீரி னதிகளாற்
பேரினோங்கிய பேற்றின் றலங்களாற்
சீரினோங்கிய சித்திக ணல்கியே
பாரினோங்கிய பாரத கண்டத்தில், (௧௧௫௭)

மன்னுபேரன்பு வந்துற வந்தவன்
முன்னுமாற்று முழுத்தவ முண்மையாற்
பின்னுமிந்தப் பெருந்தவ மாகிய
பன்னுகின்ற தலங்கள் பணிகுவான், (௧௧௫௮)

நாசியூடு நடுவழி யாகவே
வாசியேற்றி மருமலரா வுறீஇ
காசிலாவகை யோகங்கை கண்டவன்
தேசினோங்கிய சித்தியொ டேத்துவான். (௧௧௫௯)

சென்னைவந்து செருத்தணி முன்றொழா
வன்னையாகி யெண்ணான் கறம்பேணியே
தன்னைதன்னை தழுவுந் தலந்தனிற்
பின்னையெய்தினன் பேரருள் பெற்றுய்ந்தான், (௧௧௬௦)

தேளதாம்பூந் திருப்பதி கைதொழா
வாளமட்டும் வளரு மனல்வடி
வாளதாகு மண்ணாமலை போற்றியே
யூளமில்லவ னுற்றன னொற்றியூர், (௧௧௬௧)

ஆழவொற்றி யருள்பெற்றுப் பின்பனந்
தாழதெய்தி னன்றாள் பணிந்தேகியே
வாழவாழ்வு வளர்தஞ்சை மாநக
ரீழவேந்த லெதிர்ந்தவண் கண்ணுற்றான். (௧௧௬௨)

சொற்றவண்ண றுணைவி மகாரொடு
முற்றவுத்தாத் தோங்கிய தாமெனத்
துற்றதுற்ற துலங்குந் தலங்களைப்
பற்றதாகப் பணிந்து பாவியே. (௧௧௬௩)

வேறு.

தென்றிசை நோக்கிச்சென்றே சிதம்பரங்கண்டு போற்றி
மன்றிசை நடனம்பாரா மனதுடன் வாக்குக்காய
மென்றிசை காணமூன்று மிசைந்தொன்றே யாகவைய
னின்றிசை யாவியேகி நின்மலவொளியைச் சேர்ந்தே, (௧௧௬௪)

பின்புவந் துணர்வுகூட பிறங்குசாக்கிரத்தை யெய்தி
யென்பு நெக்குருகப்போற்றி யினிதருளடைந்து செல்லத்
துன்புமிக் கரிதினப்பாற் றாயகோ புரக்கீழ்வாய்த
லன்புநீ ரொழுகநீந்தி யங்கு சின்னாள்கள்வைகி, (௧௧௬௫)

தெருவழ கினுக்குச்சொல்லுந் திருவிடை மருதூர்புள்வே
ளருவனப் புடைவேத மருச்சித்த வேளூரின்னுங்
கருவுளர் கவுணியார்க்குக் கசிந்துருக் காட்டுநாதன்
றிருவளர் காளியென்னுந் திப்பிய தலங்களேத்தி, (௧௧௬௬)

போற்றின னின்னவின்ன புகல்சிவ தலங்களங்கே
யாற்றின னபிடேகங்க ளருச்சனை யறங்களின்னு
மேற்றின னுவப்பச்செய்தே யீண்டரு ளுருவமாகத்
தோற்றின னறிஞன் றேவதொண்டனுந் தானேயானான், (௧௧௬௭)

விரும்பிய விளையாட்டோடு மேவிய படைவீடாறு
ளரும்பிய நகையொடுற்ற வாவினன் குடியுமீதாற்
கரும்பியல் பழநீயென்றே கண்ணுத விளையவெட்சிச்
சுரும்பிப ரூரான்கோபந் துடைத்தரு டலமுமீதால், (௧௧௬௮)

திருந்திய வடியார்க் கிட்டசித்திக ளவையுநல்கி
மருந்திய லமரர் தாமுமாநிலத் தவருநித்த
மிருந்திய றவங்கள் பூசையியற்றிடத் தண்டபாணி
பொருந்திய கருணைவெள்ளம் பொழிதரும் பழநிகண்டீர், (௧௧௬௯)

விதிவரும் போதோர் தோற்றம்விளைவது நல்லோர்க்குண்மை
துதிவரும் பழநிவேலோன் றொண்டனுய்க் கனவிற்றோன்றிக்
கதிவரும் வருகவென்ற கருணைமேற் காந்தம்போல
மதிவரு மன்பனார்க்கு மனஞ்சென்ற தடுக்கலாமோ, (௧௧௭௦)



ஓதலுங் கேள்விதானு முற்றவர்க் குதவியாது
மீதலுந் துணையென்றென்று மியற்றருணா சலம்பாற்
சாதலும் பிறப்புமில்லான் றநுதண்டபாணிதன்மேற்
காதலுங் களிப்புந் தூண்டக்காலினீர்போலச் சென்றான், (௧௧௭௧)

மாற்றுவதான மாயவாழ்வு கடந்த வாபோற்
றேற்றுவரோடு செல்லுந் தெருக்களுங் கடந்தபின்னர்ப்
போற்றுவதான வேலோன் பொருப்பை முன்றோற்றக்காணாச்
சாற்றுவ தென்கொ லையன்றத்துவ ஞானியானான், (௧௧௭௨)

ஆவினை நாடியோடியழுது போயணையுங் கன்றிற்
பாவினைச் சாத்திப் போற்றும் பாவலர்க்கிரங்குமெங்கள்
மாவினைத் தடிந்தவேலோன் வைகிய பழநியென்னுங்
காவினை யழகுகாட்டுங் கல்லகச்சாரல் வந்தான், (௧௧௭௩)

வேறு.

பானனேர்விழி மாதொடு மகாரொடும் படர்ந்து
மேனமதா மகப்பேற்றினை மெலமெல வெளுத்தும்
வானமூடு போங்கிரிக்கடி வாரத்தின் மருங்கி
லானதாமொரு சித்திர மடந்தனி லமர்ந்தான், (௧௧௭௪)

மூர்த்த மொன்றதுந் தாழ்த்திலன் பத்தியின்முதிர்ந்தோன்
சேர்த்த நல்லறத்துணையுடன் சென்றனன் சிறந்தே
யீர்த்த திப்பியச் சரவணப்பொய்கை யென்றிலங்குந்
தீர்த்த மூழ்கினன் பலவழுக்க கன்றிடத்திகழ்ந்தான், (௧௧௭௫)

ஏதிலாதவைந் தெழுத்தொடு சடாக்கர மிரண்டு
மோதியேயநு பூதியும் முத்தியு முதவும்
பூதிபூசினன் பூவையும் புதல்வரும் போத
வாதியாகிய வெற்படி வாரத்தி லணைந்தே, (௧௧௭௬)

வேறு.

சாலுறு தொண்ணூற்றாறு தத்துவங்கடந்து பின்னைப்
பாலுறு சிவத்தைக்கண்ட பான்மைபோ லறிவின்மேலோ
னேலுறு மலைமீதேறி யெய்து சோபானந்தாண்டி
மேலுறு முச்சிவைகும் வேளுருக் காணப்பெற்றான், (௧௧௭௭)

கள்ளவைம் புலனுமொன்றக் காணங்களோயச் சென்றே
யுள்ளமத் துரியமேற வொருநிலையாக நின்றே
வெள்ளமொத் திருகண் வாரமேனியிற் பொடிப்புத்தோன்ற
வள்ளலத் தண்டபாணி வசமன்றி மறந்தான்றன்னை, (௧௧௭௮)

அகலச் சென்றொளியப் பாசமழுந்து கேவலத்தினொன்றாய்ப்
புகலப்பே ரின்பமாகப் பொருந்து வெள்ளத்தின்மூழ்கிப்
பகலத்தமன்றி நின்ற பாவெளி நின்றுமீண்டுஞ்
சகலத்தின் மேவிவேண்டித் தான்றுதி செய்வதானன், (௧௧௭௯)

பேணியே போற்றுந்தொண்டர் பேரிடர்தவிர்ப்பாய் போற்றி
வேணியே யமலன்பெற்ற விசாகனே வேளேபோற்றி
வாணியே யவர்களேத்த வதிகின்ற பழநித்தண்ட
பாணியே போற்றியம்மை பாலனே போற்றிபோற்றி, (௧௧௮௦)

எனப்பல துதிகள்கூறி யேத்திப்பின் வலமாய்வந்தே
யனப்படு மபிடேகங்க ளருச்சனை புரிவித்தந்நாண்
மனப்படுஞ் சொற்பனத்தில் வந்ததை முன்னிமுன்னி
யுனப்பயி லுயிரை நீங்குமுடலெனப் பிரிதலானன், (௧௧௮௧)

தனிவரை யடிக்கண்வந்தே தானமுந் தியாகந்தானு
நனிவரை யாதுநல்கி நல்லவூழ் நடத்திச்செல்லப்
பனிவரை நின்று மையன் பத்தினிமகார்கள்கூட
வினிவரை விதுவேயாக வெண்ணினன் மதுரைசெல்வான், (௧௧௮௨)

குதிகொண்டு பாயும்வைகை கொடுத்திடும் வளஞ்சால்பாண்டிப்
பதிகொண்டு காட்டுஞ் செல்வப்பட்டணந் திருவினனுங்
கதிகொண்டு தருவதாலுங் கதித்தது மதுரையிங்ஙன்
விதிகொண்டு வருவதானன் விண்ணவர் விருந்தேயாவான், (௧௧௮௩)

பிறந்திடப் போகந்துய்க்கப் பொருட் செல்வமெய்த
வுறைந்திட வாலவாயை யுவப்புடன் றினமும்போற்றி
யிறந்திட முத்திநல்கு மெழுநக ரங்களுள்ளு
மறந்திட லாகாதோங்கு மகத்துவ மதுரையீதால், (௧௧௮௪)



ஆரணி சிவத்தினேடு மனன்னிய சத்தியான
காரணி யசுத்தமாயை காரணமாகத் தந்த
சீரணி யுரைக்கவொண்ணுத் திகழ்விராட் புருடரூபத்
தாரணித் துவாத சாந்தத்தலமும்மிம் மதுரைகண்டீர், (௧௧௮௫)

நாடுறப் பக்குவஞ்செய் நாட்டநோக்குடைய செவ்வி
கூடுறத் திகழ்மீனாட்சி குறைவிலா தென்றுமென்றும்
வீடுற வுயிரைக்காத்தே விளைவுநல் வளங்களாக்கிப்
பீடுற விளங்குஞ் சத்திபீடமு மதுரையென்பர், (௧௧௮௬)

அருவிளை வாகவென்று மைந்தொழி னடாத்தும்பெற்றி
யொருவிளை யாடலாக வுன்னியே நடாத்திமேவு
மருவிளை யாரநாதன் மகிழ்ந்துசெய் யெண்ணெட்டான
திருவிளை யாடல்காட்டுந் திவ்விய மதுரையீதே, (௧௧௮௭)

கற்றவன் கலையான் ஞானிகசிந்தபத் திமையான்ஞானி
பற்றவன் சிறிதின் ஞானிபாரினை வெறுத்தஞானி
முற்றவன் பின்னுமிங்கே முயன்றனன் செய்துவந்த
நற்றவன் றவங்கொண்டுய்க்க நவிலுமிம் மதுரைசேர்ந்தான், (௧௧௮௮)

உறுபகை தானுமின்றி யுட்பகை யாகத்தோன்று
மறுபகை யதுவுமின்றி யகம்புறந் தூயனாகித்
தெறுபகை தீர்த்து மேனாட்செழியரைப் பவங்களான
பெறுபகை நீக்கும் பெம்மான் பேரருணட்பேயானன், (௧௧௮௯)

அங்குதன் னரிவை யாருமளித்தரு டனையர்தாமுந்
தங்கவங் நகரின்வாய்ந்த சாய்கையொன் றமர்ந்துமன்ன
னங்கண ணன்மநாத ணலவா யான்மேலன்பு
பொங்கவே தீர்த்த மூழ்கிப்பொற்புறும் புனிதனானன், (௧௧௯௦)

மருட்பெருங் கடலைநீக்கி மன்னுயிர்க் கருளுவானைப்
பொருட்பெருங் கடலாம் வேதப்பொருளுமா யிருப்பான்றன்னை
யருட்பெருங் கடலை வெள்ளியம்பலத் தாடுவானை
யிருட்பெருங் கடலைநீக்கா யேழையேற் கிரங்காயென்றே, (௧௧௯௧)

எடுத்துமே னேக்கத் தண்ணலேத்தினன் போற்றிபின்ன
ரடுத்துமீ ளாட்சியம்மை யருளருட் கண்ணும்பெற்றே
படுத்துமீ தெழுந்தவார்வம் மலிதரப் புறத்துச்சென்றே
தடுத்துமேற் பத்தியீர்த்துஞ் சாய்கைக்கு வந்தானையன், (ககக௯உ)

ஒள்ளிய மனத்தினூடே யுலகமேற் பற்றையெள்ளித்
தள்ளிய ரானிலந்தே சாய்கையி லமரும்போதில்
வெள்ளியம் பலத்துநின்றே விளைந்துசெய் நடனமூர்த்தி
தெள்ளிய யுளமேற் காணச்சிறிதுநீர்த் தோடங்கண்ட, (ககக௯௩)

காணுறு மளவின் மெல்லக் கனவினைமீதிற்சாய
மாணுறு தேவிதானும் மக்களுமருங்கிற் சூழா
வேணுறு மேந்தலாரை யேந்தியே யிருந்துதேற்றப்
பேணுறு மாயுள்வேதன் பேரமிர் துதவலானான், (ககக௯ச)

தோற்றுநீர்த் தோடத்தோடே சுரமுமொன் றிருக்க வன்பான்
மாற்றிலாத் தேவிகாண மைந்தர்க்குத் தந்திபோக்க
வேற்றுமா தேவன் ராமநாத னென்றிவர்களுடி
சாற்றிய கடிகைவந்தே தாதைக்கு முகங்கொடுத்தார், (ககக௯ரு)

மன்முக முடைய தந்தை வந்துமுன்னின்ற மைந்தர்
நன்முகங் கண்டபோதே நலியுநோ யிலனேயாகாத்
துன்முக மென்றும் நோக்காத் தூயமாமகாரையங்கட்
டன்முகமாக வைத்தே தானிதுபுகலுகிற்கும், (ககக௯சா)

ஏதமே யிலாத வெங்களிலங்கைலாழ் சனங்கட்க ..
வாதமே யரசொடாடி வாய்ந்தபே ருதவிதன்மம்
பேதமே யிலாமலின்னும் பெரிதுநான் புரிந்தவாபோ
னீதமே யாகவென்றும் நீங்களுஞ் செய்தல்வேண்டும், (ககக௯எ)

நன்மையை நோன்பையாற்றி நாட்டமாயினிது பெற்றே
பொன்மைய தாகநாளும் போற்றியேவந்த தாயை
மென்மையா யன்புகாட்டி மேன்மையாய்ப் பேணல்வேண்டுந்
தொன்மையை நோக்கி யின்னுஞ்சொற்படி யொழுகல்வேண்டும்,
(ககக௯அ)



கூறிமற் றினையவாறே கூடவே மகாருமற்றை
யூறிய வன்புதானே ருருவமாம் பாரிதானு
மேறிய கலக்கமிஞ்ச வெதிரரு காகவைக
வாறிய மனத்தனாகி யணையிடைச் சயனித்திட்டான், (ககக௯௯)

அல்லிது கழிந்தபின்ன ரடுத்தநாட் காலையாக
நல்லிய னடேசமூர்த்தி நனவினிற் காட்சிநல்க
தொல்லியல் வடிவமிங்கே தோற்றின காண்மினென்னுச்
சொல்லினன் சொல்லி யந்தத்தொல்லுருவாகியுற்றான், (கஉ00)

நலமிதிற் புகல்வர் முத்திநகரிது மேலுஞ்சொல்லிற்
பெலமிதின் மீன்கட் சத்திபீடமுமாகு மின்னும்
புலமிதிற் புருடனுக்குப் பொருந்துபேர்த் துவாதசாந்தத்
தலமிதிற் கிடைக்கப்போமோ தனதுட லொருவுதற்கே, (கஉ0க)

தேகமா யாவியாகிச் செயல்களு மொன்றுயென்று
மேகமா யிருந்த தேவியென்செயும் புலன்கள்கெட்டே
பாகமாய்த் துயிலுங் கன்னோர் கணவனைப்பார்த்துப்பார்த்தே
சோகமாய்த் தனைமறந்தே தொழிலிலோ வியம்போலானாள்,
(கஉ0உ)

பேருயிரிருந்த தேயோ பெயர்ந்ததோ பிறிதுமுண் .டா
சீருயிரிருந்த தென்னிற் சித்திரப்பாவை யொப்ப
வோருயிருடம்பு வேறுயுற்றது சாதந்தானு
மாருயிரதனைக் காணாளாங்கொரு சிலைபோலுற்றாள், (கஉ0௩)

இன்னண மேங்கி மாழ்குமீன்ற தாய்க்குறுதிசெப்பிப்
பின்னமற் றிலாதவாறே பிரேதசே மங்கள்செய்யாச்
சொன்னநன் மைந்த ரன்றே தூமத்தேர்மீதிற்கொண்டு
பொன்னவிர் கொளும்பு நண்ணிப்பொன்கிளார் மனையிலுய்த்தார்,
(கஉ0ச)

அந்தநன் மதுரைதன்னி னண்ணலார் மடிந்தசெய்தி
வந்தவச் சமயந்தொட்டே வருகையை நோக்கிமாள்கு
மிந்தமா ணகரினுற்றோ ரேக்கமுந் தாமுமாக
முந்தவே வந்துவந்து பொன்கிளார் முழுதும்மொய்த்தார்,
(கஉ0ரு)

தேசமா ளதிபன் மற்றைச்சிங்கள ராங்கிலேயர்
பாசமா யொருங்கே தோன்றும்பாங்குள ராமநாதன்
வாசமா நகரினெங்கும் மன்னிய தமிழரேனோர்
நேசமாய் வந்துவந்தே நினைவழிந் தமர்வதானார், (௧௨௦௬)

தன்மமுந் தனமுமோங்குந் தன்மனை யடைந்தகாலை
நன்மட நல்லார்வந்தே நாவெடுத் தலறிமொய்க்கப்
பின்மனத் தன்பேயாகப் பெருகுகண் ணீருண்மூழ்கிப்
பொன்மக்கள் வாய்விட்டென்னப் புலம்பியே யாற்றும்பூவை, (௧௨௦௭)

வேறு.

அன்புக் கணிகலமே யறிவினிக்கோ ரிருப்பிடமே
மின்புக் கெனமறைந்தாய் விதியுமிவண் வந்ததுவோ
முன்புக் கொருவரிலாய் மூதுலகி லென்னையென்றுந்
துன்புக் கிடனுக்கித் தோற்றும லெங்கிருந்தாய், (௧௨௦௮)

தேசம் புகழரசிற் றிருத்தமுறை செய்துவந்த
நேசந் தருமரசே நெடுநோ நித்திரையேன்
பாசந் தொடருனது பற்றகலாப் பத்தினிக்கு
மோசம் வருமெனநீ முன்னுதியோ முன்னுயோ, (௧௨௦௯)

சட்டந் தெரியாமற் சார்ந்துநிதங் கேட்பவர்க
ளிட்டம் பெறநாடி யினியாரிற் றெளிகுவரோ
திட்டம்பெற வரசைச் சீர்திருத்தி யிவ்விலங்கை
நட்டம் புகுதாம னற்றிருத்தஞ் செய்குவரோ, (௧௨௧௦)

கஞ்சந் தனக்கரியுங் கண்டகிக்கு மின்னலுமே
வஞ்சம் புகுதாமன் மலருவிக்கு மாங்கதுபோ
னெஞ்சங் கலந்தெனக்கு நீயலது வேறுமொரு
தஞ்சந் தருந்துணையோ தனியிருத்திப் போனதென்னே, (௧௨௧௧)

வையந் துதித்தவெங்கள் வாழ்வை மறந்திருந்தனையோ
துய்ய வெனதுறவே சோகமுறச் செய்தனையோ
வெய்ய மனங்கலங்கி வேகுமெனக் கினியொருகாற்
செய்ய நகையுந் திருமுகமுங் காட்டாயோ, (௧௨௧௨)



வேறு.

காட்சியில்லைநீ தங்கலை வாவென்றே
காட்சிபோலக் கனவி லளைத்திட்ட
மாட்சியாயென்றும் மன்னும் பழநியின்
மீட்சியற்றமர் வேலவன் சூட்சியோ, (௧௨௧௩)

மண்டலத்துள மன்னர்கை தந்ததும்
வண்டலத்தவர் நாளும் மதித்ததுங்
கொண்டசீர்த்திக் கொலுவுடன் வாழ்ந்ததுங்
கண்டகாட்சிக் கனவுபோ லானதோ, (௧௨௧௪)

திக்கதெங்குந் தெரிதா லானதோ
மக்கடம்மை மறக்கவும் வந்ததோ
தொக்கமுத்திச் சுகங்களுங் கண்டதோ
புக்கமண்ணிற் புகழுடம் பானதோ, (௧௨௧௫)

பற்றதாகப் பதிகள் பணிந்திடச்
செற்ற பற்பல சேத்திரயாத்திரைக்
கற்றமற்ற நல்லன்பு தொடர்ந்தபோ
லுற்ற முன்னைய வூழுந்தொடர்ந்ததோ, (௧௨௧௬)

வேறு.

கூறுமோ ரளவுமுணடோ கொடுவிடந் தலைக்கொண்டாங்கே
மாறுமோ மேலும்மேலும் வந்துவந் தொருங்கேமூட
வாறுமோ துன்பமென்னு மாழிவாய் மூழ்கிமூழ்கித்
தேறுமோ வுயிர்ப்புநீங்கிச் சேயிழையவசமாக, (௧௨௧௭)

உளத்தயா வுடையவேனோ ருயங்கினா கலங்கிநையக்
கொளத்தகாச் சோகநீரிற் குளித்துறு தனயராங்கண்
வளத்தகு குரவர்க்கொண்டே வைதிக முறைவழாமற்
கிளத்திய வாறேயந்தக் கிரியைகள் சடத்திற்செய்தார், (௧௨௧௮)

சீர்பெறுங் கிரியையாவுஞ் சித்திர விதியாற்செய்தே
பேர்பெறு கைவல்லோர்கள் பெரிதுதந் திறமைகாட்டி
நேர்பெறுங் கவினுமொன்று நேரிலை யென்னச்செய்த
வேர்பெறுந் தேரிலேற்றி யீமத்திற் சேர்த்தினார்கள், (௧௨௧௯)

கண்ணிய வாங்கிலேயர் கசிந்தசிங் களர்கண்மிக்க
தண்ணிய தமிழர் மற்றைச்சாதியிற் கருதவுற்ற
குண்ணிய மானயாருங் கூடினர் தொடர்ந்துவந்தே
மண்ணிய மணிபோற் றாயமயானத்திற் குழுமினார்கள், (கஉஉ0)

வந்தவர் யாரும்வந்தே மருங்குறவ ளைந்துநிற்ப
மைந்தர்கள் சோகத்தோடும் வார்ந்தகண் ணீரினோடுஞ்
சந்தன வாசந்தோய்ந்தே தயங்குமா றடுக்கியிட்ட
விந்தனப் பாயன்மீதே யேந்தலைவளர்த்திப் பின்னர், (கஉஉக)

திடம்பட வுளத்தைத் தேற்றிச்சீருள விருவர்தாமு
முடம்பெடுத் திட்டதாலே யுறுபய னிதுவென்றுங்கே
குடத்துடன் கொள்ளியென்னக் கூறிய கடன்களாற்றிச்
சடந்தனை யங்கிக்கீந்தே தகனமுஞ் செய்திட்டார்கள், (கஉஉஉ)

சீரிய தாதைமுன்னஞ் செப்பியவாறே யாக
வாரிய தீர்த்தமான வைகைமா நதியிற்றானே
நேரிய ரானத்தோடு தியாகமுநேர்ந்து தந்தை
யேரிய லத்தியிட்டே யிட்டியுஞ் செய்திட்டார்கள், (கஉஉங)

மைந்தரை யரிதிற்பெற்றும் மாண்புடன் வளர்த்துங்கல்வி
சிந்தையிற் றெளியுமாறு தெருட்டியும் வருவதெல்லாந்
தந்தையர் மடிந்தகாலைத் தங்கடனாற்றற் கென்றே
முந்தைநூ லுரைத்தவாறாய் முழுவதுந் தனயர்செய்தார். (கஉஉச)

## பத்தினியா ரறங்காத்தல்.

காசினி யேத்துஞ்சீர்த்திக் கணவன்வா னடைந்தபின்னர்த்
தேசினிற் றிகழுநங்கை தெய்வக்கற்புடைய தேவி
தூசினிற் பொதியப்பெற்றுத் துலங்குமாமணி போற்றுன்ப
மாசினின் மறைந்துந் தன்னோர் மனையறப்பாரமேற்றாள், (கஉஉரு)



மன்னவ னுரிமைத்தேவி மந்திரியாகு மென்னச்
சொன்னவ ரறிஞரன்னோர் சொன்னவாறாகத் தானே
நன்னவ நீதியோடு நரேந்திர னாகியுற்ற
வன்னவ னுயர்வுக்கேய்ந்த வமைச்சுமேயான தேவி, (கஉஉசு)

கண்ணினுக் கழகுகாட்டுங் கவினெலாந் திரண்டுவந்தோர்
பெண்ணினுக் காசியாகப் பிறந்திடு முருவச்சீராள்
பண்ணினுக் குவமைகாட்டும் பனிமொழி பேசுங்கிள்ளை
மண்ணினுக் கடங்குமோதான் வனப்புடன் சீலந்தானும், (கஉஉஎ)

தன்னருங் கணவன் றுஞ்சத்தாபத விரதம்பூண்டே
யுன்னரு மொழுக்கந்தானே யுயிரென வோம்புமாது
பன்னரு முலகமுற்றும் பத்தினித் தெய்வமென்ன
வின்னரு ளமையக்கண்டே யேத்துவான மருஞ்சீலி, (கஉஉஅ)

பூணுறு மணியாய் நாதன்புகழையே பூண்டுகொள்ளும்
பேணுறு விரதமாகப் பெயரையே தினமுமுன்னு
மாணுறு கணவன்மீதே மனத்துட னன்புமென்றுங்
காணுறு கனவுதோறுங் கவினருட் காட்சிகாணும், (கஉஉகூ)

கலக்கமி லிலக்கியங்கள் காவியஞ்சமய வுண்மைக்
கிலக்கமாம் ஞானசித்தி யெழிற் சிவஞானபோத
மலக்கணற் றினைய நூல்க ளல்லொடுபகலு மாய்ந்தே
துலக்கமே யாகநாளுந் தொழிலதுவாக்க் கற்கும், (கஉங0)

சிந்தைமேற் கணவனன்றித் தெய்வமென் றுன்னல் செய்யா
ளந்தநா டொடுத்துவந்த வமைச்சினர் குடும்பந்தன்னி
லிந்தநா ளெவர்க்குங் கண்ணுயிலங்கிய வொருமூதாட்டி
தந்தைதா யென்றே யாருந்தாழ்பணி தருமச்செல்வி, (கஉஙக)

உருவு தம் மொத்தாரின்றி யொளிரும் பெண்மக்களில்லத்
திருவு ளச்சீர்கணேக்கிச் சிந்தையி லுவகைகூரு
மருவு தம்மைந்தர் தம்மை மந்திரத்தொழில்கட்கேவி
பொருவுத லிலாதவன்னோர் புகழ்களிப்போடு கேட்கும், (கஉஙஉ)

காமியா முகத்துவாரக் கடற்கரை யானைக்குட்டிச்
சாமியா லயத்திற்றானே தனி நடராசமூர்த்தி
பூமியா ரெவரும் போற்றப்பொலியத் தாபனஞ்செய்திட்டே
சேமியா நித்தி யம்மை மித்தியஞ்சிறக்கச்செய்யும், (௧௨௩௩)

சுத்திகளிரண்டுஞ் செய்தே தொடர்ந்த பத்திமையினோடுஞ்
சித்திகள் பெறுவான்வேண்டிச் சிவாலய சேவைசெய்யும்
நித்தியம் மணையிலுச்சி நேரங்களெந்த நாளும்
பத்தியாய நாதைகட்குப் பரிவுடன் கொடுக்குமன்னம், (௧௨௩௪)

வெருவரு மாறதின்றி விடியுமுன் சுத்திசெய்யா
வொருவரு மைந்தெழுத்தையுன்னி வெண்பட்டின் மீதே
திருவரு ணீறுபூசிச் சிவமயமாக வைகி
மருவரு யோகநிட்டை வழாமலே பயிலுமம்மை. (௧௨௩௫)

## கொங்கிறஸ் சபையில் படந்தாபித்தல்

நாட்டமே யாகு மீழநாட்டினைத் திருத்தஞ்செய்வான்
வாட்டமே யிலாமற் பற்பல்வருடங்களாகக் கூட்டுங்
கூட்டமே யானநேர்மைக் குடிப்பெருஞ் சபையேயாகுங்
கோட்டமே யிலாத நல்லகொங்கிற சபையிலந்நாள், (௧௨௩௬)

அற்றமி லூரைக்காக்க வாசியற் றிருத்தஞ்செய்துஞ்
செற்ற நம் நாட்டினுக்கே சுயவரசுரிமைசெய்து
முற்ற நல்லறங்கள் செய்து முருபகாரமாக
மற்றவன் செய்தநன்றி மறக்கல ரானதக்கோர், (௧௨௩௭)

சீருள ரானோர் யார்க்குஞ் செயத்தக்க திதுவேயென்ன
நேருள ரிலாதவாண்மை நேர்மையோ டரியகல்வி
தேருள னனசீர்த்திச் சேரருண சலத்தைப்
பாருள வெவரும் பார்க்கப்படமொன்று தாபித்தார்கள், (௧௨௩௮)



கோபித்த லிலாத நல்லோர் கொங்கிறசபையிலென்றுஞ்
சோபித்த னலமென்றுன்னித் தூக்கியே யாருங்காணத்
தாபித்த படத்தினோடே சார்ந்தனன்பெரோ வென்போன்
பாபித்த சீர்த்தியெல்லாம் படிப்படி பகர்தலுற்றான், (௧௨௩௯)

ஒக்கவே சேவைநின்று மோய்ந்திலைப்பாறுஞ் சைவ
மக்களோ சமய நூல்கள் மாண்புள ஞானமின்ன
தக்க தக்கன மார்க்கத்திற் றங்கிப்போக்கிடுவர்கால
மிக்கதிப்புடைய வேந்த லிவர்கள்போற் பிறந்தானல்லன்,
(௧௨௪0)

தங்கிய தன்னாட்டுள்ள குறைகளை யாய்தல்சாற்று
மங்கியல் குடிகளுக்கே யாகிய குறைகளோக்க
லிங் கியற்றிருத்தச் சங்கமியற்று தன்முதலவான
வெங்கிய லிதங்களுடி யிவைகளைச் செய்துவந்தான், (௧௨௪௧)

உத்தமனுங் காங்குள்ள யாரையு மொருங்குகூட்டித்
தத்தம துளங்களுக் கக்குடிப்பெருஞ் சபையைவைத்தா
ணித்தகு திருத்தயெல்லா மிங்கிலந் தமைச்சனோடு
மொத்திடப் பேசவெம்மை யுய்த்தது மினையவேந்தல், (௧௨௪௨)

சொன்ன விவ்வாறேயாகச் சொல்லியே முடிந்தபின்னர்
பின்னமில் சில்வாவின்னும் பீரிசு முதலினோர்கள்
மன்னவர் மதிக்குமிந்த வள்ளலூழியங்கள் யாவுந்
தன்னமு மறுவில்லாமற் றனித்தனி பேசியுற்றார். (௧௨௪௩)

## சிலை நாட்டுதல்.

மலைநிறுத்தி வரைந்துவரும் மன்னவரும் மந்திருங்
கலைநிறுத்தி யெழுதிவருங் கற்றவருந் தம்பெயரை
நிலைநிறுத்தி வருமதுபோ னீடருண சலக்குரிசில்
சிலைநிறுத்திப் புகழ்நிறுத்துஞ் செவ்வியையுஞ் செப்பலுற்றேன்,
(௧௨௪௪)

குன்றுமற் செல்வமொன்றுங் குறையாமல் வாழ்ந்திடினுங்
கன்றும லிவர்பெயரிக் காயமுட னின்றுவிடு
மொன்றும லுடன்வரு மிவ்வுடம்பழியு மழிந்திடினும்
பொன்றும லென்றுநிற்கும் புகழுடம்பு கண்கூடே, (௧௨௪௫)

எந்நாட்டி னெத்திசையி லிவன்பிறந்து மிருந்துமென்னே
பின்னாட்டிற் பிறந்தவர்கள் பிறந்தானென் றறிகுவரோ
விந்நாட்டிற் பிறந்தானென் றெந்நாடுந் தாமறியக்
கன்னாட்டிப் பிறந்தவனே காசினிமேற் பிறந்தவன்காண், (௧௨௪௬)

மறந்தவனென் றில்லாமன் மதித்தபெரு வாழ்வுபெற்றுப்
பிறந்தவனென் றிவ்வுலகம் பேசவருஞ் சீர்த்திகளாற்
சிறந்தவனென் றெடுத்தேத்தச் சிலைநாட்டு மண்ணறனை
யிறந்தவனென் றிருநிலத்தோ ரெண்ணிடலு மாகுமதோ, (௧௨௪௭)

வேறு.

சொற்ற செல்வந் துலங்குத்தியோகங்கள்
கற்றகல்வி கதித்த வறிவுசீ
ரற்றமற்ற வமைச்சிய லீகைமன்
னுற்றவேலைக் கிரங்கு முதவிகள், (௧௨௪௮)

இன்னு மன்னர்க் கிடித்துச்சொனீதிக
ளுன்னுமீழ நற்றேசத்துக் கூழியம்
பன்னுமேற் றெய்வபத்தி கருணைமேன்
மன்னுகின்ற மனைமக்கள் போறம், (௧௨௪௯)

பாய சீருடைப்பட்டம் வகித்திடல்
தூய மேற்சித்தித் தொண்டர்சமாதிக
ணேய மாய்நிதம் நிட்டைபயிலுத
லான யாவினு மாமருணாசலம், (௨௨௫௦)

வேறு

இவ்வியலாகிய விலக்க ணங்களாற்
செவ்விய னுமெனத்தெரிந்து மற்றைய
வவ்விய மில்லவ ராசாதியோர்
திவ்விய வுருவினைத் தினமுங்காண்குவான், (௧௨௫௧)



ஏண்டகு தலைநகர்க்கொளும்பி லென்றைக்கு
மாண்டகு மன்னரு மதியின்மிக்குள
வாண்டகு மமைச்சரு மமைச்சின்மன்னுங்
காண்டகு விசித்திரக் கவுஞ்சின்மன்றத்தில், (௧௨௫௨)

ஏர்தரு முகப்பினி லேற்குமென்றிடப்
பேர்தரு மறிவினிற்பெரியன் யாவர்க்கு
மூர்தரு மோருப காரியோர்ந்திதைத்
தேர்தரு ஞாபக சின்னமாகவே. (௧௨௫௩)

வேறு.

புல்லுறு புகழுடம்பாம் பொற்புறு சிலையைமுப்பான்
சொல்லுறு மாண்டின் மன்னன் றுரைமக்க டோற்றமுள்ள
வெல்லவர் தாமுமொய்த்தே யெண்ணமங் கவன்மேலாக
நல்லியலாக யாருங் நாடவே நாட்டியிட்டார், (௧௨௫௪)

நாடவே யுருவை நாட்டி நன்மனக்கிளர்ச்சியோடுந்
தேடவே யரியசீர்த்தி திகழருணா சலந்தன்
னீடவே யிலங்காவுக்கு நிலவச்செய் திறங்கள்காட்டிக்
கூடவே நின்று தேசவதிபதி கூறலுற்றான், (௧௨௫௫)

அருவினிற் காணாவண்ண மவனிமேன் மறைந்துநின்றே
யுருவினிற் றோற்றுமிந்த வுத்தமன்செயல்கள் சொல்வேன்
றிருவினி னுலகையாளுஞ் சீரரசியலின்ஞான
மொருவில ருணர்ந்தோர் தம்முளொருவனேயாகு மின்னோன், (௧௨௫௬)

சாலுறு குடிகளுக்குந் தராபதி தனக்குமொக்கக்
கோலுறு மரசை நோய்க்குலவவே நடத்திவந்தோ
னேலுறு சேவைநின்று மினிதிளைப்பாறுங் கால
மாலுறு தேசவூழி யந்தனை யரிதிற்செய்தோன், (௧௨௫௭)

தொல்லைநா ளினையன்செய்த தொண்டுகள் கூறுங்காலைப்
பல்லியற் சங்கமென்னப் பகாருங் கல்வியென்னச்
செல்லிய லரசிலென்னச் சீர்க்குறைமுறைகளென்னச்
சொல்லிய வினையமூன்றுந் துலங்கவே திருத்தஞ்செய்தான், (௧௨௫௮)

அன்னநாட் சங்கங் கல்வியரசியற் றிருத்தமென்னு
வின்னவ னிலங்கைக்காக விடையரு தியற்றிவந்த
சொன்னவிம் மூன்று மிந்நாட்டோற்று கண்கூடேயாகப்
பன்னரும் பயன்கள் செய்தல் பார்க்கலாமெவர்க்குமென்றான், (௧௨௫௯)

தொகுப்புள தமிழர் சோனர் சிங்களர்சொல்லுஞ்சாதி
வகுப்புள பேதமின்றி வகைவகை யொருங்கேசங்கப்
பகுப்புகள் வைத்துவைத்தே பரிவுட னெவர்க்குங்கல்வி
மிகுப்புள வறிவைநாளும் விருத்திசெய்விக்கு மின்னோன், (௧௨௬௦)

எந்த நாட்டிருந்து மிந்தவிலங்கை யென்றெண்ணியெண்ணி
யந்த நாட்டிருத்திவைத்த வரசியற் றிருத்தந்தானே
யிந்தநா ணடக்குமாற்றை யிருந்திவன் காண்பனாயி
னுந்தநா ளரசைக்கண்டேயு வகைமேலு வகைகூர்வான், (௧௨௬௧)

கோலர சுரிமைமுற்றுங் குடிகளுக்கிருத்த னன்றென்
றேலவச் சபைகடோறு மேற்கவே பேசிவந்தோன்
சாலர சியற்கை யிந்தச்சனங்களுக் களித்தபின்னர்ச்
சீலநல் லரசுசெய்தே திருத்தமும் பெறுவரென்றோன், (௧௨௬௨)

சொன்னநற் பிரமாணத்திற் சுயவர சுரிமைதன்னி
னின்னவன் செய்துவைத்த வேருள திருத்தந்தன்னுன்
மன்னவே நானுமிந்த மந்திரச் சபையையிந்நா
ணன்னய மெனவேநாடி நடத்தவங்கீ கரித்தேன், (௧௨௬௩)

கூறுமென் பாரமுற்றுங் குடிகளில் விட்டேனன்னோர்
தேறுமிச் சமயமன்றோ திருந்திடற்காகு மிந்நா
ளேறு சீருடைய வேந்தலிருக்குமே யாயிற்றக்க
பேறுக ளுறுவானோர்க்குப் பெருங் கருமங்கள்செய்யும், (௧௨௬௪)

முடிபுனை வேந்தினாலே முந்துசன்மான மெய்திப்
படிபுகழ் சீர்த்திநாளும் பகாருணா சலந்தான்
குடியுள விலங்கையென்றுங் குலவுறத் திருத்தஞ்செய்தற்
கடியுமாயிருந்த தென்றே யதிபதி பகர்ந்திட்டானால், (௧௨௬௫)



உன்னிய கருமசித்தி யுயர்ந்தபே ரறிவுமானந்
தன்னிக ரிலாதசேவை தனிநெறி முறைகள்செய்த
லென்னுமிங் கிவைகளாலே யிலங்கிய வுருவைநோக்காப்
பன்னரு மன்புதூண்டப் பார்த்திபன் மேலுஞ்சொல்வான், (௧௨௬௬)

இந்தநல் லிலங்கைவாழு மிவர்களைப் பெரியோராகச்
சந்தத மேற்றஞ்செய்து தந்தது மினையதோன்ற
லெந்தமேற் கருமமேனு மெண்ணியே தொடங்குமாயின்
முந்தவே முயற்சிசெய்யா முடித்திடு மாற்றலுள்ளோன், (௧௨௬௭)

இன்னநாட் டினர்கள்யாரு மிவன்செய்த நன்றிதன்னை
மன்னவே மனத்திலென்றும் மறந்திடா திருத்தனன்றும்
பின்னர்நா ளமைச்சர்யாரும் பெரியரி னெழுங்கைமேலாய்ப்
பன்னுவ தென்னோதாம்பின் பற்றுவர் போலுமென்றான், (௧௨௬௮)

பின்புபீ ரிசுவென்றோதும் பெருந்தகை பேசலுற்றான்
முன்புதே சாதிபன்றன் பேச்சுகண் முழுதும்பேசி
யன்புரு வத்திற்சென்றே யகத்தினை நலியமுற்றுந்
துன்புரு வாகநின்றே துரையருந் திறங்கள்சொல்வான், (௧௨௬௯)

ஒங்கிய கல்வியுள்ளோ னுண்மையாந் தேசத்தொண்டன்
றேங்கிய வரசின்சீரைத் திருத்தமாய்ச் செய்தமன்ன
னீங்கியல் சேவைநின்று மினிதினைப் பாறுநாளிற்
றூங்கிய வூழியங்க டனித்தனி செய்துவந்தோன், (௧௨௭௦)

அறைதரு மினையன்றானே யானகைத் தொழில்கள்செய்யக்
கறைதவிர் கல்விகற்கக் கமத்தொழிற் கருமமூக்கத்
துறைதரு செல்வநாட்டிற் சுயவர சுரிமைவேண்டக்
குறைதவி ரவைகடோறுங் குடிகளை யருட்டிவிட்டோன், (௧௨௭௧)

நோக்கிய வினையவாறே நோன்மைய தாகவென்று
மேக்கியல் வேலையெல்லாம் விரும்பியே செய்யுங்காலை
யாக்கிய வவைகளுக்கு மடுத்தநற் றொழில்களுக்கு
மூக்கிய துணையாய்நின்ற வுவர்களு ளொருவனானும், (௧௨௭௨)

தனிவருங் கேம்பிரிச்சிற் ரூன்கலை கற்குஞான்றி
னனிவரும் மதிப்பினேடும் நண்ணிய வுயர்ச்சியுள்ளோன்
றுனிவருஞ் சேவைகல்வித் துறைதொறு மூக்கஞ்செய்வா
னினிவரு மவர்க்குத்தான்முன் மாதிரிக் கிலக்காய்நின்ருேன், (௧௨௭௩)

கற்றுறு மறிவின்மேலோன் கறுத்தவர் தமக்குட்டானே
மூற்றுறு சிவில்சேவின்கண் முதன்முதற் சித்திபெற்ருேன்
பெற்றுறு கொளும்பின்வந்தே பின்புதான் சேவையேற்றுப்
பற்றுறு முத்தியோகம் படிப்படி யுயரப்பெற்ருேன், (௧௨௭௪)

ஓங்கிய வுத்தியோகத் தொருதகு முயர்ச்சித்தாகத்
தாங்கிய வந்தாங்கத் தனிமதி யமைச்சாயுற்ருே
னீங்கியல் சேவைநாளி லினிதிளைப் பாறுநாளில்
வீங்கிய சனங்களுக்கே வேண்டிய நலங்கள்செய்தோன், (௧௨௭௫)

தோய்ந்ததன் சேவைநேரந் தொடாமே லொழிந்தநோ
மோய்ந்துதா னிருந்திடாம லுந்தவூர் லோவேயாக
வேய்ந்தபல் புத்தகங்க ளெழுதியே யூர்க்குத்தக்க
வாய்ந்தபே ருதவிசெய்து வருவதலில் வினைதமுள்ளோன், (௧௨௭௬)

மறுத்தவி ரிராச்சியத்தின் மாசிலா முதன்மைத்தன்மை
கறுத்தவர்க் கில்லையென்றே கட்டிய வொழுங்கைமாற்றிச்
செறுத்தலி லாசின்மேலாஞ் சேவையை முதற்ருன்பெற்றே
யொறுத்தலி லுயர்ந்தசேவை யூரவர்க் குதவவைத்தோன், (௧௨௭௭)

ஆங்கிலர் தமக்குங்கிட்டா வமைச்சனு யமருநாளிற்
ருங்கிய நாட்டிற்பறப்பல் சாதியார் தம்மையொக்க
வாங்கிய மதிப்புத்தந்தே வந்தனன் வருதலாலே
பாங்கியல் சனங்கள்யாரும் பரிந்துகொண் டாட்டஞ்செய்தார், (௧௨௭௮)

சாற்றுவ தென்கொலிந்தத் தக்கமே தாவியந்நா
ளாற்றவு நாடிச்செய்த வாசியற் றிருத்தமென்னு
மேற்றமாம் முறையைத்தானே யிந்தநா ளரசுக்காகப்
போற்றிளர் கொள்வர்வேத புத்தக மாகுமென்றே, (௧௨௭௯)



பின்னமற் றிலங்குமிச்சேர் பீரிசு பேசியாக
வன்னதன் பின்னரின்னு மடுத்தமேற் கோட்டுஞாய
மன்னவ னக்பாரென்னு மாண்டகு மறிவுசான்ருே
னின்னவா ருநவண்ண லியல்களை யியம்பலுற்ருன், (௧௨௮௦)

மாணுற வெண்ணியெண்ணி மந்திரச் சபையைமேனு
ளேணுறத் திருத்தஞ்செய்த வினையகா ரணத்தினுலே
காணுற யார்க்கும்பார்க்குங் கவுஞ்சின்மண் டபத்தின்முன்னுய்த்
தோணுற வுருவைநாட்டின் ஞாபகந் தோன்றுமென்றும், (௧௨௮௧)

இன்னமும் புகலுங்காலை யேந்தலி னுருவைக்காட்ட
நன்னய மாகநாட்டும் ஞாபக சின்னந்தானே
சொன்னல மாகக்கற்கத் தொழில்களை நடத்தவின்னு
முன்னவே நின்றயாவு மூக்குதற் கானசின்னம், (௧௨௮௨)

மன்னிய கோட்டுமன்னர் மாண்பெறு முத்தியோகர்
துன்னிய வறிவின்மேலோர் தோற்றிவந் திருப்பதெல்லாம்
பன்னிய மகிமைக்கன்று பகருங்காற் குரிசில்செய்த
வுன்னிய விந்தநாட்டி னூழியங் கருதியன்ருே, (௧௨௮௩)

பெரியவர் சிறியரென்னும் பேதங்கள் கருதாதெண்ணு
மரியவ னிந்தநாட்டை யாளுறு மவர்கள்கண்ணைத்
தெரியவே திறக்கச்செய்து தேசத்தோர்க் கதிகாரத்தை
யுரியமே லுத்தியோகத் துயர்வொடு கொடுக்கச்செய்தோன், (௧௨௮௪)

பின்னுற வருவதெல்லாம் பிறழ்ந்திடா துளத்திலெண்ணி
முன்னுற மொழியுந்தீர்க்க தரிசியாம் முதன்மையுள்ளோன்
றன்னுறு மறிவினுலுஞ் சார்ந்தவல் லமைகளாலு
முன்னுறின் மனுக்கடம்மு ளுயாதாரப் பிறப்புமுள்ளோன், (௧௨௮௫)

எத்தகு மிவனையந்த விலண்டனி லொருகாலத்தின்
மீத்தகு கேம்பிரிச்சின் வித்துவா சிரியர்தம்மை
நாத்தகு துதியுமன்பு நடுக்கமு மொருங்கேதோற்ற
மாத்தகு மாறுகண்ட வண்ணமாய்க் காணப்பெற்றேன், (௧௨௮௬)

தோற்றநான் கண்டபோதிற் சொல்லுமோ ரற்புதந்தா
ஞற்றவு மருமைத்தான பரிசுத்த வாவியொன்று
போற்றுபே ரறிவைவைத்துப் பொதிந்ததோர் பொட்டணத்தைச்
சாற்றவே சுமந்துகொண்ட தலையொடு நின்றதொத்த, (கஉஅஎ)

ஆசறு மந்தரங்க வமைச்சனு யமரந்தனூன்றின்
மாசறு வினுக்களாக மனுநெறி வினவவின்னே
னேசறு விடைகள்காணு னெண்ணுமங் கிரியேயாகப்
பேசறு பேற்றிறற்குப் பெருந்தலை வலியெடுத்த, (கஉஅஅ)

சார்தரு வயதின்கண்ணே தங்கினே னல்லனின்னே
னேர்தரு தொழில்கண்மீதே யிருந்தவ னுகுங்கண்டீ
ரோர்தரு மாணவர்க்கே யொழுக்கங்கள் காட்டற்காகச்
சீர்தரு சிலையையிங்கே சின்னமாய் நாட்டப்பெற்ற, (கஉஅகூ)

விண்ணவர் தமக்குநல்ல விருந்தனு யிலங்கைமன்னு
மண்ணறன் றவத்தால்வந்தோ னருஞ்செயற் குரியமைந்தன்
வண்ணமா மமைச்சினுக்கா மதிமகா தேவனென்போன்
றிண்ணமாய்த் தாதைசெய்கை செய்வனென் றிதுவுஞ்சொற்றான்,
(கஉகூ0)

ஏனுறு மூவர்தாமு மின்னவா றுகப்பேச
மாணுறு மாந்தர்யாரு மலர்களைச் சாத்திச்சாத்திப்
பேணுறு மேந்தலார்தம் பெரும்புகழ் கூறிக்கூறிக்
காணுறு முருவைநித்தங் கண்டுகண் களிப்பதானார், (கஉகூக)

சாற்றருங் கலைக்குத்தாதை தனிக்கலா சாலைத்தாதை
யாற்றரு மறத்தின்றாதை யரசியற் றிருத்தத்தாதை
கோற்றருந் தொழிற்குத்தாதை குடிப்பெருஞ் சபைக்குத்தாதை
யேற்றருணு சலந்தானீழ நாட்டினுக்குந் தாதை. (கஉகூஉ)

## ஒழிபு நலம்.

உற்றவிரு மைந்தரினு முயர்வுடைய வொருமகனைச்
சொற்றபடி தருகவென்றே தொன்னுட்பொன் னம்பலவே
ளற்றமறச் சென்றுசென்றே யரியபல தலம்பணிந்து
பெற்றவரந் தவறுமற் பிறந்தமக னிக்குரிசில், (கஉகூ௩)



வருங்கலைகள் கற்றவற்றின் வாய்ந்ததன்மே லிங்குநின்று
மிருங்கலைகள் கற்றிடுவா னிங்கிலந்திற் கேம்பிரிச்சி
லருங்கலைக ளாய்ந்தாய்ந்தே யைந்தாண்டி னுள்ளாகப்
பெருங்கலையார் நான்குசித்தி பெற்றுவந்தோ னிக்குரிசில்.
(கஉகூச)

ஊடாமற் குடிகளுட னுண்மைகளைக் கண்டுகண்டே
கோடாமல் வழக்கொழிக்குங் குலநீதி பதியுமன்றி
நீடாமற் றெரிந்திடுவா னேர்நியாய துரந்தரக
டேடாமற் சிவில்லோவுஞ் செய்துவைத்தோ னிக்குரிசில், (கஉகூ௫)

பொருத்தமுற வாராய்ந்து பொய்யாக வரைவதனை
யருத்தமுற நாள்களெண்ணி யங்கடுக்கி வைப்பதனை
வருத்தமுற நன்காயா மதிப்புடைய செனறலுமாய்த்
திருத்தமுறச் சாதனங்கள் செய்துவைத்தோ னிக்குரிசில்,
(கஉகூசு)

தந்துமுறை நாட்டிவருஞ் சட்டசபை யிரண்டினுக்கும்
வந்துமுறை யெடுத்துரைக்கும் மந்திரிக ளொருபுறமாய்
நொந்துமுறை தானெனவே நுவலுறுவா னரசியற்கு
முந்துமுறை நிறுவிவரும் முதலமைச்சு மிக்குரிசில், (கஉகூஎ)

கந்தரங்க முலவாழிக் கரைபுடைசூ ழிலங்கைதனைச்
சுந்தரங்க ளமைத்தாளுஞ் சோர்விலதி பதிதனக்குத்
தந்தரங்க ஞன்கினுடன் றனித்துணையாம் ராசாங்க
வந்தரங்க மந்திரியு மானவனு மிக்குரிசில், (கஉகூஅ)

அந்தமக லனுதைகளுக் காதார சங்கமின்னுஞ்
சுந்தரநற் சுகாதாரந் தோட்டமெங்குந் திருத்தவகை
விந்தையுள விதாலயங்கள் மேலுமுள பற்பலவாஞ்
சந்தமுறத் தகுமறங் கடந்தவனு மிக்குரிசில், (கஉகூகூ)

இட்டமுறக் குடிகளுக்கே யேற்றநனி யாகுமென்று
நட்டவுரு முன்புநின்றே நல்லிலங்கை வேந்துரைத்த
சட்டமதே யாமொழியாற் சாற்றிடுகிற் றுன்முனங்கை
தொட்டதொரு சுயவரசைத் துலங்கவைத்தோ னிக்குரிசில்,
(க௩00)

கோமுறைக ணேரிலங்கைக் குலவுகுடிப் பெருஞ்சபையொன்
றாமுறையா னுக்கியதி னரசியலிற் றிருத்தவகை
தாமுறையிற் செய்தவற்றைத் தந்துமுதன் மந்திரிக்கு
நாமுறையாற் றிறம்பாம னாட்டிவைத்தோ னிக்குரிசில், (௧௩0௧)

அந்நாளிற் றிருத்திவைத்த வரசியலின் றிருத்தமுற்றும்
பின்னாளி னமைத்திடுவான் பேசியவண் முடிபுசெய்த
தொன்னாளிற் சொற்படியே தொடுகடல்சூ ழிலங்கையர
சிந்நாளி னடத்துமதை யியற்றிவைத்தோ னிக்குரிசில், (௧௩0௨)

தென்பாலிற் கபிலைதனைத் திருக்கேதீச் சுரத்தைமுன்னா
ளன்பாகச் சைவருக்கே யாக்கியதுங் கதிர்காம
முன்போலப் பூசைவகை முற்றிடவே செய்ததுவு
மென்பேச சமயபத்திக் கிலக்கமிலா னிக்குரிசில், (௧௩0௩)

தீரமிலா தாங்கிலர்க்கே சேவைகளும் வேதனமு
மீரமிலா தேற்றிடுவா னெண்ணுதலுந் தமிழருக்குஞ்
சோரமிலா தின்னுமின்னுஞ் சொல்லுமுவர் தமைப்போல
வோரமிலா துயர்த்திவைத்த வுத்தமனு மிக்குரிசில், (௧௩0௪)

கூட்டமுடன் வைத்துவைத்துக் குடிகளுடன் பலவருட
மாட்டமுட னித்தேச வதிபதிகள் பலபோக்குச்
சாட்டவுட னெதிர்மறுத்துஞ் சர்வகலா சாலையொன்றை
நாட்டமுட னிலங்கையிலே நாட்டிவைத்தோ னிக்குரிசில், (௧௩0௫)

கற்கவருங் கல்வியுடன் கைத்தொழில்கள் பெருக்கியதுஞ்
சற்சமய நெறியினுடன் றண்டமிழை வளர்த்ததுவுந்
தற்கமுட னனியுயர்ச்சி தமிழருக்குத் தந்ததுவுஞ்
சொற்கருதாச் சொற்கருதிச் சொற்காக்கு மிக்குரிசில், (௧௩0௬)

கற்றகலை தேர்ந்தோயற் கல்லூரி யடைத்திடவே
யுற்றபொழு ததுமறுத்தே யுறநிறுவி வைத்தவனும்
செற்றதமிழ் தமிழருக்குஞ் சிங்களமே சிங்களர்க்கும்
பெற்றமுறை கற்கவைத்த பெரியவனு மிக்குரிசில், (௧௩0௭)



பவஞான மானவற்றிற் பாவுபற்றோர் சிறிதுமின்றி
நவஞான மென்றிவற்றை நாடாமற் கற்றகலைத்
தவஞான வித்தாகித் தானதிலே பழுத்துவந்த
சிவஞான யோகமதிற் சித்திபெற்றோ னிக்குரிசில், (௧௩0௮)

சாத்திரங்க ளாய்வதற்கே சங்கமொன்றை யமைத்ததிலே
நேத்திரம்போற் றானமர்ந்தே நிருமலனா ருருவுகளைத்
தோத்திரங்கள் செயுமுறையைச் சொன்னபல சமயவுண்மைப்
பாத்திரங்க ளானவற்றைப் பகர்ந்துவந்தோ னிக்குரிசில், (௧௩0௯)

கூறிவருங் காலமதிற் கொங்கிறசுச் சங்கமுந்தான்
றேறிவரும் படியமைத்தே தெளிவாக நாட்டினரை
வீறிவரும் கைத்தொழில்கள் வித்தைகளா லுயர்வுடைத்தென்
றாறிவரு முளத்தை யந்நாளுக்கிவந்தோ னிக்குரிசில், (௧௩௧0)

அந்நாளி னுங்காங்கே யருண்டருண்டு வந்துவந்து
பின்னாளி னந்தவட விந்தியருட் பெருகிவந்த
விந்நாளிற் காந்தியைப்போ லிவ்வீழ தேயமிசைத்
தொன்னாளிற் சுயவரசைத் தொடக்கிவந்தோ னிக்குரிசில், (௧௩௧௧)

ஆங்கிலர்கள் சின்னாளி னவ்வூர்க்குச் செல்வாரவர்
பாங்கியலும் பயிற்சிகளும் பாழாகுமென் றுரைத்தே
யோங்கிலங்கை வாசிகளுக் குயர்வேலைத் தலங்கடொறு
மீங்கியலுஞ் சேவைகளி லிருக்கவைத்தோ னிக்குரிசில், (௧௩௧௨)

நாவலர்க்கு நாட்டவர்க்கும் நகரவர்க்குஞ் சேவைகளி
னாவலர்க்கு மமைச்சினர்க்கு மனுதைகட்கு மறிவுமிக்க
பாவலர்க்கும் பற்றலர்க்கும் பற்றினர்க்கும் பார்புரக்குங்
காவலர்க்கு மற்றெவர்க்குங் கண்போல்வா னிக்குரிசில், (௧௩௧௩)

ஊராக வாங்காங்கே யுறநெருங்கித் தனிவளத்தா
லோராக நாடுகளுக் கேற்றபிர மாணவகை
நேராக நுனித்துணர்ந்தே நிலவளங்கள் சாலிலங்கை
சீராக ராச்சியத்தைத் திருத்தினவ னிக்குரிசில், (௧௩௧௪)

பாரறிவாற் பன்னிவரும் பனுவலறி வாற்பலருஞ்
சீரறிவாற் பெரியனென்றே செப்பிடுவா னிலங்கையா
சாரறிவாற் றிருத்திமுன மாசறத்தான் கற்றகலைப்
பேரறிவாற் பெரும்பயனைப் பெற்றவனு மிக்குரிசில், (௧௯௧௫)

என்னலங்க ளிங்கிவர்க்கென் றெண்ணியெண்ணி யெந்நாளும்
பன்னலங்க ளானமுற்றும் பாங்குபெற வெடுத்தெடுத்துச்
சொன்னலங்க ளென்றெவருந் துதிகூற வூரவர்க்கே
தன்னலங்கள் கருதாமற் றந்தவனு மிக்குரிசில், (௧௯௧௬)

கூடுபுக ழத்தனையுங் கொண்டுதித்தோ னென்றிடுகிற்
பாடுபுகழ் வேண்டுவதோ பட்டமென்றும் வேண்டுவதோ
தேடுபுகழ் தேசதொண்டைச் செயக்காணுந் திருநாடு
நாடுபுகழ் நிலைபெறவே நாட்டவுற்றோ னிக்குரிசில், (௧௯௧௭)

மாதலங்கள் பணிந்துபெறும் வரப்பேற்றிற் பிறந்திடலான்
மீதலமேற் சிவஞானம் விஞ்சிவரும் பான்மையினால்
காதலதி னுருயிர்மேற் கருணைமிகும் பான்மையினால்
பூதலத்தி லவதார புருடனுமா மிக்குரிசில், (௧௯௧௮)

செஞ்சாலி வளர்பழனத் திருநாட்டி ரிந்நாட்டி
னஞ்சாதி யெனப்பிரிக்கும் நடுவிலிகள் போலாதே
யெஞ்சாமல் யாவரையு மிலங்கியபே ரறிவிதுவோ
தஞ்சாதி தமின்மதிக்குந் தன்மையின னிக்குரிசில், (௧௯௧௯)

சாதிகளி னனிதாழ்ந்த சாதியெனுடிச் சாதியிது
வீதிகளின் மிகவொதுங்கும் வேளையது கண்டிரங்கி
மீதிவரை யெடுத்தெடுத்தே வேலைகளுந் தாவமைத்துத்
தீதிகழ்த வெனவுயர்த்தித் திகழவைத்தோ னிக்குரிசில், (௧௯௨0)

அங்கிலர்க ளரசியற்ற வடுத்திடுமா ரம்பமவர்
தங்களுட னோரமைச்சாய்க் கறுத்தவரிற் றமமைக்க
சங்கமதின் வருங்குமார சாமிமுத லடியாக
வுங்கமைச்சர் குடிக்கேழா மமைச்சானே னொருதோன்றல்,
(௧௯௨௧)

தோற்றமைச்சர் குடிப்பிறந்தோன் றுரைத்தனத்தோர் பரம்பரை
யோ, னேற்றமைச்சி னியல்களுளோ னிடித்துரைக்கு மாற்றலு
ளோன், வேற்றமைச்சர் வெறுத்தலிலோன் வீணுரைகள் பகர்த
லிலோன், தேற்றமைச்ச னுமெனவே செப்பவருந் தேசசுளோன்,
(௧௯௨௨)

விந்தைபெறுங் கேம்பிரிச் சின்மேலுயர்ந்த சித்திபெற்றோன்
முந்தையுள தன்குலத்தோர் முதன்மைமுற்றுந் தான்பெறுவோன்
சிந்தைகளி சிறந்தமகா தேவனெனு மிம்மகனைத்
தந்தையரிற் சாலுமெனத் தான்பயந்தோ னிக்குரிசில், (௧௯௨௩)

எந்நாட்டி னிவன்போல்வா ரிருந்தாரென் றெடுத்திசைக்க
விந்நாட்டிற் கிணையினியிங் கில்லையென்ன விலங்கையென்னுந்
தன்னாட்டிற் றிருத்தமெலாந் தான்றிருத்தி யறம்பெருக்கிக்
கன்னாட்டிப் புகழ்நாட்டுங் கதிப்புடையோ னிக்குரிசில், (௧௯௨௪)

முன்னமள காதிபனு முடிவிலரக் காதிபனும்
பின்னரசன் விசையனுமே பெரிதாண்ட விலங்கையிலே
சொன்னவரு ணாசலமுந் தோற்றியுற்றா னென்றியம்பு
மின்னவன் றன்றிறமுழுது மியம்பமுடி பாகுமதோ, (௧௯௨௫)

---

## பிரித்தானிய முதன் மந்திரி பொன்கிழார்க்கு வருதல்.

---

பொன்றி டாத புகழுடம் பென்றைக்கு
நின்றி டாவிங் கிலங்க நிறுத்திய
துன்றி டாச்சீர்த் துரையரு ணாசலக்
குன்றி டாச்ச ரிதங்களைக் கூறினேன், (௧௯௨௬)

இந்தி ரத்தனி மாளிகை யென்னலாஞ்
சுந்த ரத்திற் றுலங்கிய பொன்கிழா
ரிந்த மாளிகைக் கிப்பிரித் தானிய
மந்தி ரத்தவன் வந்தது கூறுவேன், (௧௯௨௭)





தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

வேறு.

வருபெரும் பிரிவேயான வளாகத்தை வேறுவேறே
தருபெரும் பாகமாகத் தனித்தனி யாள்வரேனும்
பொருபெரும் படைகள் செல்வம் பொருள்வருவழிகடம்மா
லொருபெரும் பிரிவே யாகுமுயர் பிரித்தானியாவே, (௩௨௮)

இப்பரும் பிரிவை யாள்வோனியற்று நல்லறங்களுள்ளோன்
றப்பரு நீதியுள்ளோன் றாணிபரிறைகள் கொள்வோ
னொப்பரு முயிர்கண்மீதே யோங்கிய கருணையுள்ளோன்
செப்பரு மணிகளாலே திகழ்முடிபுனைந்த வேந்தன், (௩௨௯)

இப்பிரித் தானியாவுக் கிலங்கிய சிரமேயாகி
யொப்பிலா வினைய வேந்துக்கொருவலக் கண்ணேபோன்று
தப்பிலா வமைச்சினர்க்குட் டலைமை மந்திரியேயாக
விப்பெரு மரசைத்தோண்மே லேந்தியே நடத்துந்தீரன், (௩௩0)

திண்ணிய படையான் வல்லசேர்மனி திறல்கொள்வெம்போர்
பண்ணிய வனையபோதிற் பாங்குடன் களத்திற்சென்றே
நண்ணிய சமரைமாற்றி நற்சமாதானஞ் செய்யா
வெண்ணிய வரசன் மார்க்கத் தெதிர்கொளவந்தசீலன், (௩௩௧)

துலங்கு மிமமைச்சர் கோமான் சொல்லிய விலங்கைகாண்பான்
வலங்கிளர் மனைவியோடு மகளொடு மமைச்சனோடுஞ்
சலங்கிளர் கலமொன்றூர்ந்தே தனக்கிணையின்றிக் காட்சி
யிலங்கிய கொளும்பி னோர்நாளெய்தியே சாகைசேர்ந்தான், (௩௩௨)

வந்த மந்திரியைச் சாகைவள மலியிலங்கைவேந்து
முந்த நன்னகரத்துள்ள வுயருடை யெவரும்நாளும்
முந்த நல்லுறவுபூண்டு முறைமுறை யளவளாவ
சிந்தையிலு வந்தமைச்சன் சிலதின மங்கணுற்றான், (௩௩௩)

உற்றுறை யமைச்சர்கோமா னோங்கிய விங்கிலந்திற்
பெற்றநன் னண்பேயாகப் பேசருணா சலத்தின்
பற்றுள தேவியாரைப் பார்ப்பது கருதியோர்நாட்
பொற்றிரு மகள்விலாசப் பொன்கிழார் மனைக்குவந்தான், (௩௩௪)



மேவி யிந்நாளிற் பாளிமேந்தினி னமைச்சேயாகத்
தாவிய மகளுமற்றைத் தனது மந்திரியினோடுந்
தேவியுந் தானுமாக தெய்விக மனையைநோக்கி
யேவிய மனத்த னெய்த வேற்றவணமரவைத்தார், (௩௩௫)

அன்னனன்னடையுஞ் செய்யவ யிலைநேர் விழியும்நேரில்
கன்னலின் மொழியும்பெற்று கவினாமக ளென்றேத்துஞ்
சொர்னமா னோடுமன்பார் துணைவன் றன்சீர்கள்கூறி
யுன்னரு முகமனோடு முவந்துரை யாடியுற்றார், (௩௩௬)

மன்னுமா தேவன் மற்றை மாண்புளராமநாத
னென்னு மிங்கிருவரோடு மினிய வாசகங்கள்பேசி
முன்னு மத்தாதை செய்தமுறைகளுஞ் செப்பிப்பின்ன
ரன்ன நல்லமுதம்போலுஞ் சிற்றுணா வருந்தல்செய்தார், (௩௩௭)

கூறியவாறேயாக குலவு கொண்டாட்டஞ் செய்யா
வேறிய மதிவல்லோனு மேனையோர் தாமுங்கூட
வூறிய வன்பினோடு முவர் வழிவிடவேயேகி
வீறிய சாகையின்கண் மேவியங் கமர்வதானார், (௩௩௮)

வேறு.

இன்ன பான்மையி லிங்கி லந்தினின்
மன்னு மந்திரி வந்த வாறிது
சொன்ன நந் துரை தொடங்குமூழிய
முன்ன லாவதோ வுரைக்கற் பாலதோ, (௩௩௯)

அரிந்த மன்முத லவனிகாத்த போற்
பரிந்த சிந்தையன் பகரு மிங்கிவன்
புரிந்த வீழத்துப் போது மூழியந்
தெரிந்த மட்டுநான் செப்பினே னிவண், (௩௪0)

கற்ற கல்வியிற் கதித்த நீதியி
லுற்ற தேசந லூழியத் தினிற்
பெற்ற சீர்கொளும் பெரியர் தங்கனைச்
சொற்ற நூல்களா லறிஞர் சொல்வரால், (௩௪௧)

வேறு.

சொற்றமேற் பாவின்மேலுஞ் சொல்லவே வருவோரான
மற்றவர் கவியின்மேலும் வழுக்கள்வா ராமற்போமோ
வெற்றென மொழிதுமேனு மீசற்குங் கீரன்சொற்றான்
குற்றமே நாடுமந்தக் குணங்களை விடுதனன்றே. (௯௪௨)

கலையினிற் றிருவிலன்பிற் கதிப்பினி லமைச்சினீதி
நிலையினி னறத்தில்வாழ்வி னிலைபெறப் பெயரைநாட்டிச்
சிலையினி னின்றவிந்தச் சீரியபெரியார் தம்மைத்
தலையினா யகமாய் நூல்கள் சாற்றினர் கலைஞர்மேனாள், (௯௪௩)

வேணவே வேண்டுமட்டு மேதினிப் போகமெல்லா
மாணவே யமையப்பெற்று நரேந்திரராகி மண்ணிற்
பேணவே வாழ்ந்த நேர்மைப்பெற்றியோர் தமக்குயாருங்
காணவே யறிஞர் மேனாட்காவிய மமைத்துவைத்தார், (௯௪௪)

சொற்றத னீழநாட்டுத் தொண்டுகளாற்றி யாற்றிப்
பெற்றதன் காலமுற்றும் பெட்புடன் கழித்ததோன்ற
லுற்றமற் றனைதைகட்கே யுதவருணா சலத்தி
னற்றமில் சரிதமென்றே யறிஞர்க ளுவந்துகொள்வார், (௯௪௫)

நன்மழை வழாதுபெய்க நளிர்வளஞ் சுரந்துமல்க
தன்மமுந் தவமுமோங்க தாணிமே லுயிர்களுய்க
மன்மனக் கோனோர் செல்க மறையவர்வேள்விசெய்க
பொன்மகள் வதியுஞ்செல்வப் பொன்கிழார் வாழ்கவாழ்க. (௯௪௬)

முற்றுப்பெற்றது.

# ஸ்ரீ அருணாசல மான்மியம்

## அரும்பத விளக்கம்.

| பக்கம் எண். | செய்யுள் எண். | வரி | |
|---|---|---|---|
| 1 | 1 | 1 | ஆரணம்-வேதம். பொருள்-பிரணவம் |
| ,, | ,, | 3 | நாற்பொருள்-அறம் பொருளின்பம் வீடு |
| ,, | ,, | 4 | காரணம்-மூலம் |
| ,, | 5 | 4 | பாலராட்டு-சிறுவர் விளையாட்டு |
| 2 | 8 | 3 | கரேந்திரன்-ஐராவதம். இந்திரனும் ஐராவத யானையும் இம்மண்ணுலகில் கடம்பவனமென்னும் மதுரையின்கண்வந்து தலமியற்றித்தம்பவமொழித்து மீளவும் விண்ணுலகை யடைந்தனரென்க. (திருவிளையாடற் புராணம்) இன்னும், விண்ணுலகவாசியரும் பாதலவாசியரும், தத்தம் உலகில் நேரிட்ட பாவங்களை மத்தியவுலகாகிய மண்ணுலகின்கண் வந்து தவம்பூசை முதலியவற்றைச் செய்து பவங்களை யொழித்து மீளவும் தம்முலகினை யடைவரென்க. (கந்தபுராணம், சிவஞானசித்தியார்) இவற்றால் மண்ணுலகு விசேடமுடைத்தென்க. |
| 3 | 12 | 2 | தாணி மண்டலம்-சூரிய மண்டலம் |
| ,, | ,, | 1 | மகேந்திரக் கடலென்றது தென்சமுத்திரத்தையேயாம்; சூரபன்மடைய மகேந்திரமென்னும் நகரமிருந்தமையின் மகேந்திரக் கடலெனப்பட்டது. (வடமொழி மகாபுராணம், காந்தம், சுப்பிரமணிய பராக்கிரமம், இலங்கை மாந்மியம்.) |
| ,, | 13 | 4 | முதல்வன்-விநாயகக் கடவுள் |
| 3 | ,, | 1 | கோடு-மலைக்குச்சிகரம், விநாயகக் கடவுளுக்குக் கொம்பு. |
| ,, | ,, | 2 | கதுப்பு-மலைக்குப்பக்கம். விநாயகக் கடவுளுக்குக் கன்னம். நீர்-மலைக்கு அருவி. விநாயகக் கடவுளுக்கு மதம். |
| ,, | ,, | 3 | பூதவேடக்கணம்-மலைக்குப்பெரிய வேடர் கூட்டம். விநாயகக் கடவுளுக்கு-கண்டிகை வேடத்தையுடைய பூதகணம் மலைக்கும் விநாயகக் கடவுளுக்கும் இவ்வாறு சிலேடைப்பொருள் கொள்க. |

| பக்கம் எண். | செய்யுள் எண். | வரி. | |
|---|---|---|---|
| 3 | 13 | 3 | அரக்கமாதாகிய குவேனியின் ஆணும் பெண்ணுமாகிய பிள்ளைகளிருவரும் இம்மலைச்சாரலில் இருந்து தாங்கள் கூடிப்பெற்ற பிள்ளைகளின் சந்ததியே இலங்கை வேடரெனப்படுவர். |
| 3 | 14 | 2 | ஆர்-ஆத்தி. புல்-சிவனுக்கு அறுகம்புல். கண்கள் மூன்று-சிவனுக்குச் சோமசூரியாக்கினி. மலைக்குச் சந்திரர் சூரியர் படிதலாலும் அக்கினிதோன்றுதலாலும் கண்ணாயின. |
| ,, | 15 | 1 | பொன்மகள்-சீதை |
| ,, | 17 | 1 | இம்மலையைப் புத்தர், சமனுசலம், ஸ்ரீ பாதம், என்றும் சைவர் சிவனொளிபாதம், கந்தமாதநம் என்றும் மகமதியரும் விவிலியரும், ஆதாம்மலை யென்றும் வழங்குவரென்க. |
| 4 | 18 | 1 | காயம்-ஆகாயம் |
| ,, | 21 | 1 | வேதண்டம்-மலை |
| ,, | 23 | 4 | வாரி-வருவாய் |
| ,, | 24 | 1 | கண்-கருணை |
| 5 | 25 | 1 | மதமலை-யானை |
| ,, | ,, | 2 | குவடு-மலை |
| ,, | ,, | 4 | குவலயம்-பூமி |
| ,, | 27 | 1 | கோத்திரம்-மலை |
| ,, | ,, | 2 | உபலம்-திரண்டகல் |
| , | ,, | 3 | விடவி-விருக்ஷம் |
| ,, | 28 | 1 | சுரம்-பாலை |
| ,, | 30 | 4 | பொன்-பிரகஸ்பதியுமாம் |
| 6 | 31 | 3 | விதியருளீழதேயம்-விதிபோல் உதவுகின்ற ஈழதேயம் |
| ,, | 32 | | இராவணன் தாயான கைகசி நாடோறும் அரிசி மாவாற்செய்த ஆயிரம் லிங்கங்களைப் பூசித்து இந்நதியிலிடுவளென்க. (திரிகோணசலபுராணம், இலங்கை மான்மியம்) |
| ,, | | 4 | தவ-உரிச்சொல் |
| ,, | 34 | 2 | கோணைக்கயிலை-திரிகோணசலம் |
| ,, | 35 | 4 | புளினம்-வெண்மணல் |



| பக்கம் எண். | செய்யுள் எண். | வரி. | |
|---|---|---|---|
| 7 | 38 | 2 | சீரினுயர் தமிழூர்கள்-சற்சமய வொழுக்கத்தையும் இனிமையுடைதெனப் பொருள்படும் தமிழையும் உடைமையால் சீரினுயர் தமிழூர் எனப்பட்டது. |
| 7 | 39 | 3 | நால் மருதம்-விசாலமாகிய மருதநிலம் |
| ,, | 40 | | தென்னுட்டின் கண்ணுள்ள மகாவலிகங்கை கழனி கங்கை யென்னும் இரு கங்கைகளின் கிளை நதிகளே உத்தரநாட்டுக்குச் செல்லுமென்றறிக. |
| ,, | 42 | 3 | பொங்கழி-தூற்றுதநெல் |
| 7 | 44 | 4 | அன்-சோறு |
| 8 | 45 | 3 | ஆசினி-ஈரப்பலா |
| ,, | 46 | 4 | தொழுவம்-மாட்டுப்பட்டி |
| ,, | 51 | 2 | சுட்ட என்னும் அடை உண்டியை விசேடித்தது. |
| 9 | 52 | 1 | நாயன்மார்-திருஞான சமபந்த மூர்த்திநாயனுர், திருநாவுக்கரசுநாயனுர் அருணகிரிநாதரால் திருப்புகழ் பாடப்பெற்ற தலமாகலின் கதிர்காமமும் பாடல்பெற்ற தலமாயிற்றென்க. |
| ,, | 53 | 2 | குணத்தைக் குணிமேலேற்றித் "தீயை நேர் சீதை" எனப்பட்டது. திரிசடை-இவள் விபூஷணன் மகள் |
| ,, | ,, | 3 | அசோகக்கா-அசோகமரச்சோலை. அசோகம் சோகத்தைத் தீர்ப்பது. |
| , | 54 | | உலகபுருடனுக்குச் சிதம்பரம் சுழுமுநாநாடியும் இமயாசலம் பிங்கலைநாடியும் ஈழநாடு இடைநாடியுமாகுமென்றறிக. (திருமூலமந்திரம், பெரிய புராணம்) |
| ,, | 55 | 1 | வேழம்-யானை |
| ,, | ,, | 2 | வீழ-விரும்ப. மாமணி-மாணிக்கம். சங்கமென்றது இடம்புரி வலம்புரிகளை. ஒன்றோ-இது மாத்திரமோ. |
| ,, | ,, | 3 | சொல்-சோறு. யானையும் செம்மணியும் வலம்புரியும் சிப்பிமுத்தமும் இலங்கையில் விசேடமுடைத்தென்க. பண்டைக்காலத்தில் சோழநாட்டுக்கு ஈழநாடும் உணவுகொடுத்தது. (சிலப்பதிகாரம்) |
| ,, | 56 | 1 | பொறிமகள்-இலக்குமி |

| பக்கம் எண். | செய்யுள் எண். | வரி. | |
|---|---|---|---|
| 9 | 56 | 4 | கோ-அரசன் |
| 9 | 57 | | கொளும்புநகர்க்கு நாடும் காடும் கடலும் நதியும் அரணங்களாம். |
| 10 | 59 | 1 | சொன்ன-இந்நூலுக்குக் கவிநாயகமாகச் சொன்ன ஆங்கிலர்களது அரசியலின் ஆரம்பகாலத்திலே, அவரால் தெரிந்தெடுக்கப்பட்டு ஆலோசனைச் சங்கத்து அமைச்சனுயிருந்து, அரசியற் றிருத்தங்களையும், நாடுநகர்த்திருத்தங்களையும் செய்தவர், இந்தச் ஸ்ரீ அருணுசலமவர்களின் பாட்டனுகிய ஸ்ரீ குமாரசுவாமியாகவின் இவர் காலத்தில் கொளும்புநகர் அதிதிருத்தமடைந்த தென்றறிக. |
| ,, | 60 | | இவன் வழித்தோன்றங்கள்-இந்தச் ஸ்ரீ குமாரசுவாமி முதலியாரின் ஏககுமாரனுகிய சேர் முத்துக்குமாரசுவாமியும், பௌத்திரராகிய ஸ்ரீ பொன்: குமாரசுவாமி முதலியாரும், சேர்: பொன். இராமநாதனும், சேர்: பொன். அருணுசலமுமேயாம். |
| ,, | 61 | 1 | கணிகள்-அளவை நூலோர் |
| ,, | 62 | 3 | தோற்றிடல் இலாத-வாதத்தில் தோல்வியடையாத |
| ,, | 63 | 1 | பொருநர்கள்-போர்வீரர்கள். வெரிக்கொடுத்தல் முதுகு கொடுத்தல். படைகள்-பீரங்கிகள் |
| ,, | 64 | 4 | புகைத்தேர்-புகைவண்டி |
| 11 | 65 | 2 | பேசினர் கொடுக்குந்தானம்-மின்சார நிலையம் |
| ,, | ,, | 4 | தபால் நிலையம் |
| ,, | 66 | 1 | சூழ்ச்சித்துணைவர்-மந்திரிமார் |
| ,, | ,, | 2 | அமைச்சின் மேலோர்-அற்றேணிச் செனறல், சொலிவிற்றச் செனறல் |
| ,, | ,, | 3 | தன்மதிச் செனறல்மார்-றிவிஸ்றர் செனறல் முதலியோர் |
| ,, | ,, | 4 | நியாயமன்னர்-நீதிபதிகள் |
| ,, | 67 | 4 | பொன்கிழார்-ஸ்ரீ அருணுசலமவர்களது மனை பொன்கிழார்-பொன்வைக்கும் குதிர். கிழார்-குதிர் கூடை. |
| ,, | 68 | 1 | சொல்-நெல் |



| பக்கம் எண். | செய்யுள் எண். | வரி. | |
|---|---|---|---|
| 11 | 68 | 4 | மண்டபமான மாடம்மண்—தபம்—ஆன—மாடம் இம்மாடங்களெல்லாம் பூமிதேவி செய்த தபம்போலும் மாடங்கள். |
| 11 | 69 | 3 | குத்திரம்-வஞ்சனை |
| ,, | 70 | 3 | அரமியம்-நிலாமுற்றம் |
| ,, | 71 | 1 | திணைகள் ஐந்தாவன-குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் |
| ,, | ,, | 4 | உதரம்-வயிறு |
| 12 | 72 | 4 | நூதனங்கொள்சாலை-காட்சிச்சாலை |
| ,, | 73 | 4 | வத்திரம்-முகம் |
| ,, | 74 | 4 | மாலை-வரிசை |
| ,, | 76 | 4 | அவதி-அளவு |
| 13 | 83 | 3 | தென்னிலங்கை-பிறிதினியைபு நீக்காதவிசேடணம் வேறிலங்கையின்மையின். |
| 14 | 86 | 1 | இலங்குகடம்படியிருக்கும் வள்ளல் – சோமசுந்தரக்கடவுள். பலம்கைக்கும் அவர்-உலக பலன்களை வெறுத்தவர். இலங்கைக்கு வடக்கிருக்கும் யாழ்ப்பாணமெனவும், பாண்டியோ டிணைந்திருக்கும் யாழ்ப்பாணமெனவும் தனித்தனிகூட்டி முடிக்க. |
| 14 | 87 | | செந்தமிழை வரம்புகண்ட நாவலரும் புலவரும் வசிக்கும்நாடும் இந்த வடநாடாகிய யாழ்ப்பாணமேயாம் |
| ,, | 88 | | சோழம் பாண்டிசேரம் தொண்டை யென்னும் நான்கனேடு ஈழமுஞ்சேர்ந்து மண்டலமைந்தாகுமென்க. |
| 16 | 105 | 3 | மாராணி-மகாராணி. (Queen Victoria) |
| 17 | 108 | 4 | முகமாலை யாழ்ப்பாணத்தின் கீழ்ப்பாகத்துள்ள ஓரூர். இந்தியாவிலிருந்து வந்த உயர்தர வேளாளர்களிருக்கு மூர்களுளொன்று. |
| 18 | 118 | 3 | புரத்தவிர்மணிநேரன்ன பூராணி-தனது மேனியின்கணுள்ள ரத்தினம் போலப்பிரகாசிக்கும் அன்ன பூராணி. புரம்-மேனி. |
| ,, | 119 | 1 | பத்தினி-தெய்வக் கற்புடையவள். ஒழுக்கம் போலவே பெயரு மமையப்பெற்றமையின் "நாமமும் சொர்னம்" என உம்மை கொடுக்கப்பட்டது. |

| பக்கம் எண். | செய்யுள் எண். | வரி. | |
|---|---|---|---|
| 19 | 125 | 3 | ஏற்றிய உத்தியோகம்-உப வசன்று (Office Assistant) |
| 20 | 127 | 2 | மாதுலன்-தாயோடுடன் பிறந்தவன் |
| ,, | 128 | – | நித்தியமும் வாலையை வழிபட்டு வருபவர். வாலையென்னுஞ் சத்தியின் றிருவருளாலேயே மூவேந்தர்போலும் மூன்று தனயரை இவர் பெற்றாரென்றறிக. |
| ,, | 129 | – | இதுவே கொச்சிக்கடைச் சிவாலயம். தன் பெயரைக்கொண்ட லிங்கம் பொன்னம்பலவாணேசுரர். |
| ,, | 130 | – | உய்யானம்-பூந்தோட்டம் |
| ,, | 132 | | யாழ்ப்பாணத்தவரைத் தகனம் செய்தற் பொருட்டுக் கொட்டாஞ்சேனையில் மயானத்தை யமைப்பித்து வைத்தவர் இந்த ஸ்ரீ பொன்னம்பல முதலியாரே. |
| 21 | 133 | – | நித்திய கடன்களிற் றவறுங் குற்றங்கள் தீர்த்தற்பொருட்டுச் செய்வதே சவக்கிரியை. |
| | | | மறைக்காடு-வேதாரணியம் |
| 21 | 134 | 4 | மலையெனுங் குணத்தன்-மலையென்று சொல்லத்தகுங் குணத்தையுடையவன். இது பண்புவமை. |
| ,, | 135 | | ராச குமாரர்களைத் தரல்வேண்டுமென்று பிரார்த்தித்து ராமேச்சுரருக்கோர் பொற்றம்பத்தைத் தானஞ்செய்தவர். |
| 22 | 140 | 4 | வத்திரம்-முகம் |
| ,, | 141 | 2 | தோதகம்-வஞ்சனை |
| ,, | 145 | 1 | கொச்சைமக்கள்-அசற் புத்திரர். இவர்களைப் பெறுவதாற் பயனில்லை யென்பதை "கொச்சை மக்களைப் பெறுதலினக்குடி யெச்சமற் றேமாந்திருக்கை நன்றே" என்னும் குலசேகரன் மாலையாலும், பெறுபேறாக வுள்ளது அறிவறிந்த மக்களைப் பெறுதலே யாகும். இதனை, "பெறு மவற்றுள் யாமறிவதில்லை யறிவறிந்த மக்கட் பேறல்ல பிற" என்னும் திருக்குறளானும் உணரத்தக்கதேயாம் |



| பக்கம் எண். | செய்யுள் எண். | வரி | |
|---|---|---|---|
| 23 | 146 | 1 | புத்திரரால் இருமையின்பத்தையும் பெறலாமென்பதை "மகவின் முகமன்னுபார்வை யெய்தா தொழியிற் பெறுமின்ப மிவணுமில்லை" என்னும் பாரதச் செய்யுளானும், "புத்திரரென்னுஞ் சொற்குப் பொருணிலை யயர்த்தி போலாம்" என்னும் கந்தப் புராணச் செய்யுளானுமுணர்க. |
| 23 | 147 | | முன்னைய மகார்களிருவரினும், கல்வியறிவினும் ஒழுக்கத்தினும், தர்மத்தினும், உயர்ந்த மகனைப் பெறுவான் வேண்டி யருந்தவங்களைச்செய்து வந்தாரென்க. |
| 24 | 153 | 4 | சத்திநிபாதம்-திருவருளின் செலுத்துகை. |
| ,, | 154 | 2 | பாலவாயமுதபிள்ளை-திருஞான சம்பந்தமூர்த்திநாயனார். |
| ,, | ,, | 3 | திருமுது குன்று-விருத்தாசலம் |
| ,, | 157 | 2 | செவ்விய வரமுன்பெற்ற தேவன் என்றது, ராமநாதசுவாமியை |
| ,, | 158 | 1 | வாலுகம்-வெண்மணல். சீதாதேவி வெண் மனலாற் பிடித்த லிங்கமே ராமலிங்கம் (சேது புராணம்) |
| 26 | 169 | 3 | காவற்கடவுள்-திருமால் |
| ,, | 170 | | புத்திரன் பிறந்தவுடன் தந்தை யுத்ரதிசையிற்சென்று நீராடி தானதருமங்கள் செய்துவந்து பிரசவமனையுட் பிரவேசித்து பாலகன் முகத்தைத் தரிசிக்கவேண்டுமென்பது ஆகமக் கொள்கை. |
| ,, | 171 | | தலத்தின் பெயரென்றது திருவருணைப்பதியாகிய அருணாசலத்தை, தொல் குலப் பெயர் என்றது பாட்டனும் அருணாசல மாகலின் |
| ,, | 173 | | தம்மக்கள் மழலைச் சொற்கள் குழலையும் யாழையும் வெறுக்கச் செய்யுமென்க. (திருக்குறள்) |
| 27 | 176 | 4 | கலைகளை யாக்கமென்று கற்றல், செல்வத்தினும் கல்வியை வேண்டிக்கற்றல். |
| ,, | 179 | 2 | அரச கல்லூரி-றோயல் கல்லூரி (Royal College) |
| 28 | 185 | 3 | போக்-றோயல் கல்லூரித்தலைமை ஆசிரியன். |
| ,, | 186 | 2 | மண்ணிய மணி மாசு தீரத்துடைத்த மணி. |
| | | 2 | துலங்கு கோட்டரசன்-சுப்பிறீங் கோட்டு ராசரடயஸ். |

| பக்கம் எண். | செய்யுள் எண். | வரி. | |
|---|---|---|---|
| 29 | 188 | 3 | சேர் முத்துக்குமாரசாமி இவர் தம் மாதுலன் |
| ,, | 191 | 1 | அகவை-வயது |
| ,, | 193 | 4 | சிறப்புச்செய்தல் இங்கே ஆசீர்வதித்துக் கைகொடுத்தல். |
| 30 | 199 | 2 | உவா-பௌர்ணிமை |
| ,, | ,, | 3 | திவா-பகல். பகல்-சூரியன் |
| ,, | ,, | | கேம்பிரிச் கலாசாலை மாணவர் பூரணசந்திரனாகவும் இவர் தாம் சூரியனாகவும் இருந்து கற்றுவந்தாரென்க. |
| 31 | 200 | 3 | தாங்கிய குணனருணாசலம்-பொறுமையான குணத்தையுடைய அருணாசலம். |
| ,, | 205 | 1 | எண்.கணிதம். எழுத்து-இலக்கணம், இஃதிரண்டும் கல்லாதார்க்கு முகத்திலுள்ளது கண்களன்று இரண்டு புண்களேயாம் (திருக்குறள்) |
| ,, | 206 | | ஸ்ரீ அருணாசலம் பாஷையிலும் கணிதநூல்களிலும் மாட்சிமையுடையராயின் மற்றைய சாஸ்திரங்களிலே வல்லவரென்பதைச் சொல்லவேண்டுவதென்னை. |
| 32 | 207 | | கேம்பிரிச்சுத்தலைமை யாசிரியனாகிய "பீல்" என்பவன் மற்றைய மாணவரினும் கல்வி விசேடத்தால் ஸ்ரீ அருணாசலமவர்களை வியந்து கொண்டானென்பதாம். |
| 33 | 215 | | கேம்பிரிச்சிலே-பீ. ஏ., எம். ஏ. என்னும் இரண்டு பட்டங்களைப் பெற்றார். |
| ,, | 216 | 1 | அனுமானம்-இஃதோரளவை. புகையுண்டேற்றீயுண்டென்று நிச்சயிப்பது. |
| ,, | ,, | 3 | மனுநூல்-ஸ்மிருதி. |
| ,, | 217 | | லண்டனில் சிவில்சேர்விஸ் பாரிஸ்டர் பாஸ்பண்ணி இளம்வயதிலே நான்கு பட்டங்களோடுவந்தார். |
| ,, | 226 | 4 | விநோதன்-பொழுது போக்குடையவன் |



| பக்கம் எண். | செய்யுள் எண். | வரி. | |
|---|---|---|---|
| 34 | 227 | 4 | சக்கரவர்த்திக்கு முடிதரிக்கு மத்துணைச் சிறப்பமைந்த ஆட்பிஷப் இவர் தம் முன்னிலையில் சமயவுண்மையை யறியாது சித்தாந்த சைவத்தை நிந்தித்தன ரென்க. |
| 35 | 228 | | 237வது செய்யுள் வரைக்கும், நீவிரும் நிந்தித்துக் கூறியும் செய்வதுமப்பெற்றியே யெனக்காட்டி, பரமதகண்டனமும் சுயமத தாபனமுஞ் செய்தமையை முறையே காண்க. |
| 36 | 240 | | ஆங்கிலம் முதல் இற்றலி யிறுதியாகப் பத்துப் பாஷைகளில் வல்லவர். |
| 37 | 242 | 1 | கோவை-திருக்கோவையார். |
| 38 | 248 | 1 | குதூகலம்-பெருமகிழ்ச்சி. |
| ,, | 249 | 4 | தேத்திருந்த-தேயந்திருந்த. |
| ,, | 252 | 2 | சேணிலங்க நமசிவாய முதலி-உயர்ந்த புகழ் விளங்கப்பெற்ற நமசிவாய முதலி. |
| 39 | 254 | 1 | சந்திரனேர்-சத்திரம்-தவள சத்திரம்: வெண் கொற்றக்குடை. |
| ,, | ,, | | ஸ்ரீ குமாரசுவாமி, ஸ்ரீ ராமநாதன், ஸ்ரீ அருணாசலம் இந்த மூவருமே ஒருகாலத்திற் சட்ட நிரூபண சபையிலிருந்தனர். |
| ,, | 257 | 2 | இமம்-பனி. |
| 40 | 258 | | தன்னுடைய பெயரை உலகமறியச்செய்த மக்கட்பேற்றைப்பெற்ற பொன்னம்பலமுதலி. |
| ,, | 261 | 4 | மஞ்சு-மேகம் |
| 41 | 264 | 4 | வரைந்துகொண்டார்-நியமித்துக்கொண்டார் |
| ,, | 265 | 4 | மங்கலவோலை-மணவோலை |
| ,, | 268 | 1 | பித்திகை-சுவர் |
| 42 | 270 | 2 | பத்தி-வரிசை |
| ,, | 273 | 3 | மா-குதிரை |
| ,, | 274 | 3 | யாவையு மடக்கிக்காட்டு கண்ணாடி-நிலைக்கண்ணாடி |
| 43 | 277 | 4 | வேட்டல்-மணஞ்செய்தல் |
| ,, | 278 | 1 | இந்திர திசை-கீழ்த்திசை |

| பக்கம் எண். | செய்யுள் எண். | வரி | |
|---|---|---|---|
| 43 | 278 | 4 | சோபிதம்-பிரகாசம் |
| ,, | 279 | 4 | அணவுற-பொருந்த. சிலை-கருங்கல் |
| ,, | 281 | | சிவபெருமானுக்கு வலக்கண்-சோதிடம் |
| 44 | 285 | 3 | நந்தலிவாசனம்-குறைவில்லாத ஆசனம் |
| ,, | 289 | 1 | கடிகை-நாளிகை 3 பணமகிழ்முதலி-செல்வத்தாற் களிப்புறுகின்ற முதலி |
| ,, | 290 | | 1 சாமன்-மன்மதன் தம்பி (சீவகசிந்தாமணி) 2 பூமன்-சிவன், 3 தாமன்-சூரியன், 4 காமன்-மன்மதன் "பொற்புருவெடுத்து நின்ற காமன்" என்றமையின் இவ்பொருளுவமை யென்க. அருணாசலச் சீர்க்காமன் என்றது ரூபகம் ஆகவே இச்செய்யுள் சங்கீரணமென்னு மலங்காரம் |
| 45 | 292 | 3 | இருளைச்சீக்க—இருளைக்கெடுக்க, நவமணியாரஞ் சாத்தி நவசத்தின மிழைத்துச்செய்த பெரும் பதக்கத்தைத் தரித்து |
| ,, | 293 | | ஆடவரும் பெண்மையை நச்சும் பேரழகமைய மணக்கோலஞ் செய்தனரென்க |
| ,, | 295 | 2 | சிங்கல்-குறைதல் |
| ,, | 296 | 1 | தொங்கல்-மாலை. 3 கொங்கு-வாசனை |
| 46 | 298 | 3 | வணமகளீர்-இடைக்குறை விகாரம்: கோலஞ்செய்யும் பெண்கள். 4 குணமகட்கு-மடம் முதலிய நாற்குணங்களையுமே யணிகலமாகவுடைய மகளுக்கு |
| ,, | 299 | | மடம் முதலிய குணங்களுன்குமே தனக்கணியென்றணிந்த இந்தப் பொற்கொடியாளுக்கு, அணியாகாத வளிகளை யணியாகுமெனக் கைபுனைந்து கவின் செய்யக்கருதிய திவாதறியாமை யென்பது போதா "எண்ணம் பேதைமை யென்னலாம்" என்றதென்க. |
| ,, | 300 | | இயற்கை யழகைத் தன்னுடன் கொண்டு தோன்றிய இந்த மயிற் சாயலாளுக்கு, கைபுனைந்தியற்றுங் கவின்பெறு வனப்பாகிய செயற்கை யழகையுஞ் செய்து அவையின்கட் சேர்த்துவாராயின், தணிந்து கொண்டிருக்குந் தீயின்கண் ணெய்யைச் சொரிந்தா லொத்துக்கருத்தழிந்து காளையருள்ளீடு கெட்டுத் தமதுயிரையுந் துறப்பரென்பது போதா "காளையரிழப்பராவி என்றதென்க. |



| பக்கம் எண். | செய் யுள் எண். | வரி. | |
|---|---|---|---|
| 46 | 301 | 3 | குணமேன் வெற்பினின் மாதை எனக் கண்ணளித்து, குணத்தினுக்கு மலை போன்ற மாதை எனப் பொருள் கொள்க. மேல்-உருபு மயக்கம். வெற்பினின் கண் 'இன்' உவம உருபு. |
| | | 4 | அற்பு-அன்பு. இந்த மாதை யன்பினுற் கோலஞ்செய்வான்றுணிந்தன்றி இவர் செய்யுங் கோலத்தாலிம்மாது பயன் பெற்றிலனென்பது கருத்து. |
| ,, | 302 | 3 | ஏலம்-மயிர்ச்சாந்து. திமர்தல்-தடவுதல், பூசுதல். |
| ,, | 303 | 1 | முத்தினுலும் வயிரத்தாலும் என்றமையின், சிவப்புப் பச்சையாதிய வேறுநிற ரத்தினுபரணங்களை யணிந்திலரென்பது பெறப்படும். |
| | 304 | | மேனி பொன்னெக்குமென்னின், முகம் செந்தாமரைப் பூவையொக்கு மென்னின், இடைமின்னலை யொக்குமென்னின், தோழ்மூங்கிலை யொக்குமென்னின், தனக்கொப்பவரில்லாத இந்த மாது தானணிந்த வாபரணங்களேதும் பயன்பெருமல் தமக்கும் மாதையே யணியாகப் பெற்றனவென்பது கருத்து. |
| 47 | 305 | 3 | வெள்மணி-முத்தும் வயிரமும். வெண்ணிறவணிகளாலே நாமகள் போலச் செய்தாரென்க. |
| ,, | 306 | 3 | ஆணிப்பொன்-மச்சப்பொன். |
| ,, | 307 | 2 | நங்கை மகடுக்களுட் சிறந்தவள். |
| ,, | 308 | 2 | அவையினை யஞ்சலும்-அவைச்சஞ்சுதலும். "அச்சக்கிளவிக்கைந்துமிரண்டும் எச்சமிலவே பொருள் வயினுன" (தொல்காப்பிய சொல்லதிகாரம்.) |
| ,, | 309 | 4 | நூபரம்-பாதசிலம்பு. |
| ,, | 310 | 3 | கன்னலின்றிய காமன். இல்பொருளுவமை (அபூதம்) |
| 47 | 312 | | ஸ்ரீ பொன்னம்பல முதலியாரும் ஸ்ரீ நமசிவாய முதலியாரும் மணவறையின்கண் மணக்கோலத்துடன் வீற்றிருந்த தவமகனையும் தவமகளையும் பார்த்து எங்கள் சென்மாந்திரத்தவப்பயனுகுமென்று களித்துப் பாராட்டினரென்பதாம். |
| ,, | 317 | 4 | முல்லைக்குங் கற்பென்னும் பெயருண்மையின் முல்லை மாலையைச் சூட்டுதல் கற்பைக்காட்டுதற்கிலக்கணமென்க |

| பக்கம் எண். | செய்யுள் எண்ள் | வரி. | |
|---|---|---|---|
| 47 | 318 | | ஆடவர்க்குங் கற்புடைமையின் நாயகியு மம்மாலையைச் சூட்டினனென்க. |
| 94 | 320 | 1 | பாவம்-சாபம். |
| ,, | 321 | 1 | கல்லென நெடுநாள்நின்ற-கல்லைப்போலஅசைவின்றி நெடுங்காலம் நின்ற. |
| ,, | 322 | 1 | அரிசனம்-மஞ்சல் நீவிய பச்சரிசி |
| | | 1 | நிம்பம்-வேப்பம்வித்து |
| 50 | 328 | 1 | தூரியம்-வாத்தியம் |
| ,, | 329 | 3 | மேதாவியன்-அறிஞ |
| ,, | 332 | 1 | கோடு-யானைக்கோடு |
| 51 | 337 | 1 | கலாபம்-தோகை |
| ,, | ,, | 2 | நல்ஆபத்து: விநாரவருத்தம் |
| ,, | ,, | 3 | சலாபம்-ஒரூர் |
| ,, | ,, | 4 | இலாபம்-ஆதாயம் |
| ,, | 338 | 4 | வியாதன் அருச்சித்தமையின் அதுவே காரணமாக வமைந்த முனீசுவரன். |
| 52 | 344 | 2 | எரி-நஞ்சு. ஆகுபெயர் |
| 53 | 347 | 2 | நாவாய்-தோணி |
| 54 | 352 | 1 | கழுத்துறைக்கு வேலாயுதபுரமென்றும் ஒரு நாமமுண்டு. |
| ,, | 353 | 2 | நிகரம்-கூட்டம் |
| 55 | 361 | 1 | தலைநகர்-கொளும்பு |
| 56 | 362 | 1 | வன்னியர்-ஒருயர்ந்த சாதியார் |
| ,, | 366 | 2 | அத்திநகர்-குருநாக்கல் |
| ,, | ,, | 3 | இலாங்கலி-தென்னை |
| ,, | 367 | 1 | மண்டலத்துத்துரை-Disrict Judge. மண்டலம் இங்கே மாகாணத்தைக் குறிக்கும் |
| 57 | 368 | 1 | செகம் வெறுத்தோன்—உலகத்தை வெறுத்தவன் அருளபரானந்தகுரு — ஸ்ரீ அருணாசலமவர்களின் ஞானயோக தேசிகர். |



| பக்கம் எண் | செய்யுள் எண் | வரி. | |
|---|---|---|---|
| ,, | 369 | 1 | காப் பென்றர்-இவனோராங்கிலேயன். ஸ்ரீ அருணாசலமவர்களின் நண்பனுமாம் |
| ,, | 371 | | இவன் அருளபரானந்த தேசிகரிடத்து ஞானநூல்களைக் கற்கையில் இருவருக்கும் மத்தியில் ஸ்ரீ அருணாசலமவர்கள் துவிபாஷகராக விருந்தனரென்றறிக. |
| ,, | 372 | 4 | வேட்கை-அவா |
| 58 | 374 | 3 | கைதை-தாழை இது மின்னலைக்கண்டலவருவது. |
| ,, | 377 | 2 | அரசர்பலர்க் கேற்ற முளபதவி பெற்றோன்-கவுணர் ஜெனரல் (Governor General) இவன் தனது மாளிகைக்குத்தக்கோர் களையளைத்து ஓர் கொண்டாட்டம் வைத்தனனென்க. |
| ,, | 378 | | தையலருமவணமர்ந்தார்-இலக்கமான மாதர்களும் அக்கொண்டாட்டத்திற்கு. அழைக்கப்பட்டிருந்தனர் |
| 58 | 379 | | பெண்களைக் கைகோத்து அணைத்து மேனாட்டு வழக்கப்படி மதிப்பு செய்தல்போல, மதிப்புச்செய்யு மாறுகோலியணைக்கும் வண்ணம் கைகொண்டுவருகையில் சொர்னமாதொதுங் குற்று நின்றனரென்பதாம். (Under-arm) |
| 59 | 380 | | வேந்தநிபன், கவுணச்ஜெனறல் இவன்றனது மனைவிமக்களுடனொருங்கிருத்தி, இவரதுகுலத்துயர்வையும் வளர்ப்புயர்வையுமொழுக்க மேகண்கூடாகக்காட்டியதென்று வியந்துகூறிக் களிப்புற்றனரென்பதாம். |
| ,, | 383 | 4 | நைசா-நிசா மென்பதன்மரூஉ-இவன் அசரபாத்தரசனின் மந்திரி. |
| 60 | 388 | 1 | சேய்-பாவன்-தாய்-மாதா-தாயுமானவரின் தாய்க்குத்தாயாக வந்தவர். சேயும் விருத்தனுங் குமாரனுமாக வந்தமையும் தாய்க்குத்தாயாக வந்தமையும் முறையே திருவிளையாடற் புராணம் தாயுமானவர் சரித்திரமென்றிவற்றிற் காண்க. |
| ,, | 392 | | புள்-சடாயு-இருக்கு-முதல் வேதம். வேள்-குமாரக் கடவுள். மூவரும் பூசித்ததலம் வயித்தீசுரன் கோவில். |
| ,, | 393 | | மீனாட்சி-பார்வையால் முட்டையைக்குஞ்சாகச் செய்யும்மீனினது கண்போலும்கண்ணையுடையவம்மை. (ஒளிவிலொடுக்கம்) |

| பக்கம் எண். | செய்யுள் எண் | வரி. | |
|---|---|---|---|
| 61 | 395 | | இந்த மூன்றுந் தக்ஷணகைலாயங்களேயாம்-(செவ்வந்திபுராணம்.) |
| ,, | 396 | | இராவணன்றாய்-கைகசி. |
| ,, | 399 | | வந்து-வாயு. |
| 64 | 414 | 4 | சிறந்து மன்னும்-சிறப்புற்று நிலைபெறும். |
| ,, | 415 | | அக்கினியை யவியச்செய்தது சந்திரமதி, பொழுது விடியாமற் செய்தது நளாயனி. |
| ,, | 417 | | தலம்-மனை-இச்செய்யுள் சொற்பொருட்பின் வருநிலையென்னு மலங்காரம். |
| ,, ,, | 418 | | விண்ணினர்க்காக அந்தலக் குமியைப் படைத்துமண்ணினர்க்காக சொர்னமென்னு மிந்தலக்குமியைப் படைத்தானென்பதாம். கண்ணிமைத்தல் கால்நிலத்திற்படுதல் மலர்வாடுதல் மானுடப்பெண்களுக்கென்க. "பாயும் விடையரன்றில்லை யன்னாள் படைக்கண்ணிமைக்குந், தோயும் நிலத்தடி தாமலர்வாடும்" னானறிக, (திருக்கோவையார்) |
| ,, | 4 9 | 1 | கலையைத்தேசு கூறிடும் எனக்கூட்டுக. |
| | | 2 | கண்கூடு-பிரத்தியக்ஷம். |
| 65 | 420 | 1<br>1<br>2 | கண்வாவிப்புறம்பு செல்லா-கண்கள் தாவி நெறிகடந்து செல்லாத. பிறரும், "காசலம்பு முலையவர் கண்ணெனும், பூசலம்பு நெறியிற் புறஞ்செலாக், கோசலம்" என்பர். (இராமாயணம்) |
| ,, | 421 | | மன்-கணவன், தன்னைக் கணவனைச் சொல்லைக் காத்தலை, "தற்காத்துத் தற்கொண்டாற்பேணி தகைசான்ற, சொற்காத்துச் சோர்விலாள் பெண்" என்பதனாலறிக. (திருக்குறள்) 3-வேண்டா-விரும்பி. "அம்ம" என்பதை வேண்டா எனத்திருத்துக. |
| | 422 | | கணவனுக்குச் செய்யும் பணிகளை "அன்னை தயையுமடியாள் பணிவிடையும்" என்பதனானறிக. |
| | 424 | | கூறிய லக்கணங்களுக் கிலக்கான கணவனில்லையேல வற்றாற் பயனின்மையாலும் இல்லறஞ் சடைபோகாமையாலும் தவமிலார்க்குக் கிடையாமையாலும், "இன்னவன் கணவனான திந்தமான்றவமேயன்றோ" எனவிதந்து கூறியதென்க. |
| | 426 | 4 | இந்து-சந்திரன், சந்திரனையுவமை கூறியது தட்ப |



| பக்கம் எண். | செய்யுள் எண். | வரி. | |
|---|---|---|---|
| | | | மாகமனை யறஞ்செய்தலாலென்க. |
| 66 | 428 | 1 | 1-அறவர்-துறவிகள்-4-மாது-அழகு. |
| ,, | 429 | 4 | இருகையுள்ள கற்பகம் என்றது இல்பொருளுவமை. |
| ,, | 431 | 3 | கண்ணோட்டம்-கருணை. |
| ,, | 432 | 1 | அளை-புற்று-2-அளை-தயிர், 3-களை-செல்வம். "வயன் மாதரேங்க, தயிர் கடையுமோதை புலிமுழக்கங் காட்டும்" என்றமையின் மருதமும் முல்லையும் மயங்கிய திணைமயக்குமேயாம். |
| ,, | 433 | 4 | "இம்மை தன்னினும்" என்ற எச்சவும்மையால் மறுமையையும் பெறப்படும். |
| 67 | 434 | 1 | மாணவினை-இட்டி திவசம் முதலியன. 2-இருள்-நரகம் 3-அளித்தவர்-தந்தைதாயர். |
| ,, | ,, | 4 | தந்தை தாயர்க்குப் புத்திரரே பொருளாகவுளரென்பதை. "தம்பொருளென்ப தம்மக்கள்" என்பதனானறிக. (திருக்குறள்) புத்-நரகம். திரர்காப்பவர் |
| ,, | 436 | | இலங்கைக்குத்தான் தொண்டு செய்து வருதல்போல் தந்தேயத்துக்கூழியஞ் செய்யத்தக்க மக்கட்பேற்றைப் பெறும் புண்ணியப் பேற்றையுடையவரென்பது போதர, "மக்கட்சிறப்பையும் பின்னிலங்கை பெறுந் தவம் பெற்றனள்" என்றதென்க. |
| ,, | 437 | | மக்கட்பேற்றினுள்ளும் அறிவறிந்த மக்களைப் பெறுதலேயரிய பேறென்பதாம். "பெறுமவற்றுள் யாமறிவதில்லை" (திருக்குறள்) |
| ,, | 438 | | 438ம் செய்யுடொடங்கி 442ம் செய்யுள் வரைக்குந் தந்தையாரின் நன்மக்களைப் பயத்தற்கான காட்சி நலங்கள் கூறப்பெற்றன. |
| 68 | 443 | 1 | நம்பி நங்கையென்பன முறையே ஆடு மகடுக்களைச் சிறப்பிக்கும் பெயர்கள் "நாடிய நம்பியோடு நங்கை யென்றிரண்டாண் பெண்ணைத், தேடியகவிகளெல்லாஞ் சிறப்பிக்குநாமமாமே" (சூடாமணி நிகண்டு) |
| | 446 | 3 | பவம்-பிறப்பு |
| ,, | | | சேட்டன்-தலைமகன் |
| ,, | | | வார்-கச்சு |
| 69 | 450 | 2 | உழை-யாழ், 4- இளையவள் இலக்குமி |

| பக்கம் எண் | செய்யுள் எண். | வரி. | |
|---|---|---|---|
| ,, | 453 | 1 | ஈ-இலக்குமி, 2, பூ-பூமி, 3-மகாதேவனீந்த-மகாதேவன் கொடுத்த. பூமகாதே-வன்பூமியின் கண்ணதான ஒரு இந்திரனுமாம். |
| 70 | 456 | 3 | காதன்-தொண்டன்-1-கடியவன் இராவணன். |
| 71 | 462 | 4 | தொய்யில் தொயிலென இடைக்குறைந்தது. தொய்யில்-மூலைக்கோலம், தோழ்க்கோலம். |
| ,, | 467 | 4 | பத்திர நிவேசகர்-சாதனச் செனறல் |
| 72 | 468 | | ஸ்ரீ அருணாசலம் சாதனச் செனறலென்ற வளவிலே இலங்கையிலுள்ள சாதனம் வரைபவர்களெல்லாம் படஞ் சுருக்கிய வரவம்போல கெடுதி சம்பவிக்குமென்று கருதியச்சமெய்தின ரென்பதாம். சொற்பொருட்பின் வருநிலையென்னு மலங்காரம். |
| ,, | 473 | | இலங்கை முழுவதிலுமிருக்கும் சாதனமெழுதுமவர்களிற் சிலர், இன்ன மாதமென்று மின்னதேதியென்று மறியாத சமயத்திலே வருவாரென்பர். சிலர், அவர் மாசறக் கற்றவராக வின்யார்க்கு மஞ்சவேமாட்டாரென்பர், சிலர், முகம் பாராமற் குற்றத்து கேற்பத்தண்டிப்பா ரென்பர், சிலர், இனி வஞ்சனையில்லாமல் நேர்மையாகவே சாதனங்களெழுதவேண்டு மென்பரென்பதாம். |
| 73 | 476 | | ஏழைகள் வருந்திச் சம்பாதிக்க பணத்தைக் கையில்ருப்பிற் செலவாகுமென்று நிலங்களை வாங்கிவிட அந்நிலங்களுக்கு வஞ்சனைச் சாதனங்களையெழுதி வல்லோர்கள் வஞ்சித்து வருதலை யிவர்தாமுணர்ந்து சாதனங்களிற் கரவுவாராதவண்ணம் இன்றைக்குங் காவல் செய்து வைத்தனரொன்பதாம். |
| ,, | 477 | | ஒன்றுபே லொன்பது மாகாணங்களிலுங் காத்திராமற் போய்ப் போய் சாதனமாலுகடோறும் புகுந்து புகுந்து சாதனங்களைச் சோதித்து பிழைகளைக் கண்டு கண்டு குறித்துக் கொண்டு தலைநகர்க்கு வந்து வரைபவரின் வேலைகளை நிறுத்தி விடுவரென்பதாம். |
| ,, | 478 | | இலங்கை யரசியலுக்கிசையுமாறு திருத்தங்களைச் செய்து தமதுத்தியோகத்தின் றிறமையைக் காட்டியும், சாதனங்களின் பிழைகளைக் கண்டு கண்டு மிகவுந் திருத்தங்களைச் செய்தும் ஸ்ரீ அருணாசலந் தமது பெயரை நிறுத்தி யிட்டாரென்பதாம். |



| பக்கம் எண். | செய்யுள் எண். | வரி. | |
|---|---|---|---|
| 74 | 481 | | முற்பிற்றி கதிகளை மாற்றாதவண்ணம் மூன்றுநாள்களுக்கிடையில் சாதனங்களைக் கொப்பி பதிவு செய்யு மாறும் சட்டமமைத்துக் கெடுதி நேரிடாத பொருட்டு, அரசினரோடு சேர்ந்துநின்று தமதூருக்கு இன்றியமையாத நன்மையைச் செய்து வைத்தனரென்பதாம். |
| ,, | 482 | | இதுவுமன்றி, வருத்தமுற்றுச் சம்பாதித்தவர்களின் பெரும் பொருள் களவு போகாத வண்ணம் வஞ்சியாமற் சாதனமெழுதும்படியான ஒழுங்குகளை மேலுஞ் செய்து வைத்தனரென்பதாம் இச்செய்யுள் மேலைச்செய்யுளையே வற்புறுத்தியது. |
| ,, | 483 | | தான் சாதனைச் செனறலாக நியமிக்கப்பெற்று வந்த காலத்திலே, தேசம் நானாவகைத் தாயசீர்களைப் பெறும்படிக்கும், தனக்குப்பின்பு வருஞ்செனறன்மாரும் சாதனங்களின் நேர்மைகளையறிந்து தத்தஞ் சேவைகளிற் சிறப்படைந்து வரும்படிக்குந் திருத்தங்களை யிலகுவாக விளங்கக்காட்டிய தன் வழியே நடாத்தும்படிக்கும் செய்து தமது பெயரை யெங்கும் விளங்க நிறுத்திவந்த பெருந்தகையாளரும்-இந்த ஸ்ரீ அருணாசலமேயாம். |
| ,, | 484 | | அமெரிக்க இராச்சியத்தலைவர் இலங்கையரசினர்க்கு துரை அவர்களின் றிப்போட்டைப்போன்ற வல்லமையும் சுத்தமும் வேறு எந்த ராசாங்கத்திலும் வரவில்லை இவ்வளவு பொறுப்பான வேலையை, சுத்தமாய்ச் செய்தவருக்கு என்னுடைய நன்கு மதிப்பைச் சொல்லுகிறேன் என்று அறிவித்தார். |
| 75 | 486 | | பரதகண்டத்திலே சிவபெருமானுக்கு ஞானாகாசத்தலமாக சுழுமுனா நாடியான சிதம்பரமிருத்தல்போல, இலங்கையிலே கந்தவேளுக்கு இன்பஞானத்தலமாக கதிர்காமமிருக்கின்ற தென்பதாம். கதிர் ஞானம். காமம்-இன்பம்:ஆனந்தம். |
| 75 | 487 | 1 | அசுரகுலத்தரசனாகிய சூரபன்மனைச் சங்காரஞ் செய்து தேவர்களைச் சிறைமீட்கவேண்டி அரிபிரமேந்திராதி வானவர்களோடும் வீரவாகு முதலிய வீரர்களோ |

| பக்கம் எண். | செய்யுள் எண் | வரி | |
|---|---|---|---|
| | | | மும் பூதப்படைகளோடும் திருச்செந்தூரினின்றும் புறப்பட்டுவந்த கந்தவேட் பெருமான், அசுரர்கோன் நகரமான வீரமகேந்திரபுரிக்கு வடபாலாக விளங்குங் கதிர்காமத்திற் பாசறையமைத்ததற்கு ஏமகூடமென்று பெயரிட்டதன்கட்டாம் வீற்றிருந்து, கொடியவனான சூரனைச்சங்காரஞ் செய்து தேவசிறையைமீட்டருளி வீரமகேந்திர நகரையும் வெள்ளீகரித்துமூடிக்கொள்ளுமாறு வருணனிடத்துக்கொடுத்தனரென்றறிக. வீரமகேந்திர புரத்துக்கு எட்டுத்திசைக்கண்ணுமமைத்த காவனகரங்க ளெட்டனுள் வடதிசைக் கண்ணுள்ள நகரமேயிலங்கையாகும், 'ஏமபுர மிலங்கைபுரமெனப் புகலும் புரங்களெட்டும்'' (கந்தப்புராணம்) |
| | | | இத்தலத்ததோரைய மறுத்துக்கூறுதும்! |
| | | | செருத்தணிகை மலைக்குக்கீழ்த்திசையிலே யிரண்டு காததூரத்திலே சிற்றூரொன்றுளதூரும் தினைப்புனங்களும் வள்ளி காத்ததினைப்புனமென்றோர் புனமுங்காணப்படும், இங்கே வசிப்பவர் நம்பிசந்ததியெனவழங்கிவரும்வேடர்களேயாம். |
| | | | குமாரக்கடவுளோர் திருவிளையாடலாக வள்ளிநாயகியாரோடு களவியலை நடாத்திப்பின் கற்பியலாகத் திருமணஞ்செய்ததுமாகிய சிற்றூருமிந்தச் சிற்றூரேயாம். |
| | | | இஃ திங்கனமாக; ஆராய்ச்சியின்றி சிலர் குமாரக்கடவுள் களவியல் கற்பியல்களை நடாத்தியது இந்தத்தலத்திலே தானென்பர்; |
| | | | இத்தலத்துக்கதிசமீபமாகவும் படைவீடுகளாகவுமுள்ள திருச்செந்தூர் திருப்பரங்குன்றம் பழனியென்னுமித்தலங்களை நாடாது திருமணஞ் செய்தவுடன் வள்ளிநாயகியாரையுமுடன் கொண்டு செருத்தணிகாசலத்திற் சென்று வீற்றிருந்தது மிதற்கோர் சான்றேயாமென்றறிக |
| | | | வள்ளிநாயகி புனங்காத்ததும் குமாரக்கடவுள் களவியல் கற்பியல்களைச் செய்தது மித்தலத்தென்பது சாலாது. கதிர்காமம் பாவனையிடம். |
| ,, | 488 | 1 | விண்மணி - சூரியன் விடவி-விருக்ஷம் - அடவி-காடு. |
| | | 2 | மணிப்பெயர்க் கங்கை-மாணிக்ககங்கை |
| | | 3 | நுதற்கண்மணி-முருகக்கடவுள். |



| பக்கம் எண். | செய்யுள் எண். | வரி. | |
|---|---|---|---|
| ,, | | | தற்போதம் ஆன்மஞானம். |
| | | | அநுபூதி ஞானம்-சிவாநு பூதியாகிய ஞானமென விரியும். |
| | | | அநுபூதி-சிவஞானம் |
| 75 | 491 | 1 | அருணகிரிநாதர் கிளிவடிவங்கொண்டு கடலைக்கடந்து இப்பதியின் வந்து சிலகாலந் தவத்தின் மேலிருந்தனர். அக்காலத்தி லறுமுகப்பெருமான்மீது கதிர்காமத்திருப்புகழென்னும் பிரபந்தத்தைப் பாடியருளினர். சுப்பிரமணியதொண்டராகிய இவர் கந்தவேட்பெருமான்மீது நல்லைத்திருப்புகழ்ப் பிரபந்தத்தையும் அந்தநாளிற் பாடியருளினரொன்றறிக. |
| 76 | 493 | 4 | அவ்வாய்தலாற் பூசைநடபெருமற் பலவருடஞ் சென்றனவென்க. |
| 77 | 505 | | இரண்டு கொடிவிளக்குகளை யுபயங்கொடுத்தனவென்க. |
| 78 | 508 | | அடைவிற் சொல்லல்-ஒருங்கு சொல்லல். |
| ,, | 510 | 4 | திருமுகம்-மணவோலை |
| 80 | 521 | | மீன்-அருந்ததி. |
| | 522 | 4 | கயிற்புறம்-பிடர்ப்பக்கம். |
| ,, | 523 | | அணிந்தவணிகளாற் பயனில்லையென்பது போதர ''அவமணியென்ப தோரார்'' எனப்பட்டது. |
| ,, | 525 | | அஞ்சம்-அன்னமென்பதன் றிரிபு. |
| 81 | 528 | | புலையமாதேனும் ஒழுக்கத்தாற்றேவபதங் கிடைக்கப்பெறுதலின், ''சாதியினுயர்வுபெற்ற' என்றதென்க. சாலி-அருந்ததி. |
| ,, | 529 | 1 | சுமங்கலிளாகலின், ''ஆற்றவுஞ் சிறப்புப்பெற்ற எனப்பட்டது. |
| ,, | ,, | 4 | அக்கதம்-அக்ஷதை, ''அறுகுவெள்ளரிசி கூட்டியணிவதக்கதமென்றுமே'' (சூடாமணிநிகண்டு) |
| ,, | 530 | 2 | சடங்கு-கிரியை. |
| 82 | 534 | 1 | கோல்-செங்கோல். |
| ,, | 535 | 1 | பூதேவனென பூமிக்குத்தெய்வமென்று சொல்ல |
| | ,, | 2 | காதேவனுருமென, வாக்குத்தேவனுகு மென்று சொல்ல. |

| பக்கம் எண். | செய்யுள் எண். | வரி. | |
|---|---|---|---|
| | | | மகாதேவன் மாதேவனென்றெது கைநோக்கிநின்றது இதுசொற்பின் வருநிலையென்னு மலங்காரம். |
| ,, | 536 | 1 | கண்ணோட்டன்-இரக்கமுள்ளவன் |
| ,, | | 3 | அறத்தாற்றிற்றவறாமனின் நீட்டுந்தவமுடையவன்-தருமவழியிலே தவறாமல் நீதியின்படிநின்று சம்பாதிக்குந்திரவியத்தையுடைவன். (இவர் முனீஸ்வரச் சிவாலயத்து மதிற்றிருப்பணி செய்ததுமன்றி, நல்லைக்கந்தவேட் பெருமானின் ரதோற்சவம் தீர்த்தோற்சவங்களில் தண்ணீர்ப்பந்தல் வைத்தும் அன்னதானஞ் செய்தும் வருவதுமன்றி திருக்குளத்திருப்பணியையுஞ் செய்தவரென்றறிக. |
| ,, | 537 | 1 | மா இயலும்-இலக்குமியை நிகர்த்த இலக்கணமும். |
| ,, | 539 | 2 | முருந்து-இறகினடிக்குருத்து. |
| | | | (இவர் மானியம்பதியிலே சங்கரப்பிள்ளை இந்துக்கலூரியென வெருக்கல்லூரியையும், சங்கரப்பிள்ளை ரோட்டென ஒரு தெருவையும் தம்பெயராலமைத்து பெயரை நாட்டிவைத்தார்.) |
| ,, | 541 | 1 | தேமாது-தெய்வப்பெண்-3-பூ-பூமிதேவி. மா-இலக்குமி. |
| ,, | 542 | 1 | சத்திரம்-தமபையா முதலியார் சத்திரம், இந்தமுதலியார் மகன் முருகேசு இவர் மகனே தம்பையா. |
| ,, | 543 | | பெண்மையினர் கழகம்-மங்கையர் கழகம். |
| | 546 | 2 | ஒட்பம்-பிரகாசம், 2, பெட்பு-பெருமை, திட்பம் கலங்காமை. |
| ,, | 547 | 1 | அறைத்துறை யினிற்போன்-தரும நெறியினொழுகுவோன், 4, ஏகபுத்திரியாக வினருமை மகனெனப்பட்டது. |
| ,, | 548 | 2 | தவன்-நாயகன் 4 திருமாதொத்தலிற் றிருமாதெனப்பட்டது. |
| ,, | 550 | 2 | அரவிந்தமலா மரிளையாள் செந்தாமரைப் பூவிலிருக்கின்ற இலக்குமி. |
| | 551 | 2 | வள்ளியன்-கொடையாளன்; ஸ்ரீ அருணாசலம். |
| ,, | 554 | 1 | மகா துவட்டபுரம் மாதோட்டமென மரீயிற்றுமாகா துவட்டா-ஓர் கம்மாளவிற்பனன், பெருந்த |



| பக்கம் எண். | செய்யுள் எண். | வரி. | |
|---|---|---|---|
| 85 | 554 | 3 | லைச்சாத்தனாரென்னும் புலவருக்கு குமணன்தலைபோலும் பொய்த்தலையைச் செய்து கொடுத்த மகுடத்தியாகியென்னுங் கம்மாள விற்பன்னனுமிந்தமகாது வட்டாவின் சந்ததியேயாம். |
| ,, | 555 | | இவ்விலிங்கமூர்த்தி ஆதியிலே கேதுவென்னும் கிரகத்தினாற் பூசிக்கப்பட்டமையின் "கேதீச்சுரன்" எனப்பெயர் பெற்றது. |
| | 556 | | சவேரி-ஓர் கத்தோலிக்ககுரு. |
| ,, | 559 | 3 | அமர-விரும்ப. |
| ,, | 560 | 2 | சூரியன் தரிசனஞ் செய்தற்கு வருகையில், பூசனை செய்து கொண்டிருந்த மகாது வட்டாவெழுந்து தனக்குமதிப்புக் கொடாமையைக்கண்டு கோபித்து இந்தலிங்கப்பெருமான் மறைந்திருக்கக் கடவதென்றவனிட்ட சாபத்தினாலே மணலினுண்மேவுண்டு மறைந்திருந்ததென்றுணர்க. நகரத்தவர் இங்கே நாட்டுக்கோட்டையார். |
| 86 | 561 | 1 | தேடுமெனற்பாலது தேண்டுமென வெதுகைநோக்கி ணகரம் விரிந்து நின்றது. |
| ,, | 565 | 2 | வித்துவசிரோமணி யென்றது ஸ்ரீ ஆறுமுகநாவலரின் மருகரும் மாணாக்கருமான பொன்னம்பலபிள்ளையை. |
| ,, | 566 | 1 | சமயத்தின் விரிவு-சமயசாத்திரத்தின் விரிவு-சமயம்-ஆகுபெயர். |
| ,, | 567 | 3 | "மீட்டுமவ்வருணாசலந்துரை தனக்கெடுத்துக்காட்டும்" என்றமையின், நேர்முகமாகவுங் கூறினாரென்பது பெற்றாம். |
| 87 | 568 | 4 | தெரித்தான்-தேசாதிபதி தெரிவித்தான் |
| | 569 | 2 | வேர்க்குறு-மனக்களைப்புறுகின்ற. |
| ,, | 571 | 1 | அருட்குறி-சிவலிங்கம் |
| ,, | 572 | 2 | நாய்கன்-மாநாய்கன். |
| 88 | 576 | | ஸ்ரீ அருணாசலமவர் களாயிரத்துத் தொளாயிரத்தைந்தாமாண்டிலே சட்டநிருபணசபைக்கு மந்திரியாகநியமிக்கப்பட்டு வந்தனரென்பதாம். |
| ,, | 577 | | இவர் தாம் சட்டநிருபணசபைக்கு மந்திரியாக வருகின்றனரென்ற ளவிலேயச்சபைகிளர்ச்சி பெற் |

| பக்கம் எண். | செய்யுள் எண். | வரி. | |
|---|---|---|---|
| | | | திருந்ததென்க. |
| | | 2 | ஒட்டவரும்பொருள்-நாடுகளுக்கும் அரசினுக்கும் பொருத்தமாக வரும்பொருள். |
| 89 | 581 | | ஒவ்வொரு மந்திரிகளுந் தத்தம் பிரிவுக்குமாத்திரங் குறைவுநிறைவுளைப் பேசுவாராகவும், இவர்தாம் இலங்கை முழுதுக்குமுரிய குறைவுநிறைவுகளை சமயந்தெரிந்து பேசும்வல்லமையை யுடையராயிருந்தனரென்பதாம. |
| ,, | 584 | | மந்திரிகளெல்லோரு மோரேமுகமாக மறுத்துநின்றும் இவர்தாமொருவராக வெதிர் மறுத்து நின்று பழையதேசவளமைச் சட்டத்தை நீக்காதவண்ணம் நிலைநாட்டி வைத்தனரென்பதாம். "ஈது" என்னுஞ் சுட்டு பழைய தேசவளமையை நீக்கவேண்டுமென்னும் விஷையத்தைக் குறித்தது. |
| 90 | 587 | 4 | மகுடமாம்புரம்-தலைநகர். |
| ,, | 592 | 3 | கலிஞேங்கிய-மலைகளாலுயர்ந்த - இடைக்குறைவிகாரம். |
| ,, | 593 | 1 | கண்டம் பூமியின் பெரும்பாகம். |
| 91 | 595 | 2 | சலவை மாபிள் கற்களின் விசேடம்.. 4-உலவை-காற்று |
| 93 | 608 | | மன்னர் மன்னன்-சக்கரவர்த்தி சக்கரவர்த்திதன்னாண்மனைப் புலவனுக்கு மானிபமும் அரண்மனைப் பாகத்தில் மாளிகையுங் கொடுத்திருத்தி வைத்தானென்பதாம் |
| ,, | 610 | | அங்கிலத்திலே முதற்புலவனுகச் சக்ரவர்த்தியின் சன்மானம் பெற்ற வவ்வரண்மனைப்புலவ சிரோமணி ஸ்ரீ அருணசலமும் பத்தினியாரு மங்குவந்திருப்பதை யறிந்தபோதே யவர்தஞ்சாகைக்கு வந்தளவளாவியளைத்துக் கொண்டுபோய்ச் சிலவாரங்களுக்கருவிருந்தாகத் தனது மாளிகையிலிருத்திக் கலாவிநோதமான கொண்டாட்டங்கள் செய்து களிப்புற்றனனென்பதாம். |
| ,, | 611 | | அரண்மனையார் விரும்பும் விருந்தினனுகிய புலவசிரோமணிக்கு தாம் விரும்பும் விருந்தினராக விவரிருக்கு நாளில், புலவசிரோன்மணியாலிப் பெற்றியையறிந்த சக்கரவர்த்தியும் மகாராணியாரும், தேவியாருடன் ஸ்ரீ அருணசலத்தை அரண்மனைக்கு |



| பக்கம் எண் | செய்யுள் எண் | வரி | |
|---|---|---|---|
| | | | மனைக்குமாறு கருதினரென்பதாம் |
| | 614 | 3 | இருள் துமித்தல்-இருளைக்கெடுத்தல்-2.மதிக்காந்தம் சந்திரகாந்தம். |
| 94 | 615 | 3 | சிற்பியல்-சிற்பநூலினிலக்கணம். |
| | 617 | 3 | ப-ணிசேஷன். |
| | 618 | | தேவியாரை "மதிபோலவுதித்த" எனஉவமித்தமையின் பிறந்த மரபைத்திருப்பாற் கடலெனவருவித்துரைக்க, "மதிபோல்"என்றவுவமைக்கியையரமனையறத்தைப் பிரபையெனக் கூறப்பட்டது. |
| | | | பிரபை-சந்திரிகை. |
| 94 | 619 | | பூமியிற் பிறந்ததோ ரிலக்குமி யென்பது போதர "அமுதவாரி தாரதவிந்திரையே" என்றும், பெண்களுட்கட்டழகியென்பது போதர" "மடநல்லாருட்டிலகமே" என்றும், இவர் மேனி. மனைக்கு மாணிக்கத்தீபமென்பது போதர "மணிவிளக்கே" என்றும், உடம்பைக் கொண்டுநடத்து முயிர்போல கூர்ந்தமதியினுலும் விஷேடகுணங்களாலும் தம்மைக்கொண்டு நடத்துபவரென்பது போதர "ஆவியே" எனறும் கூறப்பட்டதென்க. அமுதவாரி-பாற்கடல். |
| | | | அமுதவாரி தாரதவிந்திரை யெனறது இல்பொருளுவமை. |
| | | | "மணிவிளக்கல்லன மகளிர்மேனியே" என்பராசிரியர் கம்பரும். |
| 95 | 625 | | ஸ்ரீ அருணசலமுந் தேவியாரு மரண்மனைவாய்தலில் வரக்கண்ட சக்கரவர்த்தியும் ராணியம்மாளும் களிகூரப்பெற்றனரென்பதாம். |
| ,, | 626 | | மகாராணியார் வரவேற்றுச் தேவியாரை யொரு பஞ்சவர்னச்சோபாவின் மீதிருக்கவைத்துத் தானுமொருங்க தன்மீது வீற்றிருந்தளவளாவிக் களிப்புற்றனரென்பதாம். |
| ,, | 628 | | மகாராணியார் பொன்மகுடம் பூண்டபடி தமதுபடமொன்றை யுமதுமனைக்குச் சகலசம்பத்தையுங் கொடுக்குமென்றுசீர்வதித்துச் சொர்னமாதின் கரத்திற்கொடுத்தனரென்பதாம். |

| பக்கம் எண் | செய்யுள் எண். | வரி. | |
|---|---|---|---|
| 97 | 641 | | சாதனச் செனறலாக இருக்கும்போது ஒரு வருடம் கோடிக்கணக்காய்ச் சனங்கள் இறந்தார்கள் அச் சமயம், சுத்த நீர், நல்ல காற்று முதலிய வற்றின் குறைவால் இறப்பு அதிகமென வாதாடி இக்குறை வுகளுக்குரிய திருத்தங்களைச் செய்வித்தார். |
| ,, | 646 | | செல்வத்தா னிரம்பியிருக்கும் பட்டணமுழுதும் நெடுத்தெருக்கள் குறுக்குத்தெருக்க ளெங்கும் தண்ணீர்க்குழாய்கள் வைக்க வேண்டும் அவசிய கருமமான மலசலங்கள் கழிப்பதற்காக வேண்டிய விடங்கடோறு மதற்குரிய குழாய்கள் வைத்தால் நோய்கள் நீங்குமென்று சொல்லி செய்வித்தார். |
| | | | துரால்-பூண்டு-செதுக்கை-குப்பை |
| 99 | 649 | | சேண்-தூரம் |
| ,, | 650 | | |
| 100 | 656 | | கல்வி யெழுமையுமுதவு மென்பதனையும், செல் வத்துட் செல்வமென்பதனையும், "ஒருமைக்கட் டான் கற்ற கல்வி" எனவும், "செல்வத்துட் செல்வம்" எனவும் வருந்திருக்குறள் களானுணர்க |
| ,, | 657 | | அன்னம் உண்டபோதன்றி மீளவும் பசிக்கச் செய்த லானும், கல்வி, கற்றபிறப்பிலன்றி யொழிந்த பிற ப்புகளிலும் சென்றுதவுதலானும் அன்னதானத்தி னும் வித்தியாதானமே விசேடமுடைத்தென்று பாடசாலைகளை ஸ்தாபித்தார், ஆயிரக்கணக்கான பிள்ளைகள் படிப்பில்லாமல் தெருவில் அலைகிறார் கள் என அரசினருக்குக் காட்டி இடத்துக்கிடம் பாடசாலைகள் வைப்பித்தார். |
| ,, | 660 | | பிரசம்-தேன். |
| 102 | 668 | 1 | ஆ- பசு-மேதி-எருமை 2-அளை முளைஞ்சு, பசுகிட்ட வருமளவும் எருமைகள் காத்திருந்து அளையுறங் குங் கல்லகமென்றமையின் மருதமும் முல்லை யுங் குறிஞ்சியும் மயங்கிய வாறுயிற்று. |
| ,, | | 2 | உபநகர்-இரண்டாம் நகர். |
| ,, | 671 | | இலவாழ்வானே ஒழிந்த மூவர்க்கும் பிறர்க்கும் அவ் ரத்த மொழுக்க நெறியின் கணுய்த்தலாதிய வுதவி களைச் செய்தும் மற்றும் வேண்டியவற்றைச் செய் தும் பாதுகாப்பவனுகலின், "இல்வாழ்வானிவர் க்குதவி புரிவதுதான் வழக்கமென் றே' |



| பக்கம் எண். | செய்யுள் எண். | வரி. | |
|---|---|---|---|
| | | | என்றதென்க, இவற்றை, 'இல்வாழ்னென்பானி யல்புடைய மூவர்க்கும்" எனவும, "துறந்தார்க்குந் துவ்வாதவர்க்கும்', எனவம் வரும் திருக்குறள் ளாணுணர்க. |
| ,, | 672 | | சுக்கிரவாரம் சோமவாரங்களினும் விசேடதினங்களி லுமே பூசைநடபெறச் செய்தமையின், "நவிலு நாள்கள்" என்றடைகொடுக்கப்பட்டது. |
| 103 | 674 | 1 | அகழ்ந்து வருந்திருமால்-வராகமாய் நிலத்தைத் தோண்டியதிருமால்-2-காளியின் கணுதித்தபிள்ளை திருஞான சம்பந்தப் பிள்ளையார். |
| ,, | 676 | | தஞ்சை நகரிற்றுனே தமது ஞானகுருவாகிய அருள பரானந்த தேசிகரைச் சமாதியினும் வைத்தவர் ஸ்ரீ அருணசலமேயாம். |
| ,, | 677 | 1 | சொன்ன சொல்லன்-சொற்றவறுதவன் அரசியற்கரு மத்தோடு தேசதொண்டு மாற்றுவதன்றி ஞான யோகத்திலும் வல்லவரென்பதாம். |
| ,, | 678 | 3 | வாசி யேற்றியிறக்கல்-இரேசகபூரகஞ் செய்தல், என வே "ஒருமொழி தன்னினங்கொளற் குரித் தே" என்னு முபலக்கணத்தால், இரேசகபூரககும் பகங்களைப் பயின்று வருபவரென்பது பெறப் படும், (நன்னூல்) ரேசகம்-எற்றல்-பூரகம்-இறக்கல் குப்பகம்-தம்பித்தல். |
| 104 | | 1 | வைகறை-விடியஐந்து நாழிகைக்கு முன்னுள்ள நேரம், பங்கயாசனம்-பதுமாசனம். |
| ,, | 683 | | அங்கச்சேட்டை யின்றியிருத்தல்-அசைவின்றியிருத் தல் ஓடமே போலுமிந்த வுடம்பினுலுறிதியீதே என்றமையின், இது வெற்றுப்பொருள் வைப்பெ ன்னுமலங்கபரம். |
| 105 | 686 | | அந்தரங்க மந்திரி-இரகசியமந்திரி. |
| ,, | 689 | | நாட்டுச்சீர்களை யாராந்து செங்கோலை நடாத்து மத்துணைத்திறமையுடைய ஸ்ரீ அருணசலமவர்களு க்கு ஈ யிவ்விலங்கைக்குரிய நீதிகளையாராந்து நட த்ததக்கனவென்று நான் காங்கிலேயர் களுடனே ந்தாவதாக வந்தரங்க மந்திரித்து வத்தைத்தேசாதி பதி திறமையை யாராந்து கொடுத்தனனென்ப தாம். |
| 106 | 694 | | உத்தியோகங்களி லுயர்ந்தவர்கள், கீழ்நாட்டாருட் |

| பக்கம் எண். | செய்யுள் எண். | வரி. | |
|---|---|---|---|
| | | | ஸ்ரீ அருணாசலமே முதன் முதலிந்த மந்திரியாயி னரென்று வந்து வந்து கூடினரென்பதாம். |
| ,, | 696 | | னயிற் பட்டம் பெற்றவனாகலின் மகாசபைக்களை முதற் கட்பேசுமதிகாரத்தை யுடையவனாய் "கொ யிலன்பேக" என்பவன் சேர் அருணாசலமவர்க ளின் ராசசேவைகளின் றிறமைகளைக் காட்டிப் பேசுவானாயினனென்க. |
| ,, | 697 | | ஸ்ரீ அருணாசலத்தின் றிறமைகளுக்கேற்க வுத்தியோக மெப்போ துவருமோவென்று காத்திருந்தோம், இப்போது அந்தரங்க மந்திரியாக வருவதனாலே களிப்பு மிகவம் பெற்றோம் என்பதாம். |
| ,, | 698 | | நீதிபதியாக விருக்குங் காலத்திலே நீதியின் முறை களைக் காட்டிச் சனங்கடுதி யெடுக்க வாதங் களைத் தீர்த்து வந்ததிறமைகளைக் கண்டோம், மேலும், அந்நாளிற் செய்த சிவில்லோத் திருத்தங் களையும் பார்த்தோமென்பதாம். |
| 107 | 699 | | சாதனச் செனறலாக வந்தகாலத்திலே வஞ்சனைக ளான களவுகளில்லாதபடி சாதனங்களை யெழு துமாறு செய்து வைத்த திறமையான வல்லமை கள் முழுதையுங் கண்டோமென்பதாம். |
| ,, | 701 | | இவ்வாறே கோயிலன்பேக் பேசிய பின்னர் பா பா சேர் பீரிசு மேலுமுத்தியோகர்களு ஸ்ரீ அருணாச மவர்களின் உத்தியோகத் திறமைகளைத் தனித் தனி பேசினார்களென்பதாம். |
| 108 | 707 | | பொற்கைப்பாண்டியன் போல நீதியையுடையரும் தருமரூபியும் மந்திரியுமாகியஸ்ரீ அருணாசலமவர் கள்தமது கருத்தைப்பேசினரென்பதாம், பொற் கைப்பாண்டியன் கீரந்தை மனவியின் கற்பைக்காத்தற் பொருட்டு குற்றஞ்செய்யாமற் தானே குற்றவாளியென்று நின்று தனது கையி லொன்றைத் தறிப்பித்தவன். |
| ,, | 709 | | இலங்கையதிபன் தனது கருத்தினபடியேதையுஞ் செய்ய வதிகாரமுடையவனல்லன, இந்த ஐந்து மந்திரிகளுடைய வாலோசனைப்படியே தீர்மானம் செய்தல் வேண்டுமென்பதாம். |
| 108 | 712 | | தேசாதிபதி தானாகவே சட்டத்தை நிலைநாட்ட வி யலாதென்பதைச் சிந்தியாமல் ஆங்கிலர்களுக்கு |



| பக்கம் எண். | செய்யுள் எண். | வரி. | |
|---|---|---|---|
| | | | வேதனமுயர்த்த வேண்டுமென்றாரம்பித் தாரென் பதாம். வேதனம்-சம்பளம். |
| 109 | 713 | | ஸ்ரீஅருணாசலந் தானந்தரங்க வதிகாரமந்திரியாக இருந்தமையால் தன்னோடொத்த நால்வரு மாங்கி லர்களாக விருந்தபோதும் எதொன்றையுங் கரு தாமலாங் கிலர்க்கு வேதனமுயர்த்தும் விஷயத்தி லே யரசனோடு மெதிர்வசனம் பேசிமறுத்தனரெ ன்பதாம். |
| ,, | 715 | | ஆங்கிலரின் வழிச்செலவுக்காகவும் மற்றொன்றற்கா கவும் வேதனங்களேற்றுகில் சுயதேசத்தவர்களுக் கும் ஏற்றவேண்டு மென்று வாதாடி யேற்றிவைப் பித்தனரென்பதாம். |
| ,, | 716 | | இவ்வாறு வாதாடி தம் நாட்டினர்க்கு முயர்ச்சியைக் கொடுத்தனர், ஆயின் மந்திரியும் ஸ்ரீ அருணாசலம வர்களே யென்பதாம். |
| ,, | 717 | | ஸ்ரீ அருணாசலமவர்களிது மாத்திரமா தம் மூரவர்க ளுக்கு முத்தியோகமுயர்த்தும் படியுஞ் செய்தது மன்றி யின்னமுமனேக நன்றிகளைச் செய்தனரெ ன்பதாம். |
| ,, | 718 | | எதொருவருத்தமுமின்றி யிலங்கைவாசிகளி லங்கை யிற்றானே பீ. ஏ. முதலிய பட்டங்களைப் பெறும் படியுஞ் செய்தனர் என்பதாம். இது சர்வகலா சாலைத்தாபனம். |
| ,, | 719 | | பாண்டியனுக்கு மந்திரி வேடங்காட்டி முழுதும் பதிகரணமாக இருந்த மாணிக்க வாசகரைப் போல ஸ்ரீ அருணாசமலவர்களும் அரசோடு சார் மானங் காட்டி முழுதுந் தமதூரினுக்கே நலங்க ளைச் செய்து வந்தனரென்பதாம். |
| 110 | 720 | | கலைமகன்-சேட்டைமகன்: பதுமநாபன். தலைமகனா தலானும், நெடுநாட்பிரிந் திருந்தமையானும், அன் புதலைக் கூடிற்றென்க. தந்தையர்க்குத் தலைம கன் மேலன்பியல்பேயாம் |
| 721 | 1 | | நலமூருநாள்-சுபதினம். |
| | | | தந்தைவரவைத் துறைமுகத்தெதிர் கொண்டளைத்த பதுமநாபன் தாயாரின் சுகத்தையும் தம்பியரோடு தங்கையர் சுகங்களையும் நெடுநாட் பிரிந்திருந்த வாராமையால் வினாவினனென்பதாம், அரிதிற்பய |

| பக்கம் எண். | செய்யுள் எண் | வரி | |
|---|---|---|---|
| | | | ந்த வன்னையாகலின் "அன்னையர்" எனவுயர்த்தற் கண் அர் விகுதி கொடுக்கப்பட்டது. அன்னையர் மீது முடன்பிறந்தார் மீது மன்புமீக்கூர்தலியல் பேயாம். |
| ,, | 724 | 1 | ஸ்ரீ அருணாசலமவர்களின் மகனிவனே யென்று விய ந்து கூறப் பிறந்த மகனென்பது போதர 'சொன் மகன்" என்றடைபுணர்த்தப் பட்டது. |
| 111 | 726 | 4 | ஐந்துவகைப் பகைகளாவன-சத்துரு, சோரர், விலங்கு, அக்கினி, வெள்ளம். |
| ,, | 730 | 4 | பாட்டன்-குமாரசுவாமி முதலியார். |
| ,, | 731 | 4 | மாதுலன்-சேர் முத்துக்குமார சுவாமி. |
| ,, | 733 | 2 | சூடும்-செய்யு மென்னு முற்று. |
| ,, | 734 | 3 | பரம்பரையோன்-வம்மிசத்திலுள்ளவன், வழித்தோன்றல். |
| ,, | 735 | 3 | இவண் என்றது அரண்மனையை. |
| ,, | 737 | 4 | அத்தாணிமண்டபம்-கொலுமண்டபம். |
| 116 | 763 | | பிரித்தானிய ராச்சியத்துட்பட்ட செல்வமுள்ள விலங்காவிலே நீ நிறுத்தி வந்த வாசியன் முறைகளையும் பார்த்து வந்த ராச சேவையின் வல்லமையையும் அறிந்து வியந்து. |
| ,, | 764 | | இலங்கையாகிய தேயத்திலே ஸ்ரீ அருணாசலத்தின் பேரறிவுக்கு நிகரில்லை யென்று சொல்லுவேன். தனது சேவைகளைப் பார்க்கும் வல்லமைக்கும் யாரும் நிகரில்லையென்று சொல்லுவேனென்பதாம். |
| ,, | 765 | | இலங்காபுரியை யாளுகை செய்வதற்கு வேண்டிய சட்டங்களைத் தெரித்தெடுப்பவனென்று சொல்லுவேன், அனுதைகளின் விஷயமாக இருப்பின் அஃது சிறிதாயினும் பெரிதாகக் காட்டிப்பேசும் இரக்கவானென்று சொல்லுவேனென்பதாம். |
| 117 | 766 | | பேற்றிறனென்னும் மந்திரி யிந்தவிதமாகப் பேசிமுடித்தபின்பு, மற்றச்சபையிலுள்ளோர் கூறுவதாயினர்,-நீதிபதியாக விருந்தகாலத்திலே நீதிகளை நடாத்திவந்த வல்லமைகளையும், |



| பக்கம் எண். | செய்யுள் எண். | வரி. | |
|---|---|---|---|
| ,, | 767 | | சாதனச் செனறலாக விருந்தகாலத்திலே, எழுதுவோர் சாதனங்களைக் கரவில்லாமலும் வஞ்சிப்பில்லாமலும் எழுதுமாறு பலதிருத்தங்களைச் செய்த திறமைகளையும், |
| ,, | 768 | | சட்டநிரூபன சபையிலே வந்த காலத்திலே, சனங்களுக்கேற்ற பிரமாணங்களை யெடுத்து நிறுத்திய புத்திநுட்பத்தையும், |
| ,, | 769 | | அந்தரங்க மந்திரியாக வந்தகாலத்திலே சனங்களுக்காக அரசோடு வாதாடியும் நன்மையைச் செய்த பெருந்திறமையையும், |
| ,, | 770 | | சிங்களர் தமிழராதியோர்க்கும் வேதனவுத்தியோக வுயர்ச்சிகளைச் செய்தும் இலங்கை வாசிகளையுயரச் செய்த வல்லமையையும், |
| ,, | 771 | | இலகுவாக தம்மூரிலே யுயர்தரக்கல்வி கற்கும்படி சர்வகலாசாலையை வைத்துத் தந்தனையும் பேசினரென்பதாம். |
| 118 | 776 | 3 | என்றும் அகத்தால் சுத்தனை-என்றைக்கு மிருதய சுத்தமுடையவனை, இத்தனையாகச் செய்த எந்தலை, அகத்தாற் சுத்தனை யெனக்கூட்டி முடிக்க. |
| ,, | 779 | 4 | தன்னம்-அற்பம். |
| 119 | 780 | 3 | நல்கியவந்த-கொடுக்க வந்த, செய்யிய வென்னும் வாய்பாட்டு வினையெச்சம். |
| ,, | 784 | 4 | அன்னிய நாட்டாரின் கொண்டாட்டங்களினும், இவர் தமக்கு தமது சொந்த நாட்டார் செய்யுங் கொண்டாட்டமே சாலவுஞ் சிறந்து கழிபேருவகை பயக்குங் கொண்டாட்ட மென்பது போதர ஓதுதாய் நாடனினுரைப்ப தென்கொலோ" என்றெடுத்துக் கூறியதென்க. இது வேற்றுப் பொருள் வைப்பென்னு மலங்காரம். |
| 120 | 787 | 2 | வந்து உவந்து கைகூப்பி, கைகூப்பல்-சமயமுறை இருகை-இரண்டு பக்கம். |
| ,, | 788 | 1 | உருவுங் கலையுங் கற்பும் வாய்ந்த நல்லாரால் அளிசிறக்கப்பெறுதலின் "வன்னமாநேக் கினல்லார் மன்னு யாழ்ப்பாணம்" எனவடை கொடுத்துக்கூற நின்றவந் நாட்டு மாதரின் விசேடமுங் காட்டியவாறாயிற்று. இவ்வாறே நாட்டணி கூறுவார், "செங்கயல் குழைகணுவர். (பெரிய புராணம், |

| பக்கம் எண். | செய்யுள் எண். | வரி | |
|---|---|---|---|
| | | | இராமயணம) 3. "அன்னமா மென்ன வைகுமணங்கு" நடையினலன்ன மென்று சொல்லவிருக்கின்ற. 4. உருவுந் திருவுமுயர்வுங் கலையுமுற்றவமுற்றவமுடையார்க்கே யுண்டென்பது தோன்ற. "மாதவஞ் செய்தானை" என்னும், ஒரூராயும் எல்லா நலங்களு மொருங்கேயே யமையப் பெறுவதாயு மாங்கமர்கின்றனரெனக் கேட்டறிந்த தொருதொருகாற் கானப்பெறுமே, வெனப்பேராவவோடிருந்தவராகலின், "அவாவோடு கண்டார்" என்றுங் கூறியதென்க. |
| 121 | 794 | 1 | நிரந்தரம்-எப்பொழுதும். |
| ,, | 797 | 1 | அக்கிராசனம்-முதலாசனம். |
| 122 | 801 | 4 | மேதாவி-அறிஞன். |
| ,, | 806 | | வேற்றுப்பொருள் வைப்பென்னு மலங்காரம். |
| 123 | 811 | | மாமனுகிய சேர் முதுத்குமாரசாமி பெற்றபின்னர் தமிளர்களுக்குள் ஸ்ரீ அருணசலமே முதற் சேர் பட்டம் பெற்றூர் இலங்கையிலே தமிழர்களிலே இவர்களின் குடும்பமே ராசகுடும்பமென்று கூறுமாறிருந்த குடும்பமென்பதாம். |
| 124 | 814 | | கொழும்பிலே யுயர்தரக்கல்விகற்கச் சர்வகலாசாலையைத் தந்தது மிந்தப்பெரியாரேயாம் என்பதாம். |
| ,, | 815 | | இது மாத்திரமோ சுகாதாரங்களை சேய்து மின்னமும் யாது யாது வேண்டியதோ வென்றுதேடிக் கொண்டிருக்கும் ஸ்ரீ அருணசலத்தின் குணமகிமையை சொல்லமுடியுமோ வென்பதாம் |
| 128 | 844 | | பயங்கரமானவகி ஞாயமென்று நீங்கள் மனம் பதறிக் கலக்கமடைய வேண்டாம், நான் உங்களுக்கு வேண்டிய நலங்களை யறிந்தறிந்து தேசாதிபதியோடு தானதண்டசாம பேதமென்னும் ராசாதன்மங்களை யெடுத்துக் காட்டிநும் மனேருடைய காவற்சிறைகளை விடுவிக்கின்றே னென்ருரென்பதாம். |
| ,, | 845 | | அரசன் சீறுவனுயின் சனங்களுக்காகிய துணையாக வேறுயாதுமில்லை, ஆயினும் யான் உங்களுக்கு நேரிட்ட இந்த விபத்தை தவிர்த்து வைக்கின்றேனென்று ஆறுதல் சொல்லி யவ்வேளை யிவர்களை யனுப்பிவிட்டா ரென்பதாம். |



| பக்கம் எண். | செய்யுள் எண். | வரி | |
|---|---|---|---|
| 129 | 850 | | இலங்கையிலே நீதியை நடாத்திக்கொண்டிருக்கு மதிபனுக்கு மேலுமிரக்கம் வரும்வண்ணம் மனுவொன்றை யெழுதி, சிறையிருப்பவர்களைச் சீக்கிரம் விடுதலையாக்கினரென்பதாம். |
| ,, | 851 | | இரக்கமுள்ள சக்கரவர்த்திக்கு மந்திரியாகவுள்ளவன், இங்கிலந்தில் அக்காலத்திலே நட்பாகப் பயின்றுள்ளவன், இவனுக்கும் இங்கிலந்துக்கும் இராணுவாதிகாரத்தைக் குறித்து ஒரு மனுவை யனுப்பிவைத்தனரென்பதாம். |
| 130 | 856 | | இலங்கைவாசிகளும் திருந்திக் கமத்தொழில், கைத்தொழில்களைச் செய்வாராயின், எங்கள் வரும்படிகளுங் குறையுமென்றும், அரசினும் நெருங்குவார்போலுமென்றுஞ் சிந்தித்தனரோ என்பதாம். |
| ,, | 859 | | சர்வகலாசாலை இலங்கையிலிருக்குமாயின், இலங்கைக்கு வேறொரு தேயமும் நிகராகமாட்டா, பட்டங்களையும் கமத்தொழில் கைத்தொழில்களையுஞ் சொந்தமாகப் பெறுவ ரென்றன ரென்பதாம். இலக்கணமுங் கணிதமுமே மாந்தருக்கிரண்டு கண்களாகும். |
| ,, | 860 | | இவற்றிலே இலங்கைமாணவரே சாமர்த்தியமுள்ளவர், அக்கலாசாலை வருமேயாயின் மாணவர் கல்விக் கடலின் கரையைக் கண்டவராவரென்ருரென்பதாம். |
| 131 | 861 | | என்றைக்குச் சர்வகலாசாலை இலங்கையில் வருமோ அன்றைக்குத்தான் நமக்கு நித்திரையும் வருமென்று இராப்பக லதுவே தியானமாகவிருந்தனரென்பதாம். |
| ,, | 863 | | அளவு கடந்த சுத்தவறிவையுடைய ஸ்ரீ அருணசலம் ஆயிரத்துத் தொளாயிரத்தாரும்வருடந்தொடக்கமாக அக்கலாசாலைக்கு வேண்டியவாரம்பங்களைச் செய்துவந்தனரென்பதாம். |
| ,, | 864 | | நினைக்கவும் பேசவுந்தானரிதாகவுள்ள கலாசாலையை இலங்கையில் வைப்பித்தற்காக ஒரு மகாசபையை யாரம்பித்தனரென்பதாம். |
| 132 | 868 | | ஆங்கிலேய ரிலங்கைக்காக அனேக தருமங்களைச் செய்தாரேனு மின்னமுஞ் செய்யவேண்டுவன வனேகமுண்டென்றனரென்பதாம். மட்டு-அளவு |

| பக்கம் எண், | செய்யுள் எண். | வரி | |
|---|---|---|---|
| ,, | 870 | | கல்வியைப் பார்த்தும் சேவைகளின் றிறமைகளைப் பார்த்தும் அவ்வவர்க்குத் தகுந்த சேவைகளிலே வைப்பதும் வேதனங்களையும் தகுதியறிந்து கொடுப்பதும் தேசத்தை யாளுகின்ற ராசாக்களின் தர்மங்களே என்று காண்பித்தனர். |
| ,, | 871 | | மேலுத்தியோகங்களிலே படிந்தவர்கள் உபகார வேதனங்களோடு தம தூராகிய மேலைநாடுகளுக்குப் போம்போது ஊருக்கு வேண்டிய அனுபவங்களையுங் கொண்டுபோய்விடுவாரேல், அந்தச் சேவையிர் பின்பு வந்தவர் சேவைகளிலே வரு மறியாமைகளை யாரிடத்துக் கேட்டறிவரென்று காட்டி சுதேசிகளுக்கு உயர்தர உத்தியோகம் கொடுப்பித்தார். |
| ,, | 872 | | கைத்தொழிலான கம்மியம்முத லெத்தொழில்களு மிலங்கையிலேயே யிருக்கவேண்டும், அவற்றாலே யரசுக்கும் வருமான மதிகமாக விருக்கு மென்பதாம். |
| ,, | 873 | | தூரதேயங்களிலே சர்வகலாசாலை யிருக்குமாயின், இலங்கைவாசிகள் கல்லாதுவிடுவதேயன்றி வேறு யாதுசெய்வரென்பதாம். |
| ,, | 874 | | அங்கேதான் போய்க் கற்றாலும், பட்டம் கொடுப்பதேயன்றிக் கைத்தொழில்களைப் பயிற்றுகின்றாரில்லை யென்பதாம். |
| 133 | 875 | | இந்த ஈழதேயம் மேலோங்கவேண்டுமாபின் நாங்கள் உயர்தரக்கல்விகளைக்கற்றல்வேண்டும், கைத்தொழில்களைப் பழகுதல் வேண்டும், இன்னும் வைத்தியம்முதலான பற்பல தொழில்களைப் பழகவேண்டும், உயர்ந்த உத்தியோகங்களைப் பெறுதலும்வேண்டுமென்றனரென்பதாம். |
| ,, | 877 | | சர்வ கலாசாலை இல்லாதபொழுதில், ஈழதேயமானது, பிரகாசமில்லாத இரத்தினம்போலவும் உயிரில்லாத உடம்புபோலவும், அன்பில்லாமல் செய்யுந் தர்மம்போலவும், ஆபரணமில்லாத மகளிரைப்போலவும் சிறப்படையமாட்டாதென்றனரென்பதாம். பலபொருளுவமையணி. |
| ,, | 878 | | நானும் இலங்கைக்கு உபகாரமாகச் சர்வகலாசாலை வேண்டுமென்று கேட்டவிடத்து, அரசன் இந்த |



| பக்கம் எண். | செய்யுள் எண். | வரி | |
|---|---|---|---|
| | | | நாட்டுக்கு அந்தக் கலாசாலை வேண்டாமென்று மறுத்தனனென்றாரென்க. |
| ,, | 879 | | தொகையான மாணவர்களில்லையென்று மிங்கிலந்தோடே யிலங்கையுஞ் சமனாகுமோ வென்றும் உயர்தரங்களில்லையென்று மிவை குறைவென்றுங் கூறி மறுக்கையிலே, கலாசாலை வேண்டாமென்றதற்கு நீர் கூறு மிந்நியாயங்கள் போதாதென்று நான் மறுத்தேனென்றாரென்பதாம். |
| ,, | 880 | | இங்கிலந்துக்குப் போகப் பெலனுமில்லை, மாணவர்களுயர்தரப்பரீக்ஷைகளையெடுப்பதற்குக்கலாசாலையுமில்லாமையா லொழிந்த கலாசாலைகளிற் கற்பார்கள், மேல்தரக் கலைகளைக்கற்க ஆசைப்படுவார்களென்று கூறினேனென்றா ரென்பதாம். |
| 134 | 884 | | ஊரையுயர்த்துங் கலாசாலை வைப்பது அரசுக்குக் கடமையாகவிருந்தபோதும், நாம் கேட்டபோதும் மறக்குமேயர்யின் இனி யாரிடத்துக் கேட்போம் சபையாரே நீங்களே கூறுங்களென்றாரென்பதாம். |
| ,, | 886 | | ஸ்ரீ அருணாசலமதுவேதொழிலாக இந்தக் கலாசாலையை இங்கே தாபிக்கவேண்டுமென்றே யின்னமுமனேகஞ்சபைகளைக் கூட்டினாரென்பதாம். |
| ,, | 837 | | இதன்பொருட்டாக வனேகஞ் சிறுச்சிறுப் புத்தகங்களையெழுதி யச்சிட்டு இங்கிலந்துக்கு மனுப்பினரென்பதாம். |
| ,, | 888 | | ஸ்ரீ அருணாசலமனேகவருடங்களாகத் தொழிலுமதுவேயாகக் கூடியமட்டும் நல்ல முயற்சிகளைச் செய்துவந்தனரென்பதாம். |
| 135 | 889 | | ஸ்ரீ அருணாசலம் நல்லனவாகிய ஈழநாட்டுக்கு நல்ல காரியத்தைச் செய்யத் தொடங்குவாராயின் அந்தக்காரியம் நிறைவேறுதற்கு அதிகநாட்கள் வேண்டாமென்பதாம். |
| ,, | 892 | | தந்நிகரில்லாதவராகிய ஸ்ரீ அருணாசலம் அனேக வருடங்களாக, பலவேதுக்களை எடுத்துக்காட்டித் தான் எடுத்துக்கொண்ட பிரயாசத்தினாலே ஈழமென்னும் மாதினது கண்போல சர்வகலாசாலையைக் கொழும்பிலே தாபித்தனரென்பதாம். |

| பக்கம் எண். | செய்யுள் எண் | வரி | |
|---|---|---|---|
| ” | 893 | | அரசனுக் கமைச்சனாகியவனுக்கு சட்டையையுங் கண்ணையும்போல்வர், உயிர்களுக்குப் பாதுகாக்குந் தாயைப்போல்வர், ஏழைகளுக்குத் தானுமோரேழையாகவுமிருப்பர், ஸ்ரீ அருணாசலத்தின் செயல்கள் முழுதுஞ் செயற்கரிய செயல்களாகுமென்பதாம். |
| ” | 894 | | இவ்வாறு உயிரில்லாத இலங்கைக்குக் கலாசாலையாகியவுயிரைக் கொடுத்து வகுப்புகளையுந் தெரிந்து பாடவொழுங்குகளுஞ் செய்தனரென்பதாம். |
| ” | 895 | | நல்லாசிரியர்களைத் தெரிந்து நியோகித்தார், போசனசாலையையு மமைத்தார், மாணவர்கட்காக ஆசிரியரிலொருவரை நித்தியமுமிருக்கவுஞ் செய்தாரென்பதாம். |
| 136 | 902 | | தேசாதிபதி ஸ்ரீ அருணாசலமே இக்கலாசாலைக்குத் தந்தையென்று கூறினனென்பதாம். |
| 137 | 905 | | வரும்வருந் தேசாதிபதிகளோடு மவரவர் கூறும் மறுப்புகளுக்குத் தான் திருஷ்டாந்தங்காட்டி மறுத்து வருடந்தோறுங் கலாசாலையி னலங்களையே காண்பித்து வந்தனரென்பதாம். |
| ” | 906 | | ஒரு தினத்திலே யதிபதி மந்திராலோசனைச் சங்கத்திலே மந்திரிகள் முன்னிலையிலே என்பதாம். |
| ” | 907 | | வித்தில்லையாயின் மாமுமில்லையென்றபடி மூலபணமில்லையாயின் கலாசாலையுமில்லையாகுமென்றெண்ணி யொருதொகைப் பணத்தைக் கொடுத்தனனென்பதாம். |
| ” | 903<br>909<br>910 | | ஸ்ரீ அருணாசலமும் தனது மாதுலனாகிய சேர் முத்துக்குமாரசாமி பெயரினாலும், தந்தையாகிய ஸ்ரீ பொன்னம்பல முதலியார் பெயரினாலு மொவ்வொருதொகைப் பணங்களை வேறு வேருகக் கொடுத்து இன்னும் தமது பெயரினாலு மொரு தொகைப் பணத்தைக் கொடுத்தனரென்பதாம். |
| 138 | 911 | | ஸ்ரீ அருணாசலம் தன் பெயரினாலும், மந்திரி சபையின் முன்பாக ஒரு தொகைப் பணத்தைக் கொடுத்த பின்பு, மனதுக்குத் தேற்றத்தைக் கொடுக்கின்ற கலாசாலை யின்றைக்கே சித்திபெற்றது என்று பேருவகைப் பெருங்கடலுள் மூழ்குகின் |



| பக்கம் எண். | செய்யுள் எண். | வரி | |
|---|---|---|---|
| ” | | | றவராகி யங்கு நின்றும் பொன்கிழாருக்கு வந்தனரென்பதாம். |
| ” | 912 | | பொன்கிழாருக்கு வந்த ஸ்ரீ அருணாசலமவர்கள் மனைவி மக்களென்றிவர்களுக்கும் நண்பர்களுக்கும், யான் ஜென்மாந்திரங்களிற் செய்துவைத்த புண்ணியத்தினாலே பூமியில் மானுடனாகப் பிறந்த பிறவியின் பிரயோசனத்தை யித்தினத்திலே தானே பெற்றுக்கொண்டவனாயினேனென்று கூறிப் பெருங்களிப்புற்றனரென்பதாம். |
| 140 | 928 | | அனாதைகளுடைய வாபத்துகளை நீக்குபவராகிய ஸ்ரீ அருணாசலம் அதன்பொருட்டாகப் பற்பல சபைகளைக் கூட்டி அனாதைகளின் தர்மத்தைக் குறித்துப் பேசிவந்தனரென்பதாம். |
| ” | 929 | | மேன்மக்களை யிச்சபைக்கங்கத்தவராக்கினரென்பதாம். |
| 142 | 940 | | தருமத்துக்கதிபதியான ஸ்ரீ அருணாசலம், வெயிலினால் வருத்தமுற்று வழிச்செல்வோருக்கு மாநீழல் கிடைத்ததுபோல, அனாதைகளுக்காகக் கொழும்பி லனாதைகளாதாரசங்கத்தைத் தாபித்ததுமல்லாமல் மற்றைய நாடுகளினும் நகரங்களினு மவ்வாறே நடைபெறுமாறு செய்துவைத்தனரென்பதாம். |
| 104 | 681 | | பங்கயாசனம் - பதுமாசனம். |
| ” | 683 | | அங்கச் சேட்டையின்றியிருத்தல்-அசைவின்றியிருத்தல், “ஓடமே போலுமிந்த வுடம்பினாலுறுதியீதே” என்றமையின் இது வேற்றுப்பொருள் வைப்பென்னு மலங்காரம். |
| 105 | 686 | | அந்தரங்க மந்திரி—இரகசிய மந்திரி. |
| ” | 683 | | நாட்டுச் சீர்களையாராய்ந்து செங்கோலை நடாத்துமத்துணைத் திறமையை யுடைய ஸ்ரீஅருணாசலமவர்களுக்கு நீ யிவ்விலங்கைக்குரிய நீதிகளை யாராய்ந்து நடத்தக்கடவை யென்று நான்காங்கிலேயர்களுடனைந்தாவதாக அந்தரங்க மந்திரித்துவத்தைத் தேசாதிபதி திறமையையாராய்ந்து கொடுத்தனனென்பதாம். |

| பக்கம் எண். | செய்யுள் எண் | வரி | |
|---|---|---|---|
| 106 | 694 | | உத்தியோகங்களிலுயர்ந்தவர்கள், கீழ்நாட்டாருட் ஸ்ரீ அருணாசலமே முதன்முத லிந்த மந்திரியாயி னரென்று வந்து வந்து கூடினரென்பதாம். |
| ,, | 696 | | னையிற் பட்டம் பெற்றவருகலின் மகாசபைக்கண் முதற்கட் பேசுமதிகாரத்தை யுடையவனாய் "கொயிலன்பேக்" என்பவன் சேர் அருணாசல மவர்களின் ராசசேவைகளின் றிறமைகளைக் காட்டிப் பேசுவானாயினனென்க. |
| ,, | 697 | | ஸ்ரீ அருணாசலத்தின் றிறமைகளுக்கேற்றவுத்தியோக மெப்போது வருமோவென்று காத்திருந்தோம், இப்போது அந்தரங்க ராச மந்திரியாக வருதலி னாலே களிப்பு மிகவும் பெற்றோம் என்பதாம். |
| ,, | 698 | | நீதிபதியாகவிருக்குங்காலத்திலே நீதியின் முறைக ளைக் காட்டிச் சனங்கடுதியெடுக்க வாதங்களைத் தீர்த்துவந்த திறமைகளைக் கண்டோம், மேலும் அந்நாளிற் செய்த சிவில்லோத்திருத்தங்களையும் பார்த்தோமென்பதாம். |
| 107 | 699 | | சாதனச்செனறலாக வந்த காலத்திலே வஞ்சனைக ளான களவுகளிலாதபடி சாதனங்களையெழுது மாறு செய்துவைத்த திறமையான வல்லமைகள் முழுதையுங் கண்டோமென்பதாம். |
| ,, | 701 | | இவ்வாறு கொயிலன்பேக் பேசியபின்னர் பாபா சேர் பீரிசும் மேலுமுத்தியோகத்தர்களும் ஸ்ரீ அரு ணாசலமவர்களின் உத்தியோகத் திறமைகளைத் தனித்தனி பேசினார்களென்பதாம். |
| 108 | 707 | | பொற்கைப்பான்டியன்போல நீதியையுடையரும் தருமரூபியும் மந்திரிகளிற் றலைமை மந்திரியுமாகிய ஸ்ரீ அருணாசல மவர்கள் தமது கருத்தைப் பேசி னரென்பதாம். பொற்கைப்பாண்டியன் கீரந்தையின் கற்பைக் காத்தற் பொருட்டு குற்றஞ் செய்யாமற் தானே குற்றவாளியென்று நின்று தனது கையிலொன் றைத் தறிப்பித்தவன். கீரந்தை-ஓர் அந்தணன். |
| ,, | 709 | | இலங்கையதிபன் தனது கருத்தின்படி யேதையுஞ் செய்ய வதிகாரமுடையவனல்லன். இந்த ஐந்து மந்திரிகளுடைய வாலோசனைப்படியே தீர்மா னஞ் செய்தல்வேண்டுமென்பதாம். |



| பக்கம் எண். | செய்யுள் எண். | வரி | |
|---|---|---|---|
| 142 | 942 | | தெய்வக்கற்புள்ள பதுமினி சித்தினிப் பெண்களின் நீழல்பட அவர்கால்களாலுதைக்க நிந்திக்க சிரி க்க வுரையாட தம்பலமுமிழ பாட சில சில மரங் கள் பூத்தலுந் தளிர்த்தலுஞ் செய்யுமென்க. (சூடாமணி நிகண்டு, பாரதம்) |
| 144 | 956 | 3 | விண்மணி-சூரியன். |
| 145 | 961 | 3 | இந்தளம்-விறகு |
| ,, | 963 | 3 | கோத்தருநெறி-ராசதன்மம். அஃதாவன சாம பேத தான தண்டம். |
| 146 | 967 | 3 | குலம்—இங்கே மகளிர்குலம் |
| ,, | 968 | 4 | சொன்முக மலரச் செய்தல் - இனிய வசனங்களால் முகங்களை மலருமாறு செய்தல். |
| ,, | 970 | | இளவரசனை இலங்கைக்கு வரச்செய்யவேண்டுமென் றுங் கேட்டுக்கொண்டனரென்பதாம். |
| 147 | 972 | 1 | மகளிர் யார்க்கும் வாசிரமணியை நேரும் வனப்பமை சொர்ணம் - மகளிர்க் கெல்லாஞ் சிரேட்டமான சிரோரத்தினத்தை நிகர்த்த வழகமைந்த சொர் ணம். |
| ,, | 973 | | இந்தக் கவர்னர் செனறல், இவர் பதுமநாபனின் தந்தைதாயரென்றறியாது இங்ஙனங் கூறினனெ ன்றறிக. |
| 150 | 989 | | சிவில் லோவில் ஐயந்தீரத் திருத்தங்களைச்செய்தன ரென்பதாம். |
| ,, | 993 | | விதியைக் கடத்தல் சிருட்டி திதி கர்த்தாக்களாகிய பிரமவிட்டுணுக்களுக்குங் கூடாதென்க. |
| 151 | 994 | | இக்கழனி மேற்றிசையைநோக்கிச் சேறலால் 'நதம்' எனக் கூறியதென்க. |
| ,, | 995 | | பிரயாகை-இது, கங்கையும் யமுனையும் சரஸ்வதியும் சங்கமப்படுமிடத்துள்ள தவத்திகள் வசிக்கும் ஓர் தெய்வத்தானம். அருட்குறி-சிவலிங்கம். |
| 152 | 1001 | | இந்தச்சங்கத்தக்கிராசனத்துக்கு, கல்விஞானம், அர சஞானம் உலகஞானங்களில் பெரியாராகிய |

| பக்கம் எண். | செய்யுள் எண். | வரி | |
|---|---|---|---|
| ,, | | | ஸ்ரீ அருணாசலமவர்களையே தருமென வரித்துக் கொண்டனரென்பதாம். |
| 158 | 1039 | | சூது-வஞ்சனை. ஏதம்-தீங்கு. கோது-குற்றம். |
| ,, | 1044 | | கேதம்-கெடுதி: வருத்தம். |
| 159 | 1047 | | தொண்டை-தொண்டைமண்டலம்: மரூஉ. |
| 160 | 1055 | | தமிழாகிய நமது தாய்ப்பாஷை போகுமேயாயின், அத்துடன் சாதியும் சமயமும் போய்விடுமென்றும், போகவே, தமிழரென்னும் நாமமு மில்லாமற் போதுமென்றுமெடுத்துக்காட்டினரென்பதாம். |
| 164 | 1078 | | வட இந்தியாவுக்குப் பலமுறையும் போயிருந்தேன்; கற்கத்தா முதலிய இடங்களிலே கற்பவர்களெல்லாம் ஆங்கிலத்தோடு, தாய்ப்பாஷையிலும் ஆரியத்திலும் வல்லவர்களாய்ப் புதிதாகப் புத்தகங்களை யெழுதுவார்கள், அன்றியும் பழைய நூல்களைப் பரிசோதித்து அச்சிலும் பதிப்பார்களென்பதாம். |
| 165 | 1082 | | ஆங்கிலத்தோடும் கற்பவர்கள் தங்கள் தாய்ப்பாஷையாகிய தமிழைப் பரீக்ஷைக்கென்றும் கேம்பிரிச் பரீக்ஷைக்கென்றுங் கற்கையிலே உயர்தரத்துத் தமிழைக் கற்பதுவே மிகவும் நன்மையாகுமென்றனரென்பதாம். |
| ,, | 1084 | | பகவற்கீதை சொன்னபடி நாங்கள் மனங்களிக்கும் விஷயங்களுக்கதிகாரிகளேயல்லாமல், உலகம் மதிக்கும் பயன்களுக்கதிகாரிகளாகின்றேமில்லை, இந்த வாக்கியத்தைக் கருதி, நாங்கள் தமிழைக் கற்பேமாயின், நாட்டுக்கே மிகவும் நன்மையுண்டாகுமென்றனரென்பதாம். |
| | | | (தற்பயன் கருதிக் கற்பது ஆங்கிலம். பிறர்நயங் கருதிக் கற்பது தமிழ்) |
| 167 | 1094 | | இப்போதிருக்கும் ராசாங்கமுறையை விலக்கவேண்டும், அரசியன்முறைகள் குடிகள்பொறுப்பிலிருப்பது திருத்தமென்றனரென்பதாம். |
| ,, | 1095 | | சட்டசபையினர் தொகையிலே, ஊருக்கு நன்மை செய்யத்தக்கவரென்று சனங்களாலே தெரிந்து |



| பக்கம் எண். | செய்யுள் எண். | வரி | |
|---|---|---|---|
| | | | கொள்ளப்பட்டவர் தொகையே கூடுதலாகவிருத்தல் திருத்தமென்றனரென்பதாம். |
| ,, | 1096 | | மேற்சபை யாகிய வதிகார சபையிலே யிருப்பவர் தொகையிற் பாதி சுயதேசிகளாகக் குடிகளாலே தெரிவுசெய்தவர்களாக விருப்பது திருத்தமென்றனரென்பதாம். |
| ,, | 1097 | | செங்கோலுக்கேயுரிய முறையொன்றுதவிர, ஒழிந்த நாட்டுத்திருத்தம் செய்தல் முழுதுக்கும் சுயதேசிகளே யதிகாரிகளாகவிருப்பது திருத்தமென்றனரென்பதாம். |
| ,, | 1098 | | அரசன் அரசனாகவிருக்க, கூர்ந்த மதிவல்லோராகிய மந்திரிகளே நாட்டையாளுதல் திருத்தமென்றனரென்பதாம். |
| ,. | 1099 | | ராச தொழிற் பிரிவுகடோறுங் குடிகளுக்கும் பங்கிருப்பதும், நகரசங்க கிராம சங்கங்கள் குடிகள் வசத்திலிருப்பதுந் திருத்தமென்றனரென்பதாம். |
| 168 | 1101 | | இவ்விதமான திருத்தவிதங்களை யெல்லா மெடுத்துக் காட்டி, மேலுமிலங்கைக்கு வேண்டிய நயங்களைக் கூறுகின்றனரென்பதாம். |
| ,, | 1104 | | இலங்கையிலும் குறைவான மைசூரிலே சர்வகலாசாலை வைக்கப்பட்டமையால், கல்விமாத்திரமோ மற்றுமெவ்வகைத்தொழில்களையும் வளங்களையும் மேலும் தந்துகொண்டிருக்கின்றதென்பதாம். |
| ,, | 1105 | | டென்மார்க்கு சுவிசன் முதலிய சிறுச்சிறுநாடுகளை கல்வியுங் கைத்தொழில்களுமே யுயரச்செய்து கொண்டிருப்பன. இலங்கையோ அந்நாடுகளினும் செல்வத்தாற் சிறந்த நாடென்று சொல்லும்படியிருக்கின்றதென்பதாம். |
| 169 | 1106 | | அளகாபுரிக்கு நிகரான செல்வமுள்ள விலங்கையானது, மேனாட்டினருக்கே யொரு நிக்ஷேபம் போல விருக்கின்றதென்பதாம். |
| ,, | 1107 | | நாங்க ளொருவருக்கு அடிமையென்றளவி லிருக்கின்றோம். இதனாலே யெங்கள்மாட்சிமை போய்விட்டது. நாமடிமை நாமடிமையென் றிருந்தா லெமக்கு மதிப்புவருவதெப்படியென்பதாம். |

| பக்கம் எண். | செய்யுள் எண். | வரி | |
|---|---|---|---|
| ,, | 1110 | | உயர்ச்சியுமில்லை செல்வமுமில்லை வலியுமில்லையென்றால், இலங்கையிலே சுயவரசை யேன் கருதவேண்டும். கன்னடியரினு மிலங்கையினர்குறைவானவர்களல்லவேயென்பதாம். |
| ,, | 1111 | | பிலிப்பன் தீவுகளிலே முப்பத்தெட்டு மாகாணங்களும் எழுநூற்றெழுபது நகரங்களுமிருக்கின்றன. ஊரவரே யரசைத் தெரிவுசெய்வர், அமெரிக்கருக்கே மேலதிகாரமுண்டென்பதாம். |
| 170 | 1113 | | சோர்வில்லாதவரும் தேசாபிமானியும் அனுதைகளி லிரக்கமுள்ளவரும கலைக்ஞானியும் தவப்பேற்றை யுடையவருமான ஸ்ரீ அருணசலமவர்களின் இந்தப் பெருவாசகத்தி னுண்மைகளையும் அரசியன் முறைக் குறைகளையுந் தெளிவாக யான் விரித்துக் கூறினேனென்பதாம். |
| ,, | 1114 | | தேசத்தொண்டனுகியஸ்ரீ அருணசலந் தன்னுடைய இலங்கைக்கு மேன் சுயவரசுவேண்டாமென்பதைக்குறித்துப் பேசி மேலுந் தன தூருக்கு வேண்டியவைகளைப் பேசுவதாயினரென்பதாம். |
| ,, | 1115 | | மண்டூகங்கடமதருகிலிருக்குந்தாமரைமலரிற் றேனையுண்ணவறியாதிருக்க, காட்டிலுள்ள வண்டுகள் வந்து தேனையுண்ணுவதுபோல, நம்மூரவரனுபவிக்கவறியாதிருக்க தூரதேயத்தவர்கள் வந்து கவர்வதற்கு நமது தேயம் புதையற்றிரவியம்போலிருக்கின்றதென்பதாம். |
| ,, | 1116 | | இந்த நாட்டுக்கென்று முக்கியமாகவிருக்குங் கமத்தொழிலைச் செய்பவரைக் காணேம், இன்னமுங் கைத்தொழிலைத்தானுஞ் செய்பவரையுங் காணேம், கமக்காரருக்கே வறுமையு மிருக்கிறதென்னினவ்வறுமையை வறுமையாகக் கொள்ளலாகாதென்றனரென்பதாம். |
| 171 | 1118 | | ஏராளர்தாமே சகல சீவ பிராணிகளுக்கு முணவு கொடுக்கின்றவராகின்றூர், மேலும் செங்கோலையுயர்த்திவிடுகின்றவரும், பிரமசாரி வானப்பிரத்தன் சன்னியாசியென்னு மிவர்களையுந் தத்தம் மார்க்கக்களி லொழுகச்செய்பவரு மிவர்தாமேயென்றனரென்பதாம். |



| பக்கம் எண். | செய்யுள் எண் | வரி | |
|---|---|---|---|
| ,, | 1120 | | இந்தவீழதேயம் எவ்வகைத்தொழில்களையுஞ் செய்வதற்குரிய தேயமாம். ஆயினும் கமத்தொழிலுக்கென்றே யெடுத்தோதப்படும் தேயமுமாகவிருக்கின்றதென்பதாம் |
| ,, | 1121 | | கைத்தொழிலுமில்லைக் கமத்தொழிலுமில்லையேயாயின், இலங்கைவாசிகளே! நீங்கள் மற்றெந்தத் தொழிலைசசெய்ய வெண்ணியிருக்கின்றீர்களோ? இஃதென்னவெட்கம்! வெட்கம்! கடவுளாலேயாதியிலே நமக்கென்று நியமிக்கப்பட்ட கமத்தொழிலைக் கைவிடாது செய்து வருவீர்களேயாயின் உங்களுக்கு யாதேனுங் குறைகளும் வருமோ என்றனரென்பதாம். |
| ,, | 1122 | | தாந்தாம் வசிக்கின்ற ஊர்களை மேலோங்கச்செய்யவும் மாந்தர்களுக்குக் கீர்த்தியை வரச்செய்யவும், மேலுஞ் சனங்களுக்கு வேண்டிய சுகங்களை வரச்செய்யவும் கல்வியே காரணமாகுமென்றனரென்பதாம். |
| ,, | 1123 | | கனடா கன்னடி பிலிப்பன்தீவு மைசூராதிய விந்த நாடுகளெல்லாம் சர்வகலாசாலைகளிற் கற்குமுயர்தரத்துக் கல்விகளாலேதானல்லவா வேண்டிய வேண்டிய சுகங்களைப் பெற்றிருக்கின்றனவென்றனரென்பதாம். |
| ,, | 1124 | | கைத்தொழில்களையும், மிக்க திரவியங்களையும், சுயராச்சியத்தையும் பெறுதற்கரிய வீடுபேற்றையும், கல்வியே கொடுக்குமாயின் கல்வியின் பெருமையைச் சொல்லவேண்டியதில்லை யென்றனரென்பதாம். (அறம்பொருளின்பம் வீடென்னும் நான்கிற்குங் காரணங் கல்வியென்பது இதனுற் பெறப்படும் ) இஃது சொற்பொருட் பின்வருநிலை. |
| 172 | 1125 | | நீங்கள் செய்யுந் தொழின் முயற்சிகளைப் பார்த்து தகுதியறிந்தரசினராற் சுயவரசு கொடுக்கவும் வரும், நீங்கள் மகிமையைப் பெறவேண்டுமென்று காங்கிரசுத்தோற்றமாக நன்மையான வார்த்தையைச் சொல்லி வந்த வார்த்தையையும் சபையிலே சொன்னுரென்பதாம். (முயற்சியிருந்தாலரசினராலே சுயாதீனங் கொடுக்கப்படுமென்பது கருத்து ) |

| பக்கம் எண். | செய்யுள் எண். | வரி | |
|---|---|---|---|
| ,, | 1126 | | நாழிகையுந் தவறுமல் கைத்தொழில்களைச்செய்து மருதநிலங்களைத் திருத்திப் பருத்திவேலைகளையும் பயின்று பக்குவமடைவேமாயின் கேடு வரவேமாட்டா. |
| | | | சுயவரசையும் நிச்சயமாகப் பெறுவேமென்றனரென்பதாம். |
| ,, | 1127 | | பருத்திநூல், பாய், இரும்பு, பித்தளை முதலான கைத்தொழில் கமத்தொழில்களான இவைகளெல்லாம் நாட்டுக்கு ஆவசியகம் வேண்டியதென்று கூறிச் சபையோருக்கு ஊக்கங்கொடுத்தனரென்பதாம். பலதாமுங் கைத்தொழில் கமத்தொழில்களை யெடுதது தூக்கிப்பேசியதெல்லாம் நாட்டினோர்க்கு ஊக்கங்கொடுத்தற் பொருட்டென்றறிக. |
| ,, | 1128 | | இவ்விதமாகவே, தமது தேயத்தவர்களுக்கு மேலுத்தியோகங்களைக் கொடுப்பித்தும், ஏற்றமான வேதனங்களைக் கொடுப்பித்தும், மேன்மைகளை மேலோங்கச்செய்து வைத்தும் சிறப்பித்ததெல்லாம் இந்தப் பெரியாராகிய ஸ்ரீ அருணாசலமேயாம். |
| 173 | 1132 | | இவர் தாம் பலகாலமாகத் திருத்தித்திருத்திவைத்த வாசியற்றிருத்தங்களைத் தானே, இவர் தமக்கு வருங்காலங்களுக்குச் சட்டங்களாக வைப்பேமென்று முன்சொல்லிவைத்தவந்தவிதமேயாக, இந்தக்காலத்திலே முறையாக வைத்து அரசியலை நடாத்திவருகின்றனரென்பதாம். |
| 176 | 1151 | | தெளிவாக நூல்களையாராய்ந்தவருட்செல்வியாகிய தேவியார், கணவன் கட்டளைப்படியே தான்மாத்திரம் தவமகாரோடும் யாத்திரைக்கு நாளையே செல்லுவதென்றெண்ணியிருக்க, என்பதாம். தவன்-நாயகன். |
| ,, | 1152 | | அந்த இரவு, பழநிக் கலியுகவரதாகிய குமாரவேற்பெருமான் ஸ்ரீ அருணாசலமவர்களின் சொற்பனத்திலே தோன்றியருளி பழநி யாத்திரைக்கு நீயும் வருதல்வேண்டுமென்று பணித்தருளி மறைந்தனரென்பதாம். |
| ,, | 1153 | | சொற்பனத்துநின்றுமுடனேயெழுந்து பத்தினியாரோடு மரிதிற் பயந்த மக்களோடும், தாயைத் |



| பக்கம் எண் | செய்யுள் எண். | வரி | |
|---|---|---|---|
| | | | தேடிச்செல்லும் குழந்தையைப்போலத் தாமுமுடன்செல்வாராயினர். |
| | | | இத்துடன் வீடுபேறடையவிருத்தலின், "கதியடையக் கண்ட கணா" என்றும், தமக்கும் புத்தியைத் தெருட்டும் தேவியாகலின், "மதியருளத் தேடருமைத்தேவி" என்றும். ஊழ்கொண்டுய்த்தலின், "விதியருள்" என்றுங்கூறப்பட்டதென்க. கணாக் காதலிக்குக் கடிதுரைத்துச் சொன்னானெனக் கூட்டி முடிக்க. |
| 178 | 1170 | | நல்லோர்களுக்கு நல்லூழானதுகொண்டுய்க்குஞ்சமயங்களிலே பகவான் காக்ஷி கொடுப்பது சத்தியமல்லவா. |
| | | | சொற்பனாவத்தையிலே பழநிவேற்பெருமான் தாமொரு தொண்டன்போன்று காக்ஷி கொடுத்து, அன்பனே நினக்குக் கதிகிடைக்கும் நீ வரக்கடவையென்றழைத்து மறைந்தவந்தத் திருவருளின் கண்ணே, அன்பராகிய ஸ்ரீ அருணாசலத்துக்கு ஊசிக்காந்தம்போன்று மனஞ் செல்லாநின்றது, சத்திநிபாதங் கூடுகையில் தடைசெய்வார் யாருமில்லையென்றறிக. சத்திநிபாதம் - திருவருளின் செலுத்துகை. சத்தி-திருவருள். நிபாதம்-செலுத்துகை. |
| | | | இஃது கவிக்கூற்று. |
| 180 | 1178 | | ஐம்புலன்களும் புறத்தே செல்லாதொடுங்கவும் அந்தக்கரணங்கள் சவிகுறையவும், மனம் போய் துரியத்தைக் கூடவும் அசைவற நின்று, அன்புக்கண்ணீரானது வெள்ளம்போன்று சொரிய, ரோமஞ்சிலிர்க்க, ஸ்ரீ அருணாசலம் ஆங்கெழுந்தருளியிருக்குந் தண்டபாணியின் வசத்தராய்த் தன்வசங்கெட்டனரென்பதாம். (அருள் மயமாயினரென்பது கருத்து.) |
| ,, | 1182 | | கிரியினடிப்பிரகாரத்தில் வந்து தான தியாகங்கள் செய்து, ஆகூழானது கொண்டு செலுத்த அங்குநின்றும் தேவியும் மகாருங் கூட திருவாலவாயைநாடி மதுராபுரிக்குச் செல்லுமா றுட்கொண்டனரென்பதாம். இனி வரைவு இதுவேயாக - இனிக் கணக்குமிதுவாக. தானம்-அந்தணர் முதலியோர் |

| பக்கம் எண். | செய்யுள் எண். | வரி | |
|---|---|---|---|
| | | | க்குக் கொடுப்பது. தியாகம்-தக்கார்க்குக் கொடுப்பது. |
| 181 | 1188 | | கலைக்ஞானியும் சிவஞானியும் தன்னிற் பற்றற்ற ஞானியும், உலகத்தை வெறுத்தஞானியும், தவத்திலேஞானியுமான ஸ்ரீ அருணாசலந் தவமானது கொண்டுசெலுத்தத் துவாதசாந்தத்தலமாகிய மதுராபுரியின்கண் வந்தனர் என்பதாம். |
| 182 | 1197 | | இலங்கைவாசிகளுக்காக வரசோடு வாதாடி வேண்டிய சுகங்களையுந் தர்மங்களையுஞ் செய்துவந்தேன் அதுபோலவே நீங்களுந் தேசவூழியமுந் தர்மங்களுஞ் செய்து வருதல்வேண்டு மென்றன ரென்பதாம். |
| ,, | 1198 | | தர்மங்களைச்செய்தும்விரதங்களையனுட்டித்தும் அரிதிற் பயந்து பொன்போலப் பேணி வளர்த்த உங்கள் மாதாவை மென்மைத்தன்மையாகப் பாராட்டி யதிமேன்மையாகப் பேணிவருதல்வேண்டும். மாதாவினுடைய சொற்படியே நீங்களொழுகுதலும்வேண்டு மென்றனரென்பதாம். |
| 183 | 1200 | | அன்றிரவு கழிந் தடுத்தநா ளுதயகாலத்திலே, சபாநாயகர் நடனமூர்த்தமாக நனவிலே காக்ஷி கொடுக்க, நடனசபாபதி காக்ஷியாக வெளிப்படுகின்றனர் பாருங்களென்று தேவியாருக்குந் தனயர்களுக்குங் கூறியவளவிலே தானுஞ் சூக்கும ரூபத்தை யடைபவராயினர். தொல்லுரு - சூக்குமரூபம். |
| 188 | 1137 | | தேசத்தைக் காக்க நினைந்து, அரசியற் றிருத்தஞ் செய்தும், நாட்டுக்குச் சுயவரசை விரும்பியும், தர்மங்களைச் செய்தும் ஸ்ரீ அருணாசலஞ் செய்த நன்றிகளை மறவாத தக்கோர்கள் என்பதாம். |
| 189 | 1241 | | தனது நாட்டின்கணுள்ள குறைகளையாராய்தல், சனங்களுக்கிருக்கின்ற குறைகளைக் கவனித்தல், திருத்தச்சங்கம் வைத்தல், இதமான பலவற்றையுஞ் செய்தலென்பதாம். |
| ,, | 1242 | | ஆங்காங்குள்ள சனங்களைச் சேர்த்துக் குடிப்பெருஞ் சபையை வைத்தனர். இந்தக் கருமங்களையெல்லாம் பேசும்பொருட்டாகப் பாளிமேந்துக்கு நம்மை யனுப்பிவைத்ததுமிந்த ஸ்ரீ அருணாசலமேயாம். |



| பக்கம் எண். | செய்யுள் எண். | வரி | |
|---|---|---|---|
| 191 | 1255 | | யாவரும் பார்க்கும்படி யுருவச்சிலையை நாட்டியூக்கத்துடனே தேடுதற்கரிய புகழையுடைய ஸ்ரீ அருணாசலத்தின்து நீடித்த விலங்கைக்குச் செய்த நன்மைகளை யெடுத்துக்காட்டி, உருவினோடு மணைந்து நின்று தேசாதிபதி யிவ்வாறு கூறுவதாயினரென்பதாம். |
| ,, | 1257 | | குடிகளுக்கு மரசுக்கும் பொருத்தமுற செங்கோலையுடைய வாசியலைத்திருத்தி வந்தவர், இளைப்பாறுங்காலத்திலே தேசவூழியத்தையே யரிதிற் செய்து வந்தவர். |
| ,, | 1258 | | ஸ்ரீ அருணாசலம் முந்நாளிற் செய்த தொண்டுகளைச் சொல்லுகில், பலவகைத்தான சங்கங்களென்றும், கல்வியென்றும், அரசியற்றிருத்த முறைகளென்றும் விசேடமான விந்த மூன்றையுஞ் செய்து வைத்தனர். |
| 192 | 1259 | | அந்நாட்களி லமைத்து வைத்த சங்கங்களும் அரசியற்றிருத்தங்களும் கல்வி விருத்திகளுமாகிய மூன்று மிந்தநாளில் நடைபெறுதலைப் பிரத்தியக்ஷமாகக் காணத்தக்கனவேயாம். |
| ,, | 1261 | | இலங்கை யெந்நாளிற் றிருந்துமோவென்று நினைந்து நினைந்து அந்தநாளிற் றிருத்திய வாசியற்றிருத்தமே யிந்தநாளில் நடப்பதை ஸ்ரீ அருணாசலமிருந்து பார்க்குமேயாயின் பெருமகிழ்ச்சி கொள்ளுமல்லவா. |
| ,, | 1262 | | அரசுரிமை முழுதுங் குடிகளிலே யிருத்தல் வேண்மென்று சபைகடோறும் பேசிப்பேசி வந்தவர். அப்படியிருக்குமேயாயி னப்பொழுதுதானே திருத்தமடைவார்களென்றும் பேசிவந்தவர். |
| ,, | 1264 | | நானுமெனது சுமையைக் குடிகளிலே விட்டிருக்கின்றேன்; இந்தச்சமயமல்லவா குடிகள் திருத்தமடைவதற்காகிய காலமாகும், இந்தச்சமயத்திலே ஸ்ரீ அருணாசலமிருக்குமாயின் தேசத்துக்கு வேண்டிய பெருங்காரியங்களை நிறைவேற்றி வைக்கும். |
| ,, | 1265 | | தேசம் புகழுகின்ற ஸ்ரீ அருணாசலமே இந்தவிலங்கை நாட்டைத் திருத்தஞ்செய்வதற் கத்திபாரமுமாக விருந்தனரென்று தேசாதிபதி கூறினரென்பதாம். |

| பக்கம் எண். | செய்யுள் எண். | வரி | |
|---|---|---|---|
| 193 | 1266 | | தேசாதிபதி மேலும் கூறுவதாயினர். காரியசித்தி, பேரறிவு, அபிமானம் தனக்கு நிகரில்லாத இராச உத்தியோகம், ஒப்பில்லாத இராசநீதி, உலகநீதிகளை நடத்துதல் என்ற இவைகளினாலே அமைந்து விளங்குகின்ற உருவைப்பார்த்து, அன்பானது தூண்டக் கூறுவதாயினர். அடைகளெல்லாம் உருவை விசேடித்தன. தூண்டக்கூறுவான் என முடிக்க. |
| ,, | 1267 | | இந்த இலங்கையின்கண் வசிக்கின்ற சுயதேசிகளைத் தக்கோர்களாக உயர்த்துதல்செய்து வைத்தவரும் இவ்வருமையிற் சிறந்த அருணாசலம் அவர்களேயாம். இவர் எவ்வகையான கருமங்களையும் தொடங்குவாராயின் அதற்காக வேண்டிய நன்முயற்சிகளைச் செய்து நிறைவேற்றிவைக்கும் பேராற்றலையுடையவர். தோன்றல் - பெருமையிற்சிறந்தவர். இதனால் காரியசித்தி யுடையவ ரென்பது பெறப்பட்டது. |
| ,, | 1268 | | இந்த ஈழதேயத்தின்கணுள்ள எவர்களும் இந்தப் பெரியார் தம்நாட்டுக்காகச் செய்த நன்மைகளை எந்தக்காலத்தும் மறவாமலிருப்பதே பெரும் நன்மையாகும். பிற்காலத்துள்ள ஆலோசனைச் சங்கத்து மந்திரிகள் இந்த உருவைத்தானே ஞாபக சின்னமாக வைத்துக்கொண்டு அதனையே பின்பற்றி மந்திரித்துவத்தை நடத்திவருவார்களென்று நான் கருதுகின்றேன் என்றனரென்பதாம். |
| ,, | 1269 | | இவ்வாறு தேசாதிபதி பேசிய பின்பு, சேர் பீரிசு என்பவர் பேசுவதாயினர். முன்பு தேசாதிபதி பேசியதை யனுவதித்துக்கூறி, தனக்கு ஸ்ரீ அருணாசலத்திலிருந்த, அன்பு உருச்சிலையின்மீதிற் சென்று பதிந்து மனத்தை வருத்தாநிற்ப, முழுதுந் துன்பமயமாக நின்று ஸ்ரீ அருணாசலத்தின் வல்லமைகளைப் பேசுவாராயினர். |
| ,, | 1270 | | உயர்ந்த கல்வி ஞானத்தையுடையவர், தேசத்தொண்டையுடையவர் அரசியற் றிருத்தங்களைச் செய்த அரசஞானத்தில் மன்னவன், இராசசேவையினின்று மிளைப்பாறுங் காலத்திலே தேச ஊழியங்களை யொன்றொன்றாகச் செய்து வந்தவர். |



| பக்கம் எண். | செய்யுள் எண் | வரி | |
|---|---|---|---|
| ,, | 1271 | | சொல்லப்பட்ட ஸ்ரீ அருணாசலமவர்கள்தானே கைத்தொழில்களைச் செய்யவும், உயர்தரக்கல்விகளைக் கற்கவும், கமத்தொழிலிலே யதியூக்கம்செய்யவும் சுயராச்சியவுரிமை வேண்டவும், தாம் கூட்டிவந்த சங்கங்கள்தோறும் குடிசனங்களைத் தூண்டிவிட்டவர். |
| ,, | 1272 | | இவ்விதமாகிய வேலைகளையெல்லாம் இவர் ஆரம்பித்துச் செய்துவருங்காலங்களிலே நானும் இவருக்கு உபகாரியாக இருந்துவந்தேன். |
| 194 | 1273 | | நிகரில்லாத கேம்பிரிச்சிலே இவர் தாம் கல்விகற்றுவருங்காலத்திலே மிகவும் மதிப்புப்பெற்றவர். கல்வியிலே இராச உத்தியோகங்களிலே அதிக ஊக்கங்களைச் செலுத்துபவர். இனிமேல் வரப்போகின்ற உயர்தர உத்தியோகத்தர்களுக்கெல்லாம் தாமே முன்மாதிரிக்கு இலக்காக இருந்தவர். |
| ,, | 1274 | | கல்வியறிவிற் சிறந்தவர், சுயதேசிகளுக்குள் தாம் தாமே முதன்முதல் சிவில்சேவிசில் சித்தியடைந்து கொழும்புநகரின்கண் வந்து சிவிலுத்தியோகம் முதலிய உத்தியோகங்களில் படிப்படியாக உயர்ந்தவர். |
| ,, | 1275 | | உத்தியோகங்களில் அதிமேலுத்தியோகமாகவுள்ள நிகரொன்றில்லாத அந்தரங்கமந்திரியாக இருந்தவர். உத்தியோகம் நடாத்துங்காலங்களிலும் இளைப்பாறியிருக்குங் காலங்களிலும் தமது நாட்டவர்களுக்கே யின்றியமையாத நன்மைகளைச் செய்து வந்தவர். |
| ,, | 1276 | | பார்க்கும் உத்தியோகநேரங்கள் தவிர ஒழிந்தநேரங்களிலெல்லாம் சற்றுநேரமும் ஓயந்திருக்காமல் சிவில்லோப்புத்தகங்களை யெழுதி யூருக்கு நன்மைசெய்து வருதலிலே பொழுதுபோக்குடையவர். விநோதம் - பொழுதுபோக்கு. |
| ,, | 1277 | | மாசில்லாத இராச்சியத்திலேயுள்ள மாசற்ற முதன்மையான சேவைகள் சுயதேசிகளுக்கில்லையென்று நியதிசெய்துவந்த அந்த ஒழுங்கை மாற்றி, தாமே முதலில் உயர்ந்த உத்தியோகத்தைப் பெற்று தமதுவாயிலாகத்தானே பின்வருபவர்களுக்கும் உயர்ந்த உத்தியோகங்களைக் கொடுக்குமாறு வைத்தவர். |

| பக்கம் எண் | செய்யுள் எண். | வரி | |
|---|---|---|---|
| ,, | 1278 | | ஆங்கிலேயர்களுக்குங்கிடைத்தற்கரிதான அந்தரங்க மந்திரி உக்தியோகத்தைப் பெற்று தமது நாட்டின்கணுள்ள உயர்ந்த தாழ்ந்த சாதியார்களுக்கு பெருமை சிறுமை பாராட்டாது சரிவர மதிப்புச் செய்து வந்தமையினுலே சுயதேசிகளினல்விரும்பிக் கொண்டாடப்பட்டவர். |
| ,, | 1279 | | இனிச்சொல்லவேண்டுவதென்ன? இந்தப் பேரறிஞரானவர் தமது காலத்துச் செய்துவைத்த அரசியற்றிருத்தங்களைத்தானே இந்தக் காலத்து அரசியற் பிரமாணங்களாகக் கொண்டு, இது வேத புத்தகத்துக்குச் சமானமாகுமென்று மதித்து அரசியலை நடாத்துவர் என்றனரென்பவாம். |
| 195 | 1280 | | மாறுபாடின்றி விளங்குகின்ற சேர் பீரிசு இவ்வாறு பேசி முடிந்தபின்பு, சுப்பிறீங்கோட்டு அரசராகிய அக்பார் அவர்கள், கீழ்ச்சொல்லப்படும் விதமாக, பெருமையிற் சிறந்த ஸ்ரீ அருணசலம் அவர்களின் வல்லமைகளைப் பேசுவதாயினர். |
| ,, | 1281 | | மாட்சிமை பொருந்த நினைந்து நினைந்து மந்திராலோசனைச் சங்கத்தைப் பெருமைபொருந்துமாறு திருத்தஞ்செய்துவந்த இந்தக்காரணத்தினுலே, எத்தகையினரும் அனுதினமும், பார்க்குமாறு மந்திராலோசனைச் சபையின்கண்ணதாக ஸ்ரீ அருணசலமவர்களின் இந்த உருவை நாட்டுகின் எல்லாருக்கும் என்றைக்கும் ஞாபகமாக இருக்குமென்றும், |
| ,, | 1282 | | இன்னமும் சொல்லுமிடத்துப் பெருமையிற் சிறந்த ஸ்ரீ அருணசலத்தினுடைய ரூபத்தைக் காட்டுதற்கு நாட்டப்பட்ட இந்த ஞாபகசின்னந்தானே கல்விகற்றற்கும் தொழில்களை நடத்தற்கும் உயர்ந்த இராசசேவைகளைப் பெறுதற்கும் பிற்காலத்தவரை ஊக்கிவிடுதற்குரிய ஞாபகசின்னமேயாம் |
| ,, | 1283 | | நிலைபெற்ற நீதிமன்றங்களிலுள்ள அரசர்களும் உயர்ந்த உத்தியோகர்களும் அறிவிலே சிறந்தவர்களும் அதற்கென்று தோற்றி வந்திருப்பதெல்லாம் தாம்தாம் புகழைக் கருதியன்று. நாம் சொல்லுமிடத்து இந்தப் பெருமையிற் சிறந்த ஸ்ரீ அருணசலம் அவர்கள் இந்த நாட்டுக்குச் |



| பக்கம் எண். | செய்யுள் எண். | வரி | |
|---|---|---|---|
| | | | செய்த ஊழியமாகிய நன்மையை மறவாத நன்றியைக் கருதியேயாம். |
| ,, | 1284 | | பெரியவரென்றும், சிறியவரென்றும் பாராட்டாதவர். இத்தேயத்தை யாளுகின்ற மன்னவர்களின் கண்களை விளித்திருக்கச்செய்து, சுயதேசிகளுக்கு அதிகாரங்களையும் மேலுத்தியோகங்களையும் கொடுக்கும்படி செய்வித்து வைத்தவர். |
| ,, | 1285 | | பிற்காலத்திலே நிகழவேண்டுவனவற்றையெல்லாம் முன்னமே தாமறிந்து சொல்லும் தீர்க்கதரிசியாகவுள்ளவர், தமது பேரறிவினுலும், பொருந்திய வல்லமைகளினுலும், நினைக்குங்கால் மனுக்களுக்குள்ளே உயர்ந்த செனனத்தையு முடையவர். தீர்க்கதரிசி-பின் வருவனவற்றை முன்னறிந்து சொல்பவர். உயர்தரப்பிறவி யென்றது அவதார புருடரென்றதைக் குறிக்கும். |
| ,, | 1286 | | நான் ஒருகாலத்திலே கேம்பிரிச்சில் இந்த உத்தம புருடரைக் கண்டபோதில், கேம்பிரிச்சில் எனது ஆசிரியர்களைக் கண்டா லெல்வாறோ, அவ்வாறே பணிவோடும் அன்போடும் காணப்பெற்றவனுயினேன். |
| 196 | 1287 | | அவ்விடத்தில் இவரை நான் கண்டபொழுதில் ஒரு தேவ ஆவியானது பேரறிவுகளை வைத்துப் பொதிந்த ஒரு சுமையைத் தம்தலையில் வைத்துச் சுமந்துகொண்டு நிற்பதுபோல நின்றதாகக் கண்டேன். |
| | | | இவரது தலை சப்த தாதுக்களால் சிருட்டிக்கப்பட்டதொன்றல்ல. முழுதும் பேரறிவைக்கொண்டு தானே சிருட்டிக்கப்பட்டதென்பது இதன்றூற்பரியமென்றறிக. |
| ,, | 1288 | | இரகசிய மந்திரியாக விருக்குங்காலத்திலே, இவர் தாம்வினுவிய வினுக்களுக்குத் தக்கவிடையிறுக்க வியலாமல் பேற்றிறன் என்பவர் சிறிது தலைமயக்கமுற்றனர். |
| ,, | 1289 | | இவர்தாம் வயசின்கட்டங்கியிருந்தவரல்லர். உலகியல் அரசியல்களாகிய தொழில்களிலே தங்கியிருந்தவராவர். பின்வரும் மாணவர்களுக்கு நல்லொழுக்கங்களைக் காட்டும்பொருட்டு, இந்தச் சிறப் |

| பக்கம் எண். | செய்யுள் எண். | வரி | |
|---|---|---|---|
| | | | புப்பொருந்திய உருவச்சிலையை அடையாளமாக நாட்டப்பெற்றனவாம். |
| ,, | 1290 | | எல்லோருக்கும் புதியவராய், இலங்கையிலிருக்கும் ஸ்ரீ அருணாசலமவர்களின் தவமகனாகப் பிறந்த இந்த மகாதேவா என்பவர் பிற்காலத்திலே தந்தையின் செயல்களைச் செய்தற்கு வல்லமையுடையராவர் என்றனரென்பதாம். |
| 197 | 1298 | | கடல்சூழ்ந்த இலங்கையை ஆளுகின்ற மன்னனுக்கு ஒப்பில்லாத அரசியற்றுணையாக இருந்த இரகசிய மந்திரியும் இந்த ஸ்ரீஅருணாசலம் அவர்களேயாம். கந்தரம்-மேகம். தந்தரங்கள் நான்காவன-சாம பேத தான தண்டம். குரிசில்-பெருமையிற் சிறந்தவன். |
| ,, | 1299 | | அனாதைகளுக்கு ஆதாரசங்கமென்றும் சுகாதாரநகளென்றும், தே முதலிய தோட்டங்களில் திருத்த வகைகளென்றும், வித்தியாசாலைகளென்றும், இன்னு மனேகவிதமான தருமங்களைச் செய்து வைத்தவரும் இந்த ஸ்ரீ அருணாசலமென்பவரேயாம். |
| ,, | 1300 | | மன்னவன் மேற்கூறியவாறே யிலங்கையிற் சுயவரசைத் தொடங்கியிட்டது மிந்த ஸ்ரீஅருணாசலமவர்களேயாம். |
| 198 | 1301 | | இலங்கைய குடிப்பெருஞ் சபையொன்றமைத்து அரசியற் றிருத்தங்களைச்செய்து அவற்றை முதன்மந்திரிக்கனுப்பி யுறுதிப்படுத்திவைத்தது மிந்த ஸ்ரீ அருணாசலமவர்களேயாம். |
| ,, | 1303 | | தெக்கிணகைலையையும், திருக்கேதீச்சுரத்தையும் சைவசமையிகளுக்கே யாக்கியதும், சிலநாளில்லாதிருந்த கதிர்காமம் பூசையை நடைபெறுவித்தது மிந்த ஸ்ரீ அருணாசலமவர்களேயாம். |
| ,, | 1304 | | சேவைகளும் வேதனங்களு மாங்கிலருக்குயர்த்துவதுபோலச் சுயதேசிகளுக்கு முயர்த்தும்படி செய்துவைத்தது மிந்த வுத்தமராகிய ஸ்ரீஅருணாசலமவர்களேயாம். |
| ,, | 1305 | | வரும் வரும் தேசாதிபதிகளுக்கெல்லாம் அவர்தத்தம் மறுப்புக்களைத் தாம் எடுத்துக்காட்டுக் |

85442

1931 C.C



| பக்கம் எண். | செய்யுள் எண். | வரி | |
|---|---|---|---|
| | | | களாலே யெதிர்மறுத்து யூனிவேசிற்றி யென்னுஞ் சர்வகலாசாலையை யிலங்கையிலே தாபனஞ் செய்து வைத்தவரு மிந்த ஸ்ரீ அருணாசலமவர்களேயாம். |
| ,, | 1307 | | சிலகாலமடைபட்டிருந்த றோயற்கலாசாலையை பழமைபோலத் திறக்கச்செய்ததும், தமிழர்களுக்குத் தமிழும், சிங்களர்களுக்குச் சிங்களமும் கற்குமாறு நியமித்து வைத்தவரு மிந்த ஸ்ரீ அருணாசலமவர்களேயாம். |
| 199 | 1309 | | சாத்திரங்களாராய்ச்சிச் சங்கமொன்றமைத்து அதிலே அக்கிராசனாதிபதியாக வமர்ந்து சாத்திரங்களையுஞ் சமயங்களையும் கடவுளிலக்ஷணங்களையும் உபன்னியாசஞ்செய்து வந்தவரு மிந்த ஸ்ரீ அருணாசலமவர்களேயாம். இதனாலே சற்சமய நூலுணர்ச்சியிற் றேர்ந்தவரென்பதும், பத்தியி லதிதீவிரமுள்ளவரென்பதும் பெறப்படும். |
| ,, | 1310 | | சொல்லப்பட்ட வக்காலங்களிலே காங்கிறஸ் சங்கமொன்றமைத்ததிலே கல்வி கைத்தொழில்களை விருத்திசெய்யும் சுயவரசைப் பெற்றுக்கொள்ளவும், சனங்களைத் தூண்டிக்கொண்டு வந்தவரு மிந்த ஸ்ரீ அருணாசலமவர்களேயாம். |
| ,, | 1311 | | அக்காலத்திலே யரசோடொத்து நின்றும் பிற்காலத்திலே காந்தியைப்போல சுயவரசைத் தூண்டிக்கொண்டு வந்தவருமிந்த ஸ்ரீ அருணாசலமவர்களேயாம். |
| ,, | 1312 | | ஆங்கிலர்களைப்பாறி யிங்கிலந்துக்குச் சென்றுலவ்வவர் செய்துவந்த சேவைத்தொழில்களையார் செய்பவரென்று, சுயதேசிகளை யந்தந்தச் சேவைகளிலே பயிலும்வண்ணம் வைத்துவந்தவருமிந்த ஸ்ரீ அருணாசலமவர்களேயாம். |
| 200 | 1316 | | ஊரவர்களுக் கெவ்விதமான நலம்பாடுகள் வேண்டுமோவென்று கருதிக் கருதித் தனது நயங்கருதாமற் செய்துவந்தவருமிந்த ஸ்ரீ அருணாசலமவர்களேயாம். |
| ,, | 1317 | | புகழைத் தம்முடன் கொண்டு தோன்றியவதனாலே, பிற்காலத்திலே யறிஞர் பாடுகின்ற புகழும் அரசர் கொடுக்கின்ற பட்டமும் இவருக்கு வேண் |

| பக்கம் எண். | செய்யுள் எண். | வரி | |
|---|---|---|---|
| | | | டியதோ வென்றுசொல்ல, தேசத்தொண்டை வேண்டுமட்டுஞ் செய்துவந்தமையாற் தம் நாட்டினர் மதிக்கும் புகழையே போதுமளவும் பெற்றவருமிந்த ஸ்ரீ அருணாசலமவர்களேயாம். |
| ,, | 1318 | | தவப்பேற்றாற் கிடைத்த வரப்பிரசாதத்தாலே சிவஞானமும் சீவகாருண்யமும் தோன்றத்தோன்றிய வவதார புருடனுமிந்த ஸ்ரீ அருணாசலமவர்களேயாம். |
| | | | வரப்பேற்றினாலே பசுகரணங்கள் குறைந்தும், பதி கரணங்கள் கூடியும் தத்துவஞானந் தலைக்கூட உயிர்கள்மேற் கருணைமேலிட்டுத் தோன்றுந் தோற்றமுடையவரே யவதார புருடனெனப் படுவர். |
| | | | **அவதாரம்** - மேல்நிலைக்கணுள்ள ஆவி கீழ்நிலையை யடைதல்: தேவகதியினின்றும் மனுடகதியிலிறங்குதல். |
| ,, | 1320 | | மரபுகளுக்குள் மிகவுந் தாழ்ந்த மரபாகவுள்ளது ரொடியர் மரபேயாம். தெருக்களிலே மிகவும் ஒதுங்கிப்போதலை யொரு பொழுதிற்கண்டு இரக்கமுற்று, பலமுறையும் உயர்த்தியுயர்த்தி ஆங்காங்கேயவர்களுக்குத் தக்கவேலைகளையுங் கொடுக்குமாறு செய்துவைத்தவருமிந்த ஸ்ரீ அருணாசலமவர்களேயாம். |
| 201 | 1324 | | எந்தத்தேசத்திலே இவரையொத்தவர் இருந்தாரென்று விதந்தெடுத்துக்கூறும்வண்ணம், இந்த ஈழநாட்டிலே ஒப்புச்சொல்ல ஒருவருமில்லையென்று சொல்லும்படி, இலங்கையென்கின்ற தனது நாட்டின்கண்ணே நாட்டுத்திருத்தம் அரசியற்றிருத்தம் முதலான எவ்வகைத்திருத்தங்களைச் செய்தும், தர்மங்களை விருத்திசெய்தும் எந்தக்காலமும் தன்னுடைய ஞாபகம் நிலைநிற்றற்பொருட்டாகத் தனதுருவமாகிய சிலையை நாட்டி அது வாயிலாகத் தமது புகழை நாட்டி வைத்த மன்னவனுமிந்த ஸ்ரீ அருணாசலமவர்களேயாம். |
| | | | கன்னாட்டுதலால் தமக்கேயன்றித் தம்மரபினர்க்கே புகழாகுமென்றறிக. இதனை, "தென்னாட்டில் வடநாட்டில் குடநாட்டில் குணநாட்டிற் |



| பக்கம் எண். | செய்யுள் எண் | வரி | |
|---|---|---|---|
| ,, | | | றெவ்வரோடக், கன்னாட்டி யமர்பொருது கங்கைநீராட்டுவித்துக் கண்டன்வேங்கை, யெந்நாட்டுமெழுதியவன் றிருமரபோர் பெற்றபுகழ் யாவர் பெற்றா, ரந்நாட்டுக் கொற்றமெல்லா மக்குரிசில் புகழொடவதரித்த தன்றே." என வரும் பாரதச் செய்யுளாலறிக. இதனால் மரபினர்க்கே புகழென்பது பெறப்பட்டது. |
| 202 | 1334 | | பார்ளிமேந்தின்கணுள்ள மந்திரிகளிற் றலைமையான மந்திரி இங்கிலாந்தின்கண் அவர்மேல் தாம் வைத்திருந்த நட்புரிமை காரணமாக, இன்னும் கவிநாயகமாக எடுத்தப்பேசும் ஸ்ரீ அருணாசலமவர்களின் தேவியாராகிய பட்டவர்த்தினியாரை நேர்முகத்திற் பார்க்கவேண்டுமென்று கருதி யொருதினத்தில் இலக்குமி வாசஞ்செய்யும் பொன்கிழார் என்னும் மனைக்கு வரப்பெற்றனன் என்க. |
| 203 | 1335 | | தற்காலத்துப் பார்ளிமேந்தில் தானுமொரு மந்திரியாக விருக்கும் புத்திரியும் மனைவியும் தனது மந்திரியும் தானுமாக முதன்மந்திரியானவர் பொன்கிழார்க்குச் செல்லாநிற்கையில் வரவேற்று இவர்கள் நால்வரையும் ஆசனங்களிலமரவைத்தன ரென்பதாம். |
| ,, | 1337 | | நிலைபெற்ற மகாதேவா, மாட்சிமைதங்கிய இராமநாதன் என்னுமிவர்க ளிருவரோடும், இன்முகந்தந்து இனிய வசனங்களைப்பேசி, தந்தையர் மேனாட்களிற்செய்து வைத்திருந்த வகைகளையும் வல்லபங்களையும் மேலும் மேலும் எடுத்துப்பேசி அதன்மேல் சிற்றுணவருந்தலாகிய விருந்துங் கொண்டாடினர் என்பதாம். |
| | | | அரும்பத விளக்க உரை<br>முற்றுப்பெற்றது. |